# பிரகாசம்

PIRAGASAM

## அமுத விழா மலர்




யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்

2009

# பிரகாசம்

யா/சங்கானை சிவப்பிரகாச
மகாவித்தியாலயம்

J/CHANKANAI SIVAPIRAGASA
MAHA VIDYALAYAM

2009

# சமர்ப்பணம்

எமது பாடசாலை

ஸ்தாபகர்

சிவசம்பு பெரியார்

அவர்களின்

பாதக்கமலங்களுக்கு

இம்மலர் சமர்ப்பணம்

# பிரகாசம் மலர்க்குழு

| | | |
|---|---|---|
| **கௌரவ ஆலோசகர்** | : | திருமதி.சந்திராதேவி யோகேஸ்வரன் |
| **மலர் ஆசிரியர்** | : | திருமதி சுமித்திரா நிர்மலன் |
| **மலர்க்குழு** | : | திரு.க.உபேந்திரன்<br>திருமதி.தே.சந்திரகுமார்<br>திருமதி.ஞா.விமலராஜா<br>திருமதி.ஜெ.கிருபாகரன்<br>திரு.ப.மதனகோபாலன்<br>திருமதி.கீ.திவாகரன்<br>திரு.ஜெ.ஜோ.ஜெயபாலன்<br>செல்வி.ச.சரளா<br>திருமதி.உ.நவதீசன்<br>திரு.ந.பஞ்சாட்சரலிங்கம்<br>திரு.சி.ரங்காதரன்<br>திரு.அ.லிங்கராஜ் |
| **பாடசாலைச் சஞ்சிகை** | : | "பிரகாசம்" 2009 |
| **பிரதிகளின் எண்ணிக்கை** | : | 500 |
| **கணினி பக்க வடிவமைப்பு** | : | திரு.சி.ரங்காதரன் |
| **அட்டைப்படம் வடிவமைப்பு** | : | திரு.தி.பகீரதன் |
| **அச்சுப்பதிப்பு** | : | மகிந்தன் கொம்பியூட்டர் கிராபிக்ஸ், சுன்னாகம் |
| **வெளியீடு** | : | மலர்க்குழு,<br>யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் |

# பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய தினமே
சீர்மிகு சங்கானை நகர்சேர்
சிவப்பிரகாச மகாவித்தியாலய
சாலை நாள் தோறும் நலமே
செந்தமிழ் ஆங்கிலம் சிவநெறி ஓங்கி
சுந்தர அறிவொளி காட்டி
உயர்தரும் கலைகளைப் போற்றி
ஊரெங்கும் நற்பணியாற்றி
பண்புறு மாணவர் உயர்புறவாக்கி
பாரினில் அவர்களை ஊக்கி
வாழி ! வாழி ! வாழி !
வாழிய வாழியவே !

# எமது பாடசாலையின் தூரநோக்கு { Vision }

எமது பாடசாலை மாணவர்களின் பாடரீதியான அடைவு மட்டத்தினையும் துறைசார் ஆற்றல்களையும் அதிகரிப்பதன் மூலம் வருங்கால சவால்களுக்கு முகங்கொடுத்தல்.

# எமது பாடசாலையின் இலட்சிய நோக்கு { Mission }

பாடசாலையின் சகல வளங்களையும் பயன்படுத்தி தரமான கற்றல் கற்பித்தல் ஊடாக எமது மாணவர்களின் ஆற்றல்களை மேம்படுத்தல்.

# எங்கள் அதிபர்



## திருமதி.சந்திராதேவி யோகேஸ்வரன்

# எங்கள் பிரதி அதிபர்



## திரு.க.உபேந்திரன்

# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை



சைவத்தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தில் கல்வி வழங்குவதற்காக எழுந்த ஒப்பற்ற பாடசாலைகளில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் முதன்மையானது. பல ஆயிரம் ஏழை மாணவரின் கல்வியை மேம்படுத்திய ஒப்பற்ற பாடசாலை. இப்பாடசாலையின் எண்பது ஆண்டுகால நிறைவை ஆவணப்படுத்தும் வகையில் இந்நூல் வெளியிடப்படுவது சிறப்புக்குரியது. இப்பாடசாலையின் முதல்வர் சிறந்த ஆளுமை மிக்கவர். கல்வியின் பெறுமதியை மாணவர்க்கு உணர்த்துவதில் வல்லவர். இவரது காலத்தில் இப்பாடசாலை பல்வேறு வெற்றிகளைச் சந்தித்து சிறப்புற்று விளங்குகிறது. இப்பாடசாலையின் முத்தமிழ் விழாவை நேரில் கண்டு மகிழ்ந்தவன் யான். கலையார்வம் மிக்க மாணவருக்கு அரிய வாய்ப்பு வழங்கிவரும் இப்பாடசாலையின் பண்பாடு தனித்துவமானது. மிகவும் துரிதமாக எழுந்து நிற்கும் இப்பாடசாலை என்றும் பெருமை மிகு கல்விச்சாலையாக மிளிர எல்லாம் வல்ல துர்க்கை அம்மாளைப் பிரார்த்தித்து நல்வாழ்த்துக்கூறி அமைகிறேன்.

**"யாவர்க்குமாம் என்றும் இன்னுரை தானே"**

**ஆறு.திருமுருகன்,**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

# அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



"கற்றாங்கு ஒழுகு" என்ற மகுட வாசகத்தின் கீழ் அகவை எண்பதில் அடியெடுத்து வைக்கும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாசாலை மாணவர்களை மனிதர்களாக வாழ வகை செய்து கொண்டிருக்கின்றது என்றால் மிகையல்ல.

கல்வி என்பது வெறுமனே அறிவு மட்டுமல்ல. "ஏட்டுச்சுரக்காய் கறிக்குதவாது" என்பர். கல்வி ஒரு கலை. அதனை நுகரும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் சுகானுபவம் தனித்தனியானது. ஒரே வகுப்பறையில் ஒரே ஆசிரியரிடம் பயிலும் அத்தனை குழந்தைகளும் அவற்றை ஒரே மாதிரிப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்றில்லை. ஒவ்வொருவரது கிரகிப்புத் திறனும் வேறுபட்டது. இவ்வாறே சிந்தனை, இரசனை, கருத்து என்பனவும் வேறுபட்டிருக்கும்.

இந்நிலையில் கற்றாங்கு ஒழுக கற்பிக்கும் செயற்பாடு என்பது வெறுமனே பாடவிதானத்தை ஒப்புவித்தலுடன் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்பர். அந்த முளையைக் கண்டறிவதும் அதற்குப் பிரத்தியேகமாகத் தேவைப்படும் ஊட்டச்சத்தை ஊட்டி பெருவிருட்சமாக்க வேண்டியதும் வாண்மை விருத்திக்குரிய தொழிலாற்றும் ஆசிரியர்களின் பாற்பட்டது.

திறமைகள் முளையிலேயே கருக்கப்படாமல் கவனமாகப் பாதுகாக்கப்பட வேண்டியதும் எம்முன் உள்ள தலையாய பணியாகும். ஓர் பாடசாலையின் பயன்விளைவு என்பது வெறுமனே கல்விப் பெறுபேற்றினால் மட்டும் மட்டிடக்கூடிய தொன்றல்ல. அதன் மாணவச் செல்வங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதிலேயே தங்கியுள்ளது எனலாம்.

தான் சார்ந்த குடும்பத்திற்காக, சமூகத்திற்காக உளமார உழைக்கும் நற்பிரஜைகளை உருவாக்கிய பெருமையில் எண்பதாவது அகவையிலும் இளமைத் துடிப்புடன் செயலார்வத்துடன் புத்தம் புதிதாகப் பிரகாசிக்கும் யாழ் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் சமூகத்திற்கு ஆற்றும்பணி மென்மேலும் சிறக்க என் உளமார்ந்த நல்லாசிகள் உரித்தாகட்டும்.

**க.கணேஷ்**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்**
**யாழ் மாவட்டம்**

# அமுத விழா
# மலருக்கான ஆசிகள்



"கற்றுணர்ந்து ஒழுகு" எனும் மகுடவாசகத்தினை தாங்கி நிற்கும் யாழ்/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆயிரம் பிறை கண்டு "அமுத விழா" வினை எடுக்கின்றது.

சைவப் பாடசாலைகளை உருவாக்கும் இயக்கத்தின் முயற்சியாக உருவாகிய இப்பாடசாலை ஆரம்பப் பள்ளியாக இருந்து முகாமையாளர்கள் அவர்களைத் தொடர்ந்து வந்த அதிபர்களின் முயற்சியினால் சங்கானைக் கிராமத்தில் மகாவித்தியாலயம் உருவாகியது. 1C தரத்திற்கு உயர்ந்து கிராமப்பிள்ளைகளுக்கு உயர்கல்வி வாய்ப்பினை வழங்கி தொடர்பணி ஆற்றிவருவது பாராட்டுக்குரியது.

81 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தங்களால் வெளியிடப்படும் மலர் மணம் பரப்பி மாணவர்களுக்கு பயனளிப்பதுடன், வித்தியாலய வரலாற்றினை பறைசாற்றும் என்பதும் எனது எதிர்பார்ப்பாகும்.

மலரை ஆக்குவித்தும் விழாவினை முன்னெடுப்புச் செய்யும் ஆசிரிய, மாணவ குழாத்தினருக்கும், வழிநடத்தும் அதிபருக்கும் எனது பாராட்டுக்கள்

கல்விப்பணி சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**இ.இளங்கோவன்**
**செயலாளர்,**
**கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடமாகாணம், திருகோணமலை.**

# ஆசிச்செய்தி



1928ல் தனது கல்விப்பணியை ஆரம்பித்த யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் அகவை 80ல் அமுத விழாவினை முன்னிட்டு "பிரகாசம்" என்ற மலரினை வெளியிடுவதைவியிட்டு அகமகிழ்கின்றேன். 80 வருடப்பூர்த்தியின் பின் முதல் முதலாக ஒரு மலர் வெளியிடப்படுவது சிறப்பம்சமாகும்.

தற்போது இப்பாடசாலை க.பொ.த உயர்தர கலை, வர்த்தக வகுப்புக்களை உள்ளடக்கி ஏனைய பாடசாலைகளைப் போன்று நல்ல கல்விப்பெறுபேறுகளை வெளிக்கொணர்ந்து கொண்டே உள்ளது. க.பொ.த சாதாரண தரத்தில் 10A எடுத்து சாதனை படைத்த மாணவர்களும் இப்பாடசாலையில் இருந்து உயர்கல்வியில் விஞ்ஞான, கணிதத்துறைகளுக்கு வேறு பாடசாலைகளுக்குச் சென்றவண்ணம் உள்ளனர். இவற்றுடன் க.பொ.உயர்தர கலை, வர்த்தகப்பிரிவுகளிலும் உயர்கல்வி வாய்ப்பு பெறும் மாணவர் தொகையும் அதிகரித்து வருகின்றது.

கற்றல் செயற்பாடுகளில் வளர்ச்சி கண்டுவரும் இப்பாடசாலை இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றது. அந்த வகையில் விளையாட்டுத்துறை மாகாண மட்டம் சென்று சாதனை படைத்து, தேசிய நிலைப்போட்டிகளிலும் தம் பெயரைப் பொறித்து வருவது குறிப்பிடத்தக்கது. அதே போன்று தமிழத்தினப்போட்டிகளிலும் மாகாண, தேசிய மட்டப்போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களும் பாராட்டுதல்களும் பெற்று சாதனைகளை நிலைநாட்டி வரும் பாடசாலையாக இது அமைந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் சாதாரண பாடசாலையாக விளங்கிய இப்பாடசாலை ஒரு 1C தரப் பாடசாலையாக இருந்தும் சாதனைகள் "கடுகு சிறதென்றாலும் காரம் பெரிது" என்பது போல வெளிப்பட்டு வருவது மெச்சத்தக்கது. இத்தகைய பெருமைகளுடைய அமுதாய் இனிக்கும் தன்மைக்கு கொண்டுவரக் கடுமையாக உழைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் அருகணைந்த சமூகம், பெற்றோர்கள் அனைவரையும் இதயசுத்தியுடன் வாழ்த்துவதில் பேருவகை கொள்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக அமுதவிழாவினை முன்னிட்டு **"பிரகாசம்"** என்னும் இம்மலரை வெளியிட உழைத்த அனைத்து தரப்பினருக்கும் எனது உளமார்ந்த ஆசிகளைக்கூறிக்கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**இ.இராசையா,**
**மாகாணக்கல்விப்பணிப்பாளர்,**
**வரோதய நகர், திருகோணமலை.**

# ஆசிச் செய்தி



யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் வெளியிடும் 80 வருட நிறைவு சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவையான கல்வியை வழங்கும் பாடசாலையின் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் பல்வேறு இடர்பாடுகள் மத்தியில் தனது பணியை ஆற்றி வருவதை நான் நன்று அறிவேன். பொருளாதார வளம் குறைந்த பெற்றோரின் பிள்ளைகளை மிகப்பெருந்தொகையாக் கொண்ட பாடசாலைகளில் இதுவும் ஒன்று. மாணவர்களை, சிறந்த சமூகப்பிரசைகளாக மாற்றும் சேவையில் பாடவிதானம், இணைபாட விதானம் என்பவற்றுக்கு அமைவாக வருடம் தோறும் சிறப்பாக பணியாற்றி வருவது பாராட்டத்தற்குரியது. இப்பாடசாலைச் சமூகம் தமது வரலாற்றைப் பதிவு செய்யும் சாசனமாக வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது நல்லாசிகள் பல.

**ப.விக்னேஸ்வரன்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்**

# அமுத விழா வாழ்த்துச் செய்தி



மாணாக்கர் பரம்பரையினரை சமூக வாழ்வுக்கு ஆற்றுப் படுத்துகின்ற உன்னதமிக்க பணியினை கடந்த எண்பது வருடகாலமாக மேற்கொண்டு அமுத விழாவினைக் கொண்டாடுவதன் மூலம் வளர்ச்சிப் படிநிலைகளை மீட்டுப்பார்க்கின்ற இவ் அரிய முயற்சியைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

கடந்த காலங்களில் ஈட்டப் பெற்ற சாதனைகள், எதிர்கொண்ட சவால்கள், சமூகத்திற்கு நல்கப்பெற்ற செய்திகள், ஊட்டப்பெற்ற விழுமியக் கோலங்கள், பெற்றுக்கொண்ட அனுபவச் சுவடுகள் என்பவற்றைத் தாங்கியவண்ணம் அமுதவிழாவினை ஒட்டி வெளியிடப்படுகின்ற இம் மலருக்கு எனது நல்லாசிகளை நல்குகின்றேன்.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சியினை நிலைநிறுத்தி மேலும் எழுச்சி கொள்ள வைப்பதற்கு உயிரோட்டமும், புத்தூக்கமும் மிக்க செயற்பாடுகள் அவசியமாகும். இந்த வகையில் யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வளர்ச்சி நிலைகளின்பால் மாணாக்கர்களின் கவனத்தைத் திசைதிருப்பி அவற்றின் கனதியான பரிமாணங்களை உணரச் செய்து அவற்றின் வெளிப்பாடுகள் சமூகத்தில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதனை அறியச் செய்வதன் மூலம் மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே சுயமதிப்பீட்டுக்குட்படுத்தி முன்னேற்றப்பாதையில் தடம் பதிப்பதற்கு இவ் விழாவும் அதனையொட்டி வெளியாகின்ற மலராக்கமும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

இன்று கேள்விக்குறியாகியுள்ள சமூகக்கூட்டுறவு, புரிந்துணர்வு, பரஸ்பரநம்பிக்கை, சமூக நியமங்களுக்கு மதிப்பளித்தல், கலை பண்பாடு பாரம்பரியங்களை அனுசரித்து ஒழுகுதல் போன்ற செந்நெறிப் பண்புக்கோலங்களை வழுவில்லாமல் தொடர்ந்து பேணப்படுவதற்கும் இம்மலராக்கம் உதவ வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை இறைஞ்சி நிற்கின்றேன்.

**சு.சுந்தரசிவம்,**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)**

# அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்,

யாழ்ப்பாணம் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் தனது எண்பதாவது ஆண்டு அமுதவிழாவினை கொண்டாடுவதையிட்டு அகமகிழ்கின்றோம். மனித வாழ்வை மேல்நிலை அடையச் செய்வது கல்வியாகும். இதனை ஒவ்வொரு மனிதனும் அடைவதற்காகவே கல்விச்சாலைகள் ஒவ்வொன்றும் செயற்பட்டுக் கொண்டு வருகின்றன. இவ்வரிசையில் யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் 80 ஆண்டுகள் கல்விப்பணி ஆற்றி தலை நிமிர்ந்து நிற்பது அனைத்து உள்ளங்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன. கல்வியே மனிதனை மனிதநேயத்தோடு வாழ்வதற்கு வழிகாட்டுகின்றன. இதனையே வள்ளுவரும்

"கண்ணுடையார் என்பார் கற்றோர் - முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்"

இதனை உணர்ந்த நம்மவர்கள் சமயம் சார்ந்த கல்லூரிகளை நாட்டில் உருவாக்கினர். இவ்வரிசையில் சிவப்பிரகாச மகாவித்தியாலயம் சமயமும் ஒழுக்க பண்பாட்டு விழுமியங்களும் கல்வியில் நல்மாணவர்களை உருவாக்கியமை பெருமைக்குரியது. இதற்காக அற்பணித்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நெஞ்சமார வாழ்த்துகின்றோம். வித்தியாலயம் இன்னும் பல்லாண்டு காலங்கள் கல்வியிலும் ஏனைய துறைகளிலும் பல வளர்ச்சிகளைக் கண்டு பணியாற்ற இறைவனை பிரார்த்திக்கின்றோம். எண்பது ஆண்டுகள் நினைவை நிலைநிறுத்தி, விழா எடுத்து, மலர் வெளியிட்டு வித்தியாலயத்தை பெருமைப்படுத்தும் அதிபர், ஆசிரியர், மாணவர்கள், விழாக்குழுவினர் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிப்பராக.

"வாழ்க வித்தியாலயம், வளர்க கல்விப்பணி"

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**

**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

# ஆசியுரை



எண்பதாவது ஆண்டு நிறைவில் அமுதவிழாவினைக் கொண்டாடவுள்ள மகாவித்தியாலயம் அந்நிகழ்வைக் காலவோட்டத்தில் பதிவு செய்ய ஒரு மலரையும் வெளியிட எண்ணியுள்ளார்கள். இம்மலர் இறுக்கமான ஆவணப்பதிவாகி, வித்தியாலயத்தின் வரலாற்றைத் துலங்க வைக்கும் என்ற நிலையில் இம்மலருக்கு ஆசியுரை எழுதுவதில் மிகவும் சந்தோஷப்படுகின்றேன்.

மக்களின் கல்விச்சேவையை நிறைவாக வழங்கித் தனித்துவமான நன்மதிப்பை வித்தியாலயம் பெற்றுள்ளது. நல்மாணவரை உருவாக்க அயராது உழைத்து வருகிறது. அதிபர், ஆசிரியர்கள், சைவப்பண்பாடு மிக்கவர்கள். இந்த ஒழுங்கு வழிவழியாக வித்தியாலயத்தில் மேற்கொண்டு வந்த ஆசாரசீலத்தை உண்மைப்படுத்துகிறது. கல்லூரித் தாயை இன்றைய அதிபர் ஏனைய ஆசிரியர்களுடன் பேணி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

எண்பதாவது ஆண்டு நிறைவில் அமுதவிழா மலர் நல் ஆக்கங்களைத் தாங்கி ஆக்கங்கள் மேன்மேலும் உயரவும் வித்தியாலயம் கல்வி இணைபாடச் செயற்பாடுகள் யாவற்றிலும் உன்னத ஸ்தானத்தில் மிளிரவும் சங்கானைப் பட்டினத்தின் உயர்ச்சிக் குறிகாட்டியாக வித்தியாலயம் இமயம் தொட்டு நிற்கவும் இறையருள் என்றும் துணை நிற்கவும் வாழ்த்துகின்றேன்.

துரைஎங்கரசு,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சங்கானை.

# வாழ்த்துரை



இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கட்டம் எமது பிரதேசத்தில் கல்வியை பலமாக அத்திவாரம் இடப்பட்ட காலப்பகுதியாகும். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வள்ளல்கள் முன்வந்து சிறு குடில்களாக ஆரம்பித்த பாடசாலைகளே இன்று ஆல் போல் வியாபித்து பல பெரியோர்களை தன் செல்வங்களாகக் கொண்டு பெருமையடைகின்றன.

இத்தகைய சிந்தனையாளர் வரிசையில் தோன்றிய உயர் திரு.சிவசம்பு அவர்களின் தீர்க்கமான தரிசனத்தின் உருவடிவே சங்கானை சிவப்பிகாச மகாவித்தியாசாலை. அன்று அவர் கண்ட கனவு நனவாகி எண்பது ஆண்டுகள் பூர்த்தியாகி அமுத நிலையை அடைந்துவிட்டது.

அவர் அன்று ஸ்தாபித்த சிறுகூடத்தை எண்பது ஆண்டு காலப்பகுதியில் படிப்படியாக உயர்த்தி பெரும் பள்ளியாக்கிய, தொடர்புடைய அனைவரும் நினைவில் நிறுத்திப் போற்றப்பட வேண்டியவராவர் ; ஒவ்வொரு காலகட்டத்திலும் பாடசாலையுடன் இணைந்தோர் மற்றும் அர்ப்பணிப்பான சேவையை வளமாக்கியமையே இன்றைய இப்பாடசாலையின் உயர்நிலைக்கு காரணமாகும். இப்பாடசாலையுடன் தொடர்பு கொண்ட அர்ப்பணிப்பாளர் செய்த சேவையின் வரலாறுகளே நானும் இப்பாடசாலையில் இணைந்து உள மகிழ்வுடன் சேவை செய்ய உந்தியது.

இன்று இப்பாடசாலை மாணவர், ஆசிரியர், பல்துறை அறிஞர்கள் என்போரின் பல் ஆக்கங்களையும் தனது சாதனைகளையும், பெருமை மிக்க வரலாற்றையும் தன்னகத்தே கொண்டு செழிப்பான நிலத்தில் வளர்ந்த செடியின் மலர் போல் அழகிய மலரை மலர்கிறது. பெருமைப்பட வேண்டியதொன்று.

சங்கானை மண்ணும் செழிப்பானது
சங்கானை சிவப்பிரகாசமும் செழிப்பானது
மலர் பூத்து குலுங்குகிறது.
அது அழகும் வாசனையும் கொண்டது
நானும் நுகர்கிறேன், வாழ்த்துகிறேன் ..........
பல மலர்கள் தொடர்ந்து பூர்த்துக்குலுங்க வேண்டுமென்று

**ச.கைலாசநாதன்**
(முன்னாள் அதிபர்)
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்,**
**தெல்லிப்பழை.**

# ஆசியுரை



சங்கை நகர் பதியிலே அமுத விழாக்காணும் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வி கற்ற மாணவி என்ற வகையிலும் 1983ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியராகவும் பகுதித்தலைவராகவும் பணியாற்றியவர் என்ற வகையிலும் ஆசிச்செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

செல்வங்களுள் உயர்வானது கல்விச்செல்வம். அத்தகுதியைத் திறம்பட ஊட்டி பல்லாயிரக்கணக்கான ஆற்றலும், திறமையும், குணச்சிறப்பும் மிக்க மாணவர்களை உருவாக்கி இன்று அமுதவிழாக்காணும் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் தலை நிமிர்ந்து நிற்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

இந்த வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் நினைவு கூறுகின்றேன். தற்போது கண்ணை இமை காப்பது போல் அயராது உழைத்துவரும் அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் அவர்கள் பாராட்டிற்கும் போற்றலுக்கும் உரியவரே. இவருடைய காலத்தில் இப்பாடசாலை எல்லாத்துறைகளிலும் வளர்ந்து தலைநிமிர்ந்து வீறுநடை போடத்தொடங்கியுள்ளது. அதிபருக்கு துணையாக பலமாக விளங்கும் நல்லாசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரும் நலம் பெற்று அமுதவிழா சிறப்புற அமைய வேண்டுமென எல்லாம் வல்ல வேட்டாள வைரப்பெருமானை வேண்டி அவ்வழி நின்று ஆசி வழங்குகின்றேன்.

**திருமதி.ஜெ.லோகநாதன்,**
**இளைப்பாறிய ஆரம்பக்கல்வி பகுதித்தலைவர்,**
**யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.**

# பாடசாலை அபிவிருத்திப்பணியில் சங்கத்தின் செயற்பாடுகளும் செயலாளரின் ஆசிச்செய்தியும்



தனிமனிதர் ஒருவரின் பெரும் முயற்சியின் பயனாக 1928ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட பாடசாலை தான் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம். இப்பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டு இன்று தனது 80ஆவது அமுத அகவை நிறைவு செய்து விளங்குவது யாவருக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

வித்தியாலயத்தின் வரலாற்றை நாம் முன்நகர்த்திப் பார்க்கும் போது இக்காலப்பகுதியில் இவ்வித்தியாலயம் பெரும் வளர்ச்சி கண்டு சரித்திரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது என்பதையிட்டு யாவரும் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. இவ்வித்தியாலயம் சகலதுறைகளிலும் அபிவிருத்தி கண்டுவருவது பெருமைக்குரியது மட்டுமன்றி அனைவரது பாராட்டுக்குரியதுமாகும். குறிப்பாக எமது சங்க வரலாற்றில் இச்செய்தி பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது.

தளபாட வசதிகள், ஆளணிகள், குடிநீர்தாங்கி, தற்காலிக கொட்டகை வசதிகள், வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள ஆலய புனர்நிர்மாணப்பணிகள், கும்பாபிஷேக நிகழ்வுகள், மாணவர்களுக்கான மதிய உணவுத்திட்டம் CDMA தொலைபேசி இணைப்புக்கள், அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இரண்டு மாடிப்புதிய கட்டட வசதி, மாணவர்கள் இருபாலாருக்கும் தனித்தனியான புனரமைப்புச் செய்த நவீன மலசலகூட வசதி, இரவுக்காவலாளிக்கு மாதாந்த கொடுப்பனவு வழங்குதல் போன்ற செயற்பாடுகளில் எமது சங்கம் தமது சேவையை முன்னிலைப்படுத்தி மிகவும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயலாற்றி வருகின்றது. இவ்வளவு செயற்பாடுகளுக்கும் பெற்றோர்கள் சிறந்த ஒத்துழைப்பை வழங்கி வருவது சங்கத்தின் பெருமைக்கும் பெற்றோர்களின் அயராத உழைப்புக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். பழைய மாணவர் சங்கம் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு எம்முடன் இணைந்து செயலாற்றி வருவதையும் நாம் மனதாரப் பாராட்டுகின்றோம்.

இவற்றைவிட மேலே விபரிக்கப்பட்ட செயற்றிட்டங்களை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு கல்விச்சமூகம் ஒத்துழைப்பு வழங்கி நிற்பது பாராட்டப்படவேண்டியதொன்றாகும். குறிப்பாக பல வழிகளிலும் பாடசாலை முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவி வருகின்ற யாழ் அரச அதிபர், வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ் கல்வித்திணைக்கள பாடசாலைகள் கட்டடநிர்மாண திட்டத்தில் சேவை புரிபவர்கள், வலிமேற்கு பிரதேச செயலர், நிக்கொட் நிறுவனத்தினர், யுனிசெவ் நிறுவனத்தினர், சிறுவர்பாதுகாப்பு நிறுவனத்தினர், வடக்கு மாகாணக் கல்வியமைச்சு, உலக உணவுநிறுவனம் ஆகியவற்றிற்கு எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறான நிறுவனங்கள் பாடசாலையின் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு கணிசமான பல்வேறு உதவிகளை செய்து வருவது எமக்கு மனநிறைவைத் தருவதோடு மேலும் பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம். இருப்பினும் பெற்றோர்களும் தங்கள் பங்களிப்பை மாணவர் நலன் கருதி அளிப்பதன் மூலம் எமது கிராமத்திலுள்ள இவ்வித்தியாலயம் மேலும் வளர்ச்சிகாண வாய்ப்புக்கள் அதிகம் உண்டு என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தி நிற்கின்றோம்.

எனவே பாடசாலைச்சமூகம் அமுத விழாவை சிறப்பாக நடாத்த அக்கறையுடையவர்களாய் இருப்பதுமட்டுமன்றி அதன் பயன்பாடு பல்வேறு மட்டங்களில் வளர்ச்சியடையச் செய்வதுதான் எமது இலக்கு என்பதனை இச்சந்தர்ப்பத்தில் திடசங்கற்பம் எடுத்துக்கொண்டு செயற்பட முன்வரவேண்டும். இம்மலர் வெளிவரும் இவ்வரிய சந்தர்ப்பதில் சகல உள்ளங்களிலும் புதிய சிந்தனைகள் உதயமாகி அவைகள் சிறந்த செயற்பாடுகளாக அமைந்துவிடவேண்டுமென்று அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் கேட்டுக்கொள்கின்றனர். அத்துடன் அனைவரது சார்பிலும் எனது மனப்பூர்வமான ஆசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பணிகள் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி எனது ஆசியுரையை நிறைவு செய்து கொள்கின்றேன்.

நன்றி

**க.இரத்தினேஸ்வரன்**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2008**

# அமுதவிழா மலருக்கான
# எனது வாழ்த்துரை



பாடசாலைகள் சமூகத்தினை வளர்த்தெடுக்கும் நிலையங்களாகும். ஒரு பாடசாலை வளர்ச்சியடைய அச்சமூகத்து மக்கள் அறிவாற்றல் பெறுவதுடன் நடத்தையிலும் மாற்றத்தைக் காட்டுகிறார்கள்.

அவ்வாறே சங்கானை நகரிலே ஏழு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று எண்பதாவது அமுதவிழா நன்நாளிலே கிட்டத்தட்ட ஆயிரத்து ஐந்நூறு மாணவர்களுடனும் பல கட்டிடங்கள், மாடிக்கட்டிடங்களுடன் சங்கானைக் கோட்டத்திலே, வலிகாமம் கல்வி வலயத்திலே அதிகூடிய மாணவர்களுடன் திகழ்கின்றது எனின் இப்பாடசாலையின் வளர்ச்சியை மக்களிடம் காணப்படுகின்ற விழிப்புணர்ச்சியை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

மேலும் இப்பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில், இணைபாடவிதான செயற்பாடுகளில் பெயுரை எடுத்துச் சென்று முத்திரை பதித்து வருவதையிட்டு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். "அத்துடன் யாவருக்கும் கல்வி" என்ற கருத்திற்கமைவாக இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியுடன் நல்லொழுக்கம், விவேகம், முயற்சி, ஆரோக்கியம் உள்ளவர்களாகவும் மிளிர என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

மேலும் இங்கு கல்வி பயிலும் சிறார்களை எதிர்காலத் தலைவர்களாக , தேசாபிமானிகளாக, தொழில்நுட்பத்திறன் உள்ளவர்களாக மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடியவராக மாற்ற ஆக்கமும் ஊக்கமுந்தந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் எமது சக ஆசிரியர்களையும் இந்நன்நாளில் வாழ்த்த விரும்புகின்றேன்.

காலத்துக்காலம் மாறிவருகின்ற கல்விச் செயற்பாடுகளை கருத்திற்கொண்டு புதிய விடயங்களை மகிழ்வுடன் மாணவர்களுக்குக் கற்பித்து வரும் எமது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன். மேலும் இம்மலரானது பாடசாலையின் பெருமைகளை தாங்கி வருவதோடு, அறிவுப் பொக்கிஷமாய் நிறைந்த ஆக்கங்களுடன் பயனுள்ள நூலாக வெளிவர என் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.


**ஞா.விமலராஜா,**
**பகுதித்தலைவர், ஆரம்பக்கல்வி**
**யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**

# வாழ்த்துச் செய்தி



அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது. இம்மானிடப் பிறவியில் தேடுவதற்கரிய செல்வம் கல்வி, எம் இரு விழிகளை திறந்து உலக வாழ்வை வெளிச்சமிட்டுக் காட்டுவது கல்வி என்ற செல்வமே. செல்வத்தினை எமக்கருள்வது வித்தியாலங்கள் என்ற ஆலயங்களே. இன்று கல்வி, கலாசாரம், பண்பாடு என்பனவற்றில் மேன்மை பெற்று விளங்கும் சங்கானை பதிதனில் தன்னிகரற்ற விருட்சமாக விளங்குவது சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் 1928.02.01 இல் சிவசம்புப் பெரியாரால் ஆரம்பிக்கப்பட்டு இன்று அகிலமே வியக்கும் வண்ணம் வளர்ந்து பெருமையுடன் திகழும் எம்பாடசாலையின் வளர்ச்சி எம்மை பெருமையடையச் செய்கின்றது.

இன்று எண்பது ஆண்டுகள் கடந்து அமுதவிழாக்காணும் எம்பாடசாலையின் சாதனைகள் வலயம், மாவட்டம், மாகாணம் கடந்து தேசிய மட்டம் வரை வியாபித்துள்ளது. அமுதவிழாவின் சிறப்பு மலராக சிவப்பிரகாசத்தின் வரலாற்றை பதிவு செய்கின்ற நல்ல ஆவணமாக வெளிவரும் சிறப்புமலர்தனை இதயபூர்வமாக வாழ்த்துவதுடன் பாடசாலையின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அயராது உழைக்கும் என்று கூறுவதுடன் அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக இம்மலர் என்றென்றும் வாடா மலராக மணம் வீசிட வேண்டும் என்று வாழ்த்திப் போற்றுகின்றேன்.

**வ.நவரத்தினம்,**
**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2009**

# பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச் செய்தியும் செயற்பாடுகளும்



1928.02.01இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 80 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து அமுதவிழாவினைக்கொண்டாடும் இக்காலகட்டத்தில் எமது பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவும் ஆசிகளும் என்றென்றும் கிடைக்கும் என்று உறுதி கூறுகின்றோம்.

எமது சங்கமானது 1990ஆம் ஆண்டு பழைய மாணவரான திரு.நா.முருகானந்தன் அவர்களின் முயற்சியால் தோற்றம் பெற்றது. பழைய மாணவர்களது உடல், உள வலிமையினால் நாளாந்தம் எமது சங்கம் புதுப்பொலிவும் புத்துணர்ச்சியும் பெற்று வருகின்றது. எமது சங்கம் பெற்றுக்கொண்ட புத்துணர்ச்சியின் விளைவாக பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றது. எப்போது பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து பாடசாலையின் வளர்ச்சி கருதி, சமுதாயத்தின் உயர்ச்சி கருதி மாணவர்களின் எழுச்சி கருதி எமது சங்கம் ஆற்றிவரும் செயற்பாடுகளில் சிலவற்றையாவது இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

- 1996 ஆம் ஆண்டு மைதானசீர்திருத்த வேலைகளுக்காக அதிஷ்டலாபச் சீட்டிழுப்பினை நடாத்தி மைதானத்தைச் செப்பனிட்டு சீர்செய்தமை.
- பாடசாலையில் உள்ள நூலகத்தின் அபிவிருத்திக்காக உயர்தர மாணவர்களுடன் இணைந்து சாண்டோ எம்.துரைரத்தினத்தின் மாபெரும் வீரதீரசாகச நிகழ்ச்சியினை நடாத்தியமை.
- எமது பாடசாலையின் சுற்றுமதிலில் ஒரு பகுதியை அமைத்தமை.
- பாடசாலைக்கு புதிய கேற் அமைத்துக் கொடுத்தமை.
- மாணவர்களின் அறிவினை விருத்தி செய்யும் முகமாக மேலதிக வகுப்புக்கள் பழைய மாணவர்களால் நடாத்தப்பட்டு வருகின்றமை.
- மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களுக்கான செலவில் ஒரு பகுதியை வழங்குதலும் வெற்றி யீட்டும் மாணவர்களைக் கௌரவித்தலும்.
- பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிச் செலவை 2008ஆம் ஆண்டிலிருந்து முழுமையாக வழங்குகின்றமை.

- புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி, க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சித்தி (10A) பல்கலைக்கழக அனுமதி என்பவற்றுக்காக பதக்கங்களையும் பரிசில்களையும் வழங்கி ஊக்குவித்து வருகின்றமை.
- 2007 ஆம் ஆண்டு முதல் தரம் 10 மாணவர்களுக்கான கணினிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டு பாடசாலையின் பரிசளிப்புவிழா அன்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றமை.

இவ்வாறு பல்வேறு வழிகளில் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பணியாற்றும் எமது சங்கத்தின் எதிர்கல செயற்பாடுகள் சிலவற்றை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

- பாடசாலைக்கு சுற்றுமதில் அமைத்தல்.
- பாடசாலைக்கான விளையாட்டு நிதியம் ஒன்றினை ஆரம்பித்தல்.
- வெளிநாடுகளில் பழைய மாணவர் சங்கக் கிளைகளைத் தோற்றுவித்தல்
- கணினி அறிவினை மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் தேவைப்படின் பெற்றோர்களுக்கும் வழங்குதல்.
- வறிய மாணவர்களை இனங்கண்டு அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து எதிர்கால வாழ்வினை வளம்படுத்தல்.

எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக பல்வேறு வழிகளிலும் பங்களிப்பை ஆற்றிவரும் எமது சங்கமானது இனிவரும் காலங்களிலும் மேற்கூறப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தி அதன் மூலம் பாடசாலையின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் துணையாக நிற்கும் என்பது திண்ணம்.

இந்த நேரத்தில் எமது பாடசாயின் எண்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாடசாலையின் வரலாற்றை தாங்கி வெளிவரும் **"பிரகாசம்"** மலர் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நல்லாசிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

**திரு.அ.மயூரன்,**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி**

## அதிபரின் உள்ளத்திலிருந்து.......



எண்பதாவது அமுதவிழாவை நோக்கி காலடி வைத்துள்ள யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அன்னைக்கு மலர் வெளியீடு செய்து அந்நங்கையின் பெருமைகளை வெளிக்கொணர்வதில் பெருமையடை கின்றேன். உயர்கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும்,

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க நல்லொழுக்கத்திலும் மாணவச்செல்வங்கள் உயர் சிறப்புக்களை பெற வேண்டுமென வாழ்த்துவதோடு, வருங்காலத்தில் பௌதிக வளங்கள் விஸ்தரிக்கப்படுவதுடன் விளையாட்டு மைதானமும் பெருவிளையாட்டுக்களில் உயர்வளர்ச்சியடைய பெற்றோர்கள், பழைய மாணவர்களின் பங்களிப்பு தேவையென்பதை சுட்டிக்காட்டுவதுடன் இப்பொன்னாளில் இந்நங்கை நல்லாள் செயற்கரிய உன்னத செயற்பாடுகளால் உலகெங்கும் தன் புகழ்பரப்பி தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென சிவகாமி சமேதரராய் நின்று அருள்பாலிக்கும் நடராஜப்பெருமானை வேண்டிய நல் வாழ்த்துக்களைக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

**திருமதி சந்திராதேவி யோகேஸ்வரன்,**
அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



எமது பாடசாலையில் சஞ்சிகை ஒன்றை வெளியிட முன்னாள் அதிபர்களான திரு கா.சந்திரபாலன், திரு ச.கைலாசநாதன் ஆகியோர் முயற்சி செய்தனர்.

ஆனால் இம்முறைதான் எமது அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் அவர்களால் இச்சஞ்சிகை வெளிவருகின்றது. இம்மலரை வெளியிட அவர் எடுத்துக்கொண்ட முயற்சியும் துணிவும் பாராட்டத்தக்கது

எமது பாடசாலையின் எண்பதாவது ஆண்டை முன்னிட்டு வெளிவரும் இம்மலருக்கு ஆக்கங்களைத் தந்துதவிய கல்விமான்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பிரகாசம் மலர ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களுக்கும் சிறப்பாக மலர்க்குழுவினருக்கும் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க. உபேந்திரன்,**
**பிரதி அதிபர்,**
**யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**

# மலராசியரின் இதயத்தில் இருந்து..............



சிவப்பிரகாசத்தில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கிக்கொண்டு எனது சிந்தையில் எழுந்த சில எண்ணங்களை இங்கே தவழ விடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது மகாவித்தியாலயம் 1928ஆம் ஆண்டு மாசித்திங்கள் 1ம் நாள் சைவப் பெரியாரான சரவணமுத்து சிவசம்பு என்பவரால் சைவப் பாரம்பரியம் தழைத்தோங்குதற்காக இரண்டு ஆசிரியர்களுடனும் ஏழு மாணவர்களுடனும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இன்று சங்கானைக் கோட்டத்திலே அதிகளவு மாணவர்களைக் கொண்ட பாடசாலையாக மட்டுமன்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர் குழாத்தினையும் கொண்டு பல சாதனைக்களை நிலைநாட்டி தேசிய மட்டம் வரை தனது புகழைப் பரப்பிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

சங்கானை நகரிலே மிடுக்குடன் கல்வியைப் போதித்து வரும் யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் தனது எண்பதாவது அகவையிலே "பிரகாசம்" என்னும் மலரையும் மலர வைப்பதிலே புளகாங்கிதம் அடைகின்றது.

இம்மலர் மாணவர்களின் ஆக்கங்களையும் அதிபர், ஆசிரியர்களின் ஆக்கங்களுடனும் கல்விப் பெரியார்களின் ஆக்கங்களையும் தாங்கி வருகின்றது. எதிர்வரும் காலங்களில் "பிரகாசம்" என்ற மலர் மாணவர்களின் எழுந்தாற்றலை மட்டுமல்ல பாடசாலை வரலாற்றுப் பதிவுகளையும் வெளிக்கொணர்ந்து எதிர்கால சமுதாயத்திற்கு மணம் வீசும் என்பதில் ஐயமில்லை.

எத்தனையோ இடர்களின் மத்தியிலும் "பிரகாசம்" என்ற மலர் வெளிவர வேண்டும் என உறுதியாக நின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்து செயற்படுத்தியவர் எங்கள் பேரன்பிற்கும் மதிப்புக்குமுரிய அதிபர் ஆவார். நாம் தயங்கி நின்ற சந்தர்ப்பங்களிலெல்லாம் நாளும்

பொழுதும் மலர்க்குழுவிற்கு உற்சாகமூட்டி மலர் மலர உரமூட்டியவர் எங்கள் அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் அவர்கள் என்று கூறுவதில் பெருமைப்படுகின்றேன். மலர்க்குழு சார்பாக அவருக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன்.

பிரகாசத்திற்கு ஆசிகள், வாழ்த்துக்கள் வழங்கிய ஆசான்கள் பெரியோர்கள் அனைவருக்கும் எமது மகா வித்தியாலயம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது. மற்றும் "பிரகாசம்" ஒளிவிட்டுப் பிரகாசிக்க ஆக்கங்களை தந்துதவிய சான்றோருக்கும் மலர்க்குழு சார்பில் நன்றியைக் கூறுகின்றேன். பிரகாசத்தில் தங்கள் ஆக்கங்களும் வெளிவர வேண்டுமென்ற முனைப்புடன் ஆக்கங்களைத் தந்த மாணவச் செல்வங்களுக்கு நன்றி கூறுவதோடு இனிவரும் மலர்களிலும் உங்கள் ஆக்கங்கள் வெளிவந்து சாதனைகள் நிலைநாட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

"பிரகாசம்" மலர பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய பிரதி அதிபர் திரு.க.உபேந்திரன் அவர்களுக்கும் பகுதித்தலைவர்களுக்கும் எமது நன்றிகள். சிறப்பாக மலர்க்குழுவினருக்கு மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். "பிரகாசம்" புதுப்பொலிவுடன் மிளிர புகைப்படங்களை எடுத்து வழங்கிய திரு.கு.சொருபன் அவர்களுக்கு எமது நன்றிகள். பிரகாசத்தினை கணினி வடிவமைப்புச் செய்த ஆசிரியர் திரு.சி.ரங்காதரன் அவர்களுக்கும் அட்டைப்படம் அமைத்துத் தந்த ஆசிரியர் திரு.தி.பகீரதன் அவர்களுக்கும் அச்சுருவாக்கம் செய்து நூல்வடிவில் அமைத்துத்தந்த சுன்னாகம் மகிந்தன் கொம்பியூட்டர் கிராபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் மலர்க்குழு சார்பாக மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரகாசம் வெளிவர உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெறுகின்றேன.

நன்றி

**திருமதி சுமித்திரா நிர்மலன்,**
**ஆசிரியர்,**
**யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.**

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. பாடசாலைக் கீதம் | |
| 2. ஆசியுரை | |
| 3. அதிபரின் உள்ளத்திலிருந்து | |
| 4. மலராசிரியரின் இதயத்திலிருந்து | |
| 5. அதிபர் அறிக்கை | 1 |
| 6. பாடசாலை வரலாறு | 6 |
| 7. எமது பாடசாலையில் சாரணியம் | 13 |
| 8. எமது பாடசாலைக் குருளைச்சாரணர் குழு | 15 |
| 9. எமது கல்வி | 17 |
| 10. கணிதம் பற்றி ஓர் நோக்கு | 23 |
| 11. ஆரோக்கியமான செயற்றிறனுக்கும் உயர் வினைத்திறனுக்குமான மார்க்கங்கள் | 26 |
| 12. பள்ளிக்கூடப் பூவரசு | 29 |
| 13. Unemployment in Jaffna | 35 |
| 14. மாணவர் ஆக்கம் - தமிழ் | 36 |
| - ஆங்கிலம் | 45 |
| 15. The uses and abuses of T.V | 52 |
| 16. தமிழ் எழுத்துக்களும் அதற்குரிய பயிற்சிகளும் | 53 |
| 17. திசை மாறிச் செல்லும் எம் இளம் சமூகத்திற்கு சமயக்கல்வியின் அவசியம் | 57 |
| 18. 5E கற்றல் - கற்பித்தல் முறையும் ஆசிரியர் வகிபாகமும் | 59 |
| 19. வர்ணங்களும் அவற்றின் தன்மைகளும் | 62 |
| 20. Jasmine | 64 |
| 21. வன்முறையற்ற தொடர்பாடல் | 65 |
| 22. Good habits and manners | 69 |
| 23. இலங்கையும் மீன்பிடிக் கைத்தொழிலின் தேவையும் | 71 |
| 24. கல்வியும் நேர முகாமைத்துவமும் | 75 |

25. பாலர் கல்வியும் ஆசிரியர் பொருத்தப்பாடும் 77
26. யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில்
கரப்பந்தாட்டம் 81
27. கண்பாதுகாப்பு 85
28. சைவசித்தாந்தம் கூறும் ஒழுக்கவியல் 87
29. கணினிக் கல்வி 92
30. கற்பித்தலில் தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாடு 94
31. மாணவர்களுக்கு விழுமியக்கல்வியின் அவசியம் 95
32. கணிதம் கசப்பதேன்? 103
33. போதைப்பொருட் பாவனை 109
34. அன்பு 112
35. கல்லறையும் கண்ணீர் விடும் - ஓரங்க நாடகம் 113
36. முயற்சி தன் மெய் வருந்தக் கூலி தரும் 120
37. கம்பராமாயணத்தில் இலக்குவன் 123
38. தாய்மை 125
39. மாணவர் கல்வியும் பெற்றோர், ஆசிரியரின் பங்களிப்பும் 133
40. விவாகம் - ஒரு பார்வை 136
41. இடைநிலை வகுப்புக்களில் வாசிப்புத்திறனை விருத்தி செய்தல் 141
42. ஆதிமூலத்தின் ஓவிய வெளிப்பாடு 144
43. புலம் பெயர் சூழலில் ஈழத்தமிழர் பண்பாட்டின்
தொடர்ச்சி - சில அறிமுகக் குறிப்புக்கள் 147
44. தகவல் தொடர்பாடல் தொழினுட்பமும்
இன்றைய இளஞ்சந்ததியினரும் 153
45. பாடசாலைத் தொழிற்பாடுகளும் அதன் வகைகூறலும் 156

பிரகாசம் பிரதிகள் பெறுவோர்
நன்றியுரை

# அதிபர் அறிக்கை

வேழமுகத்தோன் விநாயகப்பெருமானை மனதிலிருத்தி வேட்டாளர் வயிரவர், குங்கிலியம்மன் சகிதம் அருள்பாலிக்கும் சிவசிந்தனையை தூண்டும் சிவனின் அருளாசியை வேண்டிய எண்பதாவது அமுதவிழாவினை நோக்கி காலடி வைத்துள்ள யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அன்னையின் வளர்ச்சிப் பாதையை அறிக்கையாக சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1928ஆம் வருடம் மாசித்திங்கள் 2ம் நாள் வரலாற்று பெருமை மிக்க பொன்னாள் இந்நந்நாளில்தான் சங்கையூர் என அழைக்கப்படும் சங்கானைப் பிரதேசத்துக்கு சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுக்கும் கல்விக்கூடம் உருவாக்கப்பட வேண்டும் என்ற நல்ல சிந்தனை சங்கையூர் பெற்ற தவப்புதல்வன் சிவப்பிரகாசம் பிள்ளையின் நெஞ்சிலே தோன்றியது. தோன்றிய சிந்தனை செயல்வடிவம் பெற்றது. ஏழு பிள்ளைகளுடன் ஆரம்பமான பாடசாலை 'கற்றுணர்ந்து ஒழுகு' என்ற மகுட வாக்கியத்தை தன்னகத்தே கொண்டு இன்று பல துறைகளிலும் பல்கிப்பெருகி 1200 மாணவர்களுக்கு மேல் கல்வி பயிலும் 1C தரம் கொண்ட மகாவித்தியாலயமாக வளர்ச்சியடைந்துள்ளது.

இவ்வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்ட இப்பிரதேசத்தில் தோன்றிய கல்விமான்களையும், காலத்துக்கு காலம் நிர்வாகப் பணிகளை திறம்பட ஆற்றிய அதிபர்களையும், கல்விப்பணிக்கு முழு ஆதரவையும் நல்கிய கல்வி வலயத்தைச் சார்ந்த கல்விமான்களையும் மாணவச் செல்வங்களுக்கு கல்வியையும் ஒளியையும் சேர்த்தூட்டிய ஒளிவிளக்குகளான ஆசிரியப் பெருந்தகைகளையும், தாம் பெற்ற பிள்ளைகளை எம் மகா வித்தியாலத்துடன் ஊடாக சான்றோன் ஆக்க வேண்டுமென துடிப்புடன் கைகொடுக்கும் பெற்றோர்களையும் தாம் கற்றுத் துறைபோந்த கலைக்கூடம் உயர்ந்து வளர்ச்சியடைய வேண்டுமென பல்வேறு துறைசார்ந்த வளர்ச்சியைப் பாதைகளுக்கும் தங்கள் இரு கரங்களையும் நீட்டி ஆதரவு வழங்கும் பழைய மாணவர்களையும், விளையாட்டு தைதானம் அமைந்திருக்கும் காணிப்பிரச்சினையை தீர்க்க உதவிய கனடாவில் வாழும் சங்கையூர் பெற்ற இளைஞர்களையும் காலத்துக்கு காலம் விளையாட்டுத்

துறையின் வளர்ச்சிப் பாதைக்கு உதவும் கரங்களை வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்களையும் வரலாற்று பொக்கிசங்களாக காட்டுவதில் பெருமையடைகின்றேன்.

இன்றைய சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் உயர்ந்து வளர்ந்த பெருவிருட்சங்களான வேம்பு, மலைவேம்பு, ஆல், அரச மரங்கள் சுற்றி நின்று காவல்காக்க கமுகங்கன்றுகள் வரிசையாக நின்று தண்ணொளி வீச ,நிறைந்து நிற்கும் வாழைக்கன்றுகள் தென்றலுடன் கூடி பச்சைப்பசேலென்று காட்சியளிக்க மஞ்சலாறு போல பொன்னொச்சி மரங்கள் பூத்துச்சொரிய சாடிகளிலும் நிலங்களிலும் வைக்கப்பட்ட குறோட்டன் செடிகளும், பூத்துக்குலுங்கும் பூக்கன்றுகளும் மாணவச் செல்வங்களுக்கு புத்துணர்ச்சியளிக்க பதாதைகள் கட்டிடங்கள் அமைந்திருக்கும் இடங்களை வழிகாட்ட, "பாடசாலையின் சகல வளங்களையும் ஒன்றிணைத்து தரமான கற்றல் கற்பித்தல் ஊடாக எமது மாணவர்களின் பாடரீதியான அடைவு மட்டத்தையும், துறைசார் ஆற்றல்களையும் அதிகரிப்பதன் மூலம் வருங்கால சவால்களுக்கு முகம் கொடுத்தல்" என்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்காக பல நெருக்கமான சிறு கட்டிடங்களுக்குள் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மாணவர்களிடையே பரந்த மனப்பாங்கையும் தேடிக்கற்கும் சிறந்த அறிவாற்றலையும், கூடிக்குலாவி கருத்துக்களை பரிமாறி குழுக்களாக பிரிந்து கற்கும் அறிவுத்திறனை உச்சப்பயன்படுத்த மெல்லக் கற்கும் மாணவர்களையும் இழுத்தெடுத்து சந்தோசமாக கல்வி பயிற்றும் 5E முறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. 5S ஒழுங்கு முறைகளுக்கேற்ப மகாவித்தியாலயம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

**கல்விச்செயற்பாடுகள்**

வருடாவருடம் 5ம் அண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைகின்றார்கள். இவர்களுக்கு 1 - 5 வரை சிறந்த கற்றல் தேர்ச்சிகள் ஊடாக கல்விச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. மெல்லக்கற்கும் மாணவர்கள் கற்பதில் பின்தங்கிய மாணவர்களுக்கு தொடர்சியான கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றது. தரம் 9 மாகாண பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் தரமான கல்விச் செயற்பாடுகள்

இடம்பெறுகின்றன. இத்தரத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு கணிதம், தமிழ்மொழி, விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு உயர்மட்ட மாணவர் கல்விச் செயற்பாட்டு நிதியூடாக தொடர்பயிற்சியளிக்கப்படுகின்றன.

க.பொ.த (சாதாரண) ப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கும் கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு போன்ற பாடங்களுக்கு பின்தங்கிய நிலையிலுள்ள மாணவர்களை பிரித்தெடுத்து தொடர் பயற்சி வகுப்புக்களுடாக பயிற்றுவித்து பரீட்சைக்கு அனுப்புகின்றோம். இங்கு கல்வி கற்கும் மாணவர்கள் கணிதத்துறைக்கு, விஞ்ஞானத்துறைக்கு மட்டும் வெளிப்பாடசாலைகளுக்கு செல்கின்றார்கள். வர்த்தகம், கலைத்துறை மாணவர்கள் எமது கலைக்கூடத்திலேயே கல்வியை தொடர்கின்றார்கள் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

## கணினித்துறை

S.L.C எமது மகாவித்தியாலயத்தில் 2005ல் ஆரம்பிக்கப்பட்டது. கணினிக்கல்வியை அனைத்து வகுப்பு மாணவர்களும் நேரசூசிப்படி கற்கின்றார்கள். க.பொ.த (சாதாரண) வகுப்பில் I.C.T தொழில்நுட்ப பாடங்களில் ஒன்றாக எடுத்து இம்முறை பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள். க.பொ.த (உயர்தர) மாணவர்களும் G.I.T பரீட்சைக்காக கற்கின்றார்கள். இவ்விரண்டு பரீட்சைகளிற்கும் கற்பித்த ஆசிரியை செல்வி சாரதா நாகலிங்கம் அவர்களின் தொடர் பயிற்சி, காலை, மாலை வகுப்புக்கள் என்பனவற்றால் தோற்றிய மாணவர்கள் .அனைவரும் சித்தி எய்துவார்கள் என்பதை திடமாக கூறிவைக்க விரும்புகின்றேன்.

நூறு வீதம் கணினிகளை முகாமைத்துவ செயற்பாடுகளுக்கும், கணினி அறிவை மேம்படுத்த காலை, மாலை வகுப்புக்களுக்கும், கற்றல் செயற்பாட்டு அறிக்கைகளுக்கும் பயன்படுத்துகின்றோம். கணினிக்கல்வியை மாணவர்கள் மகிழ்ச்சிகரமாக கற்கின்றார்கள். இக்கணினிக்கல்வி வளர்சிக்கு பழைய மாணவர்களும் ஆக்க பூர்வமாக ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். மகாவித்தியாலய கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் அனைத்து ஆசிரியர்களும் கணினிக்கல்வியை அறிவை பெற்றிருக்கின்றனர். வலயக்கல்வித்திணைக்கள அனுசரணையுடனும் உயர்மட்ட ஆசிரியர் செயற்பாடுகளினூடாகவும் பயிற்சியை பெற்றுள்ளனர். சுயமாகவும் கணினி

வாண்மை மேம்படுத்தியுள்ளனர். 5E செயன்முறைக்கு கண்டாய்வுப் படிவங்களை தயாரிப்பதற்கு, பின்தங்கிய மாணவர்களுக்கு பாடமேம்பாட்டுக்குரிய வினாக்களை தயாரிப்பதற்கு, விழாக்களுக்கு, நலனோம்புத்திட்டங்களுக்கு அறிக்கைகளை தயாரிப்பதற்கும், வலைப்பின்னல் ஊடான செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

## நூலகம்

வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்குகின்றது அல்லது பூரணத்துவம் அடையச்செய்கின்றது. ஓய்வான ஆசிரியர் லீவு எடுக்கும் காலங்களில் நூலகத்துக்கு சென்று வாசிக்கின்றார்கள். 2009ல் புதிய மாடிக்கட்டிடத்திற்குள் புதிதாக நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட நூலகத்துக்குள் மாணவர்கள் வாசிப்புத்திறனை அதிகரிக்கவுள்ளனர். வாசிப்பு அதிகரிக்க மொழியாற்றல் வலுவடைய பரீட்சை பெறுபேறுகளும் உயர்வடையுமென நம்பிக்கையளிக்கின்றேன்.

மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சுகாதார நலனோம்புத் திட்டங்களுக்கும் முதலுதவி, பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சுத்தம், சுகாதாரம், முதலுதவிகள் சிறந்த முறையில் பேணப்படுகின்றன. பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் சந்தோசமாக கற்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுத்துறை

மேலும் வகுப்பறைக் கல்வியின் ஊடாக மட்டுமன்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளினூடாகவும் மாணவர்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றார்கள். ஒரு மாணவனை மைதானம் ஒழுக்க சீலனாக வளர்த்தெடுக்கின்றது என்பதற்கிணங்க பல விளையாட்டுக்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கரப்பந்து (ஆண், பெண்), பட்மின்ரன், வலைப்பந்து, மென்பந்து துடுப்பாட்டம், உடற்பயிற்சி (ஆண், பெண்) பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. 2008 இல் கோட்ட மட்டத்தில் 6 பெருவிளையாட்டுக்களில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துள்ளளோம். கரப்பந்து 15 வயதின் கீழ், 17 வயதின் கீழ் பெண்கள் வலயம், மாவட்டம், மாகாண மட்டங்களில் முதல், இரண்டாம் இடங்களைப் பெற்று தேசிய மட்டத்துக்கும் தெரிவானார்கள். பல வெற்றிக் கேடங்களைத்

தேடிக்கொடுத்திருக்கின்றார்கள். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர் களுக்கும், பழைய மாணவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

மெய்வல்லுநர் போட்டிகளில் கோட்ட, மட்ட மட்டங்களில் பல மாணவர்கள் பல இடங்களைப் பெற்றும் மாவட்டத்தில் 2 மாணவிகள் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர். இந்த வருடம் (2008) மெய்வல்லுநருக்கான தொடர் பயிற்சிகள் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 2009 இல் நிறைய மாணவர்கள் மாவட்டத்தில் இடமெடுத்து மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் இடமெடுப்பார்களென நம்பிக்கையளிக்கின்றேன்.

எமது மகாவித்தியாலயத்தில் உச்சப்பயன் அடைந்த விடயங்களை கூறியுள்ளேன். அடையப்பட வேண்டிய விடயங்களும் நிறையவுள்ளன.

(i) கல்விச் செயற்பாட்டில் தரரீதியாக பின்தங்கிய மாணவர்கள் உள்ளனர்.
(ii) மெல்லக் கற்கும் மாணவர்கள் உள்ளனர்.
(iii) கணிதம், விஞ்ஞானத் துறைகளில் அடைவு மட்டத்தை கூட்ட வேண்டிய மாணவர்கள் உள்ளார்கள்.
(iv) வாசிப்புத்திறன் அதிகரிக்க வேண்டிய மாணவர்கள் உள்ளனர்.
(v) மிக மிகக் குறைந்தளவில் இடைவிலகல் மாணவர்கள் உள்ளனர்.

மேற்கூறப்பட்ட மாணவர்கள் மாதாந்த பரீட்சைகள், தவணைப் பரீட்சைகள் வலய மட்ட மாதாந்த பரீட்சைகள், வகுப்பு அவதானிப்புக்கள் மூலம் பகுப்பாய்வு செய்து இனங்காணப்பட்டுள்ளனர். இம்மாணவர்களுடைய அடைவு மட்டடத்தை மேம்பாடடையச் செய்வதற்கு பல திட்டங்களை முன்வைத்துள்ளோம். இந்த வருடமும் ஆசிரியர்களுடைய, பெற்றோர்களுடைய பூரண ஒத்துழைப்புடன் மேலே கூறப்பட்ட 5 விடயங்களிலும் வெற்றியடைவோம் என உறுதியளிக்கின்றேன்.

## பௌதீக வளங்கள்

ஆசிரியர்களுக்கு கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு தர உள்ளீட்டு நிதியூடாக தாராளமான பொருட்கள் வழங்குகின்றோம். வளவாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு கட்புல செவிப்புல சாதனங்களினூடாக

பயிற்சியளிக்கின்றோம். ஆசிரியர்களின் வாண்மைக்கு Onside Training ஊடாக பயிற்சிகள் அளிக்கின்றோம்.

## புதிய இரண்டு மாடிக்கட்டிடம்

கட்டிடப்பிரச்சினைகள் பாரியதாகவிருக்கின்றன. அப்பிரச்சினை இந்த வருடம் நீக்கப்படுகின்றது. 78 வருடகாலமாக காணிப்பிரச்சினையைக் காரணங்காட்டி மாடிக்கட்டிடம் அமைக்கும் வாய்புக்கள் நழுவிப் போயின. ஆனால் வலிகாமம் கல்விப்பணிப்பாளர் உயர்திரு ப.விக்கினேஸ்வரன் அவர்களின் அயராத முயற்சியால் நிக்கொட் நிறுவனத்தினரால் 130 x 25 இரண்டு மாடிக் கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது. கீழ் மாடியில் அதிபர் அறை, நூல் நிலையம் கணினி அறை 5 S க்கு அமைவாக நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேல் மாடியில் 5 வகுப்பறைகள் அமைக்கப் பட்டுள்ளன. வகுப்பறை பற்றாக்குறைகளும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. எங்கள் வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளருக்கும், நிக்கொட் நிறுவனத்தினருக்கும் சங்கானை பிரதேச மக்கள் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளவர்களாக உள்ளார்கள்.

உதை பந்து போன்ற பெருவிளையாட்டுக்கும் மெய்வல்லுநர் போட்டி களுக்கும் விளையாட்டு மைதானம் விஸ்தரிக்கப்பட வேண்டும். அன்றேல் இன்னொரு இடத்தில் காணி கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது. ஒரு மாணவனை நன் மாணாக்கனாக்குகின்ற பணியில் மைதானமும் பெரும் பங்காற்றுகின்றது. இம்முக்கியமான விடயத்தை பெற்றோர்களும் பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் கருத்தில் கொள்ள வேண்டும். இன்று அமுதவிழாவினை கொண்டாடும் யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் எதிர்காலத்தில் விஞ்ஞானத்துறையையும் உள்ளடக்கிய 1AB தர பாடசாலையாக தரமுயர்ந்து சகல துறைகளிலும் இலங்கை பூராகவும் புகழ் மணம் பரப்பி தலைநிமிர்ந்து கல்வி எனும் ஒளி சங்கையூரில் ஒளிவிட்டு பிரகாசிக்க வேண்டுமென வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திருமதி.ச.யோகேஸ்வரன்,**
**அதிபர்,**
**யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**



# பிரகாசம் - மலர்க்குழு

## கரப்பந்தாட்டம் 15 வயதின் கீழ் பெண்கள் அணி



## மாகாணமட்டம் 1ம் இடம்

# பாடசாலை வரலாறு

நித்திலங் கொழிக்கும் ஈழத்திருநாட்டின் வட பகுதியில் யாழ் மாவட்டத்தில், சைவமும் தமிழும் தழைத்தோங்கும் நீர்வளம் நிலவளம் பொருந்தி விளங்கும் கற்றோரும், கலைஞர்களும், செல்வப் பெரு வணிகர்களும் விவசாயப் பெருமக்களும் நிறைந்து வாழும் சங்கானைப் பட்டினத்தின் மத்தியில், வல்லை வீதியில் அமைந்திருக்கின்றது யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

இலங்கை வாழ் சைவத்தமிழ்ச் சமுகத்தில் 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சமூக, கலாசார மதமாற்றம் என்பவற்றுக்கிடையே சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் பேணிப்பாதுகாக்க வேண்டியது காலத்தின் தேவையாக இருந்தது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் 1849 ஆம் ஆண்டு யாழ் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை ஒன்றை ஆரம்பித்த பின் யாழ்ப்பாணத்தில் ஊர்கள் தோறும் சைவத் தமிழ்ப் பாடசாலைகள் தோற்றம் பெறலாயின. அவ்வாறே சங்கானைக் கிராமத்திலும் சைவப்பிள்ளைகள் கல்வி கற்பதற்கு பாடசாலை ஒன்று அவசியம் என எண்ணிய பண்பாட்டுச் செழுமையும், சிந்தனைத்திறனும் நற்குணமும் பொருந்திய பெரியார் திரு.சரவணமுத்து சிவசம்பு அவர்கள் 1928 ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 1 ஆம் திகதியன்று தனது காணியில் இப்பாடசாலையை ஆரம்பித்து வைத்தார். இப்பாடசாலைக்கு தனது மூத்த மகனான சிவப்பிரகாசம் என்பவரின் பெயரைச் சூட்டி சிவப்பிரகாச வித்தியாசாலை எனப் பெயரிட்டார்.

தனது சொந்தச் செலவிலேயே இரண்டு ஆசிரியர்களை நியமித்து கல்வி கற்பிக்கச் செய்தார். ஏழு மாணவர்களுடன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1937 ஆம் ஆண்டுவரை தனது மேற்பார்வையில் நிர்வகித்து வந்தார். 1924ல் நிறுவப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராக விளங்கிய திரு.சி.இராசரத்தினம் அவர்கள் ஊர்கள் தோறும் நடாத்தப்பட்டு வந்த சைவப்பாடசாலைகளை கையேற்று பதிவு செய்து கொண்டதோடு, அரசாங்க உதவிகள் பெற்றுக்கொள்ளவும் செய்தார்.

அவ்வகையிலேயே யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயமும் சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் பொறுப்பில் நடாத்தப்பட்டு வந்தது. திரு.சி.அப்புக்குட்டி, திரு ஞா. சுப்பிரமணியம் ஆகியோர் முறையே அக்காலங்களில் அதிபர்களாக இருந்திருக்கின்றனர்.

1940 முதல் திரு வ.செல்லையா அவர்கள் 1960 வரை அதிபராக இருந்து பாடசாலையை சிறப்பாக நடாத்தி வந்தார். இவர் காலத்திலேயே மேல் வகுப்புக்களில் படித்த மாணவர்களாகிய சுப்பையா, திருநாவுக்கரசு, வல்லிபுரம் - தம்பிராசா, கார்த்திகேசு - வேலாயுதம் அப்பாத்துரை ஆகியோரால் இன்று பாடசாலையின் பெருவிருட்சமாக காட்சிதரும் அரசமரம் நாட்டி வளர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் 1957 முதல் 1963 வரை திரு வ.சுப்பிரமணியம் அவர்களும் 1964 - 1970 வரை திரு பரம் தில்லைராசா (சங்கீதபூசனம்) அவர்களும் பண்டிதர் மயில்வாகனம் அவர்களும் அதிபர்களாக கடமையாற்றியிருந்தனர்.

20.06.1970 முதல் 28.02.1973 வரை திரு வி.நாகராசா அவர்களும், 01.01.1974 முதல் 1977 வரை திரு ம.நவரத்தினம் B.A அவர்களும் 01.06.1977 முதல் 07.02.1979 வரை திரு ச.நவரத்தினம் அவர்களும் 08.02.1979 முதல் 23.01.1986 வரை திரு ம.க சிவபாதலிங்கம் அவர்களும் கடமையாற்றி வந்துள்ளனர்.

நிறுவுனரின் நல் மனம் போல பாடசாலை வருடாவருடம் கல்வியிலும், ஒழுக்கத்திலும், மாணவர் தொகையிலும் மேலும் கட்டடம் போன்ற பௌதீக வளங்களிலும் வளர்ந்து கொண்டே வருகின்றது.

24.01.1986 இல் கா.சந்திரபாலன் அவர்கள் அதிபர் ஆனதும் பாடசாலை வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சி உதயமானது. அவரிடம் காணப்பட்ட நல்ல பண்புகள், திட்டமிடல், நேரமுகாமைத்துவம், துணிவு, திறமை, தன்னம்பிக்கை என்பனவும், ஆசிரியர்களிடம் காட்டிய அன்பு, மாணவர் கல்வி வளர்ச்சியில் எடுத்துக்கொண்ட முயற்சிகள், பெற்றோருடனும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடனும் வளர்த்துக்கொண்ட நல்லுறவுகள் என்பனவும் பாடசாலையின் துரித முன்னேற்றத்துக்கு வழிகளாக அமைந்தன. அவர் துணிவுடன் இப்பாடசாலைக்கு வந்தமை சவால்களுக்கு முகங்கொடுத்தமை, வெற்றி கண்டமை அவரது சாதனைகள் ஆகும். அத்துடன் கற்றல் செயற்பாடுகள், இணைபாடவிதான செயற்பாடுகள் என்பவற்றில் மாணவர்களை ஆர்வத்துடன் ஈடுபடச் செய்தார். அவரின் வழிகாட்டலில் செயற்பட்ட மாணவர்கள் பல துலங்கல்களையும் வெளிப்படுத்தத் தொடங்கினர்.

இவரது செயற்பாடுகள் யாவும் சங்கானை வாழ் மக்களின் மனதைத் திருப்திப்படுத்தியது. மக்களைச் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலத்தின் பக்கம் ஈர்த்தது. மாணவர் தொகை அதிகரிக்கத் தொடங்கியது. 29.09.1986 இல் புதிய இரண்டு மாடிக்கட்டிடம் ஒன்றிற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும் அக்கட்டடம் பல்வேறு காரணங்களால் இரண்டு மாடியாக கட்டமுடியாமல் இரு கட்டடங்களாகக் கட்டப்பட்டது.

மற்றும் இவர் காலத்தில் மரம் நாட்டு விழா ஒழுங்கு செய்யப்பட்டு மரக்கன்றுகள் பெறப்பட்டு நாட்டப்பட்டன. மரங்களை சுற்றி மூரி மட்டைகள் வரியப்பட்டு மரங்கள் பேணிப்பாதுகாத்து வளர்க்கப்பட்டன. அவ்வாறு வளர்க்கப்பட்ட மரங்களே இன்றும் பாடசாலை வாசலிலும் பாடசாலை வளவினுள்ளும் ஆங்காங்கு நிழலும் குளிர்மையும் தந்து கொண்டிருக்கின்றன. அத்தோடு அக்காலத்தில் நிலவிய அசாதாரண சூழல் காரணமாக வலி கிழக்குப் பகுதி மாணவர் பெருமளவில் இங்கு வரவே அவர்கள் யாவரையும் இன்முகத்துடன் வரவேற்று பாடசாலையில் இணைத்தார். வகுப்பறைகள் நிரம்பி வழிந்தன. எனினும் கல்வி வளர்ச்சி பாதிப்படையாமல் அயலிலுள்ள சங்கங்கள், பெரிய வீடுகள், கோயில்கள் என்பனவற்றில் பெற்றோரின் ஒத்துழைப்போடு வகுப்புக்கள் நடாத்தவும் ஏற்பாடுகள்

செய்தார். அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு தளபாட வசதிகள், தற்காலிக கொட்டகை என்பன கிடைக்க ஆவன செய்தார். மேலும் அவரது அருமுயற்சி காரணமாகவே 1991.08.03 இல் உயர்தர வகுப்பு கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இவர் இந்து நாகரிகம் பாடத்தினை திறம்படகற்பித்தார். மற்றும் எமது பாடசாலையில் பரிசளிப்பு விழா நிகழ்வை முதன்முதலில் நடாத்தி வைக்க அவன செய்தார். 'ஷப்றா' நிறுவனத்தின் உதவியுடன் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் பரிசளிப்பு விழாவை நடாத்தி வைத்தார். மேலும் சில வருடங்களாக 'பிள்ளைச்சித்துண்டு' என்ற மைதானத்தில் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி இவரது காலத்திலேயே பாடசாலையின் மைதானத்தில் முதன்முதலாக நடாத்தப்பட்டது. மேலும் பாடசாலைக்கு அளப்பரிய சேவையாற்றிவரும் பழைய மாணவர் சங்கமும் இவர் காலத்திலேயே உருவாகியுள்ளது. இவ்வாறு பாடசாலை வளர்ச்சிக்கு முன்னெடுப்புக்கள் பலவற்றை ஆரம்பித்த அவர் பதவி உயர்வு பெற்றுச்சென்றார்.

திரு கா.சந்திரபாலன் அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் சென்ற போது திரு செ.குபேரநாதன் அவர்கள் பாடசாலையின் அதிபர் ஆனார். அன்றைய கால தேவைகளுக்கேற்ப பாடசாலை நிர்வாகத்தை திட்டமிட்டு செயலாற்றிவந்தார். சகல கல்வி அறிவுடன் சமய ஒழுக்க வளர்ச்சி மேம்பாடு அடையவும் செயலாற்றி வந்தார். அலுவலக நிர்வாகத்தில் பல புதிய ஒழுங்குமுறைகளை மேற்கொண்டார். கோவைகளை இலகுவில் பெறத்தக்க வகையில் அடுக்கி வைக்கவும் தரவுகளை உடனுக்குடன் பெறத்தக்க வகையிலும் ஆக்கபூர்வமாக செயலாற்றினார். மாணவர் கல்விச் செயறபாடுகளில் அக்கறை காட்டிய அவர் இந்து சமயம், இந்து நாகரீகம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களை கற்பித்தார். அத்துடன் ஆசிரியர்களிடம் கண்டிப்புடன் நடந்து கொள்வதுடன் உரிய வேளையில் பொருத்தமான கருமங்களை மேற்கொள்ளவும் செய்பவர். இவர் மாற்றலாகி வேறு பாடசாலைக்கு சென்றதும் திரு ஆ.வ கணேசலிங்கம் அவர்கள் 01.01.1995 அன்று அதிபர் ஆனார்.

அவரது நிர்வாகத்திலும் கல்வியறிவும், திட்டமிட்ட செயற்பாடுகளும் பாடசாலை வளர்ச்சிக்கு ஏதுவாக அமைந்தன. அவரது ஒவ்வொரு செயலுக்கும் தானே ஆலோசித்து திட்டமிடுவார். திட்டங்களை நல்ல முறையில் முன்னெடுத்து ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நிறைவேற்றுவார்.

பரிசளிப்பு விழா நிறுவுனர் நாளிலே கொண்டாப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். இவர் காலத்திலேயே முதன்முதல் இரு நிகழ்வுகளும் ஒன்றாக நடாத்தப்பட்டன. ஆசிரியர்களை தமது நண்பர்கள் போலவும் சகோதரன் போலவும் அன்போடு நடத்தியவர். பாடசாலை வகுப்பறைகள் யாவற்றிலும் சந்தர்ப்பம் வரும் போது கற்பித்து மாணவர் யாவரையும் அறிந்து கொண்டவர். மாணவர்களுக்கு நல்ல புத்திமதிகளை, கதைகளை, நகைச்சுவையாகக் கூறுவதில் வல்லவர். தனது ஊர், தான் படித்த பாடசாலை, தமது உறவினர், தனது அயலவர் என்ற உரிமை அவருக்கு இப்பாடசாலையில் கிடைத்த தனிப்பெருமை ஆகும். சிறந்த இறையன்பும் சமய நம்பிக்கையும் சமய உணர்வும் நீதியான போக்கும் கொண்டவர்.

இவரது காலத்தில் இடப்பெயர்வு ஏற்பட்டு தென்மராட்சி சென்றிருந்த போதும் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பாதிக்காத வகையில் நு/சரஸ்வதி மகாவித்தியாலத்தில் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை மேலும் சில பாடசாலைகள் இணைந்து மாலை நேர வகுப்புக்கள் இடம்பெறச் செய்தார். கலைவிழா ஒன்றினை ஒழுங்கு செய்து பாடசாலை மைதானம் செப்பனிடும் முயற்சியை மேற்கொண்டார். மேலும் இவரது காலத்தில்தான் உயர்தர வகுப்பில் வர்த்தகப்பிரிவும் ஆரம்பமானது.

திரு ச.கைலைநாதன் அவர்கள் 06.06.1997 இல் பாடசாலைக்கு அதிபர் ஆனதும் பாடசாலையின் வளர்ச்சி மென்மேலும் விருத்தியடையலானது. அவரது ஆளுமை, ஆற்றுகைத்திறன், சமத்துவ சமகால அணுகுமுறை. அன்பான உபசரிப்பு, கனிவான சொற்கள், கல்வி மேம்பாடு மற்றும் ஆசிரியர்களுடன், கிராமத்தவருடன் மேலதிகாரிகளுடன் ஏனைய நிறுவனங்களுடன் வைத்திருந்த நட்புறவுடனான அணுகுமுறை யாவும் பாடசாலையின் உன்னத வளர்ச்சிக்குத் துணையாக அமைந்தன.

அவரது சுறுசுறுப்பும், ஒத்துழைப்பும், மதிநுட்பமும் செயல்திறனும், எந்த விடயத்திலும் முன்னின்று நடத்தும் துணிவும், விடாமுயற்சியும் மாணவர்களின் கல்வி, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் விருத்திபெற எடுத்துக்கொண்ட முயற்சிகளும் வேகமாக மாறிவருகின்ற உலகமயமாக்கல் கொள்கையின் கீழ் கல்விச் செயற்பாடுகளில் மாற்றப்பட்டிருந்த குடும்பப் பாடசாலைச் செயற்பாடுகளை கொத்தணி, கோட்ட மட்ட செயற்பாடுகளை முன்னின்று சிறப்பாக வழிநடத்தியமை ஆகியன கல்விச் சமூகத்தினரால் பெரிதும் பாராட்டப்பட்டது.

மூன்று மாடியிலான கட்டிடம் ஒன்றிற்கு 12.09.2001 இல் அத்திவாரமிடப்பட்ட போதும் மூன்று மாடிகள் நிறைவடைய சந்தர்ப்பம் இல்லாது போனமையால் 28.01.2002 அன்று ஒரு கட்டிடத்திலேயே அலுவலகக் கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் தென்மோடி நாட்டுக்கூத்து மூலம் முதன் முதலில் மாகாண மட்டத்தில் பெயர் விளங்கு நிகழ்ச்சி இவரது காலத்தில் இடம்பெற்றது. மற்றும் பாடசாலை வளவிலுள்ள வேட்டாள வைரவர் ஆலய புனர்நிர்மாணப் பணிக்கான ஆரம்பகட்ட செயற்பாடுகளை, நிதி சேகரித்தலை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடனும், பழைய மாணவர் உயர்தர மாணவர் மன்றங்களுடனும் சேர்ந்து செய்திருந்தார். கணினி அறை அமைப்பதற்கும் கட்புல செவிப்புல சாதன அறைகளை அமைப்பதற்குமான முதற்கட்ட பணிகளை ஆரம்பித்ததோடு அதற்கு வேண்டிய சாதனங்களை பெற்றுக்கொள்வதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுத்திருந்தார்.

தற்காலிய கொட்டகைகளாயிருந்த சில கட்டிடங்கள் சீமெந்து பூசப்பட்ட சீற் போடப்பட்ட நிரந்தர கட்டிடங்களாக்கப்பட்டன. புதிதாக குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டது. UNHCR உதவியுடன் மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. மேலும் பல அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்த வேளையில் பதவி உயர்வு பெற்று சென்றார்.

திரு ச.கைலாசநாதன் அவர்கள் பதவி உயர்வு பெற்றுச் சென்றதும் திருமதி வேணுகா சண்முகரத்தினம் அவர்கள் இப்பாடசாலையின் முதற் பெண் அதிபராக 30.09.2004 அன்று கடமையேற்றார். குறுகிய காலம் பணி புரிந்தாலும் பெற்றோரின் அபிவிருத்திச் சங்கததினரின், ஆசிரியர்களின், மாணவர்களின் நன்மதிப்பபைப் பெற்றவர். அவரது அன்பு கலந்த உபசரிப்பு, மலர்ச்சியான முகம், சேவை மனப்பான்மை என்பன எல்லோரையும் கவர்ந்திருந்தன.

மனித வள மேம்பாட்டுக்கு அத்தியாவசியமானது கல்வி. எனவே மாணவர்கள் மகிழ்வோடு கல்வி பெறவும், ஆசிரியர்கள் தமது சேவையை மகிழ்வுடனும் விசுவாசத்துடனும் நிறைவேற்றவும் விரைந்து செயற்பட்டவர். இவர் காலத்தில் 12.01.2005 அன்று பழைய மாணவர் சங்கத்தினரால் நிழற்பிரதி இயந்திரம் வழங்கப்பட்டது.

தற்காலிய அதிபர் இடமாற்றத்தின் மூலம் இப்பாடசாலைக்கு வந்த இவர் 31.01.2005 அன்று வரை தனதுசேவையை செவ்வனே செய்ததோடு 01.02.2005 அன்று கட்புல செவிப்புல சாதன அறை, கணினி அறை ஆகியன திறந்து வைத்ததோடு பரிசளிப்பு விழாவினையும் சிறப்பாக நடத்திய பின் நிரந்தர அதிபர் நியமனம் பெற்று வேறு பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றிருந்தார்.

தூங்காமை, கல்வி, துணிவுடைமை மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று எமது பாடசாலையை இன்று நிர்வகித்து வரும் அதிபர் திருமதி சந்திரதேவி யோகேஸ்வரன் அவர்கள் இப்பாடசாலைக்கு வந்தமை ஒரு பரிசளிப்பு விழா நன்னாளிலேயாகும். அன்றைய தினமே (01.02.2005) கணினி அறையும், கட்புல செவிப்புல சாதன அறையும் திறந்து வைக்கப்பட்டன.

அஞ்சா நெஞ்சமும், பயன் கருதாப் பணியும் அர்ப்பணிப்பும், சாதுர்யமான பேச்சுத்திறனும் ஆற்றுகைத்திறனும் மிக்க அதிபர் அவர்கள் எமது பாடசாலைக்குக் கிடைத்தது வரப்பிரசாதமாகும். சமய வளர்ச்சியோடு ஒழுக்க வளர்ச்சியும் நேர முகாமைத்துவமும் இவர் காலத்திலே மிக்க விருத்தி பெற்றன.

பாடசாலையின் வகுப்பறைகளும் சுற்றுப்புறங்களும் எந்நேரமும் தூய்மையாகப் பேணப்படுவதைக் காணக்கூடியதாய் உள்ளது. அத்துடன் முற்றங்கள், வகுப்பறைச் சூழல்கள் யாவும் பூஞ்சோலைகளாக மாறிவருகின்றன. இவ்வழகிய சூழல் மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் கல்விச் சமூகத்தவர்களையும் மகிழ்விப்பதோடு கண்ணுக்குக் குளிர்ச்சியையும் பாடசாலைக்கு பொலிவையும் பாராட்டையும் பெற்றுத் தருகின்றன. இவரது காலத்தில் 14.09.2005 அன்று "பலநோக்கு அபிவிருத்தித்திட்டம் 2005" நிதியிலிருந்து யாழ் மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் திரு ந.ரவிராஜ் அவர்களினால் வழங்கப்பட்ட 'பான்ட்' வாத்திய இசைக்கருவி கிடைக்கப்பெற்றது. மேலும் UNICEF நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு பெற்றோரின் உதவியுடன் ஒரு நீர்த்தாங்கி அமைக்கப்பட்டு 01.06.2007 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்நீர்த்தாங்கி மாணவர்களின் குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதோடு பாடசாலை வளவைச் சோலையாக்கவும் பெருந்துணை புரிகிறது.

மற்றும் பாடசாலையின் முன் பகுதி மதில் சுவர்கள் பழைய மாணவர் சங்கத்தின் ஒத்துழைப்போடு கட்டி முடிக்கப்பபட்டன. வேட்டாள வைரவர் ஆலயமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு கும்பாபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து பூசை வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன.இவர் மாணவர்களின் திறமைகளை வளர்க்கவும் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணரவும், அடைவு மட்டங்கள் உயரவும் பலவித செயற்பாடுகளை முன்வைத்துள்ளார். அதனால் இப்பாடசாலை பல போட்டிகளிலும் வெற்றி பெறுவதோடு பெறுபேறுகளிலும் உயர்ச்சி காட்டிநிற்கிறது. இச்செயற்பாடு ஆசிரியர்கள், மாணவர்களை மகிழ்விப்பதோடு பெற்றோரினதும் கல்விச் சமூகத்தவரினதும் பாராட்டையும் பெறக் காரணமாயுள்ளது. NECORD நிறுவனமும், வலிகாம கல்வி வலயமும் இணைந்து அமைத்துதவும் இரண்டு மாடிக்கட்டடத்துக்கு 07.04.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இதுவே இப்பாடசாலையின் முதலாவது மாடிக்கட்டிடம் என்பது குறிப்பிட வேண்டிய அம்சமாகும்.

19.08.2008 அன்று மாகாண மட்டத்தில் நடைபெற்ற கரப்பந்துப் போட்டியில் 15 வயதுப் பெண்கள் அணியினர் முதலாம் இடத்தையும், 17 வயதுப் பெண்கள் அணியினர் 2ம் இடத்தையும் பெற்றுப் பாடசாலையின் பெயரை மாகாணத்தில் துலங்கச் செய்த பெருமை பாராட்டுதலுக்குரியதாகும்.

மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் தற்காலிக கொட்டகையாக அமைக்கப்பட்ட கட்டடம், மாணவர்களின் இடப்பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்துள்ளது. மேலும் இச்சிறுவர் பாதுகாப்பு நிதியம் வகுப்பறைத் தடுப்புக்களையும் தந்துதவியுள்ளது. வலிகாமம் கல்வி வலயத்தினரால் வழங்கப்பட்ட தளபாடங்கள், தளபாட தேவையை பூர்த்தி செய்து வருகிறது. அத்துடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் மேம்பட ஆசிரியர்களையும் தந்துதவுவது நன்மையான விடயமாகும்.

திரு கா.சந்திரபாலன் அவர்களுக்கு அடுத்தபடியாக, எமது தற்போதைய அதிபர் அவர்கள் பாடசாலை வரலாறு பாதுகாக்கப்படவும், அதனை யாவரும் அறிந்து கொள்ளவும் வேண்டும் என்ற நோக்கோடு அமுதவிழா நாளையொட்டி இச்சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்ததோடு செயற்படவும் தொடங்கியுள்ளார்.

இவரது வழிகாட்டலில் வெளியிடப்படும் இந்நூலானது எல்லோர் கைகளிலும் தவழ்ந்து புகழ்பரப்ப பாடசாலைச் சமூகத்தவராகிய நாம் இம்மலரைச் சமர்ப்பித்து ஆனந்தமடைகின்றோம்.

# எங்கள் பாடசாலை அதிபர்கள்



திரு.வ.செல்லையா

1940-1956



திரு.வ.சுப்பிரமணியம்

1957-1963



திரு.க.மயில்வாகனம்

1964-1967



திரு.வே.நாகராசா

20.06.1970-28.02.1973



திரு.மு.நவரத்தினம்

1974-1977

# எங்கள் பாடசாலை அதிபர்கள்



திரு.கா.சந்திரபாலன்
24.01.1986 - 11.10.1992



திரு.செ.குபேரநாதன்
12.10.1992 - 31.12.1994



திரு.ஆ.வ.கணேசலிங்கம்
01.01.1995 - 05.06.1997



திரு.ச.கைலாசநாதன்
06.06.1997-20.09.2004



திருமதி வேணுகா சண்முகரத்தினம்
30.09.2004 - 31.01.2005

# எமது பாடசாலை ஆரம்பித்த காலம் தொடக்கம் தம்பணி புரிந்த அதிபர்கள்

| | |
|---|---|
| திரு.சி.அப்புக்குட்டி | |
| திரு.ஞா.சுப்பிரமணியம் | |
| திரு.வ.செல்லையா | 1940-1956 |
| திரு.வ.சுப்பிரமணியம் | 1957-1963 |
| பண்டிதர் .க.மயில்வாகம் | 1964-1967 |
| திரு.பரம் தில்லைராசா (சங்கீத பூஷணம்) | |
| திரு.வே.நாகராசா | 20.06.1970 - 28.02.1973 |
| திரு.மு.நவரத்தினம் | 01.01.1974 - 30.05.1997 |
| திரு.ச.நாகராசா | 01.06.1977 - 07.02.1979 |
| திரு.ம.க.சிவபாதலிங்கம் | 08.02.1979 - 23.01.1986 |
| திரு.கா.சந்திரபாலன் | 24.01.1986 - 11.10.1992 |
| திரு.செ.குபேரநாதன் | 12.10.1992 - 31.12.1994 |
| திரு.ஆ.வ.கணேசலிங்கம் | 01.01.1995 - 05.06.1997 |
| திரு.ச.கைலாசநாதன் | 06.06.1997 - 20.09.2004 |
| திருமதி.வேணுகா சண்முகரத்தினம் | 30.09.2004 - 31.01.2005 |
| திருமதி சந்திராதேவி யோகேஸ்வரன் | 01.02.2005 - இன்றுவரை |

# உயர்தர மாணவர் மன்றம் - 2008



# விஞ்ஞான மன்றம்



# எமது பாடசாலையில் சாரணியம்

யாழ் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய சாரணர் குழு 1990 ஆம் ஆண்டு அண்மைய அதிபர் திரு.கா.சந்திரபாலன் அவர்களது முயற்சியுடன் திரு.கு.ஜெகநாதன் ஆசிரியர் (தற்போதைய அளவெட்டி அருணாசல வித்தியாலய அதிபர்) அவர்களின் தலைமைத்துவ ஏற்புடனும் அப்போதைய காங்கேசன் துறை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு.த.நா.போஜன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கைச் சாரணர் சங்கத்தில் 24.01.1991ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் 1971 மாவட்டத்தில் 40ஆவது காங்கேசன்துறை ஆகும்.

எமது பாடசாலை சாரணர் துருப்புக்கள் 1வது சார்க் ஜம்போறியிலும், 4ஆவது தேசிய சாரணர் ஜம்போறியிலும், 5ஆவது தேசிய சாரணர் ஜம்போறியிலும் மாவட்ட மட்டக்குழுவில் பங்களிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலை சாரணிய வளர்ச்சிக்கு முன்னாள் மாவட்ட ஆணையாளர்களான திரு த.நா.போஜன், திரு.B.சௌந்தரராஜன், திரு.எஸ் சிவபாதரட்ணம் ஆகியோர் தமது காலத்தில் பாரிய ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய மாவட்ட ஆணையாளர் திரு ந.ரவீந்திரன் அவர்கள் அடிக்கடி எமது பாடசாலைச் சாரணர் துருப்பைச் சந்தித்து எமது பாடசாலைச் சாரணர் தலைவர் திரு சு.திருகேஸ்வரன் அவர்களின் நெறிப்படுத்தலில் பல பயிற்சிகளையும் ஆலோசனையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலைச் சிரேஷ்ட சாரணர்களான செல்வன் பொன்ராசா கிரிசாந், செல்வன் மதியாபரணம் கஜநேசன் ஆகிய இருவரும் 2008ஆம் ஆண்டு பிரதம ஆணையாளர் விருது பெற்றனர். இவர்களுக்கான இவ்விருதை இலங்கைச் சாரணிய பிரதம சாரண ஆணையாளர் திரு சந்திசேனா பட்டுவாங்கல் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

2008ஆம் ஆண்டு காங்கேசன்துறை மாவட்ட சாரணர் ஜம்போறியில் எமது பாடசாலையில் இருந்து 63 சாரணர்கள் பங்கு பற்றி மாகாண மட்ட சாரணர் ஜம்போறியில் பங்குபற்றும் தகைமையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தில் அதிகூடிய எண்ணிக்கையான சாரணர்களைக் கொண்டதாக எமது பாடசாலைச் சாரணர் துருப்பு அமைந்துள்ளது. இவர்களைத் திரு சு.திருகேஸ்வரன்

ஆசிரியர் அவர்கள் குழுச்சாரணத் தலைவராக இருந்து வழிப்படுத்தி வருகின்றார். எமது பாடசாலைச் சாரணர் கள் யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல்யமான ஆலயங்களில் ஆண்டாண்டு தோறும் சமூக சேவை புரிவதுடன் பாடசாலை மட்ட நிகழ்வுகளில் ஒழுக்கம் பேணுபவர் களாவும் செயற்படடு வருகின்றனர்.

எமது சாரணிய செயற் பாட்டுக்கு எமது பாடசாலை அதிபர் திருமதி ச.யோகேஸ்வரன் அவர்கள் பெரும் உந்து சக்தியாகவுள்ளார். அத்துடன் உதவி மாவட்ட ஆணையாளர் திரு சி.கௌரிதரன் அவர்களும் தகுந்த ஆலோசனை களை வழங்கி வருகின்றார். சாரணியம் ஓர் கல்வி சார் அமைப்பு என்பதை மெய்ப்பிப்பதாக எமது சாரணர் அமைப்பிலுள்ள மாணவர் கள் தேசிய மட்டப் பொதுப் பரீட்சைகளில் சிறந்த பெறு பேறுகளைப் பெற்று வரு கின்றமை மகிழ்ச்சிக்குரியது.

எமது பாடசாலைச் சாரணர் துருப்பினரின் பாசறைப் பயன்பாட்டிற் கென யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் திரு.K.கணேஸ் அவர்கள் பெறுமதிமிக்க நவீன கூடாரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளமைக்கு நாம் நன்றியுடையோம். அத்துடன் கடந்த பல வருடங்களாக எமது துருப்பினரின் பாசறை அமைப்புக் கென பெறுமதிமிக்க பனைமரங்களை வேண்டியளவு இரவலாகத் தந்துதவும் வல்லை வீதி சங்கானை மரக்காலை உரிமையாள ரான திரு.முருகன் சின்னத்தம்பி அவர்களின் உதவிக்கும் நாம் நன்றி கூறக்கடமைப்-பட்டுள்ளோம். நமது சாரணர் அமைப்பி னூடாகப் பல ஆளுமை மிக்க இளைஞர்கள் உருவாகி வருகின்றமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

**- குழுச்சாரணியத் தலைவர்-**

- ✔ மகிழ்ச்சிக்கான ஒரு கதவு மூடப்படும் போது இன்னொன்று திறக்கிறது. ஆனால் நாம் எப்போதும் மூடப்பட்ட கதவைப் பார்க்கின்றோமே தவிர எங்களுக்காகத் திறந்திருக்கின்ற கதவைப் பார்ப்பதில்லை

- ✔ மாற்றங்கள் முன்னேற்றத்தினைக் கொண்டுவரும் என்பது உறுதியாகச் சொல்லமுடியாது. ஆனால் முன்னேற்றத்திற்கு மாற்றங்கள் அவசியமாகும். கல்விக்கு மாற்றம் அவசியம். ஏனெனில் புதிய தேவைகளும் அவற்றை திருப்திப்படுத்தும் இயலுமைகளும் இருக்கின்றன.

# சமூகக்கல்வி மன்றம்



# கணித மன்றம்



## இந்து மன்றம்



## ஆங்கில மன்றம்



# கணினி மன்றம்



# கிறிஸ்தவ மன்றம்



## பெண் சாரணியம்



## குழந்தை மன்றம்



# எமது பாடசாலைக் குருளைச் சாரணக்குழு

இலங்கைச் சாரணர் சங்கத்தில் எமது குழு 24.01.1991 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் 1971. மாவட்டத்தில் 40 ஆவது காங்கேசன்துறை ஆகும் 1990 ஆம் ஆண்டு திரு கா.சந்திரபாலன் அவர்களது முயற்சியுடனும் திரு.மு.ஜெகநாதன் அவர்களின் தலைமைத்துவ ஏற்புடனும் மாவட்ட ஆணையாளர் திரு.த.போஜன் (தற்போது வடமாகாண ஆணையாளர்) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எமது குருளையர் குழு உலக சாரணர் தினம், பேடன் பவல் தினம் போன்றவற்றில் ஆண்டு தோறும் கலந்து கொண்டு வெற்றியீட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எமது வளர்ச்சிக்கு திரு த.போஜன் தனது காலத்தில் அளப்பரிய ஒத்தழைப்பையும் வழிகாட்டலையும் வழங்கி உதவியமை குறிப்பிடத் தக்கது. 1990ஆம் ஆண்டிலிருந்து 1998ஆம் ஆண்டு வரை திருமதி பு.ஜீவராசா, செல்வி ப.றஜனி ஆகிய ஆசிரியர்களும் சேவையாற்றி குருளைச் சாரணிய வளர்ச்சிக்குப் பங்காற்றினார்கள். இக்காலத்தில் அதிபராக இருந்த திரு ச.கைலாசநாதன் அதிபரின் ஊக்குவிப்பும் முயற்சியும் சாரணர் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது எனலாம். 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின் குருளைச் சாரணியம் ஒரு மந்த நிலையில் அமைந்திருந்தது எனலாம்.

எனினும் 1999ஆம் ஆண்டிலிருந்து திருமதி கீ.திவாகரன் குருளைச் சாரணத் தலைவராகவும் செல்வி புஸ்பமாலா செல்வி க.திருமகள் ஆகியோர் உதவி குருளைச் சாரணர்களாக சேவையாற்றினார்கள். இவர்களது காலத்தில் மாணவர்கள் மாகாண, மாவட்டப் போட்டிகளிலும் வெளிக்கள விழாவிலும் கலந்து கொண்டு பல பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். 2002ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்ட மாவட்டப் போட்டிகளில் அணிநடை 5ஆம் இடத்தையும் விளையாட்டு மூன்றாம் இடத்தையும் மந்த மூலை 1ம் இடத்தையும் பெற்று All Round First என்ற இடத்தைத் தட்டிக் கொண்டது. 2003ஆம் ஆண்டு All Round 2ம் இடத்தையும் 2004ஆம் ஆண்டு All Round 1ம் இடத்தையும் எமது குழு தனதாக்கிக்கொண்டது. அதனைத் தொடர்ந்து திருமதி கீ.திவாகரன் 2005ஆம் ஆண்டிலிருந்து மாவட்ட குருளைச் சாரணத் தலைவராக நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து திருமதி கீ.திவாரகன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் திருமதி சு.பாலச்சந்திரன் குருளைச் சாரணத் தலைவராகவும் திருமதி ச.மோகநேசன், செல்வி இ.கௌசல்யா உதவி குருளைச் சாரணத் தலைவர்

களாகவும் சேவையாற்றி வருகின்றனர். 2005ஆம் ஆண்டில் நடைபெற்ற மாவட்ட 25ஆம் ஆண்டு நிறைவு விழாப் போட்டியின் போது

| | | |
|---|---|---|
| அணிநடை | 1ம் | இடம் |
| குழுப் பதிவு | 5ம் | இடம் |
| நடனம் | 3ம் | இடம் |
| மந்த மூளை | 1ம் | இடம் |
| விளையாட்டு | 1ம் | இடம் |
| கைவேலை | 4ம் | இடம் |
| பாட்டு | 3ம் | இடம் |
| வேலை வாரம் | 1ம் | இடம் |

பெற்று All Round 1ஆம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து 2006, 2007, 2008ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வெளிக்கள விழாக்களில் எமது குருளையர் குழு அனைத்து ஆண்டிலிலும் All Round 1ஆம் இடத்தைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை தேடித்தந்தமை குறிப்பிடத்தக்கது.

2008ஆம் ஆண்டு பேடன் பவல் தின மாவட்டப் போட்டியின் போது............

புதிர்ப்போட்டியில் 1ஆம் இடத்தை க.கிரிசாந், 2ம் இடத்தை ஜெ.துவாரகன் பெற்றுக்கொண்டனர். கட்டுரைப் போட்டியில் 1ம் இடத்தை ஜெ.துவாகரனும், பேச்சுப் போட்டியில் 1ஆம் இடத்தை தி.ஹரேசனும் பெற்றுக்கொண்டனர். குழு நடனத்தில் 1ஆம் இடத்தினையும் விளையாட்டில் செ.கபிலன் 1ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். மாகாண மட்டப் போட்டியின் போது புதிர்ப்போட்டியில் 1ம் இடத்தை ச.கிரிசாந் , 2ஆம் இடம் ஜெ.துவாரகன், கட்டுரைப் போட்டி 1ஆம் இடம் ஜெ.துவாகரன், பேச்சுப் போட்டி 2ஆம் இடம் தி.ஹரேசன் விளையாட்டுப் போட்டி 3ஆம் இடம் ச.கபிலன், நடனம் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டானர்.

நடனப் போட்டிகளில் பங்குகொள்ளும் குருளையர் குழுவைப் பயிற்றுவித்த திருமதி ய.பிரேமசந்திரன் ஆசிரியையும் எமது குருளைச் சாரணர் வளர்ச்சிக்கு துணை நின்றமை குறிப்பிடத்தக்கது.

மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் செல்வன் க.கபிலன் 3ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கம் ஒன்றைப் பெற்றுள்ளார். திருமதி ச.யோகேஸ்வரன் அதிபரின் ஊக்குவிப்பினாலும் பெரும் பங்களிப்பினாலும் எமது குழு ஒரு உன்னத ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. அத்துடன் தற்போது 34 குருளையர்களைக் கொண்டுள்ள துடன் மாவட்டத்தில் அதி கூடிய குருளையர்களைக் கொண்டுள்ள குழுவாகவும் எமது குழு விளங்கு கின்றது எனலாம்.

"என்னால் இயன்றவரை திறமையாய் சமயத்திற்கும் நாட்டிற்கும் என் கடமைகளைச் செய்வேன் என்னும் கருளைச் சாரணர் விதிகளிற்குக் கீழ்ப்பணிந்து நடப்பேன் என்றும்" வாக்குறுதி அளிக்கின்றேன்.

"இயன்றவரை திறமையாய் செய்"

**-குருளைச் சாரணத் தலைவர்-**

# எமது கல்வி

செல்வி ஜெயராணி நாகலிங்கம்
B.A (Geography special), MED
அதிபர், யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்

மனித வரலாறு ஆரம்பத்திலிருந்தே சமூக வாழ்வினை அடிப்படையாகக் கொண்டது நாகரிகத்தின் தோற்றுவாயாக விளங்கும் சமூக வாழ்க்கைமுறை தொடக்கத்தில் மனிதருடைய தேவைகளின் காரணமாக உருவானதாகக் கொள்ள முடியுமெனினும், இன்றைய மனிதன் தான் வாழும் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி இருப்பதை ஏற்றுக்கொள்வது தவிர்க்கமுடியாததேயாகும். "மனிதன் ஒரு சமூகப்பிராணி" என்ற கருத்து ஒன்றுகூடி வாழ்தல், செயற்படுதல், என்ற வகையில் எழுந்த கூற்று எனக்கொள்ளுதல் பொருத்த முடையதாகும். ஒன்று கூடிச் சமூக அமைப்பில் வாழத்தொடங்கிய மனிதன் காலப் போக்கில் அச்சமூகத்தின் மரபுகள், வழக்குகள், விழுமியங்கள், என்பவற்றுக்கேற்பத் தனது வாழ்வை அமைத்துக்-கொண்டு தான் பிறந்து, வளர்ந்த சமூகத்தின் எல்லைக்குள் கட்டுப் பட்டு வாழ்வதோடு அதன் நோக்கங்கள், இலட்சியங்கள், ஆகியவற்றைப் பேணிப் பரப்பும் கடமையும் கொண்டிருக்கிறான். அத்தகைய தனது கடமைகளையும், பொறுப்புக்களையும் மனிதன் உணர்ந்து செயற்படுவதற்கு அவனுக்குக் கல்வி இன்றியமை யாததாகும்.

கல்வியின் இன்றியமையாத்தன்மை இன்று பல வழிகளிலும், பல மட்டங்களிலும், வற்புறுத்தப் படுவதாக இருப்பினும் அதன் வரலாறு நீண்ட கதையெனலாம். சமூக வாழ்வின் ஆரம்பத்தில் அதில் இடம்பெற்ற மக்கள் ஒவ்வொருவரும் தமக்கென உரிய தனியான தொழிற்பாடுகளை நிறைவேற்றினர். அவற்றுக்குப் பொருத்தமான தேவையான அறிவினையும், ஆற்றலையும் வழங்கும் வகையில் ஆரம்பகல்வி முயற்சிகள் காணப்பட்டன. சமூகக்கட்டமைப்பின் மேல் மட்டத்தில் இருந்தவர்களுக்கு கூடிய உயர்ந்த தரத்திலான அறிவும், ஆற்றலும் தேவைப் பட்டமையால் அதற்கான முயற்சிகள் கல்வியில் காணப்பட்டன. ஏனைய சமூக, உறுப்பினர்கள், தத்தம் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அக்காலக் கல்வியில் படிமுறைத் தோற்றத்தை அவதானிக்கலாம்.

மனித சமூக வாழ்வின் தொடக்கத்தில் 'அரசு' என்ற அமைப்பு இன்று போலப் பலம் பொருந்தியதாக, இறுக்கமானதாக விளங்கவில்லை. அத்தகைய நிலையில் அரசின் கடமைகளும் இன்றைக்கிருப்பது போல் பல துறைகளிலும் வியாபித்திருக்கவில்லை. கல்வியும் அப்படியான ஒரு துறையாகவே இருந்தது. இன்று உலகின் எந்த நாட்டினை எடுத்துக்கொண்டாலும் கல்வியை வழங்குவதில் முழுப்பொறுப்பினையும் சுமக்காவிட்டாலும் கணிசமான பொறுப்பினை அரசே ஏற்றுக்கொண்டுள்ளதைக் காண்கிறோம். அன்றைய நிலை அப்படியானதன்று. கல்வியைப் பெற விரும்பியவர்கள் அதனை, வழங்கக் கூடியவர்களிடம் சென்று பெற்றனர். அந்த மரபில் குரு என்ற உயர் தரத்தில் வைத்துப் போற்றப்பட்ட ஆசிரியன் தன்னை நாடி வரும் சீடர்களில் கற்பதற்கு வேண்டிய தகுதியும் திறனுமுடையவர்களைத் தெரிந்து அங்கீகரிக்கும் வழக்கு இருந்தது. அதிலிருந்து குருவுக்கும், சீடனுக்குமிடையிலான உறவு பேணப்பட்டது. அத்தகைய கல்வியைப் பெறுவதில் எம் மக்கள் கண்ணும் கருத்துமாக இருந்தனர் என்பதை

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
மற்றை நிலை முறியாது கற்கை நன்றே"

என்ற பாடல் தெளிவாகத் தெரிவு செய்து கல்வியை வழங்குவதற்கான அக்காலச் செயற்பாடு ஒருவனுக்குக் கிடைக்கும் கல்வியானது அவனுக்குக் கிடைக்கும் ஒரு 'சலுகை' ஒன்று விமர்சிக்கப்படக் கூடியதாகவே இருந்தது. அந்த நிலை இன்று மாறிவிட்டது. ஐ.நா. சபையினரால் பிரகடனப்படுத்தப்பட்டு அதன் சகல அங்கத்துவ நாடுகளினாலும் அங்கீகரிக்கப்பட்ட "அடிப்படை மனித உரிமைகள்" கல்வியை மனிதனுடைய பிறப்புரிமைகளுள் ஒன்றாக வற்புறுத்தியுள்ளது. (மனித உரிமைகள் பிரகடனம் பிரிவு 26) அதற்கிணங்க ஆகக் குறைந்தது ஆரம்பக் கல்வியையாவது பெறுவதற்கு ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமையுண்டு. அந்தமட்டில் எம்மால் திருப்திப்பட்டு விடமுடிமா?.

'கல்வி எமது' உரிமை என்று கோஷமிட்டால் மட்டும் போதாது. அந்த உரிமையை நிலை நாட்டுவதற்கு எமக்குச் சில கடமைகளும் உண்டு. என்பதை மறுக்க முடியாது/ மறக்கக் கூடாது. அவ்வுரிமைகள் நிலைக்கா என்பதை நாம் மறக்கக்கூடாது. அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் வகையில் , அதன் பெருமையையும் பயனையும் உணர முடியாதவர்கள் மத்தியில் அதனைக் கட்டாயப் படுத்தும் கடமை அரசுக்கு உண்டு. எமது நாட்டை எடுத்துக்கொண்டால் 'கட்டாயக்கல்வி' என்பது சித்தாந்த

மாகவே இன்றுமுள்ளது. பள்ளிக் கூடத்தில் கல்வி கற்க வேண்டிய பருவத்தினர் அத்தனை பேரும் கல்வி கற்பதை உறுதிப்படுத்த வேண்டியது அரசினுடைய கடமை யாகும். அதற்காகத் தனது அதிகாரங்களை சட்ட உருவில் பலப்படுத்த வேண்டியது அரசினுடைய பொறுப்பு. ஆனால் அது நடைபெறவில்லை. கற்க வேண்டியவர்களைக் கட்டாயப் படுத்திப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி அப்படிச் செல்லாதவர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வழி செய்யும் சட்டதிட்டங்கள் எதுவும் எம்மத்தியில் இன்று இல்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

கல்வியில் மாணவர்களது ஈடுபாட்டினை கட்டாயப்படுத்தும் கடமையை ஏற்க வேண்டியவர்கள் வரிசையில் அடுத்து இடம் பெறுவது சமூகம். மனிதனைத் தனது மரபுகள்/ சம்பிரதாயங்கள் என்பவற்றால் கட்டுப்படுத்திச் செயற்படுத்தும் சமூகம் அவன் பால் தனக்கும் கடமைகளுண்டு என்பதை மறந்துவிட முடியாது. அத்தகைய கடமைகளுள் கல்வியை உறுதிப்படுத்துதலும் ஒன்று. சமூக அழுத்தங்களுக்கூடாக மாணவர் களது பள்ளிக்கூட வரவினை நிலைநாட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பள்ளிக்கூடத்தில் முதலாம் ஆண்டில் சேரும் மாணவன் உரிய காலத்திற்கு முன்னர் பள்ளிக்கூடத்தை விட்டு இடை விலகும் நிலை உருவா வதற்குச் சமூகம் பொறுப் பேற்க வேண்டும். அதைத் தவிர்க்கும்/ தடுக்கும் வழிமுறைகளைச் சிந்தித்துச் செயற்படுத்த முயற்சிக்க வேண்டும். இப்பொறுப்பில் சமூகம் சிரத்தை காட்டாவிட்டால் ஈற்றில் பாதிப்புக்குள்ளாவது அதுவேயாகும்.

சமூகத்தினுடைய செயற்பாட்டுக்கு வலுவும், வளமும், கொடுப்பது பெற்றோருடைய கடமையாகும்.

"ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"
என்று பாடிய பழந்தமிழ் நற்றாயின் தத்துவத்தை நாம் மறந்து விடலாகாது.

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்பது வள்ளுவர் வாசகம். இப்படியான சிந்தனைகளின் தழுவலில் எமது செயற்பாடு நிறைவு காண வேண்டும். பிள்ளைகளைப் பெற்று வளர்த்துவிடுவதோடு பெற்றோரின் பங்கு நின்றுவிட முடியாது. கற்பதற்கு வேண்டிய வாய்ப்புக்கள், வசதிகள், உந்தல்கள், எல்லாவற்றையும் பிள்ளைகட்கு அளித்தல் வேண்டும். அவற்றோடு கட்டாயத்தையும் கடைப்பிடிக்கலாம்.

இந்நடவடிக்கைகளுடன் பொருத்த முடையதாய் அவற்றை நிறைவு செய்வதற்கு உதவுவதாய் செயற்படும் கல்வியே பொருண்மை யுடையதாக இருக்கும். அதுவே வாழ்க்கைப் பொருத்தப் பாடுடைய தாவும் அமையும். இன்று நாம் வழங்கும் கல்வியை இக் கண்ணோட்டத்தில் பரிசீலனை செய்தல் பயனுடையதாகும்.

நாம் அளிக்கும் கல்வியானது அறிவை வளர்ப்பதாக இருப்பது மிகவும் முக்கியமாகும். ஆனால் அந்த அறிவானது வெறுமனே தேக்கக்கருத்துக்களைக் கொண்ட தாக இருக்கக்கூடாது. "ஹவற்கெட்" என்ற அறிவியலாளர் கூறியது போல தேகக்ககருத்துக்களை (உள்ளத்தில் பெறப்பட்ட, ஆனால் சோதிக்கப் படாத பயன்படுத்தப்படாத கருத்துக்கள்) கொண்ட கல்வி பயனற்றது. மட்டுமல்லாமல், தீங்கையும் விளைவிக்கும் கடந்த காலத்தைப் பற்றிய அறிவு நிகழ்காலத்தில் எமக்கு பயனளிக்க வேண்டும். அறிவினைப் பயன் படுத்தும் கலையை / திறனைப் பெறு வதே கல்வி. அதைச் செய்யாத எந்தக் கல்வியமைப்பும் பயனற்றதே யாகும்.

கல்வியின் வழியில் கலாசார மேம்பாடு உயர்வதாகக் கொள்வது பொது நியதி. ஆனால் "கலாசாரம்' என்பதன் பொருள் என்ன? அது எதனைக் குறித்து நிற்கின்றது? விஷயஞானம் மட்டும் கலாசார மாகாது. சிந்தனையின் ஓட்டம், அழகுணர்ச்சி, உருகும் உள்ளம் என்பனவற்றின் கலவையே கலாசாரம் எனலாம். இவையில்லாத துண்டும் துணுக்குமான தகவற் குவியல் கலாசாரத்தை வளர்க்க முடியாது. எந்தக் சமூகத்தின் எதிர்காலமும் பண்பாடு செறிந்த அடித்தளத்தையே உறுதியாகப் பற்றி நிற்கும். இந்தக் கண்ணோட்டத்தில் நாம் இன்று செயற்படுத்தும் கல்வியின் வெளிப்பாடு எத்தகைய தாக இருக்கின்றது என்பது எல்லோரினதும் சிந்தனைக்குரிய அறைகூவலாகும்.

எமது மாணவர்க்கு அளிக்கப்படும் கல்விக்கும், அவர்கள் அதற்குப் பின்னர் நடத்தப் போகும் வாழ்க்கைக்குமிடையே பொருத்தப் பாடு இருக்கின்றதா என்பது எண்ணிப்பார்க்க வேண்டியதாகும். ஜோண் டுயி, மகாத்மா காந்தி போன்ற சிந்தனையாளர்கள் கல்வி, வாழ்க்கைத் தொடர்புடையதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதை நாம் மனதிற் கொண்டேயாக வேண்டும்.

மாணவர்களது வாழ்க்கை-யோடிணைந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொள்ளாத கல்வியில் அவர்கள் ஓர் அர்த்தத்தைக் காணமாட்டார்கள். பொருண்மை விளங்காத/ இல்லா பள்ளிக்கூடக் கல்வியில்

இவற்றுக்கு மத்தியில் அடிப்படையிற் காணப்படும் பிரச்சினையும் ஒன்று உண்டு என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அன்றைய வழக்கில் கல்வி ஒரு 'தானமாகக் கருதப்பட்டது. தன்னை நாடிவந்த, தன்னால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, சீடர்கள் அனைவருக்கும் முகங்கோணாது அறிவினை வரையறாது வழங்கினான் அன்றைய குரு. இன்றோ நாம் கல்வியை 'தானஞ் செய்கின்றோமா' என்று கவலைப்பட வேண்டிய நிலை நம்மிடையே காணப்படுகின்றது.

"மனிதனை மனிதனாக்குவது கல்வி" என்பது சுவாமி விவேகானந்தர் கூற்று. மனிதனுடைய 'மனிதத்துவம்' மிளிர்வதற்கு வாழ்க்கை வாழக் கூடிய வசதிகள் இருத்தல் அவசியம். உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளையும் நிறைவு செய்யக்கூடிய கல்வி ஒன்றினாலேயே அது முடியும். இந்த வகையிலான கல்வியைப் பெறும் ஒருவன் அதன் உச்சப்பயனைப் பெறக்கூடிய முறையில் செயற் படுவது இன்றியமையாதது. கல்வி கரையில கற்பவர் நாட்சில" என்பது ஆன்றோர் வாக்கு. அதன் உட்கிடை எமது இன்றைய காலநிலைகளுடன் தொடர்புற வேண்டும். ஹேபேட் ஸ்பென்சர் என்ற கல்விச் சிந்தனையாளர் கருத்து. இங்கு பொருண்மை யுடையது. எமது வாழ்நாள் குறுகியது அது மட்டுமல்ல. பல விடயங்களின் அதைப்பயன்படுத்த வேண்டியுள்ளது. எனவே காலத்தை அறிவைத் தேடுவதில், அதிக உயர்ந்த நன்மையைப் பெறக்கூடிய முறையில் உபயோகப்படுத்த வேண்டும். எனவே தேவையற்ற விடயங்களைக் கற்காது மிக உபயோகமான விடயங்களைக் கற்க வேண்டும். எங்களுக்கும் மற்றவர்க்கும் மிக உயர்ந்த நன்மையைத் தரக்கூடிய அறிவைத் தேடவேண்டும். எங்களைப் பூரண வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துவது தான் கல்வியின் பிரதான நோக்கம் என்பது அவர் கூற்று. பூரண வாழ்க்கையான மனித நடவடிக்கை களை அவர் ஐந்தாகத் தொகுத்தார். அவை

(1) நேரடியாகத் தற்பாதுகாப்புக்கு உதவும் நடவடிக்கைகள்
(2) மறைமுகமாகத் தற்காப்புக்கு வேண்டிய வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் செயல்கள்
(3) பிள்ளைகளை வளர்க்கவும், பழக்கவும் தேவையான செயல்கள்.
(4) சமூக - அரசியல் தொடர்புகளை நன்முறையில் அமைக்கும் நடிவடிக்கைகள்.
(5) ஓய்வு நேரத்தில் மகிழ்ச்சியும், திருப்பதியும் தரும் நடவடிக்கை - கள்.

மாணவர்களுக்கு நாட்டம் இல்லாமற் போவது இயல்பானதேயாகும். அது மாணவரிடையே இடைவிலகற் (Drop out) பிரச்சினைக்கு ஏதுவாகும் என்பது 1972 இன் கல்வியின் புதிய பாதையிலும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது கொள்ளத்தக்கது. இதற்கேற்பக் கல்விப் பொருளைத் திட்டமிடக்கூடாதா/ திட்டமிட முடியாதா எனப் பொறுப்பிலுள்ளவர் கள் சிந்திக்க வேண்டியது மிக மிக அவசியமாகும்.

இத்தொடர்பில் கலைத்திட்டம் மத்திய மட்டத்தில் தீர்மானிக்கப் படுவதன் பொருத்தப்பாட்டைச் சிந்தனையிற் கொள்வது நன்று. கல்வியை வழங்குவதான செயற்பாட்டில் அரசு பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் என்ன வகையிலான கல்வி வழங்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அரசுக்கே இருக்க வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்படுவதுண்டு. பொதுக் கொள்கைகள், இலக்குகள், தரங்கள் என்பன கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற் குரிய அமைப்பு 'அரசு' தான் என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அதற்குமப்பால் வழங்கப்படும் கல்வியின் பொருளடக்கத்தை முடிவு செய்வதற்கு உள்ளூர்த்தேவை களையும், நிலைமைகளையும் கருத்திற் கொள்வது வரவேற்கத் தக்கது. இதற்குத் தேவையான தலைமைத்துவமும் அதன் அதிகார அமைப்பும் உள்ளூர் மட்டடத்தில் இருக்க வேண்டும். அதிகாரப் பரவலாக்கம், பன்முகப்படுத்தல், என்றெல்லாம் பேசப்படும் இந்நாட்களில் இது நியாய பூர்வமான ஒரு கருத்து என்பதை எவரும் மறுக்க முடியாது.

## தெரிந்து கொள்ளுங்கள்

### குழந்தை தொழிலாளர்

*"வளர்முக நாடுகளில் சராசரியாக 4 குழந்தைகளில் ஒன்று அடிமைத்தனம் கொண்ட சூழலில் வாழ்கின்றார்கள்." என்பது யுனிசெப் நிறுவன அறிக்கை. சுமார் 25 கோடி குழந்தைகள் (5 வயது முதல் 14 வயதுக்குட்டவர்கள் மிக) அபாயகரமான தொழில்கள், விபசாரம், மற்றும் அடிமைத் தொழிலாளர்களாக உள்ளனர் என்று 1997 ஆம் ஆண்டில் உலகக் குழந்தைகள் அறிக்கை கூறுகின்றது.*

# ஆசிரியர் கு



**முன்வரிசையில் இருப்போர் (இடமிருந்து வலமாக)**

திருமதி.ய.சொர்ணலிங்கம், திருமதி.ஜெ.கிருபாகரன், திருமதி.பு.ஜீவராசா, திருமதி.ச.வேதநாயகம், திருமதி.சா.ஜ
திருமதி.ஞா.விமலராஜா, திருமதி.ச.யோகேஸ்வரன் (அதிபர்), திரு.க.உபேந்திரன், திரு.அ.சந்திரகுமார், திரு.த.
திரு.ஜே.ஜோ.ஜெயபாலன், திரு.ப.மதனகோபாலன்,

**இரண்டாவது வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)**

திருமதி.ச.ஜெயந்தன், திருமதி.சு.பாலச்சந்திரன், செல்வி.நா.சாரதாதேவி, திருமதி.றெ.ஜெகதீஸ்வரன், செல்வி.ச.
திருமதி.வி.தங்கராசா, செல்வி.தெ.சங்கீதா, திருமதி.மா.பிரணவன், திருமதி.ய.பிறேமச்சந்திரன், செல்வி.சுபாஜினி
செல்வி.ஜெயகௌரி, செல்வி.ந.பிறேமா, செல்வி.க.ஜெயதர்சினி, செல்வி.இ.தயாளினி, திருமதி.க.பிரதீபன்.

**மூன்றாவது வரிசையில் நிற்போர் (இடமிருந்து வலமாக)**

திரு.ப.பிரதாபன், திரு.லோ.ஸ்ரனிஸ்லாஸ், திரு.இ.இராசபாலன், திரு.ச.தர்மதாஸ், திரு.அ.லிங்கராஜ், திரு.ப.பா
திரு.ப.உமேஸ்குமார். திரு.அ.அரசகுலசேகரன், திரு,சி.ரங்காதரன்.

# சிரியர் குழாம்




ிருமதி.ச.வேதநாயகம், திருமதி.சா.ஜீவதரன், திருமதி.றெ.ராஜ்குமார், திருமதி.ப.உதயகுமார்,
திரன், திரு.அ.சந்திரகுமார், திரு.த.குலதாஸ், திரு.சு.திருக்கேஸ்வரன், திரு.தி.கிரிதரன்,

ருமதி.றெ.ஜெகதீஸ்வரன், செல்வி.ச.சராளா, திருமதி.உ.நவதீசன், திருமதி.கீ.திவாகரன், திருமதி.ஜீ.டேவிட்,
ப.பிறேமச்சந்திரன், செல்வி.சுபாஜினி, செல்வி.இ.கௌசலா, திருமதி.ஆ.கைலைநாதன், செல்வி.திலகேஸ்வரி,
.தயாளினி, திருமதி.க.பிரதீபன்.

தாஸ், திரு.அ.லிங்கராஜ், திரு.ப.பாஸ்கரன், திரு.ந.பஞ்சாட்சரலிங்கம், திரு.பா.பாலகுமார். திரு.அ.பிறேமதாஸ்,

# ஆசிரியர், ஊழிகள் விபரம்

1. திருமதி.ச.யோகேஸ்வரன் (அதிபர்) அதிபர், SLPS I
2. திரு.க.உ பேந்திரன் (பிரதி அதிபர்) SLTS I
3. திரு.யோ.ஜேசுதாசன் Maths Trainded SLTS I
4. திரு.அ.சந்திரகுமாரன் BSc(Hons), Dip in Education SLTS I
5. திருமதி.ப உதயகுமார் Commerce Trained SLTS 2I
6. திருமதி றெ.ராஜ்குமார் N.R.C Trained SLTS 2I
7. திருமதி.தே.சந்திரகுமார் Crafts Trained SLTS I
8. திருமதி.ஞா.விமலராஜா Primary Trained SLTS I
9. திருமதி.சா.ஜீவதரன் B.A, Dip in Education SLTS I
10. திருமதி.பு.ஜீவராசா Science Trained SLTS 2II
11. திரு.த.குலதாஸ் Science Trained SLTS I
12. திருமதி.ஜெ.கிருபாகரன் B.A, Dip in Education SLTS I
13. திருமதி.ய.சொர்ணலிங்கம் BCom, Dip in Education SLTS 2I
14. திரு.ப.மதனகோபாலன் BCom, Dip in Education SLTS I
15. திருமதி.கீ.திவாகரன் B.A, Dip in Education SLTS 2 II
16. திரு.ஜெ.ஜோ.ஜெயபாலன் English Trained,
    Dip.in English (Teaching) SLTS 2I
17. செல்வி.நா.சாரதாதேவி Science Trained SLTS 2II
18. செல்வி.ந.பிறேமா B.A, Dip in Education SLTS 2 II
19. செல்வி.ச.சரளா B.A, Science Trained SLTS 2II
20. திருமதி.சு.பாலச்சந்திரன் B.A, Diploma in Education SLTS 2II
21. திரு.பா.பாலகுமார் B.Ed, SLTS 2II
22. திருமதி.வி.தங்கராசா Primary Trained SLTS 2 II
23. திரு.ந.சூரியகுமார் English Trained SLTS 2 I
24. திரு.தி.கிரிதரன் B.A(Hons) Economics,
    Dip in Education SLTS 2 II
25. திரு.அ.அரசகுலசேகரன் B.A, SLTS 2III
26. திருமதி.ச.ஜெயந்தன் B.A, SLTS 3 I
27. திருமதி.ய.பிறேமச்சந்திரன் B.A, Dip in Education SLTS 3 I
28. திருமதி.ஜீ.டேவிட் B.A, Dip in Education SLTS 2 II

| | | |
|---|---|---|
| 29. | திருமதி.சு.நிர்மலன் | B.A, Dip in Education SLTS 2 II |
| 30. | திருமதி.ச.வேதநாயகம் | Trained in Home Science SLTS I |
| 31. | திருமதி.றெ.ஜெகதீஸ்வரன் | B.A, Dip in Education SLTS 3 I |
| 32. | திருமதி.உ.நவதீசன் | B.A(Hons),Dip in Education SLTS 3I |
| 33. | திரு.அ.பிறேமதாஸ் | B.A, SLTS 3 I |
| 34. | திரு.ப.உமேஸ்குமார் | B.A, SLTS 3 I |
| 35. | திரு.ந.பஞ்சாட்சரலிங்கம் | B.Com, Dip in Education SLTS 2 II |
| 36. | திருமதி.மா.பிரணவன் | B.F.A, Dip in Education SLTS 2 II |
| 37. | திரு.இ.இராசபாலன் | BSc, Dip in Education SLTS 2 II |
| 38. | திரு.சி.ரங்காதரன் | B.com, Dip in Education SLTS 2II |
| 39. | திருமதி.ஆ.கைலைநாதன் | Primary Trained , SLTS 3 I |
| 40. | செல்வி.இ.தயாளினி | Science Trained , SLTS 3 I |
| 41. | திரு.ப.பிரதாபன் | Primary Trained , SLTS 3 I |
| 42. | திருமதி.க.பிரதீபன் | National Diploma (Teaching) SLTS 3I |
| 43. | செல்வி.க.ஜெயதர்சினி | National Diploma (Teaching) SLTS 3I |
| 44. | திருமதி.ய.அருணகிரிநாதன் | B.A, SLTS 3 I |
| 45. | திருமதி.ஸ்ரீ.ஜெயா | B.A, SLTS 3 I |
| 46. | திரு.ந.கிசோக்குமார் | B.A, SLTS 3 I |
| 47. | செல்வி.ச.பொன்னையா | B.A, Dip in Education SLTS I |
| 48. | திரு.பர்ணாந்து கமிலஸ் | B.A, SLTS 3 I |
| 49. | செல்வி.தி.பத்மினி | B.A, SLTS 3 I |
| 50. | செல்வி.பொ.சுபாநந்தினி | National Diploma (Teaching) |
| 51. | திருமதி.அ.நிசாந்தன் | HNDA |
| 52. | திருமதி.வி.மதியழகன் | B.A |
| 53. | திரு.கு.கிருபன் | |
| 54. | திரு.சு.நந்தகுமாரன் | |
| 55. | திரு.சி.கணேசராஜா | Primary Trained , SLTS 3 I |
| 56. | திரு.ச.பாஸ்கரன் | Agriculture Trained, SLTS 3 I |
| 57. | திரு.க.மகேந்திரராஜா | Maths Trained, SLTS I |
| 58. | திரு.ம.தனேசன் | English Trained, SLTS 3 I |
| 59. | செல்வி.பா.தனுசா | National Diploma (Teaching) SLTS 3I |
| 60. | செல்வி.க.ரஞ்சினி | Primary Trained, SLTS 3 II |

# கணிதம் பற்றி ஓர் நோக்கு

இ.இராசபாலன்
BSc, Dip in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

"வேறு வழியால் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைக்கும் ஒரு மார்க்கமாகவே கணிதம் ஆதி காலத்தில் ஆரம்பமானது" என்று இந்தியக் கணிதவியலாளரான சி.வி. பிமசங்கரன் "கணிதக்கல்வி" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். கணிதம் வேறு வாழ்க்கை வேறு அன்று. இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்துள்ளது.

சாதாரணமாக அன்றாட வாழ்வில் துணியை அளத்தல், கட்டிடங்கள், காணிகளின் பரப்பளவைக் காணல், பொருட்களின் அளவைக் கணித்தல், திரவங்களின் கலவையைத் தெரிதல், நேரத்தை அறிதல் போன்றவற்றை அறிந்து கொள்ளும் திறனற்றோருக்கு வாழ்வில் சிக்கல்கள் ஏற்படலாம். கணிதம் கற்பதன் மூலம் சிக்கல்களை நீக்கி வாழ்வை இலகுவாகிக் கொள்ள லாம். நாம் தனி ஒருவராக இப்பூவுலகில் வாழவில்லை. இச் சமுதயாத்திலே நாமும் ஓர் அங்கத்தவராகவே இருக்கிறோம். எனவே சமூக வாழ்விற்கேற்ப எம்மைத் தயார்படுத்துவதற்காகக் கணிதம் இன்றியமையாதது என்று கூறினால் அது மிகையாகாது.

இது மட்டுமன்றி இயற்கை உலகிலே சிலந்திவலை, கடற்சிப்பி என்பனவற்றின் சமச்சீர்த்தன்மை, சூரியனும் அதனைச் சுற்றியுள்ள கோள்களினதும் நீள்வட்டப் பாதை என்பன கணிதத்தையும் இயற்கை உலகையும் இணைக்கும் தொடர்பைக் காட்டும் உதாரணங் களாகும்.

கணித மொழி மூலம் கருத்துக் களைச் சுருக்கமாகவும் இலகுவாக விளங்கிக்கொள்ளக்கூடியவாறும் வெளிப்படுத்தும் திறன் ஏனைய மொழிகளை விட கணித மொழியல் காணப்படும் விசேட முக்கியத்துவ மாகும். உலக நாடுகளில் வேறுபட்ட மொழிகளிருப்பினும் கணித மொழியானது உலகிலுள்ள அனைவருக்குமான பொது மொழியாகும். சாதாரணமாக அதிக சொற்களைப் பயன்படுத்தி விளக்கும் ஒரு விடயத்தை மிகச்சுருக்கமாகப் பிழையின்றிக் கணிதத்தின் மூலம் காட்டமுடிவதோடு அதற்காக எண்களையும் குறியீடுகளையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

கணிதமானது ஆரம்பமாகியதைச் சரியாகக்கூற முடியாவிடினும் மிகவும் பழமையான வேடுவர் காலத்திலிருந்தே எண்ணுதல் எனும் செயற்பாட்டினூடாகவே அது உருவாக்கம் பெற்றது.

கணிதமானது கணக்கிடும் செயற்பாடாகும். கணிதமானது ஒரு தர்க்க முறையாகும். கணிதமானது எம்மையும் நாம் வாழும் உலகையும் பற்றித் தெரிந்து கொள்வதற்குரிய கற்பித்தற் செயற்பாடாகும்.

கணிதமானது கருத்துச்செறிவு மிக்க பாடம் என்பதும் கணிதம் கற்பித்தல் என்பது எண்ணக்கருவிருத்தி செய்தல் என்பதும் கணிதத்தில் காணும் இரு முகKiய அம்சங்களாகும். கணிதத்தில் அடிப்படை எண்ணக்கருவான எண்கள் கருத்துச்செறிவுமிக்க எண்ணக் கருவாகும். உதாரணமாக 5 என்ற எண்ணை 5 பூக்கள், 5 புத்தகங்கள் போன்ற பொருட்களைக் காட்டியே விளக்க முடியும். 5 என்ற எண்ணைக் காட்ட முடியாது. ஆரம் நிலையிலிருந்தே எளிய எண்ணக் கருக்களை குழந்தைகளில் ஏற்படுத்துவதும் அதை முறைப் படியாக முன்னெடுத்துச் செல்வதும் கணிதத்தில் நடைபெறுகின்றது. எண்ணக்கருவை விருத்தி செய்தல் முறையாக நடைபெறாவிடின் சிறந்த பெறுபேறு கிடைக்காது. ஆரம் பத்திலே பிழையான எண்ணக்கரு வளர்க்கப்பட்டால் அதற்கடுத்த எண்ணக் கருவாக்கத்தில் மிகவும் சிக்கலை ஏற்படுத்தும் ஆரம்ப வகுப்புக்களிலிருந்து மேல் வகுப்புவரை கணிதம் சிறப்பாக பயிலுவதாயின் கணித எண்ணக் கருவானது ஒவ்வோர் கற்களாக அடுக்கிச் காட்டப்படும் சுவரைப் போல் கிரமமான முறையில் உருவாக்கப்பட வேண்டும். அப்படியான சுவரில் இடப்பட்ட அடிக்கல்லின் சக்தியைப் போலவே கணிதத்தின் அடிப்படை எண்ணக் கருவும் அவசியமாகும். அடிப்படை சிறந்த முறையில்லாத விடத்து மேல் வகுப்பில் தொடர்ந்து கற்றல் கடினமாகும். மற்றைய பாடங்களை விட கணிதத்திலுள்ள வேறுபாடு இதுவேயாகும்.

அடுத்து எண்ணக்கருவாக்கம் பெறுமாறு கற்றல் கற்பித்தல் இடம்பெறுமிடத்து அது மிக்க பயனுடையதாகும். இதனை ஏற்படுத்த அனுபவ வாயிலாகவும், செயன்முறை ரீதியாகவும் மாதிரியுருக்களைப் பயன்படுத்தியும் கற்றலின் போது பூரண விளக்கம் பெறலாம். உதாரணமாக பணக்கொடுக்கல் வாங்கல்கள் பற்றிக் கற்கும் போது நேரடியாக வியாபார நிலையத்திற்குச் செல்வதனூடாக பொருட்களின் நிறை, திரவங்களை அளக்கும் கருவிகள் அதற்கான அலகுகள், பொருட்களிற்கான செலவு போன்ற வற்றை நேரடியாக கண்டு கொள்வர். இதே போன்றே சுற்றளவு நீளங்களை

அளவிடுதல் போன்ற விடயங்களைக் கற்கும் போதும் நேரடியாக அளவீட்டுக்கருவிகளைக் கொண்டு தரப்பட்ட பொருட்கள், இடங்களின் நீளங்கள், சுற்றளவு என்பவற்றை அளந்து பெறுவதனூடாக கற்றலிலூக்கத்துடன் செயற்படும் மனப்பாங்கு ஏற்படுவதோடு பாட விளக்கமும் பூரணமாகப் பெறுவர். அத்துடன் மஜிக்கட்டங்கள், குறுக்கெழுத்துப் புதிர்கள் , கணித விளையாட்டுக்கள் என்பனவும் சிந்தனைத்திறனை விருத்தி செய்வதோடு கணித திறனையும் அதிகரிக்கும்.

கேத்திர கணிதத்தைப் பொறுத்த வரையில் மாணவரது கவனம் குறைவாகக் காணப்படும் விடயமாக இருக்கின்றது. கேத்திர கணிதமானது மாணவர்களது சிந்தனைத்திறனை விருத்தி செய்வதில் பெரும் பங்காற்றுகின்றது. அது மட்டுமன்றி கேத்திரகணித நிறுவல்களைச் சரியாகச் செய்யுமிடத்து இனம் புரியாத ஓர் சந்தோசம் ஏற்படும். இதன் மூலம் கணிதத்தில் இரசனை உண்டாகும்.

கணிதத்தில் எண்பரம்பல், சமனிலிகள் எனும் விடயங்களும் அந்நிய செலாவணி, விகிதமும் கூலியும் போன்ற சமூகத்தேவைக் கான விடயங்கள், அளவிடை, வரைபடம் மூலம் குறித்தல், வர்த்தக கணிதம் போன்ற நாட்டுத் தேவைக்கான விடயங்கள், தர்க்க ரீதியான சிந்தனைகளைத்தரும் கேத்திரகணிதம் புள்ளிவிபரவியல், தொடை, நிகழ்தகவு போன்றதற்கான தேவைகள், நுண்கணிதம், காவி போன்ற ஏனைய பாடங்களைக் கற்பதற்கு உதவும் விடயங்கள் போன்றன காணப்படுகின்றன. எனவே ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து கணிதமானது மிகவும் பயனுள்ள அனைத்துத் தேவைகளுக்கமான விடயங்களின் கலவையாகும்.

இதனையே "கணிதம் அறியாதவன் வேறு விஞ்ஞானம் எதனையும் அறிதல் இயலாது. அன்றியும் தனக்குள்ளிருக்கும் அறியாமையைக் கண்டுணரவோ அதற்குத் தகுந்த நிவாரணம் தேடவோ அவனால் இயலாது" என்று 'உரோசர் பேக்கன்' எனும் கணிதவியலாளர் கூறுகின்றார். எனவே கணிதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுவோமாக.

*மகிழ்ச்சியான ஒரு கதவு மூடப்படும் போது இன்னொன்று திறக்கிறது. ஆனால் நாம் எப்போதும் மூடப்பட்ட கதவைப் பார்க்கின்றோமே தவிர எங்களுக்காகத் திறந்திருக்கின்ற கதவைப் பார்ப்பதில்லை.*

# ஆரோக்கியமான செயற்றிறனுக்கும் உயர் வினைத்திறனுக்குமான மார்க்கங்கள்

திரு.அ.லிங்கராஜ்
B.A, Dip in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

நாம் மேற்கொள்கின்ற எல்லாச் செயற்பாடுகளிலும் நேரான மனோபாவத்தினை கொண்டிருப்பது அவசியமானது. வெற்றி எண்ணங்கள் வெற்றிக்கு வித்திடும் ஆதலால் தோல்வி எண்ணங்கள் எம் மனதில் இடம் பிடிக்க எள்ளளவும் இடம்கொடுக்கக் கூடாது. நான் எடுக்கின்ற கருமங்கள் அத்தனையிலும் வெற்றி அடைவேன், சிறப்புப் பெறுவேன், சித்தி பெறுவேன், மேன்மை அடைவேன், உயரிய சேவை வழங்குவேன் என்ற எண்ணப்போக்குடன் வினை ஆற்றுகின்ற போதும் வினை ஆற்றப்படுத்தப்படுகின்ற போதும் எல்லாக்காரியங்களிலும் வெற்றி அடைவதற்கு அவை உரமிடும். என்னால் முடியாது, என்னால் இயலாது, எனக்குத் தெரியாது போன்ற தாழ்வான எண்ணங்கள் வினைத்திறனை எதிர்திசைக்கு கொண்டு செல்லும். நாம் செய்கின்ற எந்தச் செயலிலும் அக்கறை உடையவர்களாக அதில் ஈடுபாடு உடையவர்களாக முழுமனதுடன் கருமம் ஆற்ற வேண்டும். உங்களிடம் உள்ள நல்ல எண்ணங்கள் நல்லவர்களை உங்கள் பால் ஈர்க்கும். இதன் மூலம் நீங்கள் வாழ்வில் பல சாதனைகளை நிகழ்த்திட உதவும். எனவே உங்கள் மனதிலே உயர்ந்த இலக்குகள் (Aim) இலட்சியங்கள் தோன்றிட உங்கள் மனதினை உங்கள் ஆளுகைக்குள் நேராக வளப்படுத்திக் கொள்வது அவசியமானது. இதன் மூலம் எந்தச் செயலிலும் வெற்றி பெற முடியும். ஆசிரியர்கள் மாணவர்களை உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு ஆரோக்கியமான எண்ணங்களை கற்பித்தலின் போது ஏற்படுத்த வேண்டியது அவசியமானது.

எந்தச் செயலை செய்கின்ற பொழுதிலும் செய்யும் செயலில் உறுதி, ஊக்கம், உற்சாகம், தன்னம்பிக்கை, கடினமுயற்சி உடையவர்களாக காணப்பட வேண்டும். மேற்காட்டிய விடயங்களோடு செயலில் ஈடுபடுபவர்கள் மன மகிழ்வுடனும் மனத்தென்புடனும் அன்பும் பண்பும், ஆக்கமும் ஊக்கமும் உடையவர்களாக திகழ்வர். நல்ல தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுக்கக் கூடிய மனோபாவம் அவசியமானது. முடிவுகளை எடுக்கும் திறனை பள்ளிப் பருவத்திலேயே வழிகாட்டப்பட வேண்டியது அவசியம். கல்வி கற்கும் பாடசாலையில் மகிழ்ச்சிகரமான சூழல் ஒன்றினை கட்டி எழுப்புவது இன்றியமையாதது. அன்புடனும் ஆதரவுடனும் பண்புடனும் எல்லோரையும் கவருகின்ற முக வசீகரத்தினை ஏற்படுத்த வேண்டும்.

உங்கள் பாடசாலையின் கவின் நிலை மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டும். அதற்கு அகப்புற சூழலை தூய்மையாக வைத்திருப்பது அவசியம். கடமைகளை சரியான திட்டமிடலுடன் நேர முகாமைத்து வத்துடனும் முன்னுரிமை ஒழுங்கிலும் நிறைவேற்ற வேண்டும். கடமை முடிந்ததும் என்ன என்ன கருமங்களை நிறைவேற்றினேன் எவற்றை தவறவிட்டேன் போன்றவற்றை செவ்வை பார்த்து இன்று நிறைவேற்ற தவறியவற்றை நாளை நிறைவேற்ற தயாராக வேண்டும். 5S முறையை கடைப்பிடித்து பாடசாலை கருமங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். எடுத்த பொருட்களை அந்த அந்த இடங்களில் ஒழுங்கான முறையில் நேர்த்தி செய்வது அவசியமானது. பாடசாலை சுமையை வீட்டிற்கோ வீட்டிற் சுமையை பாடசாலைக்கோ நகர்த்தக் கூடாது. இன்று நான் போட்ட திட்டங்கள் எவை? நான் அவற்றினை இன்று நிறைவேற்றினேனா? எவற்றைத் தவறவிட்டேன்? ஏன் தவறவிட்டேன்? என்று தினம் தோறும் நேர ஆய்வு மேற்கொள்ளப்படும்போது உச்சப்பயனை நாளாந்தம் பெற வழி செய்யும்.

இறுதியாக நித்திரைக்கு செல்லுமுன் உங்களுக்கு நீங்களே சுயஊக்கம், சுய உற்சாகம் ஊட்டுங்கள். உங்களுடைய முன்னேற்றம் பற்றி சிந்தியுங்கள். செய்யும் செயலில் ஒரு மனவலிமையை ஏற்படுத்துங்கள். இந்த மனவலிமை நீங்கள் செய்யும் செயலை முன்னேற்றகரமான நிலைக்கு இட்டுச் செல்லும்.

"எண்ணியது முடிதல் வேண்டும்
நல்லவே எண்ண வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்"

என்ற பாரதியாரின் வாக்கிற்கு இணங்க நாம் எமது செயலை அமைத்துக் கொள்வோமாயின் அதில் நாம் உயர்வடைவது நிச்சயம்.

"மனிதன் தன் இதயத்தின் ஆழத்தில் எந்த எண்ணத்தை கொண்டிருப்பானோ அதே போல் ஆவான்" என ஜேம்ஸ் அலன் என்ற அறிஞர் கூறியுள்ளார். ஆகவே எமது குறிக்கோள்கள் உயர்ந்ததாக இருக்கும்போது அதை நோக்கி நாம் பற்றுறுதியுடன் செயற்பட்டால் ஒரு உயரிய நிலையை அடைய முடியும்.

நாம் நாளாந்தம் செயல்களில் ஈடுபடும் போது வேண்டாதவற்றையும் வேண்டியவற்றையும் வேறுபிரித்து அறிந்து வேண்டியவற்றை அருகிலும் வேண்டாதவற்றை தொலைவிலும் வைத்திருப்பது சிறந்தது. நாளாந்தம் தேவையான எல்லாப் பொருட்களையும் குறித்த ஓர் இடத்தில் ஒதுக்கி வைக்க வேண்டும். ஐம்பெரும் பணிக் கொள்கையினை சிறப்பாக கடைப்பிடித்து செய்கின்ற செயல்களை நேர்த்தியும் வினைத்திறனுடனும் செய்யப் பழக வேண்டும். நாம் செய்கின்ற செயல்கள் மற்றையவர்களுக்கு முன் உதாரணமாக காணப்பட வேண்டும். அழகான அமைதியான சுகாதாரமிக்க ஆரோக்கியமான பணிச் சூழல் ஒருவனுக்கு உடல் நலத்தையும் மன நலத்தையும் குறைவின்றி வழங்கும். எனவே அவ்வாறான பணிச் சூழலை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் உள்ள பலத்தை பெருக்கிக் கொள்வதும் பலவீனங்களை இனங்கண்டு விருத்தி ஆக்குவதும் அவசியமானது. உங்களிடம் உள்ள தகுதிகளையும் திறமைகளையும் சிந்தித்து அவை ஒவ்வொன்றையும் வெற்றிக்குரிய படிகளாக மாற்ற வேண்டும். உங்கள் செயற்றிறனின் தூர நோக்கை அடைவதில் உங்களிடம் உள்ள திறமைகள் வள வாய்ப்புக்கள் எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுடைய மன-நிலையே முக்கிய பங்கு வகிக்கிறது. இதனைத் தான் திருவள்ளுவர்

"வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்டம்
மற்றைய எல்லாம் பிற"

- எனவும்

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

- எனவும்

உலகப் பொதுமறையில் இயம்பி-யுள்ளார்.

எந்தக் குறிக்கோளையும் அடையமுடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை வையுங்கள். உங்களுடைய தகுதியும், திறமையையும் உழைப்பாக வெளிப்படுத்தி நல்ல விளைவைப் பெற ஆவன செய்யுங்கள். இலட்சியம் மட்டும் இருந்தால் போதாது. அதனை அடைவதற்கான ஆழ்ந்த முயற்சியும் இன்றியமையாது. இதனால் தான் "முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்" என்பார்கள் ஆன்றோர்கள்.

சாதனை செயற்பாட்டிற்கும் அதன் வழியாக வெற்றி முடிவுகளை உருவாக்குவதற்கான வழிகள்

1. சாதக எண்ணம்
2. சாதக வேலை
3. சாதக நம்பிக்கை
4. சாதக கனவு
5. சாதக மனப்பாடம்
6. சாதக அடைவுகளின் உருவாக்கம்
7. சாதக நினைவு
8. சாதக உறுதி
9. சாதக பேச்சு
10. சாதகச் செயற்பாடு
11. சாதக கற்பனை
12. சாதக வாழ்க்கை
13. சாதக குறிக்கோள்
14. சாதக அன்றாட கருமங்களின் உருவாக்கமும் சாதக நடத்தையும்
15. சாதக திட்டமிடல்
16. சாதக நடத்தை

எனவே செய்கின்ற செயல் எதுவானாலும் கற்பித்தல் ஆக இருக்கலாம், கற்றலாக இருக்கலாம் அல்லது வேறு எந்தச் செயலாகவும் இருக்கலாம். அச் செயல் செய்வதற்கு கிடைக்கின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி உயரிய சிந்தனையோடு குறிக்கோளை நோக்கி நகர்ந்து வெற்றி அடைவோமாக.

## விளையாட்டுக்குழு



## மனையியல் மன்றம்



## க.பொ.த உயர்தர மாணவர்களின் நட்புறவாடலும் விருந்துபசாரமும் - 2008




## பரிசளிப்பு விழா - 2008



# தமிழ் மன்றம்



# இசைக்குழு
## தமிழ் தினப் போட்டி – 2006
## மாகாண மட்டம்



## இசைக்குழு
### தமிழ் தினப் போட்டி - 2005
### மாகாண மட்டம்



## காவியக்கதா நாட்டிய நாடகம்
*(கர்ணன்)*
### மாகாண மட்டம்



# பள்ளிக் கூடப் பூவரசு

திருமதி உதயலதா நவதீசன்
B.A, Dip in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

நான் இந்தப் பாடசாலையின் நீண்டநாள் அபிமானி. எனக்கு இந்தப் பாடசாலையின் பல்வேறு விடயங்களும் அத்துப்படி. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளும் புரியும் ; கணக்கு வழக்கு அறிக்கையும் தெரியும். ஒவ்வொரு மாணவனது உள்ளக்கிடக்கையும் தெரிந்தவன் ; ஒவ்வொரு ஆசிரியரதும் ஆதங்கமும் அறிந்தவன். அகவை எண்பதில் அகலக்கால் பதித்து அமுதவிழாக் காணும் இந்த மகாவித்தியாலயத்தின் மகா மகா விற்பனங்கள், வெற்றிச்சுவடு பதித்த பெருமிதப் பதிவுகள், சோதனைச் சுவர் தாண்டிச் சாதனைக் கொடி நாட்டிய சந்தோசப் பொழுதுகள் யாவுமே நானறிவேன். ஒவ்வொரு வெற்றியிலும் அடியேனும் இறும்பூது கொள்வேன். தோல்விகளில் நானும் கூட துவண்டிருக்கிறேன். இத்தனை சொல்கிறேனே நான் யாரென்று தானே யோசிக்கிறீர்கள். நானா? நான்....நான் பாடசாலையில் பெருங்கிளை பரப்பி பசிய இலைகளால் அலங்கரித்து அழகு கொழிக்க விளங்கும் நான் ஓர் பூவரசு. என்ன? ஓர் பூவரசா கதைப்பது என்று அலுத்துக் கொள்கிறீர்களா? இதென்ன நியாயம்? குளத்தங்கரை அரசமரம் கதை சொன்னால் மட்டும் கேட்பீர்கள். கதை தந்த வ.வே.சு ஐயரை தமிழ்ச் சிறுகதையின் தந்தையாகவே மகுடம் சூட்டுவீர்கள். ஆனால் இந்தப் பள்ளிக்கூடப் பூவரசு கதை சொன்னால் கேலியா? கிண்டலா? அவருக்கு மகுடம்......... இவருக்கு?

நானும் கதை சொல்வேன். என் கதையும் சொல்வேன், என் கல்லூரியின் கதையும் சொல்வேன். நான் அழகு நிறைந்தவன். காலையிலே கதிரவனின் பொற்கிரணங்கள் என் இலைகளை அணைத்துத் தழுவி ரசவாதம் செய்யும் விந்தையிலே சிந்தை மயங்கும். தென்றலின் ஸ்பரிசத்தால் நான் கொண்ட காதல் களிப்பிற்கு என் இலை கிளை எல்லாம் நர்த்தனம் புரியும். கல கல வென்ற என் சங்கீத சிரிப்பொலியில் என் கவலைகள் கூட பஞ்சாய்ப் பறக்கும். நிலத்திற்கு நிழற்குடை பிடித்து அழகு சேர்க்கிறேன் நான்.

என் நிழலிலே நான் செதுக்கி வைத்த சிம்மாசனத்திலே ஆற

அமர்ந்து தம் ஆதங்கங்களை எல்லாம் கொட்டித்தீர்த்தவர்கள் எண்ணிக்கையிற் பலர். நண்பர்களிடையே ஏற்படும் சிறு சிறு கருத்து முரண்பாடுகள், சின்னச் சின்னக் கோபங்கள் எல்லாம் என் நிழலில் தான் பேசப்படுகின்றன, கோபம் தீர்ந்து நேசமாகின்றன. இன்னும் ஆசிரியர்களது மனக்கிலேசங்கள், குடும்பத் துயரங்கள், மன உளைச்சல்கள் எல்லாம் இங்குதான் பரிமாறப்பட்டு ஆறுதல் தேடப்படுகின்றன. என் இதயமும் அவர்களுக்காய் கலங்கிற்று. ஆறுதலுக்காய்ப் பிரார்த்தித்தது. சோகப் பொழுதுகள் மட்டுமல்ல மகிழ் பொழுதுகளும் என் நிழலில்தான். அதில் எனக்கு கர்வம் தான். ஒரு முறை பாடசாலைப் பரிசளிப்பு விழாவின் போது அலங்காரப் பந்தல் அமைப்பதற்காய் என் கிளைகள் சில வெட்டி அகற்றப்பட்டன. நான் வேதனையால் துடித்தேன். ஏதோ இயற்கையின் வளங்களை வாங்கி வளர்ந்து வந்தவன் நான். ஆசை ஆசையாய் அகலக் கிளை பரப்பி அழகு பெற்றவன் நான். என் கிளைகள் வெட்டப்பட்ட போது என் உறுப்புக்கள் இழந்து ஊனமுற்றதாய் உணர்ந்து கலங்கினேன், பரவாயில்லை நான் முடமாகாத அளவிற்கு எனக்கு ஏராளம் கிளைகள் உள்ளனவே. அத்தோடு கல்லூரி விழாவிற்காகத் தானே இப்படிச் செய்தார்கள். மேலும் நான் என்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டது எதனால் தெரியுமா? இந்த யாழ்ப்பாண மனிதர்களைப் பார்த்துத்தான். ஆம் ! எத்தனை மனிதர்கள் ! பிஞ்சுகள், முதியவர்கள், இளைஞர்கள் நாட்டுப்பிரச்சினை காரணமாகக் கையிழந்து, காலிழந்து, ஊனமானவராய்! இவர்கள் துன்பத்தின் முன் நான் எம்மாத்திரம்?.

சரி சரி இனி என் புராணம் விட்டு கூறவந்த விடயத்துக்கு வருகிறேன். விடயம் என்ன வென்றால் நாளைக்கு இந்தப் பாடசாலையில் தேர்த்திருவிழா! கொடியேற்றத்துடன் தொடங்கிய புலமைப் பரிசிற் பரீட்சையின் முக்கிய தினமான தேர்த்திருவிழா நாளையே நடைபெறப் போகின்றது.

நான் எத்தனை திருவிழாக்களை இங்கு கண்டிருக்கிறேன். கொடியேறித் தீர்த்தோற்சவம் வரை, நானும் அதிபர், ஆசிரியர் மாணவரோடு அங்கலாய்ப்போடு அவஸ்தைப்பட்டிருக்கிறேன். க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேற்றுக் காலத்தில் பெறுபேறுகள் வரப்போகுதென்றால் இந்த மாணவர்களின் நிலமை ! அப்பப்பா! அவர்களின் எதிர்பார்ப்பு, அங்கலாய்ப்பு, காத்திருப்பு, அவஸ்தை எல்லாமே.................... ! துயரங்களோடு துவண்டிருக்கிறேன், இன்பங்களோடு இனித்திருக்கிறேன். இப்படியெல்லாம் இருந்த எனக்கு இந்தத் திருவிழா பெரும் மனக் கிலேசத்தை உண்டு பண்ணிவிட்டது.

எனது பரந்த நிழலின் கீழ் பாடிப்பறந்த பசுங்குயில்கள், ஆடி மகிழ்நத அழகு மயில்கள் நாளை வரவிருக்கும் தரம் 5 புலமைப் பரிசிற் பரீட்சை முடிவுக்காய் மன ஆதங்கத்தோடு காத்திருக்கின்றனர். இந்தப் பரீட்சை நடைபெற்ற நாளி-லிருந்தே எல்லோர் மனங்களிலும் இது பெரும் புயலைக்கிளப்பி விட்டிருந்தது. பொதுவாகவே புலமைப் பரிசிற் பரீட்சை எனும் போது அது பரீட்சை எழுதும் மாணவரை விட பெற்றோர் ஆசிரியருக்கே முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. அதிலும் பெற்றோருக்கு இது பெரும் கௌரவப் பிரச்சினையாகவே மாறிவிட்டது எனலாம். பெற்றோர் மட்டுமா பேரன் பேத்திமார் படும்பாடு! முன்ன ரெல்லாம் ஒரு சில பெற்றோர்தான் இதில் அக்கறையோடு செயற் பட்டனர். ஆனால் இப்போது படித்த, படிக்காத என்ற வேறுபாடில்லாமல், எல்லாப் பெற்-றோரும் அக்கறை காட்டுகின்றனர். புலமைப் பரிசிற் பரீட்சைக் காய்ச்சல் பரவலாகத் தொற்றிவிட்டது. மாணவர் கல்வியில் அக்கறை கொண்ட பெற்றோரைப் பார்க்கும் போது ஓரறிவு ஜீவன் எனக்கே பெருமையாகத் தான் இருக்கிறது. ஆனாலும் மாணவரின் மன உளைச்சலுக்கும் பெற்றோரே காரணமாகி விடக்கூடாது.

இந்த முறை பரீட்சைத் தாள் மிகவும் கடினமாம். எனக்கென்ன தெரியும்? என் நிழலில் பேசிக்-கொண்டவர்களிடம் கேட்டு வைத்-ததைத்தான் உங்களுக்குச் சொல்கிறேன். முற்பகுதி கடினமாம். பிற்பகுதி இலகுவாம். முற்பகுதி-யிலேயே மாணவர்கள் பயந்து வி ார்களாம். பாவம் குழந்தைகள் தானே! எத்தனையோ பிள்ளைகள் பரீட்சை மண்டபத்திலேயே அழுதுவிட்டார்களாம். அவர்களைப் பார்க்கவே பரிதாபமாக இருந்ததாம். இந்த முறை இங்கு றிசல்ட் குறைவாகத் தான் வரும். தரம் 5 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் என்னருகில் நின்று பேசிக்கொண்டது இது. அதிபரின் வாழ்த்துரைக்குள் நுழைவதற்கு முன்னரே தம்மை தயார்படுத்தி சமாதானப்படுத்திக் கொண்டனர். ஷ்.......ஷ் இதை யாரும் போய் அவர்களிடம் சொல்லி விடாதீர்கள்.

இந்த மாணவர்கள் பாவம். முதலாம், இரண்டாம், மூன்றாம் வகுப்புக்களில் கற்கும் போது என் நிழலின் கீழே ஓடியாடித் திரிவார்கள். "குலை குலையா முந்திரிக்காய் நரியநரிய சுத்திவா" என்று சுத்திச் சுத்தி வந்தார்கள். "ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரு பூ பூத்தது ரண்டு குடம் தண்ணி ஊத்தி ரண்டு பூ பூத்தது" என்று பூவாய்ச் சிரித்தார்கள். இன்னும் பந்தடித்து ஓடிப்பிடித்து விளையாடினார்கள். அவர்கள் வெள்ளை உள்ளத்தோடு புனிதமாய்ப் புன்னகைக்கயில் மனம் புளகாங்கிதம்

பெறும். அவர்களின் குழந்தை பேச்சுக்களை நான் ஆர்வத்தோடு கேட்பேன். வள்ளுவர் ஒன்றும் சும்மா சொல்லி விட்டுப் போகவில்லை.

"குழலினிது யாழினது என்பர் தம்மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

இந்த மானிடப் பிறவி தான் எத்தனை மகோன்னதமானது! பெற்றோர் பிள்ளை பாசம், கணவன் மனைவி நேசம், சகோதர அன்பு, காதற் பிணைப்பு, நட்பின் நெருக்கம், குழந்தை இன்பம் அப்பப்பா எத்தனை எத்தனை ! வாழ்க்கையை அணு அணுவாக ரசித்து அனுபவித்து முறைப்படி வாழ்ந்தால் அது ஒரு யாகம். தெய்வீகம்! எனக்குப் பொறாமையாக உள்ளது. மனிதனாகப் பிறக்காமல் மரமாகி விடடேனே என்று. ஆனாலும் இந்தப் பிள்ளைகளோடு சேர்ந்து இருப்பதால் நான் பெருமிதம் அடைகிறேன்.

வெண்புறாக்களாய் தூய வெள்ளை ஆடைகளோடு அங்கும் இங்கும் விளையாடித் திரிந்தவர்கள்; பட்டாம் பூச்சியாய் பறந்து திரிந்தவர்கள் கவலைகள் தெரியாது விளையாடி மகிழ்ந்தவர்கள் நான்காம் தரத்திற்கு வந்தவுடன், புலமைப் பரிசிற் பரீட்சை ஆயத்தத்திற்காக எல்லாவற்றையும் விட்டு ஒரே படிப்பு, படிப்பு படிப்பு படிப்பு என்று அதனுடனேயே ஒன்றித்து விடுவது. பாடசாலையில் மட்டுமா? பாடசாலை நேரம் முடிய பாடசாலையிலேயே மாலை வகுப்பு அதைவிட ரியூசன், விசேட வகுப்பு வீட்டில் என்று புத்தகப் பூச்சியாக மாறி விட்டிருப்பர். விளையாட்டிற்கு நேரமில்லை. நண்பர்களோடு சிரித்து மகிழ நேரமில்லை; உறவினர் வீடுகளுக்கு செல்ல நேரமில்லை; ஏன் சாப்பிடவே நேரமில்லை - பெற்றோர், ஆசிரியர் தாம் அதே சிந்தனையில் இருப்பது போல பிள்ளைகளின் மனதிலும் அதை ஏற்றிவிட்டார்கள். அவர்கள் மனதிலும் "ஸ்கொலசிப்" என்றால் பெரிய விசயம். கட்டாயம் பாஸ் பண்ண வேண்டும். அதுதான் படிப்பின் எல்லை. என்றவாறெல்லாம் மனதிலே படிந்துவிட்டது. தினமும் வீட்டில் குவியும் மாதிரிப் பரீட்சை வினாத் தாள்களுக்கு விடை எழுதுவதே இந்தப் பிள்ளைகளுக்குப் போதும் போதும் என்றாகிவிடும். போதாக்-குறைக்கு வெகுசனப் பத்திரிகைகள் தமக்குள்ளம் ஒவ்வொரு வினாத்தாள்-களை வீட்டுக்குள் கொண்டுவரும். இது மட்டுமென்றா நினைக்கிறீர்கள்? பிள்ளைகள் வீட்டில் நிற்கும் நேரமே குறைவு. அந்த நேரத்தில் கூட உறவினர் யாராவது வீட்டுக்கு வந்தால், "ஸ்கொலசிப் இந்த வருசமா வாறவருசமா?" என்று பிள்ளையை நலம் விசாரிக்காமல் ஸ்கொலசிப் பைத் தான் விசாரிப்பார்கள். பாட சாலையில் அதிபர் ஆசிரியர்களும் தமது பாடசாலையின் இலக்கை இந்தப்பிஞ்சுப் பாலகர்களைக் கொண்டே அடைவதற்காய்

இவர்களைப் பாடாய்ப் படுத்து-கின்றனர். பரீட்சை முடிகிற வரையில் இந்தப் பிஞ்சுகளுக்கு வனவாசம் தான். "அன்று புலமைப் பரிசிற் பரீட்சைகள் மாணவர்களின் உயர்கல்வி வாய்ப்புக்களுக்கான வாயில்களைத் திறக்கும் பரீட்சைகளாகவே இருந்தன. இன்றைக்கு அப்பரீட்சைகள் மாணவர்களுக்கு உளநெருக்கீடுகளை ஏற்படுத்தும் பரீட்சைகளாக மாறியுள்ளன என்று யாழ் பல்கலைக்கழக முன்னாள் கல்வியியற்றுறைப் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் கூறினார்" என்று ஆசிரியர் வாசித்த பத்திகைச் செய்தி எனக்குக் கேட்கிறது. உங்களுக்கும் கேட்டிருக்கும் என நினைக்கின்றேன். வண்ணப் பறவைகளாய் வட்டமிட்ட இந்தக் குழந்தைகள் என் நிழலில் குதூகலித்துச் சிரித்த நாட்கள் இன்றில்லை.

எல்லா மரங்களிலும் இலை-கள் துளிர்க்கும், பழுக்கும், காய்ந்து சருகாகும். பசிய இலைகள் தான் அழகென்பர். இதிலும் எனக்கோர் கர்வம். என் இலைகள் பசுமையாய் இருந்த போது மட்டுமல்ல பழுத்து மங்கல மஞ்சள் நிறமாகும் போது தான் இன்னும் அழகு தருகின்றன. மஞ்சள் இலைகளைப் பிஞ்சுக்-குழந்தைகள் தேடித் தேடிச் சேகரிப்பர். எத்தனையோ அழகான பூக்களையெல்லாம் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். தலையிற் சூட்டி அழகுபடுத்தியிருக்ககிறீர்கள். பசுமையாக இருக்கும் போது மட்டுமல்ல வாடிய போதும் அழகாக விளங்கும் பூவாக நான் மட்டும் தான் இருப்பேன் என்று நினைக்கின்றேன். என் வடிவமும் மனதைக் கொள்ளை கொள்ளும் நிறமும் உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது. பூக்களில் அரசன் என்பதால் தான் பூவரசு என்ற பெயரை எனக்குச் சூட்டியிருப்பார்கள்.

"பூவரசு இலையிலே பீப்பி செய்து
ஊதினோம்
பள்ளிக்கூடப் பாடம் மறந்து பட்டாம்
பூச்சி தேடினோம்"

பாடல் எனக்குக் கேட்ட போது பெருமையாகத் தான் இருந்தது. உண்மை தானே. எந்த இலைக்கும் இல்லாத பெருமையன்றோ இது. எத்தனை குட்டி குட்டி நாஸ்வர வித்துவான்கள் என்னால் உருவாக்கப்பட்டார்கள். அவர்களது நாத மழையில் நான் நனைந்த நாட்கள் பல. இப்படி எத்தனை மகிழ்வோடும் சுவாரசியத்தோடும் நான் பார்த்த இந்தப் பாலகர்களை இந்த ஸ்கொலசிப் காய்ச்சல் ரணப்படுத்தி விட்டதே. என் மனம் ஆறவேயில்லை.

நாளை வரவிருக்கின்ற பரீட்சை முடிவுகளிற்காய் அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள், உறவினர்கள் என்று எல்லோருமே பரபரப்பாய்! ஆனால்

இந்த மழலைகள் மனதிலே அவஸ்தைகளைத் தாங்கி நெருக்கீடுகளுக்கு உட்பட்டு வேதனையோடு சின்ன மனங்கள் சிதைக்கப்படுவதை யார் அறிவார்?.

இப்பரீட்சைக்கு மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர், ஆசிரியர்கள் வழங்கும் அதீத முக்கியத்துவத்தால் அவர்கள் பல்வேறு உளவியல் தாக்கங்கட்கு உள்ளாகின்றனர். யப்பான் நாட்டிற்கான கல்விச்-சுற்றுலா வாய்ப்பு, பல்வேறு வங்கிகள், நிறுவனங்களின் பணக்கொடை என்பனவும் இப்பரீட்சையின் மீதுள்ள கவனத்தை அதிகரித்துள்ளது.

ஒரு பிள்ளை வாழ்க்கையில் முதன் முறையாகத் தோற்கடிக்கப்படும் இடம் இந்த 5ம் தரப்புலமைப் பரிசில் பரீட்சை என்றுதான் நான் கூறுவேன். சின்ன ரோஜாக்களின் மென்மையினை நோக்காது, கசக்கிப் பிழிந்து வீதியில் விட்டெறியும் கொடுமை இந்தப் பரீட்சை. இன்றைக்கே இவர்களின் அழகு வதனங்களில் ஆசை, ஆற்றாமை, ஆவல், பயம், குழப்ப உணர்வுகள் எல்லாம் ஒன்றாகக் குழைத்து அப்பப்பட்டிருக்கிறது. ஆயின்............. நாளை? வேண்டாம். சமூகமே! இவர்கள் பாவம். இவர்களை இவர்களாகவே வாழ விடுங்கள். குழந்தைகளைக் குழந்தைகளாகவே விட்டு விடுங்கள்.

ஓரறிவு மரத்துக்கு என்ன தகுதி என்று கேட்காதீர்கள். ஓரறிவுடன் இருந்தாலும், ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு பிள்ளையுடனும் ஊடாடியவன் நான்.

இந்தப் பிள்ளைகளின் பூவரசு நான்.

பள்ளிக் கூடப்பூவரசு !

***நிறுவனங்களில் நாம் அதிகம் பயப்படும் விடயங்கள் தளம்பல்கள், குழப்பங்கள், சமநிலையின்மைகள். ஆனால் இவை உருவாக்கங்களுக்கு அடிப்படையான மூலங்களாகும்***

# Unemployment in Jaffna

George Jeyabalan,
English Trained,
*Teacher, J/Chankanai Sivapragasa M.V*

This is one of the commonest problems faced by the third world and most of the developed countries. But, the causes differ...... Here, in the developing world, the ever increasing population causes unemployment. There, in the industrialised world, the advancing technology seems the culprit... Jobless people who have the will and ability, to work, are called 'unemployed.'

Besides 'population' and 'technology' , there are many other drawbacks that lead to unemployment. Unstable governments, economy of the state, out - dated policies, lack of funding for self - employment, dignity of labour and blind privatization too contribute handily...........

In Jaffna, this problem has two different dimensions ; the adverse effects of the ethnic war and the general preference for the 'white collar jobs.' A great majority of the Jaffna youths have their own lists of 'decent jobs' beneath which they are not prepared to bend .... Sadly, this 'negative attitude' is encouraged by most of the parents.

As a result, the number of educated, idling youngsters increases alarmingly ! ......

The advancement of technology and its 'automation' and 'computerization' are yet to establish their 'say' in Jaffna. But, the impacts of ethnic rivalry are quite visible and sporadic. The range of 'occupations' was on a decline until the signing of the 'Mou'. Now, it is worse, as the accord sticks on papers only ! ..........

Ignorance, inadequate funding and improper management have badly hit the 'blossoming' of 'self employment.' Independent vocations like poultry farming, weaving, pottery, running repair - shops or tea - boutiques and other cottage-industries stuggle for their lost 'stature' due to the said shortcomings.

But, it should be reiterated that an attitudinal change among the 'jobless' is a ' must of the moment.' It is the only feasible remedy that can curb the spread of this 'endemic'......... correction ....... ' epidemic !.'

# மாணவர் ஆக்கங்கள்

## கஸ்தூரி அன்னை

சங்கையூரிலே சங்கத்தமிழ் வளர
சாந்தமாய் வானுயர்ந்து
தலை நிமிர்ந்து தளைத்து - நிற்கிறாள்
எம் கல்லூரி அன்னை

வெள்ளைச் சீருடையில் பள்ளி
மாணவர்கள் வெற்றியுடன் பவனி
வரும் கல்லூரி வளாகத்தில்
கம்பீரமாய் நிற்கிறாள்
எம் கல்லூரி அன்னை

கஸ்தூரி மானினம் போல் துள்ளி
திரியும் மாணவரிடையே
அன்பையும் பாசத்தையும்
பண்பையும் பகுத்தறிவையும்
சகோதரத்துவத்தையும் சேர்த்து வழங்குகிறாள்
எம் கல்லூரி அன்னை

தோழமையுடன் தோள் கொடுக்கும்
நண்பர்களை மட்டுமல்ல
கல்வியிலே ஒளிரும்
சுடர்களையும்
விளையாட்டிலே வீரம் புரியும்
வீரர்களையும்
சகலமும் புரியும் சகலகலா வல்லவர்களையும்
தன்னகத்தே கொண்டு தளராது நிற்கிறாள்
எம் கல்லூரி அன்னை

முடிவிலிக் கல்வியை
தெவிட்டாமல் கற்றுத்தரும்
திறமை மிக்க ஆசிரியர்களையும்
வழிகாட்டியாக அதிபரையும் கொண்டு
தன்னம்பிக்கையோடு நிற்கிறாள்
எம் கல்லூரி அன்னை

வற்றாத ஊற்றாக பெருகும்
கல்விப் புதையலை கள்ளமற்று
கற்றுதந்து பெயரும் புகழும் பெற
வழிகாட்டும் எம் ஆதார ஒளி
கல்லூரி அன்னையை
சிரம் தாழ்த்துவோம்

**சு.சுபோஜா**

# எம் வளர்ச்சிப் படிகளில் பாடசாலையின் பங்கு

"ஒரு பாடசாலை திறப்பது ஆயிரம் சிறைச்சாலைகளை மூடுவதற்கு சமம்" என்கிற பொன்மொழிக்கு இணங்க ஒரு பாடசாலையானது தன்னைச் சார்ந்திருக்கும் சமூகத்தின் அறிவுக்கண்ணை திறக்கும் ஒளி விளக்காய் திகழ்கின்றதென்பதை யாராலும் மறுக்க முடியாது. இப்பாடசாலைகளானது தனியே ஏட்டுக்கல்வியை போதிப்பதோடு நின்று விடாது வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல பழக்க வழக்கங்களை போதிக்கும் இடமாகத் திகழ்கிறது.

இது மட்டுமன்றி பாடசாலைச் சீருடையானது ஒற்றுமை உணர்வையும் யாவரும் சரிசமமானவர்கள் என்பதையும் எமக்கு உணர்த்தி நிற்கின்றது. இதனால் நாளைய நாட்டின் தலைவர்களாக திகழும் எம்மிடம் ஒற்றுமை உணர்வைத்தூண்ட வைப்பதில் இன்று பெரும் பங்கு வகிக்கின்றது.

இன்று எமது நாட்டில் ஜனாதிபதி, பிரதமர், நீதிபதிகள், கல்விமான்கள், வைத்தியர்களை உருவாக்கியதும் இப்பாடசாலைகள்தானே. இத்தகு பாடசாலைகள் ஒரு தாயாக இருந்து தன்னிடம் வரும் பிள்ளைகளுக்கு அன்புடனும் அரவணைப்புடனும் கல்வியை போதிக்கின்றன.

அந்த வகையில் ஒளிமயமான எதிர்காலத்தின் படிக்கல்லாக விளங்கும் எமது பாடசாலையானது பல நூற்றாண்டுகள் நீடுழி வாழ்ந்து கல்லூரியாக உயர்ந்து பல சாதனைகள் புரிய நாம் அனைவரும் பாடுபடுவோமாக.

**அ.அஷனியா**
**3A**

# குரு

கண்ணைத் திறக்கும் கல்வியை
கனிவுடனே தந்திடுவார்
கசப்பாக இருந்தாலும்
கற்கண்டாக மாற்றிடுவார்

ஆணிவேராய் நின்றிடுவார்
பக்க வேராய் உதவிடுவார்
திக்குத் திசை தெரியா எமக்கு
தீப ஒளி காட்டிடுவார்

கன்றாய் நின்ற மாணவரை
கண்ணும் கருத்துமாய் காத்திடுவார்
நாளை பெரிய விருட்சமதாய்
பயன் தரவும் செய்திடுவார்

**ஜெ.கயல்விழி**
**தரம் 2A**

# மாற்று ஆற்றல் உள்ளோரை மகிழ்ச்சியானவர் ஆக்குவோம்

மாற்றுவலுவுள்ளோர்தனை மனதில் ஏற்று - அவர்
மகிழ்வுடன் வாழ வாழ்வில் ஒளி ஏற்று
மாற்றங்கள் காணும் உலகில் - அவரை
மதித்துவந்து தேற்றிக் கைகொடு

கடவுள் படைப்பில் குறைகளேது - அறிவு
கண்திறந்து பார் நிறைவுகள் நூறு
காற்றிற்க்கு உருவமில்லை கானம் இசைக்கிறது
கால்கள் மெலிந்தாலும் புள்ளிமான் வலிக்கிறது

கிழிந்த பணநோட்டை ஏட்டில் பயன்படுத்துகிறோம்
அழிந்த கழனிகளை மீள்வளமாக்குகின்றோம் - ஏன்
விசேட உதவி தேவைப்படுவோரை மறந்து போகிறோம் - அவர்
விருத்திக்குக் கைகொடு.... சமூக விளைச்சலைப் பெருக்கு

தொலைபேசி கிரகமுக்கு காதுகள் கேளா
தொலைக்காட்டி தந்த கலிலியோவுக்கு கண்கள் பாரா
தொலைந்து போனவை உறுப்புக்களன்றி உணர்வுகளல்ல - நாமும்
தொலைந்த மாற்றுவலுவுளோர் வாழ்வைத் தேடிக்கொடுப்போம்.

கி.விதுசா
8A

# சமாதானம்

உலக மக்களிடம் உதித்ததே ஞானம்
அவர்கள் வேண்டி நிற்பதே சமாதானம்
பெண்ணிற்கு அவசியம் நிலைத்து நிற்கும் மானம்
கோடி மக்களை நிலைக்க வைப்பதே சமாதானம்

பணம் இல்லையெனின் பிழைப்பது கடினம்
சமாதானம் இல்லையெனின் மனிதன் வாழ்வதே கடினம்
வளர்ந்து வரும் உலகில் பிழையேதும் இல்லை
சமாதானம் வேண்டி வருந்தாதவரே இல்லை

வாழ்வில் வெற்றி பெற நுட்பம் வேண்டும்
வாழ்க்கை முழுவதும் வெற்றி பெற சமாதானம் வேண்டும்
உலகிற்கு ஒளி கொடுப்பவன் நிலையான சூரியன்
உலக மக்களிற்கு ஒளி கொடுக்கும் பொன்னான சமாதானம்

ஒவ்வொருவர் வாழ்விலும் கவலைகள் உண்டு
கவலையை தோற்கடிக்கும் சமாதானம் என்றோ?
இயற்கையின் கொடையில் குறை ஏதும் இல்லை
சமாதானம் கிடைத்தால் சந்தோசம் வேறில்லை

நா.கஜேந்தினி
க.பொ.த உயர்தரம் - 2010

# கல்வி

பூவிற்கு நறுமணம் தேவை
வாழ்வில் உயர கல்வி தேவை
பாரில் நீ உயர விரும்பினால்
சென்றிடடா பள்ளிக்கு

கற்றோனுக்கு எங்கு சென்றாலும்
மதிப்பு உண்டடா தோழா
கல்வி எனும் உணவை தேடி செல்
உன் வயிற்றுப் பசிதீரும்

நீ பெற்ற கல்வியை
பிறனுக்கு சொல்லு
கல்வியை கொடுப்பதால்
பிறர் மனதில் இடம் பிடிப்பாய்

நண்பா ஆசானை நாம் மதிக்க வில்லையா
அவர் தரும் அறிவை ஏற்கவில்லையா
அறிவை ஏற்றோம் வாழ்வில் உயர்ந்தோம்
நீயும் கற்று உணர்ந்திட்டா

"பள்ளியே உன் கோவில்
கல்வியே உன் பசி!"

செல்வி.செ.வனஜா,
தரம் 7B

# சூரியோதயம்

*காலை தனில் சூரியன் உதித்திட*
*காணும் இருளை விலக்கிட*
*கதிர்களை பரப்பி எழுந்திடவோ*
*கர்ண் மிகு காட்சி தந்தடுவான்*

*கோயில் மணிகள் ஒலி எழுப்ப*
*கொக்கரக்கோ என்று சேவல் கூவிட*
*பறவைக் கூட்டம் இரை தேடியும்*
*பகலவன் உதயம் செய்திடுவான்*

*உலகம் சிறப்புற உதவிடுவான்*
*உயிர்கள் வாழ உதவிடுவான்*
*வானம் ஆங்கே மனம் மகிழ*
*வண்ண ஒளியைத் தந்திடுவான்.*

துஷாரா கதிரமலை,
8A

## பள்ளி சென்று படித்திடுவோம்

அன்னையோடு ஆறுவயதில்
அன்போடு கரம் பற்றி
அழகான உடையணிந்து
அக்கம் பக்கம் புதினம் பார்த்து
ஆசையோடு சென்றிடுவோம்

விளையாட்டு முற்றத்திலே
விருப்புடனே விளையாடி
விநோதச் செயல்களுடன்
விதம் விதமாய் கற்றவற்றை
வீட்டிலுள்ளோர் மகிழ்ந்திடவே
விநயமாக கூறிடுவோம்

ஆசிரியர் கதை சொல்ல
ஆர்வத்தோடு கேட்பதுடன்
ஆங்கிலமும் சிங்களமும்
அறிவு பெறக் கற்பதுடன்
அம்மா அப்பா அகம் மகிழ
அழகாய் நாமும் உரைத்திடுவோம்

சின்னச் சின்னப் பாட்டுப்பாடி
சிரிக்க வைக்கும் நடிப்பு செய்து
சக நண்பருடன் ஒற்றுமையாய்
கண்ணியமாய் கடமையுடன்
உண்மை பேசி உயர்ந்திடுவோம்
உலகில் தனியிடம் பெற்றிடுவோம்

## அப்பா

பெயரில் முதலிடம் அப்பா
அறிவில் முதலிடம் அப்பா

உழைப்பில் உயர்ந்தவர் அப்பா
உயர்வை காட்டுவார் அப்பா

கரங்களில் ஏந்தினார் அப்பா
கல்வி கடலினைக் காட்டினார் அப்பா

சிறப்பான சிந்தனை பலவும்
சிரிப்புடன் கூறினார் அப்பா

தப்புகள் பல செய்திட்ட போதும்
தட்டி கேட்டு திருத்தினார் அப்பா

அறியா உலகம் தனிலே
அறிவோடு அனுபவம் தந்தார்.

ர.பிரதீஷா
தரம் **2A**

## பூச்சி

சின்னச் சின்னப் பூச்சி
இறகை அடிக்கும் பூச்சி
மலரைத் தேடும் பூச்சி
தேனை உண்ணும் பூச்சி
வண்ண நிறப் பூச்சி
கண்ணைப் பறிக்கும் பூச்சி
வண்ணாத்துப்பூச்சி

**வி.சோபிதா**
**தரம் - 1B**

## நான் ஒரு நீதிபதியானால்

நான் ஒரு நீதிபதியானால் நேர்மையாகப் பணி புரிவேன். குற்றம் செய்பவர்கள் திருந்தக்கூடிய விதத்தில் நல்வழி காட்டுவேன். தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கும் இடமளிக்க மாட்டேன். குற்றச் செயல்களை பக்கச்சார்பின்றி நடுநிலைமையுடன் தீர விசாரித்து தீர்ப்பு வழங்குவேன். நீதிபதிகள் சங்கம் ஒன்றை உருவாக்கி நாட்டிற்கு நல்லன செய்ய முற்படுவேன். நீதிபதித் தொழிலின் மகத்துவத்தை காப்பாற்ற உழைப்பேன். நாட்டு மக்கள் சமாதானமாகவும் சந்தோஷமாகவும் வாழ வழி வகுப்பேன்.

தே. தேனுசா
தரம் **4A**

# விளையாட்டின் பயன்கள்

1. விளையாட்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் பயிற்சியைக் கொடுக்கிறது.
2. விளையாடுவதனால் மூளை சுறுசுறுப்பாக இயங்குகிறது.
3. உடற்பயிற்சி செய்வதனால் நோய்கள் அணுகாது.
4. விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதால் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்கும் பண்பு ஏற்படுகிறது.
5. இதனால் சமூக பழக்க வழக்கங்கள் வளர்ச்சியடைந்து நற்பிரசைகளாக வாழ முடிகிறது.
6. நேர்மை, கடமை, நன்நடத்தை, கீழ்ப்படியும் தன்மை போன்ற நல்ல குணங்கள் வளர்ச்சி அடைகின்றன.
7. தலைமை தாங்கும் பண்பு, துணிவு ஏற்படுகிறது.
8. வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கும் பண்பு வளர்கிறது.

இதனால் வாழ்க்கையில் துன்பம் ஏற்படும் போது துவழாமலும் இன்பம் ஏற்படும் போது தற்பெருமை கொள்ளாமலும் எந்நாளும் மகிழ்வாக வாழமுடிகிறது.

ர.விபூஷனா
தரம் - 8A

# பொது அறிவு

1. மூன்று இதயங்களைக் கொண்ட பயங்கர கடற்பிராணி எது?. ஒக்டோபஸ்
2. மஞ்சட் காமாலை நோயினால் பாதிப்படையும் உறுப்பு எது?. கல்லீரல்
3. மனிதனுக்கு எத்தனை சோடி விலா என்புகள் உண்டு?. 12 சோடிகள்
4. சின்னஞ்சிறு இதயத்தைக் கொண்ட மிருகம் எது?. சிங்கம்
5. நாக்கினால் வியர்வையை வெளியேற்றும் விலங்கு எது?. நாய்
6. பல்லில் இல்லாத ஒரே ஒரு சத்து எது?. இரும்புச் சத்து
7. எமது உடலிலுள்ள தோலின் எடை யாது?. 3.2 கிலோ கிராம்
8. கூடிய நீர் அருந்தும் பறவை எது?. புறா
9. நாய்களை விட மோப்பசக்தி அதிகமாகவுள்ள உயிரினம் எது?. விலாங்கு மீன்
10. கறையான் அரிக்காத மரம் எது?. தேக்கு
11. ஞாபக சக்தி அதிகமாவுள்ள காலம் எது?. கோடை காலம்
12. உணவு உண்ண முன் நீரை அருந்தும் விலங்கு எது?. குதிரை
13. பல் இல்லாத விலங்கு எது?. தேவாங்கு
14. மனிதனுக்கு உணவுப் பொருட்களை தரும் ஒரு பூச்சி இனம் எது?. தேனீ
15. அறுவைச்சிகிச்சையின் போது உடல் விறைப்பதற்கு பயன்படும் மருந்து எது?. ஈதர்

ப.அர்ச்சனா
8A

# நூல் நிலையம் செல்வோம் அறிவை வளர்ப்போம்

மக்களுக்கு உடலை வளர்க்க உணவு அவசியம் போல அறிவை வளர்க்க கல்வி அவசியமாகும்.

உணவைப் பெற்றுக்கொள்ள உற்பத்திகள் பலவும் மேற்கொள்வது போல அறிவை வளர்க்கப் பாடசாலைகள், நூல் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் படிப்பதால் மட்டும் பரந்த அறிவு உண்டாக மாட்டாது. அதனால் பாடநூல்களோடு துணை நூல்களான பிற நூல்களையும் கற்க வேண்டும். இப்புத்தகங்களை பெற்றுக்கொள்ள, நூல் நிலையங்கள் துணைபுரிகின்றன. பாடசாலைகளிலும் பிரதேச சபைகளிலும் சனசமூக நிலையங்களிலும், பல்கலைக்கழகங்களிலும் நகரங்களிலும் நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

"கல்விக்குக் கரையில் கற்பவர் நாள் சில" என்ற முதியோர் வாக்கிற்கமைய நூல்கள் படிக்கும் தோறும் அறிவு வளர்ந்து கொண்டே போகும்.

மனிதன் அறிவை வளர்த்துக்கொள்வதனாலேயே பிற உயிர்களை விட மேலானவனாகக் கருதப்படுகிறான். எனவே தன்னறிவை மென்மேலும் வளர்த்துக்கொள்ள நூல்நிலையங்களைப் பயன்படுத்தல் நன்று.

புதிய புதிய நூல்களைப் படிப்பதன் மூலம் மாறிவரும் உலகில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் பலவற்றையும், தகவல் தொழில்நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புக்களையும் அறிய வாய்ப்புக் கிடைக்கிறது.

ஒவ்வொரு தனி மனிதனும் அறிவில், பண்பாட்டில் மேம்பட்டு விளங்க நூல்நிலையம் செல்ல வேண்டும். வாசிப்பு மனிதனை பூரணப்படுத்துகிறது.

செ.தரணிஜன்,
*2A*

## அன்னை பற்றி சில வரிகள்

- **நேரில் நின்று பேசும் தெய்வம் பெற்ற தாயன்றி வேறேது?.**
- **பசுந்தங்கம், புதுவெள்ளி, மாணிக்கம், மணி வைரம் இவையாவும் தாய்க்கு ஈடாகுமா?.**
- **விலை மீது விலைவைத்து கேட்டாலும் கொடுத்தாலும் கடைதன்னில் தாயன்பு கிடைத்திடுமா?.**
- **ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்க முடியுமா?.**
- **தாயின் மடியில் தலை வைத்திருந்தால் துயரம் தெரிவதில்லை**

***க.திலக்ஷன்***
2A

## சிலேடை நொடிகள்

1. இலைகள் அசைவது எதனாலே? சுவாசம் செய்வது எதனாலே?
2. கீரை நிலத்தில் விதைப்பதேன்? கீழோர் செல்வரை நாடுவதேன்?
3. குதிரை வளர்வதெப்படி? செல்வம் அழிவது எப்படி?
4. கொல்லர் பிழைப்பது எப்படி? குத்தரிசி வேகுவது எப்படி?
5. சுவர் வெளுப்பது எதனால்? வெற்றிலை சிவப்பது எதனால்?
6. எருமைக்கன்று அழுவதேன்? எருக்கம் இலை பழுப்பதேன்?
7. குழந்தை அழுவதேன்? குப்பை தேங்குவது ஏன்?
8. குடி கெட்டுப் போவது ஏன்? பூவை வண்டு நாடுவதேன்?
9. ரத்தம் பெருகுவது எதனாலே? ரசம் மணப்பது எதனாலே?
10. பசுவில் பால் கறப்பதெப்படி? பாண்டவர் வந்ததெப்படி?

### விடைகள்

1. காற்றினால்
2. பிடுங்கித் தின்ன
3. கொள்ளையிட்டு
4. உலை வைத்து
5. சுண்ணாம்பினால்
6. பால் வற்றுவதால்
7. எடுப்பாரற்று
8. மதுவால்
9. பெருங்காயத்தால்
10. குந்தியிருந்து

செ.இந்துஜன்
2A

கொத்துக் கொத்துப் பூவாம்
அழகான பூவாம்
வண்ண வண்ணப் பூவாம்
வடிவமான பூவாம்
பூத்துக் குலுங்கும் பூவாம்
வடிவழகுப் பூவாம்
பல்நிறப் பூவாம்
எனக்குப் பிடித்த பூவாம்
றோஜாப் பூவாம்

பூ.கசிந்துஜா
தரம் - 1B

## சட்டை

அம்மா தந்த சட்டை
அழகான சட்டை
வண்ண வண்ணச் சட்டை
வடிவான சட்டை
நான் விரும்பும் சட்டை

கம்ஷா
தரம் - 1A

# தேங்காய்ப் பாலில் அழகு

**தலைமுடி வளர.....**

ஒரு பிடி பச்சை கறிவேப்பிலையுடன் 2 தேக்கரண்டி தேய்காய்ப் பால் சேர்த்து அரைத்து தலையில் பூசி பச்சை தண்ணீரில் அலசுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இப்படி செய்து பாருங்கள். முடி வளர்ச்சி தூண்டப்பட்டு கருகருவென முடி வளரத் தொடங்கும்.

→ தேக்கரண்டி உலர்ந்த நெல்லிக்காய் பவுடர்

→ தேக்கரண்டி மருதாணி பவுடர்

→ 1 தேக்கரண்டி வெந்தயம் பவுடர்

→ 2 தேக்கரண்டி தேங்காய் பால்

இவற்றைத் தேங்காயப் பாலுடன் கலந்து கொள்ளுங்கள். இந்தக்கலவையை தலையில் பூசி ஒரு மணி நேரம் கழித்து அலசுங்கள். வாரம் ஒரு முறை செய்தாலே போதும் கருகரு கூந்தலைப் பெறுவீர்

**உடலின் குளிர்மைக்கு.....**

ஒரு வழுக்கைத் தேங்காயுடன் தேங்காய்ப்பால் சேர்த்து விழுதாக அரைத்துக்கொள்ளுங்கள். (தண்ணீர் சேர்க்க வேண்டாம்) குளிர்ப்பதற்கு முன்னர் இந்த விழுதை தலை முதல் பாதம் வரை நன்றாகப் பூசுங்கள். பிறகு தலைக்கு சீயக்காய் போட்டு குளியுங்கள். வாரம் ஒரு முறை செய்தால் போதும் உடல் குளிர்மை அடையும்.

**தேங்காய் வைத்தியம்**

மருதாணி, கறிவேப்பிலை, வேப்பிலை இந்த மூன்றையும் சம அளவு எடுத்து, உலர்த்தி காயவைத்து பவுடராக்குங்கள். இதிலிருந்து 2 தேக்கரண்டி எடுத்து ஒரு வெள்ளை துணியில் மூடையாகக் கட்டுங்கள். பின்னர் அரைக்கப் தேங்காய் பாலை கொதிக்க வைத்து அதில் இதனைப் போட்டுவிடுங்கள். பவுடரின் எசென்ஸ் தேங்காய்ப்பாலில் இறங்கி தைலம் மாதிரி ஆகிவிடும். இதைத் தலையில் தடவி மகாஜ் செய்து குளியுங்கள். (சீகைக்காயோ, ஷம்புவோ போட வேண்டிய அவசியம் இல்லை) வாரம் ஒரு முறை இந்த வைத்தியம் செய்து வந்தால் பேன் அழியும்.

**சி.அனுசயா,**
**10B**

# Libraries

A library is a spot for reading where books, periodicals and dailies are kept in an orderly manner. It can be small or big in size, like the one attached to the 'British Museum' in London which has about 7000 000 books.

Even small towns are facilitated with public libraries nowadays. They lend books to their members who pay small amounts as m...nbership fees. Valuable volumes like Encyclopaedias, Dictionaries etc, are kept in the 'Reference' section which will not be allowed to take out....

Books on a variety of 'fields' or 'topics' are 'classified' and arranged in order to make the reader's 'search' easier..... Though different methods of classification of books are adopted by libraries, 'subject - wise categorizing' is the most common. And books are 'numbered' according to their 'subjects.' The person who is in charge of a library is called the 'librarian.' Depending on the size of libraries one or more people are employed.

Since 'reading refines and reforms us, we should try to get the maximum benefits from libraries.

*S.Jenani*
*Grade - 11B*

## The 'Mid - day meal' scheme for students

Most of us do not know the very reason for the re - introduction of the above scheme. It is to minimize the number of dropouts. Students who abandon their studies abruptly due to poverty are called 'dropouts'.

A student who suffers from hunger cannot concentrate on his or her lessons _ Food is a basic need of any human being. And education ; to a certain extent, is a must for us to face the challenges ahead.

On realising this inter - dependency between students food and education, the government has reimplemented the said scheme amidst great difficulty.

Therefore, we the students should regard this mid - day meal scheme as an 'asset'. We must not waste the meals, but try to get the maximum benefit out of it.

*J.Jenaka*
*Grade 10A*

# My favourite sports person

'Muththaiya Muralitharan' is today a renowned off - spinner in the Sri Lankan cricket team. He is also regarded as one of the best in the business. But, he had to traverse a long, rough journey to earn such laurels.......

He was born on 17 Sept. 1971 in Kandy. He played well for his school - St.Antony's college, Kandy - and was awarded the 'school - boy cricketer of the island.'

'Murali', as he is popularly known, has an ideal physique for the game, with average height and moderate muscles. In addition to his great bowling talent, he can bat a bit as a tail - ender.

This highly - gifted spinner has passed the 'dark- days' with vengeance to claim 700+ wickets todate..... An Australian umpire named Darold Hair accused Murali of throwing ! .. Consequently, Murali's peculiar bowling action was repleyed on the T.V monitor repeatedly and he was cleared of the guilt. Now, after becoming an established spinner in international cricket, this 'dark lad' with big, sparkling eyes, still has a few points to prove.... He loves to be in his own league...... A 'thousand test wickets' and surpassing 'Wasim Akram' in onedayers seem to be his summit.' until then; he won't rest his wrists ! ..........

**N.Kajenthini**
**A/L (2010) Arts.**

# My school

**My school is J/Chankanai Sivapiragasa M.V. It was started on 01.02.1928.Today,it is a big school. It has classes from Grade one to thirteen. About 1200 students are stydying here under some 50 teachers. Our principal is Mrs. C.Yogeswaran. I like my school very much.**

***T.Kiruththika***
***Grade - 2B***

# "The uses of 'Trees"

Trees, one of the best gifts of nature to man, yield us so many things. Fruits to eat, cool shade to sit and rest, flowers to smell and to purify the air, timber for construction and so on...

Trees accompany us from 'cradle' to 'coffin' they say..... A variety of furniture are made of timber, the seasoned - wood. Our cattle and many other herbivorous animals depend on trees for fodder. Their seeds and nuts provide us oils.

Trees are rich in medicinal value ; their leaves, buds, barks, fruits and even roots help us producing medicines. They prevent soil - erosion with their roots and thereby, the fertility of the soil is kept in tact .... Rainforests consist of huge trees which are responsible for the annual rainfall. By emitting oxygen, trees maintain the oxygen level of our atmosphere.

Therefore, trees are indispensable for our very existance. We should preserve and replant them at any cost ! .....

*K.Vithusha*
*8A*

# My pet

My pet is a dog
I call it 'Puppy'
It is white in colour
It loves to eat rice with meat or fish
It loves milk too
I love my pet and play with it

*V.Vithuna*
*Grade - 2B*

# Why I learn English

I am learning English because it is an international language. Most of the people in the world speak English. But in our country, we have to learn if as a second language.

We have to learn English in Sri Lanka because if we want to find a good job we have to speak English well. A lot of books are written in English like expensive science books, story books, novels and magazines.

If we want to know about the world, people, animals, insects, flowers, plants etc. We have to find and read books like the Encyclopaedia which is also in English.

In English films, we can watch and learn other people's life and so many things. But in Sri Lanka, we can learn only about Sri Lankan people's life. The English films are better than the Sri Lankan films. But if we cannot understand English, we cannot enjoy such films.

If we cannot speak English and understand English, it will be difficult to go to the other parts of the world. English is the link language of the world.

***J.Thuvarakan,***
***7A***

# About our Educational System .............

It was for us once...... Then it was designed by foreign - rulers for their own benefits....... They wanted obedient, sincere and hard working people to carry out their orders.

When they wanted labourers, they denied certain communities, the opportunity to learn. This is how the 'upcountry people' of Sri Lanka made illiterated ! ......

Even after the independence, upto this point, the Sinhala governments have failed to make a 'marked reform in the old ;British system.'

**J.Sambavi & Thamini**
**Grade - 9A**

# A poem on 'Sports'

'It' makes us stronger....
Enhances our stamina !

'True sportsmen' are we
'Give and take' is the 'key'

'Team spirit' is a must
Individual goals next

The 'person' who obeys
Knows how to give orders ! .......

Swifter, higher and stronger
Win or lose doesn't matter ....

A Grand 'Get Together' 'Olympics'
Mutual solidarity it depicts !.....

Terrible 'plague' is 'Doping'
Straightness of sports gets warping !....

Victories always tasty - but
Defeats are not dirty .....

'Participation' means a lot .....
'Crooked ways' keep you out ! ......

M.Rajini
A/L 2009 Arts

# Working women (or) should women go out to work?....................

.'Working women' is one of the most widely debated topics today. The reasons range from meeting the economic demands of the family to mere status........... People argue for and against such women, as the effects - whether good or bad - have a telling impact on the society.

Shouldering the burden of family expenses is the prime reason behind working women. It is very difficult to pull the family - cart without a dual income nawadays..........

The class of employed women can be subdivided into two : as working within the country and employed overseas. The second category created greater problems and 'vacuum' in their families. There is another sector of women who earn without stepping out which doesn't trouble our 'title'

Children miss their mothers, parents, their daughters and brothers, their sisters........ Why? The ever- escalating cost of living has made men incapable of catering their families financially.

'Women are as clever as men' is a well-established verdict. Their intelligence and talents should not be wasted. In this sense, I support women, even if there is no need of money. Here, we have 'two' things to focus on ............. One is, securing the social opportunities and the other is, contributing to the betterment of the country.

Researches reveal that a handy proportion of the jobs and professions are carried out more smoothly and swiftly by women than men...... Females are definitely more patient and tolerant and obedient to their superiors. Most of them seem well aware of their family responsibilities. They give their best in bringing up their children and catering kith and kin. One thing is for sure.... very few consider their 'jobs' as a symbol of social status....... The rest regards it, a prop against proverty !.

We have witnessed so many females decorating posts of prestige ; Prime ministers, politicians, astronauts, teachers and so on.......... Their contribution spans from house - keeping to guerrilla warfare !....... The ill - effects that emerge from their absence at homes must be met in some other ways ; not by blaming the 'work - horse' that brings dual benefits to any modern society.....

*T.Viththiya*
*A/L Arts - 2009*
*J/Chankanai Sivapragasa M.V.*

# *Gathered 'Gems' from here and there*

When we stop learning, we stop living.

Real intelligence is like a river ; the deeper it is, the less noise it makes.
If you speak the truth, you need not remember anything.

Hope for the best and be prepared for the worst.
Injustice anywhere is a threat to justice every where.

Experience gives a wisdom that is very costly.

I can't be your friend and flatterer too.

Fear is stronger than arms

Intelligence is quickness in seeing things as they are

Records are there to be broken ; likewise, mistakes are there to be made ........

**K. Sharmila**
**Grade 10A**

Character is like a tree and reputation like its shadow. The shadow is what we think of it ; the tree is the real thing.

- Abraham Lincoln

Books are not made for furniture, but there is nothing else that so beautifully furnishes a house.

- Henry ward Beecher

# The uses and abuses of TV

*George Jeyabalan,*
*English Trained,*
*Teacher, J/Chankanai Sivapragasa M.V*

Almost all the man-made devices have positive and negative impacts on him. Television is no exception. It is a knife that can be used to shape and sharpen things and also to destroy the same. In my opinion, the positive impacts of TV. are much greater than the undesirable ones. Therefore, let us look into that first....

Children and students get better 'access' to this 'global village' through TV than any other forms of media. Because, people are more curious to 'watch' than to 'read' or 'listen'. This element of interest pushes radio, dailies and periodicals to the back seats.... Ask for instance, What do we prefer?.... The recorded speech of Sir Winston Churchill or the action display of that great orator, with that peculiar hat, pipe and so on ..... Surely the second....

News bulletines, feature films, profiles and documentaries broaden people's general knowledge whereas advertisements enhance their awareness of the quality of commodities in markets.

Tele dramas, dance and music recitals and the like provide both entertainment and a way of exchanging cultural aspects.

'Sports' on TV enjoys an ever-increasing number of viewers. Billions of crazy fans meditate infront of their TV screens to have a glimpse of their heroes or heroines. Youngsters pick up 'role-models' for their careers in games and athletics.

To sum up, the invention and inrtoduction of TV have provided people, a precious device to divert themselves from day to day hardships.... In addition, it widens our wisdom and visual thinking. Above all, it motivates the 'courageous' and the 'curious' to perform!.....

Now, what are the 'abuses' of TV or the problems it creates?... It lays a strong platform for 'violence' through cinemas.... Consequently, a variety of crimes, ...... theft, burglary, murder, arson, rape and pre-marital and extra-marital sex are flourishing!... Gangsters and teenage criminals grow in number. Video-games derail even the good-natured and well-nurtured young ones...

Can we blame an innocent device for all these 'havoc'?... No, it is the mismanagement by the men who govern the media. Most of the third-world countries are forced to allow rotten, western-cultural elements into their audience.

This 'negative face' of the 'TV coin' can be cleaned of its stain....How?. Through 'censoring' or 'rejecting'. Once we manage to do that, the TV will be a matchless and marvellous device to recreate and refresh people......

## குருளைச் சாரணர்



## புலமைப் பரிசில் - 2004



## புலமைப் பரிசில் - 2005



## புலமைப் பரிசில் - 2006



## புலமைப் பரிசில் - 2007



## புலமைப் பரிசில் - 2008



# இசைக்குழு
## தேசிய மட்டம் 2ம் இடம்



சைவபரிபாலன சபை பரீட்சையில்
அகில இலங்கை ரீதியில்
முதலாம் இடம்



செல்வி
கங்கா சண்முகசுந்தரம்

மாகாண மட்டப் போட்டி
பந்தெறிதல்
3ம் இடம்



செல்வன்
சத்தியமூர்த்தி கபிலன்

# தமிழ் எழுத்துக்களும் அதற்குரிய பயிற்சிகளும்

திரு.பா.பாலகுமார்
B.Ed,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

**கையெழுத்தின் முக்கியத்துவம்**

பேச்சினை நிலைபெற வைப்பது எழுத்தேயாகும். எழுத்து மொழியை மக்கள் அறிவதற்கு முன்னர் அவர்கள் நினைவாற்றலை நம்பியே இருந்தனர். வேதம் எழுதாக்கிளவியாக தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருக்கிறது. இறையனார்-களவியல் உரை என்ற நூல் பத்துத் தலைமுறையாக தமிழ் நாட்டில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டது என்பதை நூல்பாயிரத்தால் அறியலாம். தலைமுறை தலைமுறையாக வாய்வழியாகவும் செவிவழியாகவும் வாழ்ந்து வரும் பாடல்கள் நற்றமிழ் மொழியில் ஏராளம்.

காலத்தையும் இடத்தையும் கடந்து பிற்காலத்தில் வாழ்பவர்களுடன் பேசுவது எழுத்து வழியாகத்தான் முடியும். பிறருடன் தொடர்பு கொள்ள அமைந்தது கையெழுத்தாகும். உற்றார் உறவினர் வெளியிடங்களில் இருந்தால் தொடர்பு கொள்ளக் கடிதங்கள் எழுத வேண்டும். வேறிடங்களில் உள்ள நண்பர்களுக்குச் செய்திகள் தெரிவிக்க வேண்டுமாயின் எழுத வேண்டும். இவ்வாறு செய்தித் தொடர்புடையதாக இது விளங்குவதால் எழுதுபவர் எண்ணியதைப் படிப்பவரும் எண்ணும் விதத்தில் எழுத்தானது எழுதப்பெற வேண்டும். எழுத்துப் பிழைகள் ஏற்படினும் செய்திப்பொருளும் திரிந்து போய்விடுகின்றது. இவைகளின் காரணமாக எழுத்து முக்கிய இடத்தை வகிக்கின்றது.

**நல்ல கையெழுத்தின் பண்புகள்**

கையெழுத்தை இக்காலத்தில் சரியாகக் கவனிப்பவர்கள் இல்லை. கையெழுத்தை நேர்த்தியாக்குவதற்கு மலர்கள், பறவைகள் ஆகியவற்றை உற்று நோக்குவது போன்று ஒவ்வொரு எழுத்தையும் உற்று நோக்கி அறிய வேண்டும். அப்பொருளை ஓவியமாக வரையக் கற்ற பிறகு தான் எழுதக் கற்கத் தொடங்க வேண்டும். இவ்வாறு கையெழுத்தைக் கற்றால் அழகான கையெழுத்து உருவாகும்.

கையெழுத்தின் நல்லியல்புகளாகச் சுட்டப்படுபவை

1. தெளிவு
2. விரைவு
3. அழகு
4. அளவு

எனப்படும் இவை பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

**தெளிவு**

படிப்பவர் விளங்கிக் கொள்ளும் விதத்தில் எழுதுவது தெளிவு என்ற பண்பாகும். தனித்தனியாக எழுதுவதே தமிழ் மரபு முறையாகும். அன்றியும் சொற்களுக்கு இடையிலும் இடம் விட்டு எழுதப்பெற வேண்டும். எழுத்துக்களைக் கிறுக்கிச் செல்லாமல் முத்து முத்தாக

எழுத வேண்டும். எழுத்துக்களின் உருவ அமைப்பை சிதைக்காமல் கூட்டாமல், குறைக்காமல் சரியாக எழுத வேண்டும். ஆசிரியர் கையெழுத்து அழகாக இருந்தால் அவருடைய கையெழுத்தை மாணவர்கள் முன்மாதிரியாகப் பின்பற்றுதல் எளிது.

### விரைவு

"காலம் கருத்தனம்" என்பது ஆங்கிலப் பழமொழி. காலம் விரைந்து செல்கிறது. மக்கள் கரையற்ற கல்வியைக் கற்க வேண்டியுள்ளது. கற்பவற்றையும் எழுத வேண்டிய-வற்றையும் விரைவாகச் செய்ய வேண்டும். ஆசிரியர் எழுது' என்று கட்டளையிட்டதும் மாணவர் எழுதத் தொடங்கி நிறுத்து என்றதும் நிறுத்தச் செய்து அக்கால அளவில் ஒரு மணித்துளிக்கு சராசரி எத்தனை எழுத்துக்கள் எனக் கணக்கிடலாம். இம்முறையால் பல மாணவர்களின் எழுத்து வேகத்தை ஒப்பிடலாம். வகுப்பு உயர உயர எழுத்தின் விரைவும் அதிகரிக்க வேண்டும். மூன்றாம் வகுப்பின் ஒரு மணித்துளிக்கு 35- 40 எழுத்துக்களையும் நான்காம் வகுப்பில் 50- 60 எழுத்துக்களையும் ஐந்தாம் வகுப்பில் 60 எழுத்துக்களையும் எழுதலாம் என்று கணக்கிட்டுள்ளனர். வளர்ந்தவர்கள் 100 எழுத்துக்கள் வரையில் எழுதலாம்.

### அழகு

எழுத்துக்கள் அழகாக இருந்தால் தான் அவற்றைப் பார்த்துப் படிப்பதில் மகிழ்ச்சி உண்டாகும். எனவே தெளிவிற்கும் விரைவிற்கும் அடுத்த படியாக கவனிக்க வேண்டியது அழகு ஆகும். எழுத்து அழகாக இருக்க வேண்டுமானால் உருவம் சரியாக இருக்க வேண்டும். அவை மேலும் கீழும் தொடும் இடங்களும் மேல் விலங்கு கீழ் விலங்குகளும் எழுத்துக்களின் உருவ அளவுகளும் ஒரே அளவில் இருக்க வேண்டும். சொற்களில் எழுத்துக்கு எழுத்தும், வாக்கியத்தில் சொல்லுக்குச் சொல்லும் ஒருபக்கத்தில் வரிக்கு வரி இடம் விட்டு எழுத வேண்டும். இடைவெளியானது ஒரே அளவாக இருக்க வேண்டும். வரி கோணாதிருத்தலும் தமிழ் எழுத்துக்-களை சாயாமல் செங்குத்தாக எழுதுதலும் அவசியம் கவனிக்கப்பட வேண்டிய அம்சங்கள் ஆகும். தமிழ்ப் பாடத்திலன்றி ஏனைய பாடங்களிலும் கையெழுத்தின் தெளிவையும் விரைவையும் அழகையும் வற்புறுத்த வேண்டும்.

### அளவு

எழுத்துக்களில் மேல் விலங்கு கீழ் விலங்கு வளைவுகள் போன்றவை ஒரே சீராக அமையப்பெறுவது அளவு என்னும் பண்பாகும். அச்சு எழுத்துக்களில் எழுத்துக்களை புள்ளி அளவில் குறிப்பிடுவர். 6 புள்ளி எழுத்துக்கள், 8 புள்ளி எழுத்துக்கள் என இனப்படுத்தியுள்ளனர். 8 புள்ளி எழுத்துக்களாலான பகுதியில் 12 புள்ளி எழுத்துக்கள் அமையுமாயின் அளவு என்னும் பண்பு இல்லாது போகும். இது போலே எழுதப்பெறும் எழுத்துக்கள் வரியின் தொடக்கத்திலே அமைந்த அளவே அதே பக்கத்தில் எழுதப்படும் எழுத்துகளில் எல்லாவற்றிலும் விளங்க வேண்டும். எனவே நல்ல கையெழுத்-தின் இயல்புகள் என்னும் போது தெளிவும் விரைவும் அளவும் உடன் இணைய வேண்டும்.

## கையெழுத்தை வளர்ப்பதற்குரிய முன் முயற்சிகள்

கையெழுத்தை வளர்ப்பதற்கு முன் பிள்ளையின் எழுத்துப் பயிற்சிக்கான வயதுப் பருவத்தை அறிந்து கொள்ளல் வேண்டும். எழுத்துப் பயிற்சிக்குரிய பருவம் ஆறாண்டுகள் முடிந்த பிறகே உண்டாகும். அதற்கு முன் எழுதுவதற்குரிய விரல்கள், கை, அதிலுள்ள தசைகள், நரம்புகள் ஆகியனவற்றுக்கு ஏற்ற பயிற்சி மற்றும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல் வேண்டும். பரும் கட்டைகளை முறையாக அடுக்குதலில் தொடங்கி முத்துக்கள், விதைகள் ஆகியவற்றை வரிசைப்படுத்துதல் வரை பல்வேறு செயல்களில் ஈடுபடச் செய்து எழுதப்போகும் விரல்களுக்கு பயிற்சி அளித்தல் வேண்டும். இவ்வாறு பின்வரும் படிமுறைகளில் பயிற்சியை வழங்கலாம்.

1. எழுதத் தொடங்குவதற்கு முன் குழந்தைகளின் கை, முன்கை, மணிக்கட்டு, விரல்கள், தசைநார்கள் முதலியவை விருப்பப்படி இயங்க வல்ல பயிற்சிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். தோட்டப் பள்ளிகளில் கட்டைகளை எடுத்தல், அடுக்குதல் போன்ற பயிற்சிகள் வழங்கலாம்.

2. ஆகாய வெளியில் விரல் கொண்டு நேர்கோடுகள், படுக்கைக்கோடுகள், சாய்வு கோடுகள், வளைவுகள், வட்டங்கள் போன்றவற்றை வரையச் செய்யலாம். சீமைச் சுண்ணாம்பு கொண்டு கரும்பலகையில் வட்டம், வளைவு போன்றவை அவர்கள் விருப்பம் போல் கிறுக்கச் செய்யலாம்.

3. நன்கு பரப்பிய மணலில் தன் கையில் குச்சி கொண்டு முன்னர் கூறியது போன்ற கோடுகள், வளைவுகள் போடச் செய்யலாம்.

4. சில சந்தர்ப்பத்தில் தரை மணலில் எழுதிய வடிவங்களின் மேல் விதைகள், புளியங்கொட்டைகள் போன்றவற்றை அடுக்கச் செய்யலாம்.

5. ஒரே வழி மணலில் வரையப்பட்ட உருவங்களின் மேல் கைகொண்டு மெதுவாக நகர்த்திச் செல்லலாம்.

6. சீமைச் சுண்ணாம்புக் கட்டியால் கரும்பலகையில் குழந்தைகள் தாம் விரும்பிய விதத்தில் கோடுகளை, வடிவங்களை கிறுக்க வாய்ப்பு ஏற்படுத்தலாம்.

7. கரும்பலகையில் வடிவங்களை எழுதிய பின் எழுதிய இடம் மங்கலாகத் தெரியும் படி அழித்து விட்டு அதன் மேல் எழுதக் கூறலாம்.

8. உப்புத் தாள்களில் எழுத்துக்களை, உருவங்களை வெட்டி அட்டைகளில் ஒட்டி அவற்றில் விரல் கொண்டு மெதுவாக விளம்பச் செய்யலாம்.

9. சிலேட்டில் குச்சிகளைப் பயன்படுத்தி எழுதச் செய்யலாம்.

விண்ணிலும் மண்ணிலும் கரும்பலகையில் எழுதுவதற்கு முற்பயிற்சிகள் தருவது பின்னர் அமையும் கையெழுத்துக்கு துணை செய்யும். முன்பயிற்சிகளைத் தொடர்ந்து எழுத்துப் பயிற்சிகள் கொடுக்க வேண்டும்.

**கையெழுத்தை வளர்ப்பதற்கேற்ற ஆய்வுகூடம்**

எழுதுதல் மிகவும் சிக்கலான செயல் ஆகையால் அதன் ஒரு பகுதி இயக்க அமைப்பையும் (Motor Mechanism) மற்றொரு பகுதி மனத்தின் வேலையையும்(Work of the intect) ஒரு சேரத் தூண்டுகின்ற வகையில் மொழி ஆய்வுகூடங்கள் விளங்குதல் வேண்டும். கையெழுத்தினை எழுதும் பொழுது எழுத்துக்களுக்குரிய அதன் அதனதன் வடிவங்கள் சிதையாமல் கலையழகுடன் விளங்கத்தக்க வகையில் எழுதத்தூண்டுதல் வேண்டும். அதற்குரிய ஆர்வம் எழுதத்தக்க வகையில் மொழிப் பயிற்றாய்வுக்கூடம் விளங்குதல் வேண்டும். இவ்வாய்வுகூடத்தினை பின்வருமாறு அமைக்கலாம்.

எழுத்துக்களையும் அவ்வெழுத்துக்குரிய படத்தினையும் ஒட்டும் மரம் அல்லது கனத்த அட்டையில் ஒட்டி அவ்வடிவத்துடன் கூடிய எழுத்தினை மட்டும் வெட்டி எடுத்து வைத்தல்.

வெட்டி எடுத்த உருவங்களை வெள்ளை அல்லது வண்ணத்தாளில் ஒட்டி வைத்தல். உப்புத்தாளில் எழுத்துக்களின் வடிவத்தினை ஒரு சீரான அளவில் வெட்டி எடுத்து அவ்வெழுத்துக்களை அல்லது அவ்வெழுத்துக்களாலான சொற்களை மனதைக் கவரும் தொடர்களாகவும் அமைத்துக் காட்சிக்கு வைத்தல்.

வழுவழுப்பான தாள் அல்லது அது போன்றுள்ள வெல்வெட் தாள் ஆகியவற்றில் தமிழ் நெடுங்கணக்கினை ஐந்து வகையான வரிசைக்குறும்பங்களாக எழுதி வைத்தல்.

துணை எழுத்துக்கள் எவை எவை என்பதனை (கொம்புகள், வளைவுகள், சுழிவுகள்) ஆகியவற்றினைத் தனியாகவும் எழுத்துக்களில் இணைத்தும் எழுதி வைத்தல்.

மேற்போன்ற செயற்பாடுகள் ஆய்வுகூடத்தினுள் காணப்படும்.

**நல்ல கையெழுத்தை வளர்ப்பதற்குரிய வழிமுறைகள்**

"கையெழுத்துப் போலத் தலையெழுத்து அமையும்" என்று தலையெழுத்துத் தத்துவத்தில் ஊறியவர்கள் கூறுவார்கள். குழந்தை இவ்வாறான எழுத்தை நினைத்தவுடன் எழுதிவிட முடியாது. முத்து முத்தாக மணி பதித்தல் போல கையெழுத்து அமைய வேண்டுமானால் அதற்கு இளமையிலேயே பயிற்சி கொடுக்க வேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாதல்லவா! கையெழுத்துத் திருந்த வகுப்பில் மொத்தமாகக் கொடுக்கும் பயிற்சியோடு சிறப்பாக எடுக்கும் சில பயிற்சிகளைப் பார்ப்போம்.

1. வரியொற்றி எழுதுதல்
2. பார்த்து எழுதுதல்
3. அச்சிட்ட பயிற்சிப் புத்தகங்களில் எழுதுதல்
4. சொல்வதெழுதுதல்

போன்ற செயற்பாட்டின் மூலம் நல்ல கையெழுத்தை வளர்க்க முடியும்.

# திசை மாறிச் செல்லும் எம் இளம் சமூகத்திற்கு சமயக் கல்வியின் அவசியம்

திரு ஆ.கனகரத்தினம்
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

"பொருளிலார்க்கு இவ்வுலகில்லை அருளிலார்க்கு அவ்வுலகில்லை" என்பது தெய்வப் புலவரின் அருள்வாக்கு. இக்கூற்றிற்கு அமைவாக எமது முன்னோர்கள் இம்மை மறுமைப் பயன் கருதி இறைபக்தியுள்ளவர்கள் ஆக எந்தக் கருமத்தைச் செய்யத் தொடங்கும் போதும் இறை ஆசிபெற்றுச் செய்து வந்ததால் எடுத்த கருமங்களில் எல்லாம் வெற்றி பெற்று சீருஞ்சிறப்புடனும் வாழ்ந்து வந்தனர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கின்படி எம்முன்னோர்கள் முறையே அன்னையையும் தந்தையையும் தாம் கண்ட முதல் தெய்வங்கள் என்றும் பின்னர் குருவின் சொற்படி நடந்து அவர்காட்டும் பாதையில் சென்று, இறைவனை அடையலாம் என்ற நம்பிக்கையுடன் வாழந்து வந்தனர். அதனால் தான் எமது முதாதையர்கள் அன்பு, பணிவு, அடக்கம், பொறுமை, விருந்தோம்பல் பண்பு, பஞ்சமா பாதகங்களைச் செய்யாத மனப்பக்குவம் உள்ளவர் களாயும் காணப்பட்டனர். இப்படியான அறத்தோடு கூடிய வாழ்வை வாழ்ந்ததனால் தான் எமது தமிழ் இனத்தவருக்கு தனியான ஒரு கலாசாரமும் பண்பாடும் இருப்பதைக் கண்டு மேல் நாட்டவர் வியந்தனர். ஆனால் இன்றைய இளம் சமூகம் பொருள் தேடுவதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று அவர்களின் கலாசாரத்தையும் வாழ்க்கை முறைகளையும் பார்த்து, கவரப்பட்டு விட்டில் பூச்சி வெளிச்சத்தைக் கண்டு வீண் போன செய்தி போல, தமது தனித்துவமான நாகரிகத்தைப் புறந்தள்ளி மேல் நாட்டவரின் நடை, உடை, பாவனைகளையும் இலட்சியம் இல்லாத வாழ்க்கை முறைகளையும் பின்பற்றுகின்றனர். அத்துடன் புனிதமான ஆலயங்களை கேளிக்கைக்குரிய பொழுது போக்கும் இடங்களாக கருதுகின்றனர்.

முன்னர் எமது ஆலயங்கள் மடாலயங்களாக இருந்த போது ஆன்ம ஈடேற்றம் கருதி அருள் தாகத்தை தீர்க்கும் நோக்கம் கொண்டும், சென்று வழிபாடியற்றி சமய ஒழுகலாறுடன் கூடிய பண்பையும் சமய விழுமியங்களையும் வளர்த்து சமய வாழ்க்கையுடன் இணைத்து கடைப்பிடித்து வாழ்ந்ததால் மன நிறைவுடன் நோயற்ற வாழ்க்கை முதுமையிலும் வாழக்கூடியதாக இருந்தது.

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன்விரையார்-கழற்கென் கைதான் தலைவைத்துக்-கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்" என்ற பாடல் வரிகளில் வரும் உணர்வுகள் இல்லாமல் ஆண்கள் விரதமிருந்து அங்கப்பிரதட்சணம் செய்வதில்லை. பெண்கள் அடியழித்தல் போன்ற விரத நெறி முறைகளின்படி ஒழுகுவதில்லை.

பொதுவாக ஆலய வழிபாட்டின் போது வீழ்ந்து வணங்குவதற்கே பலர் வெட்கப்படுகின்றனர். ஆனால் பிறரின் உடை அலங்காரம், ஆபரணங்களின் அழகை இரசிப்பதில் மிகவும் சிரத்தையுடையவர்களாகக் காணப்படுகின்றனர். இறைவன் எல்லாம் அறிபவர் என்பதை அறியாத எம் இளம் சமூகம் குளிக்கப் போய் சேறு பூசிய கதைக்கு ஒப்பாக கடவுளையும் கோயிலையும் கொச்சைப்படுத்துகின்றனர்.

ஒருவர் விரதம் அனுட்டிக்கும் போதுதான் பசியின் கொடுமை எப்படிப்பட்டது என்ற உண்மை அனுபவத்தைப் பெறு முடியும். அதனால் ஒரு ஏழையின் பசியைப் போக்க தான தருமங்கள் செய்ய வேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கும். இதோடு விருந்தோம்பல் பண்பையும் வளர்த்து-விடும்.

ஆனால் இன்றைய இளம் சமூகத்தவர் விரதம் அனுட்டிப்பதில்லை. பெற்றோர் சொற்கேட்டு நடப்பதில்லை. பெரியோர்கள், முதியோர்களை மதிக்கும் பண்பு எள்ளளவும் இல்லை. ஒருவர் செய்த உதவிக்கு பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என்ற பண்போ நன்றியுணர்வோ இல்லை. அஞ்ஞானத்தில் இருந்த தம்மை மெய்ஞ்ஞான நிலைக்குக் கொண்டு வந்த ஆசிரியர்களை கனம் பண்ணவும் மனம் வருவதில்லை. இவற்றையெல்லாம் விட மிக மோசமான பண்பு ஒன்று கூட இவர்களிடம் காணப்படுகிறது. பிறர் துன்பத்தில் தாம் இன்பம் காண்பது. பிறரின் பொருளை அபகரித்து அதன் மூலம் தாம் சொகுசு வாழ்க்கை நடத்துவது இப்படியெல்லாம் அநாகரிகமான பண்புகள் அநேகம் காணப்படுகின்றது.

அன்று பாரதியார் சொன்னது போல "சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே செய்வதறியாரடி" என்ற பாடல் வரிகளின்படி அன்னையும் பிதாவும் பின்னடிக்கு இடைஞ்சல் என்றும் ஆலயம் தொழுவது வேலை மினைக்கேடு என்றும் புதிய குதர்க்க வாதப்பழமொழிகளை ஆக்கி வீண்வாதம் செய்கின்றனர்.

இப்படியே இவர்களை விட்டு விட்டால் எமது சமய விழுமியங்களும் தமிழர்களின் தனித்துவமான பண்பாடும் சில காலத்தில் இவர்களால் அழிக்கப்பட்டு விடுமோ என்று கூட சந்தேகம் உண்டாகிறது. எனவே புதிய கல்விச்சீர்திருத்தத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் சமய ஒழுகலாறு பண்பும் பாடத்தின் மூலம் சேர்த்துப் போதிக்க வேண்டும் என கல்வி திணைக்களம் வலியுறுத்தி-யுள்ளது. அதனூடாக வாழ்க்கையுடன் சமயத்தை இணைத்துக் கொள்ளக்-கூடிய புராண இதிகாசக்கதைகள் பன்னிரண்டு மாதங்களிலும் அவற்றில் வரும் பண்டிகைகளிலும் மகத்துவத்தை ஆதார பூர்வமாக எடுத்துச்சொல்லியும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

"தீயவை தீமை பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்" என்னும் குறட்பாவின் மூலமும் இன்னும் வேண்டிய இடங்களில் தகுந்த உதாரணங்களுக்கேற்ற மேற்கோள்கள் மூலமும் இடித்துரைக்கப்பட வேண்டும். திசைமாறிச்செல்லும் எம் இளம் சமூகத்தை திசை திருப்பி நல்வழிப்-படுத்த பெரியோர்கள் அனைவரும் முன்வர வேண்டும் அவ்வாறு செயற்படுவதன் மூலமே எமது தமிழ் இனத்தின் சைவ சமயத்தின் தனித்துவமான பண்புகளைப் பாதுகாக்க முடியும்.

# 5E கற்றல் - கற்பித்தல் முறையும் ஆசிரியர் வகிபாகமும்

செல்வி ச.சரளா
Science Trained,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

இன்றைய உலகின் சவால்களுக்கும் போட்டிகளுக்கும் முகம் கொடுப்பதற்காக புதிய கல்விச் சீர்த்திருத்தங்கள் அவ்வப்போது கொண்டுவரப்படுகின்றது. இந்த வகையில் 2007ம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட 5E கற்பித்தல் முறை முக்கியமான ஒன்றாகும். குறிக்கோளை அடிப்படையாகக்கொண்டு வழங்கப்பட்டு வந்த கலைத்திட்டம் தேர்ச்சிமையக் கலைத்திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. தேர்ச்சி என்பது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் என்பவற்றின் மொத்த வெளிப்பாட்டை கல்வியின் மூலம் ஏற்படுத்துவதாகும். தேர்ச்சிகள் பாடம் சார்ந்த தேர்ச்சிகள், பாடம் சாராத தேர்ச்சிகள் என இருவகையில் அடக்கப்படுகின்றன.

கற்றல் - கற்பித்தல் முறையினை எடுத்து நோக்கும் போது அது 5E படிமுறைகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

| | |
|---|---|
| ஈடுகொடுத்தல் | - Engagement |
| கண்டாய்வில் ஈடுபடல் | -Exploration |
| விளக்கமளித்தல் | - Explanation |
| விரிவாக்கம் செய்தல் | - Elaberation |
| மதிப்பீடு செய்தல் | - Evalution |

இவ்வகையான கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேற்கொளள்வதற்காக ஆசிரியரின் வகிபங்கிலும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது பின்வருமாறு 3T ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1. Transmission
   கடத்தும் வகிபாகம்
2. Transaction
   பரிமாற்றல் வகிபாகம்
3. Tranformation
   நிலைமாறும் வகிபாகம்

இவற்றில் கடத்தும் வகிபாகத்தினை எடுத்து நோக்கும் போது கடந்த காலங்களில் வகுப்பறையில் மேற்கொள்ளப்பட்டு வந்த செயற்பாடாகக் காணப்பட்டது. வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்தலானது மாணவர் கற்றலிலும் பார்க்க முக்கியம் பெறுகின்றது. மாணவர்கள் ஆசிரியர் கூறுபவற்றை செவிமடுப்பவர்களாயும் அதனைச் செய்பவர்களாயும் காணப்படுவர். இங்கு கணிப்பீடு மதிப்பீடு என்பன கற்பித்தற் செயன்முறையின் இறுதியிலேயே இடம்பெறும்.

பரிமாற்றுதல் வகிபாகத்தினை எடுத்து நோக்கும் போது இங்கு ஆசிரியர் -

மாணவர் இருபக்க தொடர்பு காணப்பட்டு பின்னர் பரவலாக்கப்படுகின்றது. இங்கு கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் ஒரேயளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இச்செயன்முறையில் ஆசிரியர்கள் வசதிகள் செய்து கொடுப்பவர்களாயும் மாணவர்கள் செவிமடுப்பவர்களாயும், துலங்கல்களைக் காட்டுபவராயும் வினாக்களைக் கேட்பவர்களாயும் காணப்படுவர். இங்கு வளங்களின் பாவனை மட்டுப்படுத்தப்பட்டது கணிப்பீட்டு நிகழ்வு துலங்கல்களுக்கு ஏற்ப நடைபெறும். ஆனால் மதிப்பீடு நிகழ்த்தப்படுவதில்லை.

நிலைமாறும் வகிபாகத்தினை எடுத்து நோக்கும் போது 5E கற்றல் - கற்பித்தல் முறையில் இது முக்கிய இடம் பெறுகின்றது. இங்கு மாணவர் மையக் கற்றலுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கற்றல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இங்கு ஆசிரியர் ஒரு வளவாளர் போன்று தொழிற்பட்டு மாணவர்களின் அறிவுத்திறனைக் கட்டியெழுப்ப சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவர். இங்கு கற்றலானது கற்பித்தலிலும் முதன்மை பெற்று விளங்கும். கற்றல் - கற்பித்தல், கணிப்பீடு, மதிப்பீடு யாவும் ஒரே சமயத்தில் நடைபெறும். மாணவர்களைப் பொறுத்தவரையில் செவிமடுப்பவர்களாயும், முன்வைப்பவர்களாயும், துலங்கல்களைத் தருபவர்களாயும், கணிப்பிடுவர்களாயும் வினாக்களை வினாவுபவராயும் தொழிற்படுவர்.

2007ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய சீர்திருத்தத்தின் படி ஆசிரியர் வகிபாகம் நிலைமாற்றுதல் வடிவத்துக்கு மாற்றியமைக்கப்படுகின்றது. பாடரீதியாக மாணவர்கள் குறித்த திறனை அடையவும் அதில் உள்ள தத்துவங்கள், நுட்பத்திறன்கள் என்பவற்றை பிரயோகிக்கக்கூடிய ஆற்றலை வளர்த்தல், இதனை வாழக்கையின் தேவைகளைப் பொருட்டு பிரயோகிக்கக்கூடியவாறு தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாக ஆசிரியர் வகிபாகம் அமைய வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

இதற்காக ஆசிரியர் திட்டமிடல் முறையும் மாற்றியமைக்க வேண்டும். அத்தகைய பாடத் திட்டமிடல் செயற்பாட்டுப் பாடத்திட்டமிடல் (Activity base lesson plan) என அழைக்கபபடுகின்றது. இதன் மூலம் 5E முறையில் திட்டமிட்ட கற்றல் - கற்பித்தல் முறையில் நிலைமாற்று ஆசிரியர் வகிபாகத்துக்கு மேலதிகமாக கடத்தல், பரிமாற்றுதல் வகிபாகங்களுக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாட்டுத் திட்டமிடல் கற்றல் - கற்பித்தல் முறையினை எடுத்து நோக்கும் போது ஆசிரியரானவர் ஏற்கனவே திட்டமிட்டு, அதற்குத் தேவையான தர உள்ளீடுகள், ஏனைய வளங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதால் செயற்பாடு இலகுவானதாக்கப்படுகின்றது. திட்டமிட்டு செயற்பாட்டினை மேற்கொள்வதால்

ஆசிரியருக்கு சுமை குறைக்கப்படுகின்றது. மாணவர்களைப் பொறுத்தவரையில் குழுவாகச் செயற்படுவதனால் அவர்களின் சமூக விழுமியப்பண்புகள் விருத்தியாக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் கற்கும்போதே அவர்களின் சுயதிறன்களும் விருத்தியடைய சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் இம்முறையின் மூலம் கற்றல் - கற்பித்தல் முறையினை மேற்கொள்ளும் போது சில பாடங்களை கற்பிப்பதில் (ஆங்கிலம், ஆங்கில மொழி மூலக்கல்வி) ஆசிரியர்கள் பல இடர்களை எதிர்கொள்வதாயும் கருதப்படுகின்றது. அத்துடன் வகுப்பறையில் அதிகளவான மாணவர் எண்ணிக்கை காணப்படல் ஆசிரியர்களுக்கு அதிக பாட வேளைகளை வழங்கல், குறைந்த வசதிகள் உடைய வகுப்பறை போன்றவையும் இம்முறையின் வினைத்திறனைக் குறைப்பதாய் தருதப்படுகின்றது. காலக்கிரமத்தில் இவ் இடர்ப்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் போது இம்முறையிலான கற்றல் - கற்பித்தல் வினைத்திறனானதாக அமையும். என்பதில் ஐயமில்லை.

புதிய கல்விச்சீர்திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள 5E கற்றல் - கற்பித்தல் ஆசிரியர் வகிபாகமானது அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் முழுமையான ஈடுபாட்டுடன் செயற்படுத்தப்படும் போது ஆசிரியரையும் மாணவரையும் சுறுசுறுப்பானதாக இயங்க வைப்பதுடன் விரிவான சிந்தனைகளுக்கும் தேடல்களுக்கும் இடமளித்து வினைத்திறன் மிக்கதாயும் உச்ச விளைதிறன் தருவதாயும் அமையும்.

**Education is the most powerful weapon which you can use to change the world**

- Nelson Mandela

**கல்வியே மிகப்பெரிய ஆயுதம் நீங்கள் அதனை உலகத்தை மாற்றப் பயன்படுத்தலாம்.**

# வர்ணங்களும் அவற்றின் தன்மைகளும்

செல்வி க.ஜெயதர்ஷினி
National Diploma (Teaching)
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

சித்திரம் என்பது ஒரு மனிதனுடைய உள்ளார்ந்த உணர்வுகளையும் கற்பான சக்திகளையும் உள்ளடக்கி ரேகைகளாலும் (கோடுகள்) வர்ணங்களாலும் தீட்டப்படல் ஆகும். இச்சித்திரத்தினை வரையும் ஆற்றலானது சிறுவயதிலிருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து கொண்டே செல்லும். இவ் ஓவியத்தினை பலர் பல்வேறு இரசனைகள் மூலம் அனுபவிப்பார்கள். கலைப்பெருக்கிலே மூழ்கிய அவற்றின் அழகினை அனுபவிக்க மறுப்போர் அறிவு நிரம்பாத கொம்புகளுடைய வலுவற்ற விலங்கிற்கு நிகரானவன். எனவே மனிதனால் செயற்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் அனைத்துமே "கலை" எனலாம்.

சித்திரம் ஒன்று வரைவதற்கு அடிப்படையானது கோடுகள். இக்கோடுகளை பயன்படுத்தி நாம் நினைத்த ஓவியத்தை வரைய முடியும். அவ்வாறு வரையப்பட்ட ஓவியங்கள் முழுமை பெற வேண்டுமெனில் வர்ணங்கள் அவசியம். இவ்வர்ணங்களை ஆரம்பகாலத்தில் இயற்கையில் கிடைத் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவையாக உள்ளது. அதாவது வெள்ளை நிறத்தை மக்குளு என்ற ஒரு வகை வெள்ளைக்களியிலிருந்தும் சுட்ட சிப்பி, வெண்சங்கு போன்றவற்லிருந்தும் பெறப்பட்டன. இவ்வாறே சிவப்பு : சாதிலிங்கப் பூவிலும், மஞ்சள் கொக்கட்டு மரத்தின் பாலிலிருந்தும், பச்சை பொன்னவரை இலையிலிருந்தும், நீலம் அவுரியிலிருந்தும், கறுப்பு பலாப்பாலை கெகுனு எண்ணையுடனும் பழந்துணியுடனும் எரித்துப் பெறப்படும். இவ்வாறு முற்காலத்தில் வர்ணங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

இவ்வர்ணமானது பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. யாதாயினும் ஒரு பொருளுக்கு வர்ணம் இல்லையெனில் அவை ஏனையவர்களை கவர்வது கடினமாகும். நமது வாழ்க்கையிலும் பல வேறுபாடுகளைப் பார்ப்பதற்கும் வர்ணங்கள் உதவுகின்றன. இவ்வர்ணங்கள் பல வகையாக உள்ளது. அதாவது மூல வர்ணங்கள் (முதல் வர்ணம், அடிப்படை வர்ணம், ஆரம்ப வர்ணம், தூய வர்ணம்) என அழைப்பார்கள். இவ்வர்ணமானது சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய மூன்று வர்ணங்ககளை உள்ளடக்கியுள்ளது.

அடுத்து துணை வர்ணங்கள் (இரண்டாம் நிலை வர்ணம், கலப்பு வர்ணம்) என அழைப்பார்கள். அதாவது அடிப்படை வர்ணங்கள் ஒன்றோடு ஒன்று கலக்கும் போது ஏற்படும் வர்ணம் ஆகும்

உதாரணம் :
நீலம் + மஞ்சள் = பச்சை
நீலம் + சிவப்பு = ஊதா
சிவப்பு + மஞ்சள் = செம்மஞ்சள்
என்றவாறு அமையும். இவ்வர்ணங்களை

நாம் ஒரு வர்ணச்சக்கரத்திற்குள் அடக்கலாம். அவை




இவ்வாறு அமைந்து காணப்படும்

மேலும் வர்ணங்களை அவதானிக்கும் போது குளிர் வர்ணம், வெப்ப வர்ணம், பொது வர்ணம் எனவும் காணலாம். குளிர் வர்ணமானது பின் செல்லும் வர்ணங்களாக காணப்படும் அவை நீலம், பச்சை, ஊதா போன்றனவாகும்.

வெப்ப வர்ணங்களை முன் செல்லும் வர்ணம் எனவும் அழைப்பர். அவை சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் என்பனவாகும். பொது வர்ணமாக வெள்ளையும், கறுப்பும் அமைந்துள்ளன. இவ்வாறு வர்ணங் களை பிரித்தறியக்-கூடியதாகவுள்ளது. எமது முன்னோர் வர்ணங்களை அவற்றின் தன்மைகளின் அடிப்படையில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர். அவை பின்வருமாறு காணப்படும்

சிவப்பு - அபாயத்தையும், கோபத்தையும் குறிக்கும்
பச்சை - குளிரான தன்மையுடையது, அபாயமில்லாதது.
நீலம் - அன்பு பாசத்தைக் குறிக்கும், உணர்ச்சியைக் காட்டும்
வெள்ளை - சமாதானத்தையும் தூய்மையையும் பேணும், துக்கத்தைக்குறிக்கும்.

கறுப்பு - துக்கத்தைக் குறிக்கும்.
கபிலம் - நிலையில்லாதது
சாம்பல் - அசுத்தம் இருண்ட தன்மையுடையது
மஞ்சள் - சுறுசுறுப்பு பிரகாசம்

என்பனவாகும்.

நாம் வர்ணங்களை தீட்டும் போது இத்தன்மைகளை கருத்திற் கொண்டு தீட்டுவது மிகவும் பயனுள்ளதாகும். இவ்வர்ணங்கள் எமது அன்றாட வாழ்க்கையில் பெரிதும் பங்களிப்பு செய்கின்றதை காண முடிகின்றது. நாம் ஒரு கல்யாண வீட்டிற்கு செல்வதாயின் மங்கல கரமான உடையாக அணிகிறோம். ஒரு மரண வீட்டிற்கு செல்வதாயின் அமங்கலகரமான ஆடையாக அணிகிறோம். இவ்வாறு மனிதனின் வாழக்கையிலும், ஓவியரின் கைகளிலும் வர்ணங்கள் தவழந்த வண்ணம் உள்ளன. ஓவியரின் ஆக்கத்திற்கு வர்ணம் ஒளி கொடுக்கும் ஒன்றாக அமைந்துள்ளது.

மறைந்து கிடக்கும் விம்பங்களாய்
தாளில் நிழலாடும் உருவங்களாய்
உயிரூட்டும் ஓவியமாய்
உயிர் பெற்றிடுவீர்
எம் வாழ்வின் ஒளியூட்டும் ஓவியமாய்.

# Jasmine

Mrs.K.Pratheepan,
National Diploma (Teaching)
*Teacher, J/Chankanai Sivapragasa M.V*

O! Jasmine dear what a bright
And beautiful, blossom you are.

Your fragrance is pleasant and pleasing,
And your petals are white as snow.
They are soft as fluff

Your white wings are like the dresses,
which Christian brides wear
They're strong enough to prove your purity
And temples, you're given priority.

Indeed, you beautify the places
where you are displayed
You are chosen to decorate temples
And many other places

On the whole, you lure and entice
The young and the old
By your marvellous beauty and pleasant fragrance
In fact, ladies love you more

You are a symbol of love and peace
And you signify virtuous things
And always you stick to our
Culture and civilization
I love you so much 'Jasmine dear.'

# வன்முறையற்ற தொடர்பாடல்

செல்வி சந்திராவதி பொன்னையா
BA. Dip in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

இன்றைய நவீன உலகில் உலகமயமாக்கம் பின் நவீனமயமாக்கம் கட்டற்ற வர்த்தகம் நவீன தொலைத் தொடர்பு வசதிகள் போன்ற பல புதிய அம்சங்கள் பேசப்படும் உலகத்தினை கிராமமாக்கும் செயல்முறை நடைமுறை உலகில் நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே வேளையில் வன்முறைகள் மலிந்து நெறிபிறழ்வு களால் சமூகம் மலிந்து அச்சமும் அங்கலாய்ப்பும் சீரழிகளும் எஞ்சியுள்ள வாழ்க்கை யினை ஆக்கிரமிக்கின்றது. இந்த நேரத்தில் "வன்முறையற்ற தொடர்பாடல்" பற்றி ஊடறுத்து நோக்குவது கடினமான காரியமாயினும் இவ்வுலகில் எந்த ஒரு செயற்பாட்டிற்கும் தொடர்பாடல் முக்கியமானதால் "இருளைப் பழிப்பதை விட ஒளியினை ஏற்றுவது மேல்" என்ற வார்த்தைக்கிணங்க மிஞ்சியுள்ள காலத்தின் தேவை கருதி அவசியமான தாகவும் அவசரமாகவும் உணரப்பட்ட விடயம் இது வென்றால் மிகையாகாது. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த Dr.Marshal Rosenberg என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட வன்முறையற்ற தொடர்பாடல் மொழியின் ஒரு பகுதியான தொடர்பாடலை கையாள்வதற்கான முறைகளான தொடர்பாடல் மாதிரி பற்றிக்கூற உள்ளேன். நாம் எமது உணர்வுகள் தேவைகளுக்கு மதிப்பளிப்பது போல மற்றவர்களது உணர்வுகள் தேவைகளுக்கும் மதிப்பளித்து இதயபூர்வமாக கருத்துக்களை உள்வாங்கியும் கொடுத்தும் செயற்படுத்தும் போதும் எமது தொடர்பாடலில் ஏற்படுகின்ற தவறுகளைத் திருத்தி மனம் திறந்த தொடர்பாடலை மேற்கொள்ளமுடியும். இதை Dr Marshal வன்முறையற்ற தொடர்பாடல் மாதிரியை ஐந்து விரலையும் பயன்படுத்தி மிகவும் அழகாக பிரித்துக் காட்டியுள்ளார். அவை பற்றிய விளக்கத்தினை நாம் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

Dr.Marshal Rosenberg இரண்டு விதமான மிருகங்களை ஒப்பிட்டு வன்முறையான மொழி பேசுபவர்களை ஓநாய்க்கும் வன்முறையற்ற மொழி பேசுபவர்களை ஒட்டகச்சிவிங்கிக்கும் ஒப்பிட்டுக்காட்டியுள்ளார். ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து வன்முறையற்ற உலத்தில் இருப்பவர்கள் வன்முறை உலகத்தில் இருப்பவர்களை தமது இன் மொழிகளால் வன்முறையற்ற உலகத்திற்கு கூட்டிச் செல்வார்களாயின் இவ்வுலகில் வன்முறை என்பது இல்லாமல் போய்விடும்.

**வன்முறையற்ற தொடர்பாடல் வசதி**

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் ஏதோ ஒரு விதத்தில் ஒரு தேவை ஏற்படுகின்றது. அத்தேவை என்ன என்பதை தெளிவுபடுத்தல் அதை அறிந்து கொள்வது எப்படி? அத்தேவையை பூர்த்தியாக்க என்ன செய்யலாம் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதே வன்முறையற்ற தொடர்பாடல் மாதிரி ஆகும்.

- ☞ அவதானம்
- ☞ உணர்வுகள்
- ☞ தேவைகள்
- ☞ வேண்டுகோள்
- ☞ சரிபார்த்தல்

**அவதானம்**

நாம் பார்க்கின்ற அல்லது கேட்கின்ற விடயங்களை உள்ளவாறே எந்தவித மிகைப்படுத்தலோ குறைவோ இன்றி வெளிப்படுத்துதல் அவதானம் ஆகும். அதை இன்னும் தெளிவாகக்கூறுவோ மாயின் கடந்தகால நிகழ்கால எதிர்கால விடயமாக இருந்தாலும் எதைப்பாக்கிறீர் கள் அல்லது எதைக்கேட்கிறீர்கள் என்பதை அப்படியே சொல்வது அவதானம் எனப்படும். இங்கு என்ன நடந்தது என்பதனை எந்த ஒரு தீர்ப்பிடலும் இல்லாமல் வெளிப்படுத்தல் வேண்டும். உதாணமாக ஒருவர் சொல்கிறார். அப்பா மிக நல்லவர். இங்கு நாம் நல்லவர் எனத் தீர்ப்பிடுகிறோம். இதற்குப்பதிலாக அவர் செய்த நல்ல காரியங்கள் எவை என்று கூறவோமாயின் இங்கு தீர்ப்பிடல் இல்லாமல் உள்ளதை உள்ளவாறே வெளிப்படுத்தலாம். நாம் கடந்தகால அல்லது நிகழ்காலத்தில் அல்லது எதிர்காலத்தில் எதைப்பார்த்தோம் பார்க்கிறோம் பார்க்கப்போகிறோம் என்பதை எவ்வித தீர்ப்பிடலும் இன்றி உள்ளதை உள்ளவாறே சொல்லுதல் வன்முறையற்ற தொடர்பாடல் மாதிரியில் அவதானம் என்று சொல்லப்படுகின்றது.

உதாரணம்

நேற்று நீங்கள் வந்து என்னுடன் கதைத்ததை இப்ப நினைக்கும் போது (கற்பனை செய்யும் போது) இது அவதானம்.

**உணர்வுகள்**

வன்முறையற்ற தொடர்பாடலில் பழையதை நினைத்துப் பார்ப்பதை விட "இங்கு இப்ப" என்ன நடக்கிறது என்பது பற்றிப் பார்ப்பது மிகவும் முக்கியம் என்று Dr.Marshal Rosenberg கூறுகிறார். அவதானிப்பை மேற்கொள்ளும் போது ஒருவருக்குள் என்ன நடக்கின்றது என்பதே உணர்ச்சியாகும். உணர்ச்சி ஒருவருடைய் அக வாழ்க்கையை பார்க்க உணர்ச்சிக்கு அதிக மதிப்புக் கொடுக்க வேண்டும் என்றும் உ ணர்ச்சி ஒவ்வொரு மனிதனது நண்பன் என்றும் Dr.Marshal கூறுகின்றார். ஏதாவது ஒரு விடயத்தை மைப்படுத்தும் போதுதான் உணர்வுகள் தூண்டப்படுகின்றது. இவ் உணர்வு களுக்கு பிறருடைய செயல்களோ தூண்டல்களோ காரணமாக அமையாது ஒவ்வொருவருடைய உணர்வுக்கும் அவரவரே காரணமாகாவா, உணர்வு களை Dr.Marshal இரண்டு வகையாக விளக்க முயல்கிறார்.

தேவைகள் நிறைவேற்றப்படும் போது ஏற்படும் உணர்வுகள் சில

| மகிழ்வுமிக்க | அன்பு மிக்க |
|---|---|
| பரவசம் | சௌகரியம் |
| சந்தோசம் | பரிவு |
| குதூகலம் | கருணை |
| உற்சாகமூட்டக்கூடிய | தொடர்புடைய |
| மகிழ்ச்சியான | நட்புணர்வு |

**தேவைகள்**

உணர்வு ஒன்று தோன்றும் போது எமது இதயத்தில் என்ன நடக்கிறது என்று அறிந்தால் தேவையினை இனம் கண்டுகொள்ள முடியும். தேவையானது ஒவ்வொருவரையும் ஒரு செயலைச் செய்ய அழைக்கின்றது. மனிதனுடைய தேவைகள் தவிர்க்கமுடியாதவை. இத்தேவைகள் நிமிடத்திற்கு நிமிடம் மாறக்கூடியது. எல்லா வகையினரதும் தேவைகளும் ஒரே மாதிரியாக இருந்தாலும் அதைப் பெற்றுக் கொள்வதில் முரண்பாடுகள் ஏற்படுகின்றன. அவதானிக்கும் போது உணர்வுகள் தேவைகள் முக்கிய இடத்தை வகித்தாலும் தேவைகளை இனம் கண்டு கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று Dr.Marshal கூறுகின்றார். எமது தேவை எவ்வளவு முக்கியத்துவம் என்று நினைக்கின்றோமோ அவ்வாறே மற்றவருடைய தேவையும் முக்கியமென நாம் உணர வேண்டும். இவ்வாறு தேவையை இனம் கண்டு கொண்ட பின் அதை நிறைவேற்றுவதற்குரிய வழிமுறைகளுக்குச் செல்ல வேண்டும் தேவைகள் வேறு விரும்பங்கள் வேறு தேவைகள், விருப்பங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு. Dr.Marshal கூறுகின்றார் எமது தேவைகளை நாம் இனம் கண்டு கொள்ள வேண்டும். இனம் கண்டு அதை நிறைவேற்றுவதற்குரிய வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

தேவைகளை நிறைவேற்றப்படாத போது அல்லது பூர்த்தியாக்கப்படாத போது வேதனைகள் ஏற்படுகின்றது. இவ் வேதனைகள் வன்செயலுக்கு இட்டுச்செல்லும் என்று கூறுகின்றார். வன்முறையற்ற தொடர்பாடலில் தேவையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் எங்களது இதயத்தை திறந்தும் காட்டலாம் மற்றவரது இதயத்தையும் திறந்து காட்டலாம்.

தேவைகள் சில குறிப்பிடப்பட்டுள்ளது

**தன்னாட்சி**

ஒருவரது கனவுகள் இலக்குகள் விழுமியங்களை தெரிவு செய்வதற்கான பூர்த்தி செய்ய நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கான சுதந்திரம்

கொண்டாட்டம்

உருவாக்கம் மற்றும் பெறுகை ஒன்றிற்கான கொண்டாட்டம்

இழப்பு ஒன்றிற்கு துக்கம் கொண்டாடல் மேன்மை தங்கியிருத்தல் உடல்ரீதியான தேவை விளையாட்டு ஆன்மீகத் தேவைகள்

**வேண்டுகோள்**

ஒரு விடயத்தை அவதானிக்கும் போது அதிலுள்ள உணர்ச்சி, தேவை என்பனவற்றை இனங்கண்டு அதன் பின் வேண்டுகோளை வெளிப்படுத்தல்

வேண்டும். வேண்டுகோள் மிகவும் தெளிவாக அமைந்திருக்க வேண்டும். இவ் வேண்டுகோள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு வழிமுறையாகும். வேண்டுகோள்விடும்போது வற்புறுத்தக் கூடாது.

உதாரணமாக
அம்மா எனக்கு பசிக்கிறது சாப்பிட ஏதாவது உள்ளதா?
இந்த வேண்டுகோள் அம்மாவிற்கு கேட்டால் அடையாளம் காட்டும் விதமாக பதில் சொல்லல்

ஆம் அல்லது இல்லை இதுதான் சரிபார்த்தல் ஆகும்.

இவ்வாறக மேற்கூறப்பட்ட நான்கு விடயங்களின் ஒழுங்கு முறையில் வன்முறையற்ற தொடர்பாடல் மாதிரி அமைந்திருக்கும். இறுதியில் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டதும் அது தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டதா? என சரிபார்த்தல் அவசியம் ஆகும்

நான் சொல்லியது விளங்கியதா?.
நான் சொன்ன உடன் மற்றவருடைய இதயத்தில் என்ன நடந்தது என்று பார்த்தல்
நாம் ஒரு செயலை எனக்கு உதவி செய்வீரா என்று கூறினால் இதை செய்வதற்கு சம்மதமா என்று பார்க்கவாம்

சரிபார்க்கும் போது நாம் ஊகித்துக்கொள்ளக் கூடாது.

**உதாரணம்**
**அவதானம்**
நேற்று நான் வீடு சென்ற போது அம்மா வீட்டில் இல்லை
**உணர்வுகள்**
எனக்குப்பயமாக இருந்தது
**தேவைகள்**
துணை தேவைப்பட்டது
**வேண்டுகோள்**
அயல்வீட்டு அம்மாவிடம் கேட்டேன் அம்மா எங்கே என்று (கோயில் போய்விட்டார் இது சரிபார்த்தல்)

உதாரணம்
ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

நாங்கள் இரண்டு பேரும் கதைத்துக்கொண்டு இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வேதனையாக உள்ளது. இந்த வகுப்பில் பாடம் குழம்பாமல் இருப்பதற்கு உங்களது ஆதரவு வேண்டும் பாடம் முடியும் வரையும் நாங்கள் குழப்படி செய்யாமல் இருக்க வேண்டும் எங்களால் முடியுமா என்று கூறலாம். இது ஒரு உதாரணம் இவ்வாறு நாம் பல்வேறு சந்தர்ப்பத்தில் உறவை வளர்க்கின்ற தொடர்பாடலை மேற்கொள்ளும் போது வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்று மார்சல் கூறுகிறார்.

# Good habits and manners

**N.Sooriyakumar,**
*B.A, Diploma in Education,*
*Diploma in English for the teacher of English*
*J/Chankanai Sivapragasa M.V.*

Good habits make one a great and noble man "Manners kaketh man" yes if everyone observes good habits and good manners. Good manners are the beauty of a man's body. It is not necessary for a man to be handsome if he has good manners. A man is not liked by others for his handsomeness or personality or being rich. He is worshipped for his good manners.

Most of the students think only of getting ten 'As' at the G.C.E 'O' Levels and 3 'A' s at the G.C.E 'A' Levels when at school. In addition to such excellent results they want to do well in sports and games ; because they want to be in news ; or they want to win a good job producing their sports certificates.

However clever and intelligent a student may be ; he should learn not t cause pain of mind to others. Ideal students think of learning good manners and how to conduct themselves well. A boy learns from his family first, then from neighbours and school. The family is the first school of a boy. Here are some suggestions on good habits.

'Early to bed and early to rise makes a man healthy, wealthy and wise' So a student should rise early in the morning and go to bed early in the night. In the morning he should do some light exercises. The cool and fresh air will refresh his mind and make his body strong.

"Any time is not tea time" He should drink and eat on time. (Eat when hungry)

Healthy food makes strong bodies. He should eat nutrious food, he must avoid heavy and greasy food and a lot of sweets. He must take a lot of fruits and fresh vegetables. He must not go to sleep immediately after meals. This will induce laziness.

" All work and no play make. Jack a dull boy" 'yes' , Every evening he should play games. He should brush the teeth morning and night (after meals) and bathe daily and wear clean clothes.

"Knowledge is power" Every day he must study hard and do his homework regularly. "Time is golden". "Time and tide won't wait for man" So he should use his time for his improvement.

Here are some suggestions on food manners

To bid proper obeisance to the parents and others are food manners. Before you utter a word to others, utter first, Please Kindly, Sir, Madam, Dear and Good-bye etc. These words will make you friends or neighbours, Smiling face is a sign of mannerism. Your teacher should be satisfied with your behaviour and conduct.

A moring walk is also a part of good manners. If you are participating in a game, obey the rules of the game. To love the youngsters and respect the elders is the virtue of good manners. Don't paly trick with others but satisfy them with your humble treatment. God hates all those who are proud and conceited. Pride always goes before a fall. So you should always be humble. He that is humble ever shall have God to be his friend. He that is humble will be blessed. Try to satisfy your parents on each step of your work. Obey your parents always. To show sympathy towards the poor and the disabled are good manners. "Fiving the poor is lending to God" A patient may be half cured by your good manners towards him. When you purchase tickets for your journey and there is a fiid rush, make a queue. Don't disturbed others and be not disturbed by others are good manners.

A good mannered boy respects his teachers, elders and his friends. A good mannered boy never takes advantage of any weakness on the part of a person. For example, if the person is dull at hearing, some boys pass funny remarks thinking that he will not hear what they say. It is indecent to do so.

An ideal student has good manners. Good manners can be lenrnt. A student who has good manners is always respected by every one everywhere. He keeps the reputation of his school and his family and himself. An ideal student obeys and gives respect to his teachers and learn how to behave politely.

Good manners also mearn respecting others' feelings. Rough, rude, selfish and vain people are always disliked and can never be popular. An ideal student must be polite and straight forward in all dealings in his life.

# இலங்கையும் மீன்பிடிக் கைத்தொழிலின் தேவையும்

அ.பிறேமதாஸ்,
B.A
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

எமது இலங்கை நீர்வளம், சிறப்பான நிலவளம் பெற்ற ஒரு அழகான நாடு. இந்து சமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு தென்கிழக்காக அமையப்பெற்றுள்ளது. இலங்கை ஒரு தீவாக அமையப் பெற்ற காரணத்தினால் மீன்பிடித்தல் என்பது ஒரு சிறப்பானதொரு இடத்தினை வகிக்கின்றது. இலங்கையின் ஆரம்பகால வரலாறுகளினை ஆராய்கின்ற போது விவசாயம் அதன் பொருளாதாரத்தின் அச்சாணியாக இருந்துள்ளபோதும் மீன்பிடியும் ஆரம்ப காலங்களிலிருந்தே காணப்படுகின்றது என்று கூறிக் கொள்ளலாம்.

ஆரம்ப காலங்களில் இருந்து வளர்ச்சியடைந்து வந்துள்ள இலங்கையில் மீன்பிடிக் கைத் தொழில் தற்காலத்தில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் மீன்பிடிக்கைத் தொழிலினை நாம் ஒரு உன்னத மான நிலைக்கு இட்டுச் செல்ல முடியும். அதேவேளை அதை உன்னத நிலைக்கு கொண்டுவர வேண்டிய தேவைப்பாடும் காணப் படுகின்றது. ஏனெனில் எமது நாட்டினைப் பொறுத்தவரையில் இக் கைத்தொழிலின் மூலம் சமூக பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்தி நாட்டினை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டுவர முடியும் என்பதனாலாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையிலே மீன்பிடிக் கைத்தொழினை நாம் விஸ்தரிப்பதற்கு பல சாதகமான நிலைகள் காணப்படுகின்றன. அவற்றை நாம் நோக்குவோமானால் இலங்கை ஒரு தீவாகக் காணப் படுவதனால் நீண்ட ஒரு கடற்கரையைக் கொண்டுள்ளது. பல்லுருவத்தன்மை கொண்ட கடற்கரைகள் காணப்படுகின்றது. மேலும் இலங்கையைச் சுற்றி கண்டமேடைகள் காணப்படுகின்றது. சராசரியாக 22 km அகலத்தில் 26000 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அமைந்து காணப்படுகின்றது. கண்ட மேடைகள் காண்படுவதனால் தாவரப் பிளாந்தன்கள் உற்பத்தியாவதற்கு உதவி செய்கின்றது. இதனால் அதிக உணவுகள் கிடைப்பதனால் பெருக்கமடைய வாய்ப்பளிக்கின்றது. மேலும் இலங்கையில் ஆறுகள் அதிகளவில் காணப்படுவதனால் ஆறுகள் மூலமாக போசனை கடலுக்கு எடுத்துவரப்படும். இதன் காரணமாகவும் பிளாந்தன்கள்

பெருக்கம் அதிகரித்து அதிக உணவு கிடைக்கப்பெறுவதனால் மீன் வளங்கள் அதிகமாகும்.

மேலும் பருவக்காற்று நீரோட்டங்களினால் வங்களா விரிகுடாவில் உள்ள மீன் வளங்கள் இலங்கையின் மீன் தொகையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இவ்வாறான பல காரணிகள் இலங்கையில் மீன்பிடிக் கைத்தொழிலை விருத்தி செய்ய வாய்ப்பாக அமைந்து காணப் படுகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் 1978 - 1980 காலப்பகுதியில் நோர்வே நாட்டு ஆராய்ச்சியாளர் கலாநிதி 'பிரிஜொட் நன்சன்' என்பவரால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் எமது கடற்கரையோரக் கடற்பிராந்தியத்திலிருந்து அறுவடை செய்யக்கூடிய உச்ச மட்ட நீருயிரின் வளங்களின் அளவு ஆண்டு ஒன்றிற்கு 250000 தொன்கள் எனக்கூறப்பட்டது. இவ்வகையில் நாம் நோக்குகின்ற போது கரைக்கப்பாலான மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடி என்பனவற்றின் மூலமும் உற்பத்தியை மேற்கொள்ளும் போது இலங்கையின் மீன் உற்பத்தியை அதிகரிக்க முடியும்.

இவ்வாறாக நாம் எமது மீன்பிடிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவைப்பாடு காணப் படுகின்றது. ஏனெனில் இதன் மூலம் நாம் பல நன்மைகளை சமூக பொருளாதார ரீதியாக பெற்றுக் கொள்ள முடியும் என்பதனால் ஆகும்.

அவற்றை நோக்குவோமெனின் மீன்பிடிக்கைத்தொழிலினால் எமக்குக் கிடைக்கும் மீன்வளங்கள் மூலம் உணவுப் பற்றாக்குறையை நீக்கக்கூடியதாக இருக்கின்றது. அதாவது ஒருவர் சராசரியாக நாளொன்றிற்கு 60g விலங்குப் புரதத்தினை உட்கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்தேவையினை மீன் வளங்களில் இருந்து பூர்த்தி செய்து கொள்ள முடியும். ஏனெனில் இலங்கையைப் பொறுத்தவரையில் மீன்வளங்களை குறைவான விலையிலும் எந்நேரங் களிலும் பெறமுடிவதுடன் ஏனைய விலங்குணவுகளிலும் பார்க்க இவை உணவுக்காக பயன்படுத்தும் அளவு கூடுதலாக இருப்பதனாலும் ஆகும். மேலும் மீன்பிடிக் கைத்தொழிலின் மூலம் பல்வேறு வகையான வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் மீன்பிடிக்கைத் தொழிலில் முழுநேர தொழிலாளர் களாக அண்ணளவாக 151800 க்கும் மேற்பட்டோர் ஈடுபடுகின்றனர். மேலும் பகுதி நேர தொழிலாளர்களாகவும் சிலர் தொழிற்படுகின்றனர். (உதாரணமாக படகு திருத்துதல், விரிவாக்க அலுவலர். ஐஸ் தொழிற்சாலை, மீன் வியாபாரிகள், வலை உற்பத்தி யாளர்கள், உபகரணங்கள் திருத்து வோர்) ஆகவே இலங்கை போன்ற நாடுகளுக்கு இக்கைத்தொழில் முக்கியமானதாகக் காணப் படுகின்றது. ஏனெனில் இக் கைத்தொழிலை விரிவாக்குவதன் மூலம் இன்னும் ஏராளமானவர்

களுக்கு வேலை வாய்ப்பினை வழங்கிக்கொள்ள முடியும்.

மேலும் இலங்கையானது தனது மீன் உணவுத்தேவையினை பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றது. (உதாரணமாக மாசிக்கருவாடு இது மாலைதீவுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது) இதனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் அன்னியச் செலாவாணி, வெளியேற்றம் ஏற்படுகின்றது. இது இலங்கையின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் காரணி யாகவும் காணப்படுகின்றது. அதிலும் இலங்கை போன்ற கடல் வளமும் நிறைந்துள்ள நாடுகளில் இவை தேவையற்ற செலவினங்களாகவே காணப்படுகின்றன. எமது வளங் களினை சரியாக பயன்படுத்துகின்ற போது கடல் வளங்களினை சிறந்த முறையில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதன் மூலம் அன்னியச் செலவாணி வருமானங்களினை உழைத்துக்கொள்ளலாம். இதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்காற்ற முடியும். ஆகவே இலங்கையில் மீன்பிடிக் கைத் தொழில் மிக முக்கியமான ஒரு தேவைப்பாடு உள்ள துறையாகும்.

மேலும் மீன்பிடிக்கைத்தொழில் மூலம் கிடைக்கும் சில பொருட்கள் கைத்தொழிற் துறையின் தேவை களுக்கு பயன்பாடுடைய மூலப் பொருட்களாகக் காணப்படுகின்றன. அதாவது சீமெந்து உற்பத்திக்கு மூலப் பொருட்களாகப் பயன் படுத்தப்படுகின்றது. மருத்துவத் துறையின் பல்வேறு தேவைகளுக்கு பயன் படுத் தப் படுகின்றது. (உதாரணமாக மீன் எண்ணெய் குளிசை தயாரிப்பற்கும், இன்னும் லமினோரியா அல்காவினைப் பயன்படுத்தி பன்டெஜ் துணி தயாரிப்பிற்கும் பயன்படுகிறது. மேலும் முருகைக் கற்பாறைகளில் இருந்து புற்றுநோய்க்கான மருந்து க்கள் தயாரிக்கப்படுகின்றது. இவற்றை விட பல அல்காக்கள் உணவுத் தேவைகளுக்காக பயன் படுத்தப் படுகின்றது. (உதாரணமாக கிசிலேரியா என்னும் சிவப்பல் காவில் இருந்து ஜெலி தயாரிக்கப் படுகின்றது) மேலும் பற்பசை உற்பத்தி, சவற்கார உற்பத்திகள் போன்றவற்றிலும் இக்கடல் வளங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

இதனை விட கடலில் இருந்து பெறப்படும் சில பொருட்கள் மூலம் சிறு வகையான கைத்தொழிலிலும் ஈடுபடக்கூடியதாகவுள்ளது. அதாவது சிறு சிப்பிகளைப் பயன்படுத்தி செய்யப்படும் அலங்காரப் பொருட்கள், மீனின் செதில்களைப் பயன்படுத்தி ஆக்கப்படும் அலங்காரப் பொருட்கள் என்பவற்றைக் கூறலாம். இவ்வாறான அலங்காரப் பொருட்களுக்கு அதிக வரவேற்பும் காணப்படுவதனால் இச்சிறு கைத்தொழிலில் ஈடுபடுவோர் வருமானங்களைப் பெறக்கூடியதாக வுள்ளது.

இவ்வாறாக பல பயன்பாடுடைய மீன்பிடிக் கைத்தொழில் துறையானது

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுக்கு முக்கியமானதாகும். மேலும் இலங்கையானது சிறிய நிலப் பரப்பினை உடைய நாடு, நாடு களுக்கு நாள் சனத் தொகையானது அதிகரித்து வருகின்றது. இக்காரணங் களினால் வீடமைப்பு, நகராக்கல், போக்கு வரத்து இவைகளினால் பயன் பாடுடைய நில வளங்களின் அளவானது குறை வடைந்து செல் கின்றது. இதனால் நிலத்தில் இருந்து கிடைக்கும் உணவு உற்பத்தி குறைவடைந்து கொண்டு செல்கின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கையைச் சுற்றிக் காணப்படும் கடலில் இருந்து எமது உணவுத் தேவையினை நிறைவு செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஏனெனில் இலங்கை மீன்பிடிப்பதற்கு பயன் படுத்தப்படக்கூடிய பிரதேசம் 517000 சதுர கிலோ மீற்றர் ஆகும். அது இலங்கையின் பரப்பளவினைப் போன்று 7.8 மடங்காகும். இதனை விட உள்நாட்டு நீர்த்தேக்கங்களில் இருந்து உணவு உற்பத்தியினை மேற்கொள்ள முடியும்.

அண்மைக்காலங்களில் இலங்கை யின் மொத்தத் தேசிய உற்பத்தியின் மீன்பிடிக்கைத்தொழிற்துறையின் பங்களிப்பு அண்ணளவாக 2% - 3% ஆகக் காணப்படுகின்றது. இலங்கையில் இன்னும் இந்த உற்பத்தியின் அளவை அதிகரித்துக் கொள்வதற்கு மீன்பிடிக் கைத் தொழில் தொடர்பான அதிகளவான வசதி வாய்ப்புக்களை அரசு மேற்கொள்ள வேண்டும்.

ஆகவே இலங்கையைப் பொறுத்த வரையில் இலங்கையின் பொருளா தார சமூக வளர்ச்சியின் ஊடாக இலங்கையில் ஒரு அபிவிருத்தி நிலையை ஏற்படுத்து வதற்கு மீன்பிடிக் கைத்தொழிற் துறையினை அபிவிருத்தி செய்ய வேண்டியது முக்கியமானது எனக் கூறிக் கொள்ளலாம்.

*மாற்றங்கள் முன்னேற்றத்தினைக் கொண்டுவரும் என்பது உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் முன்னேற்றத்திற்கு மாற்றங்கள் அவசியமாகும். கல்விக்கு மாற்றம் அவசியம் ஏனெனில் புதிய தேவைகளும் அவற்றை திருப்திப்படுத்தும் இயலுமைகளும் இருக்கின்றன.*

# கல்வியும் நேரமுகாமைத்துவமும்

திரு T.கிரிதரன்
B.A. Diploma in Education
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

நேரம் பொன்னானது. அதற்கு பெறுமதி கூறுவது மிகவும் கடினம். நேரத்தைச் சேமிக்கவோ, அதை நிறுத்தி வைக்கவோ முடியாது. "காலத்தை நாம் காத்திருந்தாலும் காலம் எங்களுக்காகக் காத்திருக் காது" அதனை இழந்தால் இழந்த தாகவே இருக்கும் நேரம் எப்போதும் ஓடிக்கொண்டே இருக்கும். அதனைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கல்வித்துறையில் பாடசாலை களில் நேரத்தை மிகக்கவனமாக பாவிக்க வேண்டும். எமது அனுபவத்தில் பாடசாலைகளில் ஒரு பாடவேளைக்கு ஓர் ஆசிரியர் சமூகமளிக்காவிடின் அவரது வகுப்பிலுள்ள ஏறக்குறைய நாற்பது மாணவர்களின் நேரம் வீணடிக்கப்படுகிறது. இவ்வாறு நேரம் வீணடிக்கப்படுவதால் மாணவர் கல்வி பாடசாலை முன்னேற்றம், ஆசிரியத் தொழில், நாட்டின் தேசிய அபிவிருத்தி பாதிப்படைகின்றது.

திட்டமிடலில் முதலில் இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டும். பின்பு இலக்குகள் அடிப்படையில் திட்டங்கள் தயாரித்தல் வேண்டும். அதனை நெறிப்படுத்த வேண்டும். இறுதியில் மதிப்பீடு செய்ய வேண்டும். நேரமுகாமை விடயத்தில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கலவிசாரா ஊழியர்கள் உதாரண புருஷர்களாக திகழ வேண்டும். அதுதான் தேசிய அபிவிருத்திக்கு வழியமைக்கும்.

நாம் செய்கின்ற வேலைகளில் நாளாந்த திட்டம், வாராந்த திட்டம், மாதாந்த திட்டம், வருடாந்த திட்டம் போன்றனவை வகுத்து அதற்கேற்ப நாம் வாழவேண்டும். ஒவ்வொரு வாரத்திலும் எவ்வளவு நேரம் ஒவ்வொரு செயற்பாட்டிலும் செலவளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி ஒரு மதிப்பீடு இருத்தல் வேண்டும். ஆனால் அதேவேளை நேரத்தைப் பற்றி தேவையில்லாமல் அலட்டிக்கொள்ளக்கூடாது.

பின்வரும் வினாக்களை வினாவுவதன் மூலம் நேரத்தை ஒதுக்க முடியும்.

1) எந்த எந்த பணிகளை செய்யலாம்?.
2) எதிர்பாராத பிரச்சினைகளுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதா?.
3) வேலையை திரும்பச் செய்யும் பொருட்டு ஓய்வு எடுக்கப்படு கின்றதா?.
4) தினசரி வேலைத்திட்டம் பின்பற்றப்படுகின்றதா?.

5) சொந்த வாழ்க்கை, தொழில் வாழ்க்கைக்கு இடையே இடைவெளி வைக்கப்பட்டுள்ளதா?.

ஒழுங்குபடுத்தப்படாத கட்டம் திட்டமிடலில் தவறுகள், தீர்மான மின்மை, தாமதம், நெருக்கடிகள், பிரச்சினைகள், ஒழுக்கமின்மை, பொறுப்பின்மை, தொடர்பாடல் இன்மை போன்றன நேரமுகாமைத்து வத்தை திருடுகின்றன. இதை முற்றிலும் தவிர்த்து வெற்றி பெறுவது மிகவும் விரும்பத்தக்கது.

நவீன உலகில் நேர முகாமைத்துவத்தில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கும் முக்கியமானது. கணித்தல், அறிக்கைப்படுத்தல் ஒப்பீட்டு நன்மைகள், அலுவலக ஆதரவு உதவிகள் போன்ற கல்வி உலகிற்கும் கணினிகள் பங்காற்றுகின்றன.

தகவல் தொழிநுட்பத்தின் பயன்பாட்டினால் நேரவிரயம் தவிர்க்கப்படுகின்றது. வளத்தை உச்சமாக பயன்படுத்த முடிகின்றது. இயற்கையான ஆற்றலும் சக்தியும் தலைமைத்துவத்தின் பிரதான மூலங்கள் எனக்கூறப்படுவது வழக்கம். அவை நிச்சயம் உதவியானவை. எனினும் அவை இல்லாத விடத்து விவேகமான முறையில் நேரத்தைப் பயன்படுத்துவதால் அவற்றை ஈடுசெய்யலாம்.

இன்றைய கல்வி உலகில் நேரமுகாமைத்துவம் மிகவும் தேவையான ஒன்றாகும். நேரத்தை சிறப்பாக, பயனுள்ளதாக, திட்டமிட்டு பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். நேரமுகாமைத்துவத்தை சிறந்த முறையில் யப்பான், தென்கொரிய, சுவீடன், நோர்வே நாடுகள் பின்பற்றி வெற்றி பெற்றுள்ளன.

இன்று அவற்றை தொடர்ந்து பின்பற்றி ஏனையவர்களுக்கு உதாரண புருஷர்களாக உள்ளமை போற்றத்தக்கது. சிறியவர் முதல் பெரியோர் வரை நேரத்தை திட்டமிட்டு செயற்படுத்த வேண்டும். இதை தொடர்ச்சியாக மேற் கொண்டால் வெற்றி பெறமுடியும். மேற்குலக நாடுகள் அதைத்தான் செய்து வெற்றி பெற்றுள்ளன.

ஆகவே முடிவாக நோக்கு-கின்ற போது எமது பாடசாலையில், வீடுகளில் ஆலயங்களில், தனியார் நிறுவனங்களில் எங்கேயானாலும் நேரத்தை சரியான முறையில் பயன்படுத்துவது போற்றத்தக்க விடயம். "உனது நேரத்தைச் சிறந்த முறையில் உபயோகிக்கக்கூடிய மனிதன் நீயே" இவ்வாறு நேர முகாமைத்துவத்தை கடைப்பிடித்து வாழ்வில் வெற்றி பெறுவோம்.

உசாத்துணை நூல்கள் :

1) நேரமுகாமை - உலகவங்கி அறிக்கை 2004
2) பொருளியலாளன் - 2000
3) கல்வியில் நேரமுகாமைத்துவம் - Richard L.Du pt, Management 1991

# குருளைச் சாரணர் குழு



குருளைச் சாரணர் குழு வெற்றிக்
கேடயத்துடன் காணப்படுகின்றனர்



க.பொ.த உயர்தர மாணவர்கள்
சிரமதானப் பணியில் ஈடுபடுகின்றார்கள்



இரண்டுமாடி கட்டிட
அடிக்கல் நாட்டும் வைபவத்தின் போது



# பாலர் கல்வியும் ஆசிரியர் பொருத்தப்பாடும்

கலாநிதி அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I
கல்வியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

எமது பிரதேசத்தில் இன்று பாலர் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது என்பதன் வெளிப்பாடுதான் பாலர் பள்ளிக் கூடங்களின் பெருக்கம். ஆயினும் பள்ளிக்கூடங்கள், பாலர் கல்வி ஆசிரியர்கள் இவற்றின் தரம் பொறுத்து அவ்வப்போது ஐயப்பாடுகள் எழுப்பப்படுவதும் சகஜமாகவே உள்ளன. இங்கு நாம் பள்ளிக்கூடங்களை விடுத்து ஆசிரியர் தரம் பொறுத்த விடயங்களை மட்டும் கவனத்தில் கொள்வோம். எந்தவொரு கல்விச்செயற்பாட்டின் உயர்வும், சிறப்பும் ஆசிரியர் கைகளிலேயே தங்கியுள்ளன என்பது கல்வியாளர்களின் கருத்தாகும். அதிலும் இக்கருத்து விசேடமாகப் பாலர் கல்வியைப் பொறுத்து அழுத்தம் பெறவேண்டியதாகும். ஏனெனில் பாலர் கல்வி என்பது ஒரு குழந்தை பாடசாலைக்குச் சென்று முறை சார்ந்த கல்வியைப் பெறத்தெடங்குவதற்கு முன்னரான 3/4 - 5/6 வயதுப் பருவத்தினருக்கான கல்வியாகும். இப்பருவத்தில் சரியான பொருத்தமான வழிகாட்டல் இடம்பெறுமேயாகில் குழந்தை ஊக்கமும் உற்சாகமும் பெறுவதோடமையாது எதிர்காலக்கல்வி மீதான விருப்பு, ஆளுமை, தன்னம்பிக்கை எனப்பலவாறான விருத்திகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று பாலர் பருவத்துக்கான கல்வியின் அவசியம் எம் பிரதேகத்தில் உணரப்படடுள்ள போதிலும் குழந்தைகளுக்கான கல்வி எத்தகையதாக அமைய வேண்டும்? அக்கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் எத்தகைய பண்புகள், தகைமைகள் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பவற்றில் தெளிவின்மை காணப்படுகின்றது என்பதனை உணர முடிகின்றது.

பாலர்கல்வி வளர்ச்சி பெறுவதற்கு உலகளாவிய ரீதியில் கீழ்வரும் காரணிகள் பின்புலங்களாயின.

1. பாலர் பருவம் அப்பருவத்தினருக்கான கல்வி பற்றிப் பல்வேறு சிந்தனையாளர்கள் வற்புறுத்தியமை.
2. ஆண்பாலாருடன் பெண் பாலாரும் தொழில் வாழ்க்கையில் ஈடுபடத்தொடங்கியமை.
3. பெண்கள் தம் தொழில் வாழ்க்கையில் தொடர்ந்தும் நீடித்து நிலைப்பதில் அக்கறை காட்டியமை

4. கூட்டுக்கடும்பங்களுக்குப் பதிலாகத் தனிக் குடும்பங்கள் இயங்கத்-தொடங்கியமை.
5. பாலர் கல்வியில் வரவேற்கத்தக்க செயற்பாடுகள் இடம்பெறத்-தொடங்கியமை. அதனால் பெற்றோர் அதன்பால் ஈர்க்கப்பட்டமை.
6. ஆரம்பக்கல்விக்கான பொருத்தமான அத்திவாரத்தை பாலர் பள்ளிகள் தருமென்ற எதிர்பார்ப்புக்கள் ஏற்படத்தொடங்கியமை.

ஆயின் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில பாலர் பள்ளிக்-கூடங்கள் பல்கிப்பெருகியதென்னவோ உண்மையேயாயினும் அங்கு அளிக்கப்படும் கல்வியின் பொருத்தப்-பாடு பொறுத்து சில சந்தேகங்கள் எழவே செய்தன. பாலர்கல்வி எத்தகையதாக இடம்பெற வேண்டு-மென்பதனைக் காலத்திற்குக்காலம் முன்வைக்கப்பட்ட சில கல்விச்-சிந்தனையாளர் கருத்துக்களினூடாக நோக்குதல் பொருத்தமானதாகும். ரூசோ எதிர்காலத்துக்காகக் குழந்தையை வருத்தும் கல்வி முறையை ஒதுக்கி இயற்கை-யோடியைந்த கல்வி வழங்கலை வலியுறுத்தியிருந்தார். றவேர்ஸ் (Ravers) முன்பள்ளிப்பருவத்தில் பெறப்படும் அனுபவங்கள்தான் குழந்தைக்கு வாழ்க்கை பூராவும் வழிகாட்டப்போவதாகக் குறிப்பிட்டு அப்பருவத்தில் பயனுள்ள அனுபவங்கள் பெறப்பட வேண்டுமெனவும் வலியுறுத்-தினார். புரோபல் (Froebel) குழந்தைப்பள்ளிகளை "குழவிப்-பூங்காக்கள்" எனக்குறிப்பிட்டு அங்கு இயல்பான மகிழ்ச்சிமிக்க செயற்-பாடுகளின் அவசியத்தை வற்புறுத்-தினார். மொன்டசூரி அம்மையாரோ பயிற்சி பெற்ற ஆசிரியர் வழிகாட்டலின் கீழ் குழந்தை விளையாட்டில் ஈடுபடும் இடமாகப் பாலர்பள்ளிகளைக் கண்டார். மேற்கூறப்பட்ட சிந்தனைகளைத் தொகுத்து நோக்குமிடத்து பின்வரும் முடிவிற்கு நாம் வரமுடியும். பாலர் பள்ளிகள் என்பவை கல்வியைத் திணிக்கும் இடங்கள் அல்ல. மாறாக அவை குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்விற்கான வழிகாட்டல்களை இயற்கை உணர்தல், இயற்கையோடு ஒட்டிவாழ்தல், குதூகலித்தல், பலரோடும் விளையாட்டில் ஈடுபடுதல், பல அனுபவங்களை தாமாகப் பெற்றுக்கொள்ளுதல், அனுபவங்-களினோடு அறிவு, திறன், மனப்பாங்கு, விருத்திகளை பெற்றுக்கொள்ளல் வழங்கும் இடங்களாகும்.

அதனடிப்படையில் பாலர் பள்ளியில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கனதி-யினையும் பாரிய பொறுப்பினையும் நாம் ஊகித்துக்கொள்ள முடியும். பாலர் கல்வி ஆசிரியர்கள் ஏனைய கல்விப்பருவ ஆசிரியர்களிலும் பார்க்க மேலான பணியினைச் செய்கின்றார்கள், செய்ய வேண்டும் என்பதாகும். ஒரு குழந்தை முதன் முலாக தன்னுடைய குடும்ப சூழலில் இருந்து வெளியுலகச் சூழலுக்குப் பாலர்பள்ளிகளூடாக அறிமுகமாகின்றது. அப்புதிய சூழல் குழந்தையை வெளியுலகம் பற்றிய விருப்புக்கொண்டதாக, சந்தோசம்

மிக்கதாக, நேர்மனப்பாங்கு கொண்டதாக ஆக்கவேண்டியது அவசியம். அந்த அவசியத்தை உணர்ந்து பாலர்பள்ளி ஆசிரியர்கள் செயற்படவேண்டியதே அவர்முன் இருக்கும் பெரும்பணியாகும். அதுமட்டுமல்ல அங்கு தாயைப் பிரிந்து வரும் பிள்ளைக்குத் தாயின் மாற்றீடாகத் திகழவேண்டிய பொறுப்பினையும் ஆசிரியர் சுமக்கின்றார். அதனால் அப்பணியின் கனதியை அறிந்து ஆசிரியர் செயற்படுமிடத்துதான் பாலர் கல்வியின் நோக்கங்களில் நிறைவு காணப்பட முடியும்.

இத்தகைய பாரிய பொறுப்பினைச் சுமக்கும் பாலர்கல்வி ஆசிரியர்களிடம் எத்தகைய தகைமைகள், பண்புகள் இருக்க வேண்டும் என அல்லது இன்னோர் வகையில் கூறுவதாகில் பாலர்கல்வி ஆசிரியருக்கான பொருத்தப்பாடுகள் எவை என இங்கு கவனத்திற் கொள்ளவேண்டும்.

1. பிள்ளை விருத்தியில் கவனம்.
2. பிள்ளை உளவியலை அறிந்திருத்தல்.
3. பல்வேறுபட்ட பிள்ளைகளைக் கையாளும் திறன்
4. பிள்ளைகளுடனான பொருத்தமான தொடர்பாடல்
5. முன்மாதிரியான நடத்தை
6. பொருத்தமான அனுபவங்களைத் திட்டமிடுதல், வழங்குதல்
7. பொறுமை, அன்பு, சகிப்புத்தன்மை, சுயதியாக மனப்பான்மை
8. கணித, விஞ்ஞான செயற்பாடுகளை இலகுவாகக் கையாளுதல்.
9. மொழிவளம்
10. கற்பித்தல் உபகரணங்களை ஆக்குதலும் கையாளுதலும்
11. புதிய கல்வித்தொழினுட்பங்களைக் கையாளும் திறன்.
12. பெற்றோர், சமூகத்துடனான பொருத்தமான தொடர்பாடல்

ஆயினும் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பாலர்கல்வி ஆசிரியர்களிடம் பின்வரும் குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

1. கல்வித்தரம் குறைந்திருத்தல்
2. கற்பித்தலில் போதிய ஆர்வம் இன்றி ஒரு தொழில் என்ற அடிப்படையில் மட்டும் இதனைத் தெரிவு செய்தல்.
3. கூடியளவிற்கு தொடர்கல்வி வாய்ப்பு வசதியற்றோரே கடமையாற்ற வருதல்
4. பிள்ளை உளவியலில் போதிய அக்கறை காட்டப்படாதிருத்தல்.
5. பெற்றோர், சமூகத்துடனான தொடர்பாடல் திறன் போதியளவில இல்லாதிருத்தல்.
6. நவீன தொழில்நுட்பக் கையாளலில் போதிய திறனின்மை.
7. போதிய பயிற்சிகள் பெறப்படாமை.
8. பெறப்பட்ட பயிற்சிகள் சிலவும் தரத்தில் போதியதாக அமையாமை.
9. ஆசிரியர் முகாமைத்துவப் பயிற்சி போதியளவில் பெற்றிராமை
10. பாலர்கல்வி பற்றிய பூரண அறிவு இல்லாமை.

மேற்கூறப்பட்டவற்றினூடாகப் பாலர்கல்வி ஆசிரியர்களுக்கான பொருத்தப்பாடுகளும், எமது ஆசிரியர்

மத்தியிலான பலவீனங்கள் சிலவும் முறையே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இக்குறைபார்களுக்கான காரணங்கள் பல்வேறாக குறிப்பிடப்பட்டாலும் இக்குறைபாடுகள் களையப்படு-வதற்கான வழிவகைகளை ஆராயப்புகு-மிடத்து "ஆசிரியர் பயிற்சி" என்பது முதன்மை பெறுகின்றது. எந்தவொரு தொழிலின் செம்மைக்கும். செழிப்புக்கும் பயிற்சி என்பது மிகமிக அவசியமானது. இது ஆசிரியத் தொழிலைப் பொறுத்து மேலும் முனைப்புப் பெறுகின்றது. முன்னைய காலங்களில் ஆசிரியர் பிறக்கின்றார் எனறே நம்பப்பட்டது. எனினும் இன்றைய சூழலில் ஆசிரியர் பிறப்பதில்லை, பயிற்சிகளின் மூலம் உருவாக்கப்படுகின்றார் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால் பாலர்கல்வி ஆசிரியர்கள் தரம் மிக்க முன்பயிற்சிகளைப் பெறுதலும், சேவைக்கால இடையிட்ட பயிற்சிகள், குறும் பயிற்சிகளைப் பெறுதலும், அவற்றுக்கான பொருத்தமான மேற்பார்வை இடம்பெறுதலும் அவசியமாகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் பயிற்சி எதுவுமின்றி ஒரு ஆசிரியர் வகுப்பறைக்குள் நுழைய முடியாத சூழல் காணப்பட இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் காலந்தாழ்த்திய பயிற்சி, தரமற்ற பயிற்சி என்பன கசஜமாகவே இடம் பெறுகின்றன. எனவே பாலர்கல்வி ஆசிரியர்கள் பல்வேறுபட்ட தரமான பயிற்சிகளைப் பெறுவதனூடாகத் தம்மைப் பொருத்தப் பாடுடையவர்களாக ஆக்கிக்கொள்ள முடியும்.

"கல்வியும் கற்பித்தல் நுட்பங்களும் தமக்கென உரிய பயிற்சியினையும் மேதமையினையும் வேண்டி நிற்கின்றன. வெறும் சடப்பொருள்களோயன்றி மனித உள்ளங்களுடனே தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதே இதற்குக் காரணமாகும்." ஆசிரிய பயிற்சியின் அவசியம் பற்றிய இக்கருத்தானது பாலர்கல்வி ஆசிரியர் பொறுத்து மேலும் வலுமிக்கதாக அமைகின்றது.

எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பல நெருக்கிடைகளுக்கு மத்தியில் கல்வியின்பால் கவனம் செலுத்தி வருகின்றோம். ஏற்கனவே சுட்டிக்காட்டப்-பட்டதைப் போன்று பாலர்பருவமே குழந்தைகளின் எதிர்காலக் கல்வி, வாழ்க்கைச் சிறப்புக்கான வழிகாட்டுதல்-கள் இடம்பெறவேண்டிய பொருத்தமான பவருமாகும். அப்பருவத்திலான வழிகாட்டுதல்களைச் செய்யும் ஆசிரியர்கள் தமக்குரிய பயிற்சிகளைச் செவ்வனே பெற்றுப் பொருத்தப்-பாடுடையவர்களாகி ஒழுக்கமிக்க எதிர்கால பிரஜைகளை உருவாக்க வேண்டியது இன்றைய அவசர தேவையாக உள்ளது. அதன் பெறுமானம் உணர்ந்து மதித்து அதற்கான பயிற்சிகளை ஆசிரியர்-களுக்கு வழங்க வேண்டியதும், விரிவாக்க வேண்டியதும் யாழ்ப்பாணக் கல்விச்சமூகத்தின் அவசர கடமையாக உள்ளது.

# சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் கரப்பந்தாட்டம்

லோ.ஸ்ரனிஸ்லாஸ்
Primary Trained,
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

இலங்கைப் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் கரப்பந்தாட்டப் போட்டிகளில் எமது பாடசாலையும் தனியான இடம் பிடித்துள்ளது, இவ்வித்தியாலயப் பெண்கள் அணிகள் யாழ்-மாவட்டத்தில் தொடர்ச்சியாக முன்னிலை வகிப்பதுடன் தேசிய மட்டப்போட்டிகளிலும் தொடர்ந்து கால் பதித்து வருகின்றன.

## ALTRA STAR CHAMPION

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் 2008 இல் நடாத்திய எல்லை கடந்த நட்சத்திரங்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் எமது பாடசாலைப் பெண்கள் அணியும் களமிறங்கியது. 21 வயதுப் பிரிவுப்பெண்கள் அணிகள் கலந்து கொண்ட இப்போட்டியில் 17 வயதின் கீழ்ப்பிரிவைச் சேர்ந்த எமது வீராங்கனைகளே கலந்து கொண்டனர்.

பத்து வீராங்கனைகளின் பெயர்கள் மட்டுமே இடம்பெறக்கூடியதாக போட்டியாளர் பட்டியல் அமைந்திருந்தது. இதில் முதன்மையான ஆறு வீராங்கனைகளாக 17 வயதுப்பிரிவிலிருந்து தர்மினி, ஆரணி, நாகதனிகா ஆகியோருடன் 15 வயதுப்பிரிவிலிருந்து கார்த்திகா, மிதுலா, நஜிதா ஆகியோரும் பதில் ஆட்டக்காரர்களாக சிந்துஜா, அஜந்தா, ரிஷாந்தினி ஆகியோரும் லிபறோவாக மிரேயினியும் கலந்து கொண்டனர்.

விறுவிறுப்பான அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியுடன் எமது அணி களமிறங்கியது. ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இப்போட்டியில் முதல் செற்றினைக் கடும் போராட்டத்தின் பின் வென்ற எமது அணி இரண்டாம், மூன்றாம் செற்களை இலகுவாக வென்று இறுதிப்போட்டியில் நுழைந்தது. இறுதிப்போட்டியில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியை மூன்று நேர் செற்களில் வென்று தொடர்ச்சியாக இரண்டாவது முறையும் சம்பியனாகியது.

இப்போட்டியில் பத்து வீராங்கனைகளுக்கும் பதக்கங்கள்

வழங்கிக் கௌரவிக்கப்பட்டதுடன் தொடரின் சிறந்த நட்சத்திர வீராங்கனையாக அணித்தலைவி செல்வி தர்மினி வரதராஜா தெரிவு செய்யப்பட்டு வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டது.

### 2008இல் சாதனை படைத்த கரப்பந்தாட்டம்

இவ்வாண்டு பாடசாலை மட்டப்போட்டிகள் ஆரம்பித்ததில் இருந்து எமது பாடசாலைக் கரப்பந்தாட்ட அணிகள் புது வேகத்துடன் வெற்றிநடை போட ஆரம்பித்தன. கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் போன்ற நிலைகளில் நடைபெற்ற போட்டிகளில் எதிரணிகள் வியக்கும் வண்ணம் சாதித்துக் காட்டத்தொடங்கிய எமது அணிகள் தொடர் வெற்றிகளைக் குவித்தன.

### கோட்ட மட்டப் போட்டிகள்

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகள் அனைவரது பார்வையையும் எமது பாடசாலையின் மீது மீண்டும் திருப்பியது. இப்போட்டிகளில் ஆறு பிரிவுகளிலுமே முதலிடம் பெற்றுச் சாதனை படைத்து அனைவரது பாராட்டினையும் எமது அணிகள் பெற்றுக்கொண்டன.

### வலய மட்டப் போட்டிகள்

கோட்ட மட்டத்தில் வெற்றிநடை போட்ட எமது பாடசாலை அணிகள் கடும் சவால் மிக்க வலிகாமக் கல்விவலயப் போட்டிகளில் மிக உத்வேகத்துடன் போட்டியிட்டன. இதில் தமது திறமையை அதீதமாக வெளிக்காட்டிய 15 வயதுப் பெண்கள் அணியும் 17வயதுப் பெண்கள் அணியும் முறையே முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்று மாவட்டப் போட்டிக்குத் தெரிவாகின.

### மாவட்டப் போட்டிகள்

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கரப்பந்தாட்டப் போட்டிகள் யா/முத்துத்தம்பி வித்தியாலயத்தில் ஆரம்பித்திலிருந்து மிக விறுவிறுப்பாக நடைபெற்றன. இதில் எமது பாடசாலை 15 வயதுபிரிவுப் பெண்கள் அணி புதுமெருகுடன் ஆரம்பம் முதலே அசத்தலாக வெற்றி நடைபோட்டு எந்தவொரு அணியிடமும் ஆட்டத்தின் ஒரு செற்றினைத் தன்னும் விட்டுக்கொடுக்காது வென்று தொடர்ந்து நான்காவது முறையாகச் சம்பியனாகியது. 17 வயதுப் பெண்கள் அணி இறுதிவரை போராடி இரண்டாம் இடத்தினைப் பெற்றது. இரு அணிகளுமே மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவாகின.

### மாகாண மட்டப் போட்டிகள்

வடமாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட எமது 17 வயது, 15 வயதுப் பெண்கள் அணிகள் தொடர்பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த போதும் பிற்போடப்பட்டு-

வந்த மாற்றங்களால் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் எமது 17 வயதுப் பெண்கள் அணி பயிற்சிகளை இழந்தது. எனினும் இவ்வணி திடீர் அறிவித்தலுக்கு முகங்கொடுத்து முழுமையான அணியாக மாகாணப் போட்டிகளில் கலந்து கொண்டது. எமது 15 வயதுப் பிரிவுப் பெண்கள் அணி தொடர் பயிற்சிகளில் ஈடு பட்டிருந்தமையால் இரு வீராங்கனை கள் தவிர்க்க முடியாத காரணத்தால் வரத்தவறியபோதும் இரு பதில் வீராங்கனைகளை முதன்மை வீராங்கனைகளாக உள்வாங்கி நம்பிக்கையோடு மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டது.

**வட மகாகாணத்தின் CHAMPION**

வட மாகாண மட்டத்திலான கரப்பந்தாட்டப் போட்டிகள் 24.08.2008 இல் வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன. நம்பிக்கையோடு களமிறங்கிய எமது 15 வயதுப் பெண்கள் அணியானது ஆரம்பத்தில் இருந்தே எதிரணிகளை நிலைகுலைய வைத்தது. அரை இறுதிப் போட்டியில் வவுனியா மாவட்டச் சம்பியனான கிடாச்சூரி அணி நெருக்கடியினைக் கொடுத்த போதும் எமது அணித்தலைவி மிதுலாவின் வேகமான ஆட்டத்துடன் ரிஷாந்தினி, நியந்தா, றொணிக்கா ஆகியோர் ஒத்துழைக்க நஜிதாவின் நிதானமான ஆட்டத்தின் உதவியுடன் நட்சத்திர வீராங்கனை கார்த்திகாவின் அதிரடியான அறைதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாத எதிரணி இரு நேர் செற்களில் சுருண்டது. தொடர்ந்து இறுதிப் போட்டியிலும் ஆரம்பம் முதலே அசத்திய எமது அணி இரு நேர் செற்களையும் இலகுவாக வென்று எமது பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக மாகாணச் சம்பியனாகி சாதனை படைத்தது.

**வட மாகாணத்தின்**
**1st RUNNER UP**

எமது பாடசாலை 17 வயதுப் பிரிவுப் பெண்கள் அணி பெரும் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் வவுனியா அக்ரபோதி மகாவித்தியாலயத்துடன் கால் இறுதிப் போட்டியில் கள-மிறங்கியது. பலத்த இரசிகர்களின் ஆரவாரத்துடன் ஆரம்பித் இப்போட்டியில் ஆரம்பத்தில் இரு அணிகளுமே சளைக்காது போர்ாடின. எனினும் செற்களின் இறுதி நேரத்தில் எமது அணியின வீராங்கனைகளான ஆரணி, நாகதணிகா, மிரேஜினி, சிந்துஜா, கார்த்திகா ஆகியோர் ஒத்துழைப்பு வழங்க அணித்தலைவியும் நட்சத்திர வீராங்கனையுமான தர்மினியின் அதிரடியில் எதிரணி இரு நேர் செற்களையும் இழந்தது. வெற்றி நடை போட்ட எமது அணி இறுதிப்போட்டியில் காலடி வைத்தது. எனினும் துர்அதிஷ்டவசமாக மாகாண மட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது. மாகாண மட்டத்தில் முதலாம்

இரண்டாம் இடங்களைப் பெற்ற எமது அணிகள் தேசிய மட்டத்திற்குத் தெரிவானது. எனினும் துர்அதிஷ்டவசமாக தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ள முடியவில்லை.

2008 இன் சாதனையாளர்கள்.

எமது சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய மரனது வட மாகாணத்தில் முதலாம், இரண்டாம் இடங்கள் என கூறப்படுவதற்குக் காரணமான சாதனை வீராங்கனைகள் பெரும் கௌரவத்திற்குரியவர்கள். இதில் மாகாணசம்பியனாகிய 15 வயதுப் பிரிவு பெண்கள் கரப்பந்தாட்ட அணியில் இடம்பெற்ற வீராங்கனைகளான செல்வி மிதுலா தர்மராஜா, செல்வி கார்த்திகா இராஜசிங்கம், செல்வி நஜிதா கந்தசாமி, செல்வி ரிஷாந்தினி கிருஸ்ணகுமார், செல்வி நிஜந்தா யோகசிங்கம், செல்வி றொணிக்கா ஜோர்ஜ், செல்வி துஜீபா இராசேந்திரம், செல்வி ஹம்சியா விக்கினேஸ்வரன் ஆகியோரும் மாகாணமட்டத்தில் இரண்டாம் இடம்பெற்ற 17 வயதுப் பெண்கள் அணி வீராங்கனைகளான செல்வி தர்மினி வரதராஜா, செல்வி ஆரணி பகீரதன், செல்வி நாகதணிகா தனபாலசிங்கம், செல்வி சிந்துஜா இரத்தினசிங்கம், செல்வி மிரேஜினி சிவபாலன், செல்வி கார்த்திகா சௌந்தரராஜா, செல்வி அஜந்தா கந்தசாமி, செல்வி ராதிகா செல்வகுமார் ஆகிய வீராங்கனைகளும் எமது பாடசாலைக்குப் பெருமையினைத் தேடித்தந்துள்ளனர். இவர்கள் என்றும் எமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். இந்த மாணவச் செல்வங்களை வாழ்த்துவதில் பாடசாலைச் சமூகம் பெருமையடைகின்றது.

**There are two kinds of failture : those who thought and never did and those who did and never thought.**

**இரண்டு விதமான தோல்விகள் இருக்கின்றன. ஒன்று சிந்திப்பவர்கள் செய்யாமல் இருப்பது. அடுத்தது ஒருபோதும் சிந்திக்காமல் செய்வது.**

# பாடசாலை நிகழ்வுகள்



கரப்பந்தாட்டம் 17 வயதின் கீழ் பெண்கள் அணி



மாகாணமட்டம் 2ம் இடம்

# கண் பாதுகாப்பு

## "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

செல்வி இ.தயாளினி,
Science Trained,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

மனிதனின் ஐம்புலன்களில் மிக முக்கியமானது கண்களாகும். இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த கண்ணினது பார்வைத் தொழிற்பாட்டை பல்வேறு காரணிகள் பாதிக்கின்றன. இவற்றில் சில காரணிகள் கண்ணின் நிரந்தர பார்வை இழப்பிற்கு இட்டுச் செல்கின்றன. பெரும்பாலான காரணிகள் சீர்செய்யப்படக்கூடியவை. மக்கள், பார்வைத் தொழிற்பாட்டை பாதிக்கும் காரணிகள் பற்றி முற்கூட்டியே அறிந்திருப்பது இக்காரணிகளைத் தவிர்த்துக் கொள்ளவும் அதன் மூலமாக ஏற்படும் பார்வை இழப்பிலிருந்து தப்பிக் கொள்ளவும் முடிகின்றது.

கண்ணின் பார்வையை பாதிக்கும் காரணிகளும் அவற்றை தவிர்க்கும் முறைகளும்

### 1. போசணைக் குறைபாடு

விற்றமின் A குறைவு, குருதிச்சோகை என்பன காரணமாக கண்பார்வை பாதிப்படைகின்றது. விற்றமின் A குறைபாடு உள்ளவர்களுக்கு ஆரம்பத்தில் மாலைக்கண் நோயின் தாக்கம் காணப்படலாம். விற்றமின் A ஐ பச்சை இலைக்கறி வகைகள், பூசணிக்காய், மஞ்சள் கரட், பழங்கள் முதலியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். குருதிச் சோகை உணவில் இரும்புச்சத்துக் குறைபாடு காரணமாக ஏற்படுகின்றது. மாமிச உணவுகள், தானியங்கள், மரக்கறி வகை, பச்சை இலைக்கறி வகைகள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் இரும்புச்சத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

### 2. விபத்துக்கள்

சிறுவர் முதல் பெரியோர் வரை விபத்துக்களில் சிக்கி கண்பார்வையை இழக்கம் சந்தர்ப்பங்கள் தற்போது அதிகளவில் நிகழ்கின்றன. கவனயீனமும், விளையாட்டுத்தனமும் விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றன.

விறகு வெட்டும் போதும், போக்குவரத்தின் போதும் தூசு துணிக்கைகள், துகள்கள் கண்ணினுள் செல்லுதல். சில தாவரங்களின் பால் வகைகள் கண்ணினுள் செல்லுதல். தொழிற்சாலைகள் மற்றும் இடங்களில் பொருட்களை உருவாக்கும் போதும், உபகரணங்களை கையாளும் போதும் பொருட்களும், துகள்களும் கண்ணை தாக்குதல்.

சுண்ணாம்பு, சீமெந்து, சலவைத்தூள் என்பவற்றைக் கையாளும் போது அவற்றின் துகள்கள் கண்ணை அடைதல். வாகனங்களில் செல்லும் போது வண்டுகள், பூச்சிகள் என்பன கண்களைத் தாக்குதல்.

சில உயிரினங்களின் (மயிர்கொட்டி) மயிர்கள் கண்ணை அடைதல். புற ஊதாக்கதிர்கள் கண்ணை அடைதல். கிட்டி விளையாட்டு, அம்பு வில்லு விளையாட்டு, மற்றும் கூரான அமைப்புடைய பொருட்களை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களின் போது பொருட்கள் தவறாகக் கையாளப்படுதல்.

இவ்வகை விபத்துக்களிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்புக் கண்ணாடிகளை அணிதல் அவசியமாகும். பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பங்களில் கண் வைத்தியரை நாடுதல் மிக முக்கிய மாகும்.

### 3. கற்றாக்ற்

குறிப்பிட்ட வயதை அடைந்ததும் பொதுவாக மக்களிற்கு இப் பாதிப்பு ஏற்படுகின்றது. மிகை ஒலி மூலம் இச் சிகிச்சையை சுலபமாக மேற்கொள்ள முடியும். ஆரம்பத்தில் பஞ்சு போன்று காணப்படும். இதனை எடுப்பது சுலபம். முற்றிவிட்டால் வைரமானதாக மாறிவிடும். இதன் போது சத்திரசிகிச்சை சிக்கல் நிறைந்த தாக மாறிவிடும்.

### 4. கண் அழுத்தம்

இது நீண்ட காலம் மறைந்திருந்து சிறிது சிறிதாகக் கண்ணைப் பாதிப்படையச் செய்யும். 40 வயதிற்கு மேற்பட்டவர்கள் கண் பரிசோதனை செய்வதன் மூலம் இனங்கான முடியும். ஆரம்பத்தில் சிகிச்சை அளிப்பதன் மூலம் பாதிப்பைக் குறைக்கலாம். தாமதமடைந்தால் கண் பார்வை இழக்கப்படும்.

### 5. நீரிழிவு நோய்

இது விழித்திரையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. விழித்திரையே கண்ணின் பார்வைக்கு முக்கியமான பகுதி என்பதால் அதில் ஏற்படும் பாதிப்ப பார்வை இழப்பிற்கு இட்டுச் செல்கின்றது. நீரிழிவு நோயுடையவர்கள் ஆறு மாதத்திற்கொரு தடவை கண்ணை கண் வைத்தியரிடம் சென்று பரிசோதித்தல் அவசியமாகும்.

### 6. பரம்பரை காரணிகள்

பரம்பரை பார்வை நரம்புடன் தொடர்பான நோய்களில் செல்வாக்கு செலுத்துகின்றன. குறித்த ஒரு நபரின் இரத்த உறவு முறையானவர்களுக்கு இந் நோய் காணப்படுமானால் அந் நபருக்கு இந் நோய் ஏற்படக் கூடும். எனவே இரத்த உறவு முறையில் திருமணம் செய்வதை தவிர்ப்பதன் மூலம் இந் நோய் ஏற்படாமல் தவிர்க்கலாம்

### 7. மூட நம்பிக்கைகளும், அலட்சிய மனப்பான்மையும்

மூட நம்பிக்கைகள் காரணமாக சாறுகள், தீர்த்தம் போன்றவற்றை கண்களில் விடுவதால் கண்களில் பங்கசு கிருமிகள் வளர்ந்து பாதிப்பை ஏற்படுத்துகின்றது. கண்வாக்கு போன்ற குறைபாடுடையவர்கள் ஆரம்ப கட்டத்தில் சிகிச்சை அளிக்கத் தவறினால் அவை கண்களில் நிரந்தர பாதிப்பை ஏற்படுத்திவிடும். குழந்தை பிறந்த ஆரம்ப கட்டத்தில் (4 மாதம் - $1^1/_2$ வயது) சிகிச்சைகளை மேற்கொள்வதன் மூலம் குறைபாட்டை குணப்படுத்த முடியும்.

போசணை மிக்க உணவுகளை உண்பதன் மூலமும் உரிய காலத்தில் உரிய சிகிச்சைகளை மேற்கொள்வதன் மூலமும் ஆரோக்கியமுள்ள கண்களை நாம் உருவாக்க முடியும்.

# சைவசித்தாந்தம் கூறும் ஒழுக்கவியல்

ப.உமேஸ்குமார்.
B.A,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

வேதாந்தத்தின் தெளிவான கொள்கையை தன்னகத்தே கொண்டதாக விளங்கும் சைவ சித்தாந்தம் வெறும் தத்துவமாக இல்லாமல் நிறைவான ஒரு வாழ்வியல் நெறியாக வாழ்க்கை-யைத் துறந்து உலகியலை விட்டுவிலகி தனியே இருந்து தனது விடுதலைக்கு மட்டும் முயற்சிக்கும் ஒன்றாக அல்லாமல் “பிற விருத்தி மார்க்கம்” எனும் வகையில் உலகியல் வாழக்கையில் மக்களோடு மக்களாக வாழ்ந்து கொண்டும், கொடுத்தும் தனக்கும் பிறருக்குமாக மனித விழுமியங்களை மேம்படுத்தும் வழிமுறைகளை எடுத்துக்கூறும் உயர் தத்துவமாக சிறப்பிக்கப் படுகின்றது.

சைவ சித்தாந்தமானது சமயம் என்றும் தத்துவம் என்றும் சமூக அறிவியல் கருத்துக்களை கூறும் அறிவியல் தத்துவம் என்றும் எண்ணக்கூடிய வகையிலே, சமுதாயம் மேம்பட நிறைந்த ஒழுக்கவியல் கருத்துக்களை வழங்கியுள்ள தத்துவமாக சைவ-சித்தாந்தம் சிறப்பிக்கப்படுகின்றது. என “சைவசித்தாந்தமும் சமுதாய மேம்பாடும்” என்ற நூலில் குறிப்பிடப்படுகின்றது. மேலும் “பல வகைச்சடங்குகளை செய்து பலியிட்டு வாழ்வதை விட நேர்மையாக வாழ்வதும் கருணையை விரும்பு-வதுமே இறைவனுக்கு பிடித்த-மானவை” என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான கொள்கைகளில் வாழ்வியல் எனும் ஒழுக்கத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்க காண்கிறோம்.

தத்துவ முறையிலும் வழிபாட்டு முறையிலும் வாழும் நெறியிலும் ஒழுக்கவியல் இரண்டறக் கலந்து நிற்கின்றது. ஒழுக்க-வியலோடு இணைந்த இந் நெறிமுறைகளே படிப்படியாக ஆன்மாவை விடுதலைக்கு இட்டுச் செல்கிறது. இவ்விடுதலை என்பதை “சுதந்திரம்” எனக்கொள்வோமானால் ஆத்ம சுதந்திரம் அடைதலே ஆன்மாக்களது குறிக்கோளாக காணப்படுகின்றது. என சித்தாந்த சிந்தனையாளரால் விளக்கப்பட்டது. அத்தகைய விடுதலைப் பேற்றினை ஒருவர் அடைய வேண்டுமானால் அவர் எத்தகைய ஒழுக்க நடத்தைகளை பின்பற்ற வேண்டும் என்பதனை அறிமுகப்படுத்துவதே சைவ சித்தாந்த ஒழுக்கவியற் கோட்பாட்டின் பிரதான அடிப்படை யாக அமைந்துள்ளது.

சித்தாந்தத்தின் மூலநூலாக விளங்கும் திருமூலரின் திருமந்திரத்திலே அன்பையும் சிவத்தையும் ஒன்றாக இணைத்ததன் நோக்கம் சமயப் பின்னணியில் அன்பிற்கு கொடுத்துள்ள முக்கியத்துவம் எனலாம் இதனாலேயே சைவம், அசைவம் எனும் பகுப்பு உணர்த்தப் படுகிறது. கொல்லாமை அல்லது புலால் உண்ணாமை என்கின்ற அறத்தை வற்புறுத்துவதனையே தனது பிரதான ஒழுக்க குறிக் கோளாகக் சைவசித்தாந்தம் கொண்டுள்ளது. இதன்வழி அன்பு, இரக்கம், கருணை, ஜீவகாருண்யம், அகிம்சை, ஆன்ம நேயம் என்ற நல்லொழுக்கப் பண்புகளை சமூகத்தில் வளர்ப்பதனையே அடிப்படையாகக் கொண்ட சைவ சித்தாந்தம் என்பதால் சமயநெறி சைவம் எனவும், சைவ சித்தாந்தம் முடையதனால் சித்தாந்தத்தின் முழுமுதல் சிவம் எனவும் அன்பே சிவமாதலால் சைவம் அன்பு மதம் எனவும் திருமந்திரம் வகுத்துக்காட்டி யுள்ளது. அதாவது திருமூலர்

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமானது ஆரும் அறிகிலர்"

எனச் சகல உயிர்களிலும் ஜீவகாருண்யத்தை வெளிப்படுத்தினார்.

மெய்கண்ட சாத்திரங்களில் முதன்நூல் ஆகிய சிவஞான போதத்தின் காப்புச் செய்யுளே "நல்லார் புனைவரே" எனக் கூறுகின்றது. இறையடி சிந்தித்து இறைபணி நிற்கத் தகுந்தோர் நல்லவர்களாக நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பதை இங்கு காணலாம்.

சித்தாந்தத்திலே நால்வகை ஒழுக்க நெறிகள் சிறப்பிடம் பெறுகின்றன. இச்சித்தாந்தமானது ஒழுக்க நெறியைப் பேணுவதில் ஒரு வாழ்வியலாகவும், இறுதி விடுதலையடைவதில் அறிவு வழிநின்று ஞானநிலையில் தன்னை ஒரு தத்துவமாகவும் விளங்குகின்றது. என சைவ சித்தாந்த ஒழுக்கவியல் தத்துவம்" என்ற நூலிலே திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் கருத்தை முன்வைத்திருக்கக் கண்டோம். அதாவது சரியைத் தொண்டுகள்" செய்து ஆணவ-முனைப்பினைக் குறைத்து "கிரியை என மருவுமவையாவும், ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்" எனச் சிவப்பிரகாசம் கூறுவதற்கு ஏற்ப உள்ளமும் உடலும் இணைந்து ஒருங்கமைந்து இறைவழிபாட்டில் நின்று யோக நெறியில் புலன் ஒடுங்கி ஞானநெறி நின்று இறைவனைக் கண்டு உணர்தல் எனும்படிமுறை ஒழுக்கங்கள் சிறப்பான முறையில் ஓங்க சித்தாந்த நூல்களிலும் சித்தாந்த சாஸ்திரங்களிலும் சைவ சித்தாந்தத்தின் ஒழுக்கத்துறைகள் சிறப்பாக பேசப்பட்டுள்ளன. ஆற்று நீரை வரம்பு கட்டி வயலுக்கு செலுத்துவது போல சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நூல்வகை ஒழுக்க வரம்புகளும் மனிதனை நெறிப்படுத்தும் ஒழுங்குகளாகும்.

இதனை

"சங்கரனையடையும் நன்மார்க்கம் நாலவை ஞானயோக
நற்கிரியா சரியாவென நவிற்றுவதும் செய்வர்"

என்ற சிவஞான சித்தியார் கூற்றிற்குஅமைய சைவநாயன் மார்களான அப்பர் சரியாமார்க்கத் திலும், சுந்தரர் யோக மார்க்கத்திலும், மாணிக்கவாசகர் ஞானமார்க்கத்திலும் வாழ்ந்து காட்டிய ஒழுக்கமுறைகள் சைவத்திருமுறை-களிலும் பெரிதும் போற்றப்படுவன-வாகும். எனவே நல் ஒழுக்கத்தை வாழ்ந்து காட்டி போதித்தமையால் தான் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் சமய சாரியார் என அழைக்கப்பட்டனர்.

நால்வகை ஒழுக்க நெறி களோடு வழிபாட்டு நெறிகளாக ஆன்மார்த்தம், பரார்த்தம் எனும் கிரியை நெறிகளும் வழிபாட்டுக்குரிய ஒழுக்க நெறிகளாக சித்தாந்தத்தில் ஆதரிக்கப்பட்டதை காணமுடிகின்றது. ஆன்மார்த்தம் எனும் காமிய வழிபாட்டு நெறியானது தனக்கென சில ஒழுக்க முறைகளை இறை வழிபாட்டில் தெரிந்து கொள்ளும் நெறியாகும். ஆன்மா, அகத்தாலும், புறத்தாலும் தூய்மை பெறுவதற்குரிய விரதங்கள் இதில் முக்கியத்துவம் பெற்றிருக்க காண்கிறோம். விரதம் என்பது "மனம் பொறி வழிபோகாது நிற்றல் பொருட்டு உணவை, விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்புடன் விசேடமாக வழிப்படுதலேயாகும்." என்பர் ஆறுமுகநாவலர். இதிலிருந்து மனதை ஒரு நிலைப்படுத்துவதை முக்கிய நோக்காகக் கொண்ட விரத்தை ஆன்மார்த்த நெறியாக சித்தாந்தம் ஆதரிக்கின்றது.

பரார்த்தம் எனும் கூட்டு வழி· பாடானது ஆலயங்களோடு தொடர்புடைய கிரியை முறைகள் ஆகும். அதாவது இறைவனை கிரியைகளினால் சாந்தப்படுத்தி-குருவை மகத்துவப்படுத்தி சமயம்சார் தீட்சை மந்திரத்தைசெபித்து உள்ளடக்கியதை தூய்மைப்படுத்தும் கிரியை நெறியை சைவம் சார்ந்தோர் பேணி ஒழுகுதல் என சித்தாந்தம் கூறுகின்றது. இவையிரண்டும் இகபர நன்மைகட்காக வீட்டிலும், ஆலயங்களிலும் மக்களால் பின்பற்றப்படும் வழிபாட்டு ஒழுக்க கிரமங்களாக உள்ளன.

சைவசித்தாந்தம் ஆதரிக்கும் பிரதான கோட்பாடுகளில் ஒன்று கர்மக் கோட்பாடு ஆகும். இக் கோட்பாடு அறத்தின் திறவு கோள் என்பதே சித்தாந்திகளின் அடிப்படை யான கருத்துக்கொள்கை ஆகும். எனவேதான் சித்தாந்தத்திலே கர்மத்திற்கு அதிமுக்கியத்துவம் கொடுத்திருக்க காண்கிறோம்.

கன்மத்தை இருவினைக் கோட்பாடாக வகுத்த சித்தாந்தத்-திலே வினையை நல்வினை, தீவினை என வகுத்து நன்மை செய்தால் நன்மை விளையும், தீமை செய்தால் தீமை விளையும் என்ற உணர்வு இயல்பாகவே ஒழுக்கத்தை தூண்ட வல்லதாக அமைகிறது. விஞ்ஞானி நியூட்டன் கருத்திலே "ஒவ்வொரு தாக்கத்திற்கும் சமனும் எதிருமான மறுதாக்கம் உண்டு" (Event action had a reaction) என்ற விதியை இந்த கர்மக் கோட்பாடு அழுத்தமாக சித்தாந்தத்தில் கூறியுள்ளது. அதாவது ஒருவர் தான் செய்து கொண்ட வினைக்கு ஏற்பவே பிறவிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இதனை தெய்வத்தால் கூட மாற்ற முடியாது என்பது வள்ளுவர் ஒத்துக்கொள்ளும் கருத்தாகும்.

"தெய்வத்தால் ஆகாதது எனினும்
முயற்சிதன் மெய்வருந்தக் கூலிதரும்"

எனக்கூறும் வள்ளுவர் தெய்வத்தால் ஆகாத செயல் ஒருவன் தான் செய்த வினைக்கு ஏற்ப பிறப்பு எடுப்பதை தெய்வத்தால் கூட மாற்ற முடியாது என்றாலும் பிறப்பை நற்பிறப்பாக்கவோ அன்றேல் தீய பிறப்பை எடுத்துக் கொள்ளவோ அவன் எடுக்கின்ற முயற்சியே அதற்கு காரணமா-கின்றது. எனக்கூறி நற்பிறப்பை எடுக்க நல்வினை ஆற்ற வேண்டும் என வலியுறுத்தும் இந்தக் கோட்பாடு அறவழி நின்று ஒழுகும் ஒழுக்க-விதிகளை தெரிவித்துள்ள கோட் பாடாக அமைகின்றது.

இக்கன்ம வினை மாயையால் அனுபவிக்கப்படுகிறது. இவற்று-க்கு அடிப்படைக் காரணம் ஆணவம். "நான்" எனது எனும் உணர்வுகள் ஆணவத்தின் இயல்புகளாகும். மோகம், குரோதம், மதம், தாபம் முதலிய தீய செயற்பாடுகள் ஆணவத்தால் ஏற்படுகின்றன என சித்தாந்தம் புகல்கிறது. எனவே அணவ மல நீக்கமே வீடு பேற்றுக்கு வழி எனக்கூறும் போது இத்தீய செயல்களை விலக்கி நல்லொழுக்கம் பேண வேண்டும் என்பது உபதேசிக்கப்படுகின்றது. எனவே "நான்" "எனது" எனும் செருக்கு அடங்கி அடக்கமும் பணிவும் உடையவராய் நற்செயல் புரிந்து நல்லொழுக்கம் பேண வேண்டும் என்பதற்காகவே நால்வகை மார்க்கங்கள் எனும் வாழ்க்கை நெறிமுறைகளைச் சித்தாந்தம் வகுத்து தந்துள்ளது மேலும்

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப்பால்"

என்றவாறும் தன்னைத்தான் நேசிப்பவன் பிறர்க்குத் தீவினை நினைக்க மாட்டான். என்பதனூடாக மிகப்பெரிய சமூக ஒழுக்கம் இவ்வாறு முன்வைக்கப்பட்டது.

அன்பு என்ற நெறிக்கு ஆதரவு கொடுத்த சைவ சித்தாந்தத்திலே "இறை அடியார்கள் மேல் அன்பு செலுத்தும் அடியார் மேல் அன்பு செலுத்தும் அடியார் மேல் அன்புடையவராதல்" எனும் அன்பு நெறியும் இறைவானல் மனநோயை அகற்ற அனுப்பப்பட்ட தூதுவனாக கொள்ளப்படும், குருவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் எனும் கருத்து அழுத்தப்படுத்தக் காண்கிறோம்.

சித்தாந்த சமூகத்திலே இல்லறமும், துறவறமும் மிகச்சிறந்த அற ஒழுக்கங்களைச் செயற்படுத்து-கின்ற இரு வேறு துறைகள் எனச்சைவ சித்தாந்தம் நம்புகிறது. இசைவ சித்தாந்த கொள்கையில் கற்பொழுக்கத்தின் பங்கு என்ன என்பது பலரது ஐயப்பாட்டிற்குரிய விடயமாகும். இங்கு இல்லத்துக்குரிய ஒழுக்கத்தில் கற்பு நெறி இன்றியமை யாதது என்பது தமிழ் இலக்கிய நூல்களிலும் வற்புறுத்தப்-பட்ட விடயமாகும். இவ்வரிய ஒழுக்கத் தத்துவம் சித்தாந்த தத்துவத்திலே சிவசக்தி தத்துவமாக பேணப் படுகின்றது.

"சக்தியும் சிவமுமாய தன்மையில் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வானும் பெண்ணும் உயர் குணகுறியுமாகி"

என சித்தியார் குறிப்பில் கூறப்படுகின்றது.

பகுத்தறிவுதான் மனிதனின் முக்கிய ஒழுக்கப்பண்பு என்றார் அரிஸ்டோட்டில் "அறிவே அறம்" என்ற சோக்கிரட்டீஸின் அறிவுறுத்-தலையும் இங்கு குறிப்பிடலாம். ஆதலால் நல்லோரின் வாழ்வைச் சான்றாக கொள்வதும் செயல்முறை அனுபவத்திலேயே பயிற்சி பெறுவதுமே நன்னடத்தை அல்லது சிறந்த ஒழுக்கத்திற்கு வழிகோலும் என கூறப்படுகின்றது.

எனவே ஆன்மீக விடுதலை அடையக் குருலிங்க சங்கம வழிபாடு தவம், தியானம், அன்பு, இரக்கம், கருணை, ஜீவகாருண்ணியம், மனித நேயம், வாய்மை, வழிபாட்டு நெறியான விரதம், கிரியைகள் முதலிய நெறி முறைகளை அனுஷ்டிப்பதோடு நால்வகை மார்க்க மென்னும் நன்நெறி நின்று நல்லொழுக்கம் பேணி வாழ்தலே வழியெனச் சைவசித்தாந்தம் கூறி நிற்கும் சிறப்பினை நாம் அறியலாம்.

# கணினிக் கல்வி

திருமதி சு.பாலச்சந்திரன்,
B.A. Diploma in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

காலத்திற்குக் காலம் மாறிவரும் உலகிற் கேற்ப தன்னை மாற்றிக் கொள்பவனே பூரண கல்வி அறிவு படைத்த மனிதனாகின்றான். கணனியானதும் இன்று ஒவ்வொரு மனிதனதும் கைகளிலே தவழுகின்றது. இன்று தகவல் தொடர்பாடல் சாதனங்களின் வருகையுடன் உலகமே உள்ளங்கைக்குள் அடங்கிவிட்டது எனலாம். தகவல் தொழில்நுட்ப சாதனத்தில் கணனி முக்கிய இடம் வகிக்கின்றது. ஒவ்வொருவரும் கணனி பற்றி அறிய வேண்டியது அவசியமானதும், இன்றியமையாததும் ஆகும்.

தரவுகளை (data) ஏற்றுக்கொண்டு அத்தரவுகளை தொடரான பல்வேறுபட்ட செயன்முறைகளுக்கு (process) உட்படுத்தி அதன் விளைவாக தகவலை (information) உருவாக்கும் மின்னியல் கருவியே கணனி ஆகும். இது இன்று அனைத்துச் செயற்பாடுகளிலும் இரண்டறக் கலந்து காணப்படுகின்றது. எமது தேவைகளுக்காகப் பல்வேறுபட்ட தரவுகளைக் களஞ்சியப்படுத்தல் கணக்குகளை மேற்கொள்ளல் போன்றவற்றிலும் இதைவிட மருத்துவத்துறை, வங்கிகள் பொழுது போக்குகள் போன்ற அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்தப்படுகின்றது. மனிதன் பல மணி நேரம் செய்யும் வேலையை கணனி கணப்பொழுதில் செய்யக்கூடியது.

எமது நாட்டிலே தற்போது கணனியின் பயன்பாடானது சகல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியுள்ளதால் இத்துறை பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமானது. கட்டாயக் கல்வி போன்றே கணனிக்கல்வியும் இன்றியமையாதது ஆகும். நாட்டின் எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் உன்னத பணியை ஆற்றிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆசிரியரும் கணனி பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமானது. இன்று ஒவ்வொருவர் வீடுகளிலும் கணனி பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றே கூறலாம். எனவே கணனி பற்றிய அறிவு இல்லாவிட்டால் சமுகத்தால் ஒதுக்கப்படும் நிலை வரலாம்.

கணனியைக் கற்க முனைபவர்கள் தமக்குத் தேவையான துறைகளைத் தெரிந்து கற்க வேண்டும். ஏனெனில் கணனியில் எண்ணற்ற கற்கை நெறிகள் வந்த வண்ணம் உள்ளன. பொதுவாக ஆசிரியத்துறை சார்ந்தவர்கள் MS Office (Excel), Access, Power point), E-mail, internet போன்ற துறைகளைத் தெரிவு செய்யலாம். இவை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்குப் பயனுள்ளவையாக அமையும். இதைவிட உயர்கல்வி, திருத்துதல் செயற்பாடுகளை விரும்புவோர் Hard ware ,Engineering, Java, Visual Ba-

sic போன்றவற்றையும் வேறும் பல Auto cad, G-cad போன்ற துறைகளையும் தெரிவு செய்யலாம்.

அனைத்து துறைகளிலும் தொடர்பாடல் சாதனங்களில் பிரதானமாகக் கணனியின் செல்வாக்குக் காணப்படுவதால் சேவை மூப்பின் அடிப்படையில் பதவியுயர்வு என்ற நிலைமாறித் தொழில்நுட்ப அறிவுடையவருக்கே பதவியுயர்வு என்ற நிலை காணப்படுகின்றது. இன்று நிறுவனங்களிடையே digital, decide என்ற பாகுபாடு காணப்படுகிறது. அதாவது கணனி அறிவுடைய, அச் செயற்பாடு சார்ந்த ஆர்வமுடையவர் ஒரு சாராரும், கணனி அறிவு அற்ற இவற்றில் நாட்டமில்லாத மற்றொரு சாராரும் உள்ளனர். இதில் முதலாவது சாரார் விரைவாக முன்னேறுவதற்கான வாய்ப்பைப் பெறுகின்றனர். கணினி கற்க ஆங்கில அறிவு தேவை எனப் பலரும் பயந்து ஒதுங்குவதுண்டு.

கணனி ஆங்கிலத்திலே வடிவமைக்கப்பட்டுள்ளது என்பது உண்மை, ஆனால் இலகுவான ஆங்கில பதங்களைக் கொண்டே காணப்படுகின்றது. "கணனி" எனப் பயப்படத் தேவையில்லை. கற்கத் தொடங்கி விட்டால் அது இலகுவாக அமைந்துவிடும். ஆர்வமும் தன்னம்பிக்கையும் கொண்டு செயற்பட்டால் கற்றுவிட முடியும். மேலை நாடுகளில் கணனியானது சாதாரண ஒரு சாதனம். எமது நாட்டிலும் இன்று ஒவ்வொருவர் வீடுகளிலும் கணனி வரத் தொடங்கியுள்ளது. எனவே இனியும் காத்திராமல் காலத்தை வீணாக்காது கணனி உலகத்தில் நுழைய முற்பட வேண்டும்.

"வாழ் நாட் கல்வி" ஆயுட்கல்வி என்ற அறிஞர்களின் வாக்கிற்கேற்ப ஒவ்வொரு ஆசிரியரும் செயற்பட்டு இன்றைய நவீன உலகிற்கேற்ப மாணவர்களை உருவாக்க வேண்டியது அவசியமானதும் அவசரமானதுமாகும்.

**Character is like a tree and reputation like its shadow. The shadow is what we think of it ; the tree is the real thing**

– Abraham Lincoln

**ஒருவருடைய குணநலங்கள் மரம் போன்றது. அவருடைய மதிப்பு நிழல் போன்றது. நாம் நிழலைப் பற்றி யோசிக்கின்றோம். மரமே உண்மையானது.**

# கற்பித்தலில் தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு

திருமதி கீ.திவாகரன்,
B.A. Dip in Education.
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

இன்றைய கல்விச் செல் நெறிகள் கற்றல் கற்பித்தல் தொடர்பாக நீண்டகாலமாகப் பின்பற்றப்பட்டு வந்த பாரம்பரியத்தை முற்றுமுழுதாக மாற்றியமைத்து புதியதோர் கண்ணோட்டத்தில் கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை விரிவுபடுத்தியுள்ளது. பாரம்பரிய முறைகளான பாடநூல்கள், கரும்பலகை ஆகியவற்றினூடாகத் தகவல்களை வழங்கி அவற்றை மனனம் செய்ய வைத்து மீண்டும் ஒப்புவிக்கச் செய்கின்ற போக்கிலிருந்து மறுபட்டதாக கற்பவன் தானே செயற்பாடுகளில் ஈடுபட்டு அதிலிருந்து பெற்றுக்கொள்ளும் அனுபவங்களின் திரள் அமைப்பின் மூலம் கற்றல் கற்பித்தற் செயற்பாடு எய்தப்படுவதாக நவீன கல்வித்திட்டம் வழிவகுத்துள்ளது. அவ்வாறான செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற கருவிகள் அனைத்துமே கற்றலுக்கான தொழில்நுட்ப சாதனங்களாகக் கருதப்படலாம்.

கற்பித்தலில் துணைச்சாதனங்களின் பயன்பாடு என்பது நன்கு திட்டமிடப்பட்டதொன்றாக அமைய வேண்டியது அவசியமாகின்றது.

"பார்த்தேன் மறந்துவிட்டேன்
கேட்டேன் ஞாபகமில்லை
செய்தேன் விளங்கிக் கொண்டேன்"

என்ற சீன அறிஞரின் கூற்றுக்கிணங்க கற்பித்தல் சாதனப் பயன்பாட்டின் அவசியம் தெட்டத்தெளிவாகப் புலப்படுகின்றது. தொழில்நுட்பச் சாதனங்களைப் பல்வேறு விதமாக வகைப்படுத்த முடியும். அவற்றின் கட்டமைப்பு அடிப்படையில் இருபரிமாண, முப்பரிமாண தொழில்நுட்பச் சாதனங்கள் என வகைப்படுத்த முடியும். இருபரிமாணச் சாதனங்களில் படங்கள், வரைபுகள், புகைப்படங்கள், புள்ளி விபரவியல் அட்டவணைகள், சமவுயரக் கோட்டுப்படங்கள் போன்றன உள்ளடக்கப்படும்.

ஒளி எறியி சாதனங்களுடாக திரையில் பெறப்படுகின்ற அல்லது தொலைக்காட்சி, கணினி ஆகியவற்றின் திரைகளில் காண்பிக்கப்படும் காட்சிகள் இருபரிமாணமாக உள்ள போதும் அவற்றில் முப்பரிமாணத்தன்மையையும் அவதானிக்க முடிகிறது. முப்பரிமாணச் சாதனங்களாக மாதிரியுருக்கள், சிலைகள், கருவிகள் போன்றன உள்ளடக்கப்படும். இவற்றை மாணவர்கள் நேரடி அவதானத்திற்கு உட்படுத்துகையில் படங்களினூடாக அறிவதைவிடக் கூடுதலான அறிவை இதன் ஊடாகப் பெறுவர்.

## பழைய மாணவர் சங்க நிர்வாக சபை - 2008



## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் - 2008



## கல்வி சாரா உத்தியோகத்தர்கள்



புலன் உணர்வுகளைத் தூண்டுவதன் அடிப்படையில் கற்பித்தற் துணைச் சாதனங்களைக் கட்புல சாதனம், செவிப்புல சாதனம், கட்புல செவிப்புல சாதனம் என மூவகையாகப் பிரிக்கலாம்.

கட்புல சாதனங்கள் என்பதில் வரைபுகள், புகைப்படங்கள், மாதிரி உருக்கள், மேந்தலை எறியி (O.H.P) போன்றனவும் செவிப்புல சாதனங்களில் வானொலி, ஒலிப்பதிவுக்கருவி போன்றனவும், கட்புல செவிப்புல சாதனங்களில் சினிமா, கணினி, தொலைக்காட்சி போன்றனவும் உள்ளடக்கப்படுகின்றன.

கற்பித்தல் செயன்முறை ஒன்றின் போது துணைச் சாதனமொன்றைத் தெரிவு செய்வதில் பின்வரும் அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

1. கற்பிக்கப்படும் விடயத்துடன் சம்பந்தப்பட்ட உபகரணத்தின் முக்கியத்துவம். அதாவது கற்பித்தல் உபகரணமானது குறித்த அலகிற்குப் பொருத்தமானதாக இல்லாவிடில் அவ் உபகரணம் கவனக்கலைப்பான் ஆகிவிடும்.

2. பயன்படுத்தப்படும் வகுப்பறைக்கு கற்பித்தல் உபகரணம் பொருத்தப்பாடானதா? என்பதும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகிறது. அதாவது வகுப்பறையில் மாணவர் எண்ணிக்கை, வகுப்பறையின் பௌதீக நிலைமை என்பவற்றைப் பொறுத்தே கற்பித்தல் உபகரணத்தின் தேவை தீர்மானிக்கப்படுகின்றது. உதாரணமாக ஏறக்குறைய 10 மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பறையில் கற்பிப்பதற்கு மேந்தலை எறியியின் பாவனை அவசியமற்றது. அதே போல் நன்கு வெளிச்சமான ஒரு வகுப்பறையில் இதனைப் பயன்படுத்துவது பொருத்தமற்றது. அதே போன்று மின்சார வசதி இல்லாத ஒரு இடத்தில் இதனைப் பயன்படுத்த முடியாது.

3. வகுப்பறையில் சாதனமொன்றைப் பயன்படுத்த முன்பதாக முன்கூட்டியே சாதனத்தின் செயற்படு திறனைப் பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும். இல்லாவிடில் வகுப்பறையில வீணான நேர விரயம், மாண்வரது பரிகாசம் என்பவற்றுக்கு உள்ளாக நேரிடும்.

4. ஒரு சாதனத்தைப் பயன்படுத்துவதற்கு அவசியமான துணை ஏற்பாடுகளைத் தயார் நிலையில் வைத்திருத்தலும் அவசியமான தொன்றாகிறது.

உதாரணமாக காட்சிப்படுத்த வேண்டிய படமொன்றைச் சுவரில் பொருத்துவதற்கான முன்னாயத்தமாக எல்லா மாணவரும் இப்படத்தினைத் தெளிவாக அவதானிக்கக் கூடிய இடம், பசை நாடா, ஒட்டுக்களி போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம்.

5. ஆசிரியர் எதிர்பார்க்கும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மிகப்பொருத்தமான கருவியைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அத்துடன் பாடத்தில் எப்படியான முறையில் இதனைப் பயன்படுத்த வேண்டும் என்பதனைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். மேலும், இது தொடர்பான முன்னறிவு, விருப்பு என்பவை பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

6. கருவியின் பயன்பாட்டை படிப்படியாகவும் ஒழுங்கு முறை-யாகவும் விளக்குதல் வேண்டும். கருவியின் இயக்கத்தை மாணவர் அவதானிப்பதற்கு வசதி செய்வதுடன் அது தொடர்பாக கலந்துரையாடவும் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

7. கருவியின் இயக்கத்திற்கும் கலந்துரையாடலுக்கும் செல-விடக்கூடிய நேரத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும். மாணவர் விளங்கிக் கொள்ளச் சிரமப்பட்டால் மீண்டும் சாதனத்தைப் பயன்படுத்திக் காட்டக்கூடியதாக நேரம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

தற்கால நவீன கற்பித்தல் முறையில் பிள்ளைகள் தாமாகவே கற்றலில் ஈடுபடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதன் போது மாணவர்கள் சுயமாகத் துணைச் சாதனங்களைக் கையாளும் அதே வேளை பொருத்தமான வழிகாட்டலுடன் கையாள்வதும் அவசியமாகும். அநேக சந்தர்ப்பங்களில் மாணவர்கள் இக்கற்பித்தற் சாதனங்களைக் கையாள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையையே அவதானிக்க முடிகின்றது. இதற்கான பிரதான காரணம் யாதெனில் மாணவர்கள் இக்கற்பித்தற் சாதனங்களைச் சேதப்படுத்தி விடுவார்கள் என்ற பய உணர்வாகும். எனவே இவ்வாறான ஓர் நிலையில் பாடசாலைகளில் கற்பித்தற் சாதனங்களைக் காட்சிப் பொருளாக வைத்திருப்பது வள விரயமும் பண விரயமும் ஆகும்.

எனவே இந்நிலையை மாற்றும் முயற்சியாக மாணவர்களுக்குச் சரியான முறையில் முன்னறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். உதாரணமாக கருவியின் தன்மை, பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள், கருவியின் முக்கியத்துவம் போன்ற அம்சங்களை மாணவருக்கு விளக்கு வதன் மூலமும் மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன் பின்னர் அவர்களைக் கருவிகளை இயக்குவதற்கு அனுமதிக்க வேண்டும். மேலும், அவர்களைத் தொடர்ந்து அவதானிப்பதனூடாகத் தேவையான வழிப்படுத்தலையும் வழங்க வேண்டும். சிறு குறு விடயங்களாயினும் சரி அவர்களைச் சரியான முறையில் வழிநடத்த வேண்டும்.

உதாரணமாக

➔ ஒரு Marker ஐப் பயன்படுத்தும் போது அதன் வகையறிந்து பயன்படுத்துதல்

➔ எழுத வேண்டியதைச் சரியாகத் தீர்மானித்த பின்பே மூடியைத் திறத்தல்

➔ எழுதி முடிந்தவுடனேயே மூடியை மூடல்.

தற்போதைய 5E முறையிலான குழுச் செயற்பாடுகளில் மாணவர்களை மேலே குறிப்பிட்ட அம்சங்களில் சரியான முறையில் வழிப்படுத்தாவிடில் வள விரயம் ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு.

தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக நாளுக்கு நாள் புதிய நுட்பங்களுடன் கூடியதான துணைச்சாதனங்கள் பாவனைக்கு வந்தவண்ணமுள்ளன. இவ்வாறான சாதனங்களின் அறிவுறுத்தல்களை (Cat lock) வாசிப்பதன் ஊடாக சுயமாக இயக்கக்கூடிய ஆற்றலை ஆசிரியர்கள் பெற்றிருத்தல் இன்றியமையாத தொன்றாகும்.

தற்காலக் கல்வியுலகம் புதிய புதிய கற்பித்தல் உத்திகளை நடைமுறைப்படுத்திப் பார்த்து அவற்றின் வினைத்திறனுக்கேற்ப நடைமுறைப்படுத்துவதற்கு அக்கறை கொண்டுள்ளது. அவ்வகையில் E - Learning என்ற தகவல் வலையமைப்பின் ஊடான கற்கை முறைகளிலும் கவனம் செலுத்தப்படுகிறது. ஆசிரியரின்றியே ஒரு விடயத்தைக் கற்றுக்கொள்ளக்கூடியதான அநேக மென்பொருட்கள் பாவனைக்கு வந்துள்ளன. எனினும் பிள்ளையின் நிலையறிந்து அவனின் இயலுமைக்கேற்றவாறு கற்பித்தல் என்பது ஓர் உயிர்ப்புள்ள ஆசிரியரின் பண்பாகும். இதனைத் தனியே கருவிகளால் ஈடுசெய்ய முடியாது.

மாணவரின் மனநிலை அறிந்து கற்பித்தல், மாணவர்களின் ஐயங்களை உடனுக்குடன் தீர்த்தல், மாணவரின் உள எழுச்சிப் பிரச்சினைகளை அறிந்து அதற்கேற்ப கற்பித்தல் முறையை மாற்றியமைக்கும் விவேகம் போன்ற பண்புகளை ஓர் ஆசிரியராலேயே நிறைவேற்ற முடியும்.

எவ்வாறாயினும் மாணவரைக் கற்பித்தலின் பால் கவர்ந்திழுக்கக்கூடியதான மாணவர் மையக் கற்பித்தலில் வினைத்திறன் மிக்க துணைச் சாதனங்களின் பங்களிப்பு இன்றியமையாததாகும்.

**Readers are plentiful, thinkers are rare**

**- Harriet Martine**

**வாசிப்பவர்கள் அதிகம், யோசிப்பவர்கள் குறைவு.**

# மாணவர்களுக்கு விழுமியக் கல்வியின் அவசியம்

திரு ந.பஞ்சாட்சரலிங்கம்,
B.Com, Diploma in Education
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

"மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தாத அறிவாலும் திறனாலும் மக்களுக்கு ஏது பயன்"

உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் பல்வேறு குணாதிசயங்கள், பல்வகை சிந்தனைகள், பலவகை ஆற்றல்கள் கொண்ட சுதந்திர மனிதனாக பிறக்கின்றனான். ஆனால் அத்தனை மனிதர்களும் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப ஏதோ ஒரு கட்டமைப்புக்குள், வரையறுக்கப் பட்ட நியமத்துக்குள், வாழ வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகின்றான். இங்கே மனித சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமேயில்லை என்ற அதேவேளை ஏதோவொரு வரையறைக்குள் அமைந்த புவியில் வரையறுக்கப்பட்ட பௌதீக வளங்களுக்குள் வாழுகின்ற நாம் மனித இனத்தின் நிலைத்திருத்தலை தொடர்ந்தும் உறுதிப்படுத்த வேண்டுமானால் நாம் நியமங்களுக்கும், சட்டங்களுக்கும் வரையறைகளுக்கும் கட்டுப்பட்டே தான் ஆக வேண்டும்.

இத்தகைய நிலைமைகளை மனிதன் இலகுவாக பின்பற்றுவதற்காகவே ஆரம்ப காலங்களில் கல்வி அறிவு குறைந்தாலும் கடவுளிடம் கற்றவர்கள் என்று சொல்லப்படுகின்ற யோகிகள், ஞானிகள், ரிசிகள், தெய்வப்புலவர்கள் என்று சொல்லப்படுபவர்களால் சமயரீதியாக முன்வைக்கப்பட்ட கருத்துக்கள், பழக்கவழக்கங்கள், ஒழுக்க முறைகள், பண்பாடுகள் என்பன மனித விழுமியங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் பின்பற்றப்பட்டுவந்ததும் என்பது வரலாறு.

இந்த விழுமியங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மனிதரிடமும் குடிகொண்டுள்ளது. தற்கால சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள் போன்றோர் இவ்விழுமியங்களை ஆன்மீக விழுமியங்கள், ஒழுக்கவிழுமியங்கள், சுயவிழுமியங்கள், நடத்தை விழுமியங்கள், சமூக விழுமியங்கள் என பிரித்துப் பார்க்கின்றனர். இவை எவ்வாறு பிரித்துப்பார்க்கப்பட்டாலும் ஒட்டுமொத்தமாக எல்லா விழுமியங்களும் மனிதனின் வாழ்வாதாரத்தை மனித சமூகத்தை

மேம்படுத்துவதற்காகவே உருவாக்கப்பட்டன. மனிதனால் மனிதனுக்காக உருவாக்கப்பட்ட இவ்விழுமியங்கள் பல்வேறு காரணிகளின் செல்வாக்கினால் மனிதனாலேயே மீறப்படுவதும் கண்கூடு. அவை இன்றைய உலகின் சமூக பொருளாதார பண்பாட்டு அரசியல் காரணிகளின் செல்வாக்கு இத்தகைய விழுமியங்களின் ஆளுகையில் செல்வாக்கு செலுத்துகின்றன என்பதையாரும் மறுத்துவிடமுடியாது.

கற்கின்ற ஒருவனிடத்தில் (நேரான) சரியான மனப்பாங்கை உருவாக்குபவை, கல்விச் செயற்பாடுகளின் மூலம் நாம் பெறுகின்ற அறிவும் அறிவின் மூலமாக எமக்கு கிடைக்கின்ற சிந்தனைத்திறனும் எமது உள்ளத்தில் நேரான மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். அத்தகைய-தொரு கல்வியே உண்மையான மனித சமுதாயத்துக்கு உதவக்கூடிய கல்வியாகும். அறிவைப்பெறும் ஒருவன் அறிவின் மூலம் தனது சிந்தனையால் திறன் பெறுகின்றான். பெறுகின்ற திறன் ஒவ்வொரு மனிதர்களையும் சிறந்த ஆளுமைக்கு வழிகாட்டுகின்றது. மனித வாழ்வின் நெறிப்படுத்தலுக்கு இலகுவான தொரு சாதனமாக உள்ளது இந்த விழுமியங்கள் தான். பல வகைத்தன்மை கொண்ட மனிதர்களிடம் எல்லா விழுமியங்களும் பின்பற்றப்படாவிட்டாலும் ஏதோ ஒரு விழுமியத்தையாவது பின்பற்றுபவனாக காணப்படுகின்றான். அவ்வாறு ஏதோவொரு விழுமியத்தையாவது பின்பற்றாத மனிதன் தான் சார்ந்து வாழுகின்ற சமூகத்தினால் அல்லது சமுதாயத்தினால் ஒதுக்கப்படுகின்றான். விழுமியங்களை பின்பற்றுவது என்பது பெறப்படுகின்ற அறிவின் மூலம் சிந்தனை ஏற்படுகின்றது ஏற்படுகின்ற சிந்தனை வெளிப்பாட்டின் செயல்வடி-வமே மனப்பாங்கு என்பதாகும். இம் மனப்பாங்கு ஏற்படக்கூடிய அறிவும் திறனும் விழுமியங்களை பின்பற்றச் செய்யும். இவற்றை பின்பற்றுகின்ற ஒருவனிடத்தில் நல்லவை கெட்டவைகளை இனங் காண உதவுவதோடு அவற்றைத் தனது வாழ்நாளில் செயற்படுத்தவும் ஊக்குவித்துக் கொண்டிருக்கும்.

ஆன்மீக விழுமியங்களை எடுத்துக்கொண்டால் கொலை, பாவம், பகிர்ந்துண்ணல், உண்மை பேசுதல், அன்பு காட்டுதல் போன்ற விடயங்களுடாக மனிதன் நல்வழிப் படுத்தப்படுகின்றான். உதாரணமாக உலகின் சகல ஜீவராசிகளினதும் உயிர் அளவு ரீதியான அல்லது பண்புரீதியான வேறுபாடுகள் அற்றவை. எல்லா உயிர்களும் ஒரே அளவான பருமன் கொண்டவை. அதாவது மனிதனது உயிருக்கும் எறும்பின் உயிருக்கும் வேறுபாடு கிடையாது என்ற அறிவைப் பெறும் மனிதர் சிந்தனையின் மூலம் தனது செயற்பாடான அன்பு காடடுதல் ஊடாக கொலை செய்தல் என்ற பாவத்தில் இருந்து விடுபட எத்தனிக்கின்றான். அதன் மூலம கொலை செய்தல் பாவம் என்ற மன்நிலைக்கு உட்படுகிறான்.

நடத்தை விழுமியங்களை எடுத்துக்கொண்டால் கல்வி அறிவுள்ள ஒருவன் வயது முதிர்ந்தவர் அல்லது தனக்கு கற்பித்த ஆசிரியர்கள் போன்றவர்களுடன் உரையாடுகின்ற போதோ அவர்களை அணுகி உதவிகள் பெறுகின்ற போதோ அவர்களின் உடல்உள அசைவு-களில் காணப்படுகின்ற மாற்றத்தை-யும் தன் சகவயது நண்பர்களுடன் பழகுகின்ற போது காணப்படுகின்ற உடல் உள அசைவுகளுக்கும் இடையில நிறைய வேறுபாட்டைக் காணலாம். இதற்கும் மேலாக நாம் பார்த்தால் பெண் பிள்ளைகளை பொறுத்தவரை ஒவ்வொருவரும் சிறுவயதை தாண்டி பராயமடை-தல் என்று சொல்லப்படும் வயதில் உடலில் ஏற்படும் இயற்கை மாறுதல்களின் பின் தனது சகாக்கள், முதியவர்கள், இளையவர்களுடன் பழகுகின்ற போது தங்களை பாதுகாக்கும் ஒரு பக்குவ நிலையுடனனேயே அணுகுவர். அவருடைய உடலில் ஏற்பட்ட மாறுதல்களால் சிந்தனை ஏற்படு-கின்றது. அதன் மூலம் தன்னை பாதுகாக்கும் நடத்தை ரீதியான அணுகுமுறையை பின்பற்ற முனைகின்ற போது நடத்தை மாற்றம் ஏற்படுவதை நாம் அவதானிக்-கின்றோம். இது பெண்களிடம் காணப்படும் இயற்கையான நடத்தையைக் குறிக்கும்.

சுய விழுமியங்கள் என்பதை எடுத்துக் கொண்டால் கற்கின்ற ஒவ்வொருவரும் நான் எனது என்ற அடிப்படையில் ஒரு தனியான தமக்கென உரிதான சில பழக்கங் களை உருவாக்கிக் கொள்வார்கள். தான் கற்ற பாடசாலையை தனது உயிர் மூச்சாகக் கொண்டு தனது வாழ்நாளைக் கழிப்பர். தனது பாடசாலையின் முன்னேற்றத்தில் அயராது தன்னலமற்றுப்பாடுபடுதல், பாட-சாலையின் சொத்துக்களைப் பாதுகாத்தல், வறிய மாணவர்-களுக்கு தானாக மனமுவந்து உதவுதல், எக்காலத்திலும் மது, புகைத்தல் என்பவற்றை தவிர்த்தல் போன்ற ஏதாவது ஒரு பழகத்கத்தை தன்னகத்தே ஏற்படுத்துகின்ற செயற்பாடாக காணப்படுவதை அவதானிப்பதன் மூலம் அவரிடம் சுயவிழுமியங்கள் குடிகொண்-டுள்ளதை அவதானிக்க முடியும்.

சமூக விழுமியங்கள் என்று பார்க்கின்ற போது ஒரு சமூகத்தின் பொதுவான நலன்களை எல்லோருக்கும் பொதுவான தன்மை உடையதாக காணப்படும் சமூக விழுமியங்கள் ஒவ்வொரு இனத்தின-தும் அல்லது தொழிலின் அடிப்படையாக வைத்து கலாசாரத்-தின் பின்னணியாக தொடர்பு-படுவதைக் காணலாம். கலா-சாரத்தை இனத்தை அடிப்படையாக வைத்துப் பார்த்தால் இந்துக்களும் கிறிஸ்தவர்களும் திருமணத்தின் போது பெண்கள் கழுத்தில் தாலி அணிவார்கள். நெற்றியல் குங்குமம் இடுவார்கள். இது இன ரீதியான தமிழர்களுக்குரிய விழுமியமாகும். தொழில் ரீதியாக பார்க்கின்ற போது

விவசாயிகள் நாள் பார்த்து ஏர் பூட்டுவதும் கடற்தொழில் செய்வோர் கடலில் கலம் இறக்குவதையும் உதாரணங்களாக குறிப்பிடலாம்

எனவே ஒட்டுமொத்தமாக எல்லா விழுமியங்களும் மனித சமுதாயத்தை வழப்படுத்துவதற்காக ஆன்மீகவாதிகளாலும் அறிவியலாளர்களாலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களே ஆகும். இவை அறிவியலாளர்களால் கூறப்பட்டால் மாத்திரம் போதாது நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டால் போதாது ஒவ்வொருவரும் தனது பிள்ளைக்கோ அலலது தனது மாணவர்களுக்கோ பயனுள்ள வகையில் கற்பிப்பதன் மூலம் சிந்தனை செயற்பாடு என்பதன் வாயிலாக வெளிக்-கொண்டுவரப்படல் வேண்டும். அவ்வாறு ஆசிரியரால் பயனுள்ள வகையில் நிலைநாட்ட முடியாத கல்வி பயனற்றதாகும். குறிப்பாக தன்னால் முடியாத ஒரு விடயத்தை மாணவன் அல்லது பிள்ளை செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பது மிகப்பெருந்தவறாகும்.

மாணவரிடத்தில் விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமானால் அதற்குரிய வகையில் கல்வித்திட்டங்களும் அமைய வேண்டும். ஆனால் கல்வித்திட்டங்களைப் பொறுத்தவரை இன்றைய பரீட்சைகளை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. கல்வி முறைக்கு புறம்பாக ஒவ்வொரு ஆசிரியரும் தமது மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் சுயமாக முன்வந்து செயற்பட வேண்டிய கடடாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இன்றைய 21ம் நூற்றாண்டை நோக்குவோமானால் பள்ளிக்கூட வாழ்க்கையில் மாணவர்கள் மத்தியில் விழுமியங்கள் பற்றிய உணர்வு உள்ளதா என்பது கேள்விக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. அவற்றுக்கு துணை போகின்ற விடயங்களாக ஆசிரியரின் பழக்க வழக்கங்கள் அமைந்து கிடக்கக் காணப்படுகின்றன. ஆசிரிய சமுதாயத்திடம் முழுமையான மனவளர்ச்சி சமுதாயத்தின் மீதான அக்கறை, இனத்தின் மீது தான் வாழும் தேசத்தின் மீதுள்ள அக்கறை உகலகளாவிய ரீதியில் மனித மனப்பான்மை விழிப்புணர்வு இருத்தல் அவசியமாகும். 18ம், 19ம் நூற்றாண்டுகளோடு ஒப்பிடும் போது அன்றைய ஆசிரியர்கள் குருசீஷ்ய முறையில் கற்பிக்கின்ற போது ஒழுக்க விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது மட்டுமன்றி அவர்கள் உண்மை மனிதர்களாக (குருவாக) வழிநின்றவர்கள். ஆனால் 21ம் நூற்றாண்டில் உள்ள ஆசிரியர்கள் சமுதாயத்தின் பெரும் பகுதியினர் கல்வியை வியாபாரப் பொருளாக வைத்து செயற்படுகின்ற தன்மையும் பகிரங்கமாக மதுபோதை, புகைத்தல் என்பவற்றில் ஈடுபடுகின்ற போது அவர்கள் மாணவர்களுக்கு எவ்வாறு விழுமியக்கல்வியைப் புகட்ட முடியும் என்ற கேள்வி எழுகின்றது.

மாணவர்களுக்கு சிறந்த விழுமியக்கல்வியை அளிப்பதன் மூலம் மாணவரிடம் சிறந்த பண்புகளையும் பக்கச்சார்பற்ற நடுநிலையான ஜனநாயக ரீதியான தன்னை அர்ப்பணிக்கும் மனப்பான்மையை உருவாக்குவதன் மூலம் சமூகத்துக்கும், நாடடுக்கும் பயனுள்ள நற்பிரஜைகளையும் உருவாக்க முடியும். இதுவே இன்றைய கல்வி உலகுக்கு தேவையான விடயமாகும். நவீனத்துவத்தாலும் விழுமியங்கள் கடைப்படிக்கப்படாததாலும் குடும்பங்கள் இடையே கூட சண்டை சச்சரவுகள் சமூக ஒற்றுமை இன்மை, மூத்தோரை மதிக்காமை, குருவை மதிக்காமை, குடி போதை, போலிக்கௌரவங்கள் அன்புணர்வு இன்மை, சினிமா மோகம் போன்ற தீய செயற்பாடுகள் மாணவர் மத்தியில் குடிகொண்டுள்ளதை வகுப்புக்களில் கூட காணக்கூடியதாகவுள்ளது. இந்நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளதால் ஆசிரியர்கள் பாடவிதானங்களுக்கு மேலாக நாள் ஒன்றுக்கு 10 நிமிடங்களாவது விழுமியங்கல்வி வழங்க முன்வரவேண்டும். ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

21ம் நூற்றாண்டின் இன்றைய கல்வி உலகு தமது பண்பாட்டில் பரவிக்கிடக்கின்ற சிறந்த விழுமியங்களோடு இன்றைய நவீன சமூகத்துக்கு தேவையான விழுமியங்களை கல்வியின் ஊடாக அளிக்கப்பட்டால் இளைய தலைமுறை அறிவியல், சமூக, பொருளாதார, கலாசார, பண்பாட்டு மரபுகளை மதித்து பெருமை கொள்வதோடு சமூகத்தின் வளர்ச்சியில் இடையூறான விடயங்களை களைந்து சுற்றுச்சூழலை பாதுகாப்பதோடு நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாறுகளையும் அறியப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு தெரியப்படுத்தும் போதுதான் இனரீதியான உணர்வு, தேசிய உணர்வு போன்ற மனப்பாங்குகள் வளர்ச்சி பெறும். இதன் மூலம் மேற்கு நாடுகளின் நாகரீக இறக்குமதியில் எமது கலாசாரத்தை சீரழியவிடாது பாதுகாப்பதோடு எமது இனம், எமது நாடு, எமது கலாசாரம் என்ற தனித்துவத்தை பேணுகின்ற சமுதாயத்தை உருவாக்கும் சிற்பிகளாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். விழுமியக்கல்வியின் ஊடாக நாமும் எமது இளந்தலைமுறையையும் வழிநடாத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் ஆசிரியர் சமுதாயத்தின் தலையாய பணியாகும். இதன் மூலமே எமது நாடு எதிர்காலத்தில் விடுதலையுடன் கூடிய வளம் பெறும்.

ஆசிரியதின நிகழ்வில் அதிபர்
தென்னங்கன்று பெறுகிறார்



தமிழ்த்தின விழா - 2008



## பாண்ட் குழுவினர்



## சாரணர் பாசறை நிகழ்வின் போது



# கணிதம் கசப்பதேன்?

திரு சு.திருக்கேஸ்வரன்,
Maths, Trained,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

கணிதம் எப்போது ஆரம்பமானது?, என்ற வினாவுக்கு விடை தேட முற்படும் போது இந்த உலகம் தோன்றி உயிரினங்கள் வாழும் சூழ்நிலை ஏற்பட்ட காலத்திலேயே கணிதக் கோலங்கள் தோன்றியிருக்க வேண்டும். இக்கோலங்களைக் கண்ணுற்ற மனிதனின் சிந்தையில் கணித எண்ணக்கருக்கள் தாக்கத்தை ஏற்படுத்தினும், அவற்றை ஒரு வரையறைக்குள் உட்படுத்த பன்னெடுங் காலம் சென்றிருக்க வேண்டும்.

மிகவும் பழமையான வேடுவர் காலத்திலேயே "எண்ணுதல்" எனும் உளரீதியான செயற்பாடு மனிதனுள் தோன்றியது. தாம் வேட்டையாடும் மிருகங்களின் எண்ணிக்கை பற்றிய உணர்வு, நாட்கள் பற்றிய உணர்வு சிந்தனை ரீதியாக மனிதனில் ஏற்பட்டிருக்கும். ஆரம்பகால மனிதன் கூடக்குறைய, பெரிய சிறிய, நல்லது கெட்டது போன்ற பண்புசார் எண்ணக்கருக்களின் அடிப்படையில் தனது அறுவடையைக் கணக்கிட்டிருக்க வேண்டும்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான உணவு தேடும் படலத்திலேயே கணிதத் தேவைப்பாடு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

காலஞ் செல்லச்செல்ல தனிப்பட்ட உரிமை தொடர்பான எண்ணக்கரு மனிதனுள் விருத்தியடைந்து எண்ணுதல் செயற்பாடு மிகவும் உயர்மட்டத்தில் விருத்தியுற ஆரம்பித்தது. பலவித எண்களை அறிந்து கொள்வதற்காக குறியீட்டுப் பயன்பாட்டிலும் மனிதன் பிற்காலத்தில் பழக்கிக் கொண்டதன் பேறாக பல்வேறு எண்குறியீட்டு முறைகள் உலகின் மக்கள் வாழ்ந்த பல்வேறு பகுதிகளிலும் தோன்றியுள்ளன. மிருகங்களின் எலும்புகளால் தாம் வாழ்ந்த கற்குகைகளில் பல்வேறு எண்களைக் குறிப்பிடும் பொருட்டு அடையாளம் இட்டு குறியீடுகளை இனங்கண்டுள்ளனர். ஆபிரிக்காவின் சைரே (Zaire) இல் எட்வேட் வில்தேரனால் கண்டெடுக்கப்பட்ட எலும்புகளிலும், பபிலோனியாவில் கண்டெடுக்கப்பட்ட

மண்பலகையிலும் இவ்வகையான குறியீடுகள் உள.

விவசாயப் பொருளாதாரத்தைக் கொண்ட பபிலோனியர் காலத்தில் தினக்காட்டி அதாவது நாட்களை எண்ணுவது தொடர்பான எளிய விளக்கம் பெற்றிருந்தனர் என்பது தெரியவந்துள்ளது. இக் கணிப்பீடுகள் வானியல் சாஸ்திரத்துக்கு அடிப்படையாக அமைந்தமையும் இங்கு நோக்கத்தக்கது.

ஆதிகாலத்தில் பெரிய தொகைகளை எண்ணுவதற்கான தேவைப்பாடு இருந்த போதிலும், பபிலோனியர் காலத்திலேயே அவற்றிற்கான குறியீடுகள் பயன் படுத்தியமை அறியக்கூடியதாகவுள்ளது.

கி.மு 2500 ஆண்டளவில் வாழ்ந்த சுமேரிய வியாபாரிகள் நிறையும் அளத்தலும் முறையைத் தமது வியாபார நடவடிக்கைகளில் பயன்படுத்தியமைக்கான சான்றுகள் உள. கணித வரலாற்றைக் கருதும் போது கிரேக்க அறிஞரான பைதகரசின் காலம்(கி.மு 569 - 500) முக்கியமானதாகும்.

பைதகரஸ் ஒருபுறம் தத்துவசாஸ்திரத்திற்குரியவராக விளங்கியதுடன், கணிதத்தில் எண்கணிதம், கேத்திரகணிதம், வானசாஸ்திரம் ஆகியனபால் பல வெளிப்படுத்தல்களை வெளியிட்டுள்ளார். “எண்கள் மூலம் அகிலம் ஆளப்படுகிறது” என்ற அவரது நம்பிக்கை இன்றைய தகவல்த் தொடர்பாடல்த் துறையிலும் யதார்த்தமாவதை நாம் காணலாம். அதுமட்டுமல்ல இன்று உலகில் நடைபெறும் இயற்கை நிகழ்வுகள் எல்லாம் நவீன கணிதப் புள்ளி விபரவியலாளர்களான பேணுாயி, பொய்சோன் போன்-றோரின் எதிர்வு கூறலை ஓரளவுக்கேனும் அனுசரித்துப் போவதை அவதானிக்கலாம். இவற்றிலிருந்து பைதகரசின் கருதுகோளின் உண்மைத் தன்மையை நாம் உணரலாம்.

கிரேக்கர் காலத்துக்குப் பின் கணிதம் வளர்ச்சியுற்றதற்கு இந்துக்களே காரணமானார்கள் என்பதை நாம் பெருமையுடன் நினைவு கூர வேண்டும். இந்துமதப் பிராமணர்கள் மதத்தையும் தத்துவத்தையும் மட்டுமே தமது வாழ்வின் இருகண்களாகப் போற்றினர். கிரேக்கர்கள் எவ்வாறு கேத்திரகணிதத்துறையில் தமது சிந்தனையைச் செலுத்தினார்களோ அவ்வாறு இந்துக்கள் எண்கணிதத்-திலும், அட்சரகணிதத்திலும் தமது சிந்தனையைச் செலுத்தினார்கள். இதன் விளைவாகவே அகில உலகமும் இன்று பயன்படுத்துகின்ற 0, 1, 2, 3, ... என்ற அடிப்படை இலக்கங்களும் தசம எண்முறையும் இந்துக்களாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. இந்துக் கணிதவியலாளர்-

களுள் ஆர்யபட்டர் பிரமகுப்தா, மகாவீரர் போன்றோர் முக்கியமானவர்கள்.

இந்துக்களுக்கும் அரேபியர்களுக்கும் இடைப்பட்ட வர்த்தகத் தொடர்பின் பேறாக, இந்தியாவிலிருந்து அரேபியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்துக்களின் அட்சரகணிதம் Algebra என்ற அரேபியப் பெயருடன் உலகில் பவனி வரத்தொடங்கியது.

இவ்வாறு ஆதி காலம் தொட்டே வாழ்க்கையில் பல்வேறு செயற்பாடுகளின் மூலம் விருத்தியடைந்து கணிதம் ஓர் பெருந்துறையாக உருப்பெற்றுள்ளது. முற்காலத்தில் நட்சத்திரங்களினதும் உடுக்களினதும் அமைவிடம், வடிவம் என்பவற்றின் மூலம் திசை, காலம் என்பன கணிக்கப்பட்டன. இதிலிருந்து நாம் சுற்றாடலில் இருந்து பெறும் கணித அறிவு உன்னதமானது என்பதை உணரலாம்.

கணிதத்தை சுயாதீனமாக கற்றுக்கொள்வதற்கு அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பாடசாலைகளில் ஆசிரியர் விளக்கும் கணிதவிடயங்களில் மீண்டும் மீண்டும் நாம் சிந்தனையை செலுத்துவதனூடாக அனுபவவாயிலாக பல முடிவுகளைப் பெறலாம்.

ஒரு சாதாரண ஏழைத்தொழிலாளியான கெப்பார்ட்டின் இரண்டாவது மனைவி வீடுகள் தோறும் சுத்தம் செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்தவர். இவர்களது புதல்வன் காஸ் தன் தந்தை தனது சக கூலியாட்களுடன் சம்பளம் பகிரும் போது, அவர் கணிப்பில் தவறு ஒன்றைக் கண்டுபிடித்தான். ஏழாவது வயதில் ஒரு நாள் வகுப்பில் நுழைந்ததும், பாடப் பிரவேசத்துக்காக ஆசிரியர் கொடுத்த ஒரு கணக்கை நொடியில் செய்து வகுப்பை அதிர வைத்தான். 1 இலிருந்து 100 வரையுள்ள முழு எண்களின் கூட்டுத்தொகையைக் கணிப்பிடும் கணக்குத்தான் அது. காஸ்க்கு உடனே தோன்றியது 1 முதல் 100 வரையில் உள்ள எண்களில் 50 சோடிகள் இருக்கின்றன. அதாவது 1-100, 2-99, 3-98, ... என்பன. இவ்வொவ்வொரு சோடிகளினதும் கூட்டுத்தொகை 101. ஆகவே 50 சோடிகளின் கூட்டுத்தொகை 5050 என விடையளித்தான். இங்கு காஸ் ஒரு மீத்திறன் மிக்க மாணவன் எனக்கூறிவிட்டு நாம் சும்மா இருந்து விடலாம். ஆனால் இங்கு உண்மை என்னவெனில் காஸ் தனது கற்றல் அனுபவத்தைச் சூழலுடன் பொருத்தியமையாற்றான். அவ் வினாவுக்கு எளிய வழியில் விடையைப் பெற்றான். இன்று பெரும்பாலான மாணவர்கள் இந்தக் கணக்குக்குப் பெருக்க வேண்டும், அதற்குப் பிரிக்க வேண்டும் என்று

மனப்பாடம் செய்து வைத்திருப்பதைக் காணலாம். இவர்கள் தமது சிந்தனைத்திறனை வறிதாக்கி தாமே தமக்கு மந்த புத்தியுள்ளோர், மெல்லக்கற்போர் என்ற தராதரங்களைச் சூட்டுவதைக் காணலாம். எந்த ஒரு கணித வினாவையும் வாசித்து சூழலுடன் இயைபுபடுத்திச் சிந்திக்காவிடின் அதற்கு விடையளிக்க முடியாது. ஒரு கிலோ சீனியின் விலை 60 ரூபா எனின், 21/2 கிலோ சீனியின் விலை யாது? போன்ற வினாக்களுக்குக் கூட க.பொ.த சாதாரணதரப் பொதுப்பரீட்சையில் 50% இற்கு மேற்பட்ட மாணவர்கள் சரியான விடையளிப்பதில்லை. ஆனால் இவர்கள் கடைக்குச் சென்று பல பொருட்களை வாங்கி, சிட்டையைச் சரிபார்த்து, பணத்தைக் கொடுத்து மிகுதிப் பணத்தையும் சரியாக வாங்கி வருகின்றனர். தாமே சில பொருட்களைச் சந்தையில் விற்கும் போது சரியாகக் கணித்தல்களை மேற்கொள்கின்றனர்.

கணிதமானது இயல்பாகவே சிந்தனையூட்டுவதாகவும், புத்துணர்ச்சி ஊட்டுவதாகவும் உள்ளமையால் கணிதத்தை அனுபவவாயிலாகச் சிந்திப்பதே பயனுள்ளதாகும். இன்றைய கணனி யுகத்தில் கூட பெரும்பாலான மாணவர்கள் கணிதப் பரீட்சைகளில் வினாக்களுக்கு விடையளிக்கும் போது தெரியாத ஓர் மொழியில் செய்தியைத் தெரிவிக்கும் செய்தியாளர் போன்று நினைவில் பதித்து வைத்துள்ளதை இயன்றளவு விரைவாக விடைத்தாளில் எழுதி முடிக்க முயற்சிப்பர். இதனை யூலர் - டிடேரோவின் கோட்பாட்டின்படி சுயாதீனமான சொந்த முயற்சியற்ற கற்கை எனக் குறிப்பிடலாம்.

-103-கணிதத்தில் வெவ்வேறு விடயங்களுக்கு இடையிலும் கணிதத்துக்கும் வேறு பாடப் பரப்புகளுக்கும் இடையிலும் காணப்படும் தொடர்புகளை இனங்காண்பதன் மூலம் பெறப்படும் அறிவைப் புதிய சந்தர்ப்பங்களில் உபயோகிக்கும் திறன்களைப் பரீட்சிக்கக்கூடிய பெரும்பாலான வினாக்களே இன்று பொதுப் பரீட்சைகளில் வினாவப்படுகின்றன. தனியே கணிதத்தை கற்றலுக்குரிய ஒரு பாடமாகக் கொள்ளும் போது இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்க முடியாது. கணிதத்தை அனுபவவாயிலாக உணர்ந்து கற்ற மாணவர்களே இவ்வாறான வினாக்களுக்கு விடையளிப்பர்.

இங்கு அனுபவம் என்பது எமக்குப் புதியதல்ல. மாணவன் தன் சூழலுடன் இடைத்தாக்கம் புரிந்து பெற்ற அனுபவங்கள் மூலம் கற்கின்றான். இவ் அனுபவங்கள் அதிகரிக்கும் போது அவர்களுடைய கற்றலும் அதிகரிக்கும். எமது ஆரம்பக் கணித அனுபவங்கள் பருப்பொருள்கள் மூலமே கிடைக்

கின்றன. பருப்பொருள் தொடர்பான புலக்காட்சி மூலமும் அவற்றுடன் ஏற்படும் இடைத் தொடர்புகள் மூலமும் அனுபவத்-திரளமைப்பு (ஸ்கிமா) ஏற்படுகின்றது என உளவியலாளரின் ஆராய்ச்சியில் இருந்து அறியக் கிடைக்கின்றது. புலக்காட்சிக்கும் செயற்பாட்டுக்கும் இடையேயுள்ள தொடர்புகளின் மூலம் எண்ணக்கரு உருவாதல் கணிதம் கற்றலின் முதற்படியாகக் கருதப்படலாம்.

இன்று கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் தரமான உள்ளீடு-களைப் பயன்படுத்தவென அரசாங்கம் வருடா வருடம் மாணவர் தொகைக்கு ஏற்ப, ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் பெருந்தொகைப் பணத்தை வழங்குகின்றது. இவ் நிதியைப் பயனுள்ள வகையில் பாடசாலைகள் பயன்படுத்தும்போது, யாதாயினும் ஒரு கணித எண்ணக்கருவை உருவாக்கும் பணியைக் கற்றற் சாதனங்களைக் கொண்டு இலகுவில் நிறைவேற்றலாம்.

மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளுக்கும் கணித அறிவு இருப்பதற்கான ஆதாரங்கள் முன்வைக்கப்படலாம். மீனைக் கொத்தக் காத்திருக்கும் மீன்கொத்தி, இரையைக் கவரக்குறிபார்க்கும் பூனை இவ்வாறான கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியடையத்-தவறுவதற்கான முக்கிய காரணி அவர்களது சோம்பலே ஆகும்.

ஆகவே நாம் இச்சோம்-பலைப் போக்க வேண்டும். ஒரு விளையாட்டு வீரனுக்குப் பயிற்சி எவ்வளவு முக்கியமானதோ, அதே போல் கணிதத்தில் தேர்ச்சி பெறவும் பயிற்சி அவசியமாகின்றது. வரலாறு, விஞ்ஞானம் போன்ற பாடங்கள் எவ்வாறு நமது சூழலுடன் பின்னிப்பிணைந்து காணப்படு-கின்றதோ, அவற்றைவிட மேலாக கணிதம் நமது வாழ்வியலுடன் இணைந்துள்ளதைக் காணலாம். இப்பேர்ப்பட்ட எளிய பாடத்தை நாம் ஏன் கடினமானதாகச் சிக்கல் படுத்த வேண்டும். ஆண்டவன் நமக்குப் படைத்த மூளையைப் பயன்படுத்தி எமது சிந்தனை சக்தியை வளர்த்துக்கொள்ள வேண்டும். நமது மனதை ஒரு முகப்படுத்திக் கணிதம் கற்றால் கணிதத்தைப் புறக்கணிப்பது பெரும் சிரமமான விடயம் என்பதை நாம் அனுபவவாயிலாக உணர முயற்சிப்பதில்லை. புறக்குடத்தில் வார்க்கும் நீரால் குடம் நிரம்பாது எனத் தெரிந்தும் தொடர்ந்தும் புறக்குடத்திலேயே நீரை ஊற்று-வதால் என்ன பயன்?. கணித வினாக்களுக்கு விடையளிக்க முற்படும் போது ஏனோ தானோ என்று விடையளிக்காது சிறிது சிந்தித்து ஓரளவு தர்க்க ரீதியாக விடைகளைப் பெறுதல் வேண்டும். கணித வினாக்களை விளங்கிக்-கொள்வதற்கு தாய்மொழியில் வாசிக்கும் திறன் சுமாராகக் காணப்படுதல் வேண்டும். கண்டது

கற்கப் பண்டிதனாவான் என்பது போல் நாம் தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், கடைகளில் பாசல் கட்டித்தரும் பத்திரிகைத் துண்டு-களைக் கூட வாசித்தல் வேண்டும். இன்று யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள், சனசமூக நிலையங்கள், பாடசாலை நூலகங்-கள் போன்றன பெருமளவு பணத்தொகையைச் செலவிட்டு பத்திரிகைகள், சஞ்சிகைககளைக் கொள்வனவு செய்து மக்கள் வாசிக்க வழிசெய்தும் அவற்றைப் பயன்படுத்து வோரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படு-கின்றது. தொலைக்காட்சியின் தாக்கத்தினால் வாசிக்கும் பழக்கம் வெகுவாகக் குறைந்து வருகின்றது. வாசிப்பதால் மனிதன் பூரணமடை-கின்றான் என்ற வாக்கியத்தை நாம் என்றும் மறக்கக்கூடாது. எவ்வளவு தான் நாம் கணனியுகத்தில் வாழ்ந்தாலும் சுயமாக வாசிக்கவோ எழுதவோ தெரியாத ஒருவரால் எந்த ஒரு கற்கையையும் மேற்கொள்ள முடியாது என்பது வெள்ளிடைமலை. கணிதம் தர்க்க ரீதியான ஒரு பாடம் என்பதால் ஒரு வினாவில் வரும் ஒவ்வொரு எழுத்தும் வலுவுடைய-தாக அமைவதைக் காணலாம். உதாரணமாக "உதைபந்து விளை-யாடுவோரின் எண்ணிக்கை" என்பதற்கும் " உதைப்பந்தேனும் விளையாடுவோரின் எண்ணிக்கை" என்பதற்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதை அவதானிக்-கலாம்.

ஆகவே மாணவர்கள், பெற்றோர்கள் ஆசிரியர்கள் கூட்டாக இணைந்து கவனம் எடுக்கும் போதுதான் கணிதபாட அடைவு மட்டத்தை உயர்த்த முடியும்.


உசாத்துணை நூல்கள் :

1. கணிதம் கற்பித்தல் முறைகள், தேசிய கல்வி நிறுவகம்
2. பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி முகாமைத்துவ தர உறுதிப்பர்டு அலகு, கல்வி அமைச்சு
3. தரமான கல்வி உள்ளீடுகள், கல்வி அமைச்சு


**The great end of life is not knowledge but action**

*- Thomas H.Huxley*

வாழ்வின் மிகப்பெரிய முடிவு அறிவல்ல, செயற்பாடே.

## மாணவர் ஆக்கங்கள்

# போதைப்பொருட் பாவனை

செல்வி.க.சர்மிலா
க.பொ.த (சா/த) தரம்
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

சமகால மானிடச் சமூகம் குறிப்பாக மாணவச்சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் போதைப்பொருட் பாவனையானது ஓர் தீவிர பிரச்சினை யாக இனங்காணப்பட்டது. வளம் நிறைந்த நாடுகளில் மட்டுமல்ல குறைவிருத்தி நாடு களிலும் கூட இதுவோர் அச்சுறுத்தும் பிரச்சினை யாக இன்று தலையெடுத் துள்ளது. போதைப் பொருட்பாவனை ஓர் தனியாள் சம்பந்தப்பட்ட விவகாரமாக ஆரம்பித்து நாளடைவில் சமூகத்திற் குரிய பிரச்சினையாகப் பரிணாமம் பெற்று விடுகிறது. இவை உடல், உள, சமூக ரீதியில் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. நாட்டுச் சட்டங்களிற்கும் அரசாங்கத்திற்கும் சவாலாக மாறி விடுகிறது. கொலை, களவு, கற்பழிப்பு போன்ற சமூகத்தீங்கியல்களுக்கு அடிப்படை யாகி விடுகிறது. இவ்வாறான போதைவஸ்துப் பிரச்சினை குறித்து ஆராய வேண்டிய அவசியமும் அவசரமும் ஏற்பட்டிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் போதை வஸ்துப் பாவனையை ஊக்குவிக் கின்ற உடனடிக்காரணியாக அமைந்தது 1950ம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட சிலவகையான போதைவஸ்துக்கள் பாதகமற்றவை எனவும் மனதிற்கு சாந்தி தரக்கூடி யவை எனவும் இனங்காணப்பட்டது. இத்தகைய இனங்காட்டல் போதைவஸ்துப்பாவனையை தூண்டிவிடுகின்றதொன்றாகவும், மனநிலைகளைக் குழப்புவதாகவும் மக்கள் மத்தியில் ஈர்ப்பினை ஏற்படுத்தவும் வழிவகுக்கின்றன. போதைப்பொருட்கள் நாளுக்குநாள் கண்டுபிடிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன. இவற்றிற்கு உதாரணமாக கெரொயின், மோர்ரீன், கொடீன், மெதடோன், கோகெயின் மற்றும் அபின், மது, புகையிலை, கஞ்சா போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அடுத்து போதைப்பொருட்களால் ஏற்படும் தீமைகள் பற்றி ஆராய்ந்தால், வீட்டிலே வறுமை, பசி, பட்டினி, சச்சரவு, தொழில் புரியும் இடத்தில் தகராறு, வேலை இழப்பு, நம்பிக்கையின்மை என்பன ஏற்படும் பிள்ளைகளின் கல்வி மிகவும் பாதிப்படைகின்றது. ஏனையயோரின் உதவி தேவைப்படும். உடலை வருத்தி வீணே உழைத்தபணம் கரைகிறது. மானம் அழிவடை கின்றது. வீட்டில் சோகம் குடி

கொள்கிறது. கல்லாதிருந்த உடல் புல்லாகிப்போகிறது. சிந்னையின் பிறப்பிடமாம் மூளை செயற்பட மறுக்கிறது. இவ்வாறு ஏராளமான தீமைகள் இப்போதை வஸ்துப் பாவனையால் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன.

இவ்வாறான போதைப்பொருட்களை புகையுடன் சேர்த்து புகைப்பிடிப்பதன் மூலமாகவும், வாய்மூலமாகவும், நரம்புள் ஊசியால் குத்தியும், தசைக்குள் ஊழியால் குத்தியும், மதுபானத்துடன் கலந்தும் உணவுடன் கலந்தும் இவ்வாறு பலவகையாகப் பாவிக்கின்றனர். இவ்வாறு போதைப் பொருட்களை பாவித்தவர்களிற்கு உண்மை, பொய், நீதி, அநீதி, சரி, தவறு எதுவுமே தெரியாது. மன உளைச்சலுடன் காணப்படுவர். ஆடை விலகுவதே தெரியாமல் நிற்பர். கைச்சாடையால் பேசுவர். தீயவார்த்தைகள் பேசுவர். தேவை யற்ற வாக்குவாதம் மேற்கொள்வர். தவறான பாலியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிப்பர். பலரது ஏளனம், அவமானம் போன்ற தாக்கங்களிற்கு உட்படுவர். இவ்வாறு உணர்ச்சியற்ற தன்மையில் காணப்படுவர்.

இப்போதைப் பொருட்பாவனையினால் உயர்குருதி அமுக்கம், சுவாசப்பை அழற்சி, இரப்பை அழற்சி, நுரையீரல் புற்றுநோய், காசநோய் போன்ற பலநோய்கள் ஏற்படுகின்றன. சுவாப்பைக்குழாய் அழற்சியானது சிகரெட் புகையிலுள்ள நிக்கொட்டின் மற்றும் கிறியேற்றின் போன்ற பல இரசாயனப்பொருட்கள் சுவாச மேலணியிலுள்ள பிசிரக கலங்களின் தொழிற்படாத நிலைக்கு மாற்றும் அடுத்து இரப்பை அழற்சி ஏற்படக் காரணமான மனஅழுத்தம், மதுப் பாவனை, புகைத்தல் போன்ற வற்றினால் இரப்பையின் முழுச் சுவரும் பாதிப்படைகிறது. இதனால் இரப்பை சுருங்கி புற்று நோய் ஏற்படக்காரணமாய் அமைகின்றன.

இவ்வாறு தீங்கு பயக்கும் தன்மைகளையுடைய போதைப் பொருட் பாவனையை ஏன் தடுக்க முடியாதுள்ளது, என்று தெரியுமா? முதலாவதாக மது உற்பத்தி விற்பனையினால் கிடைக்கும் பெருந் தொகையான வருமானம். மற்றையது மது விலக்கை அமுல்படுத்தினால் நாட்டில் திருட்டுத் தனமாகக் காய்ச்சும் மதுப்பழக்கம் அதிகரித்து விடும். இதனால் சுகாதாரத்திற்கு கேடுவிளையும். இவ்வாறான காரணங்களைக் குறிப்பிடமுடியும்.

இப்போதைப் பொருட்களைத் தடுக்கும் முயற்சிகளை பார்ப்போமே யானால் முதலில் "மக்களை விழிப்புணர்வடையச் செய்வதே" முதற்காரணமாய் விளங்குகின்றது. மக்களை விழிப்புணர்வடையச் செய்யாவிடின் எந்த சக்தியாலும் போதைப் பொருட் பாவனையை அழித்துவிட முடியாது. அடுத்து கல்வி நிலையங்கள், சமூகசேவை நிறுவனங்கள் முன்வரவேண்டும. அரசு சட்டரீதியான போதைப்பொருள் உற்பத்தி இறக்குமதி, விற்பனை ஆகியவற்றைக் கைவிட வேண்டும்.

மாணவர்கள் உரியவர்களால் கண்காணிக்கப்பட்டு அவர்களிற்கு நல்ல நூல்கள், விளையாட்டுக்கள், பொழுதுபோக்குகள், கலை நிகழ்வுகளில் பங்குபற்றும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இளைஞர்களுக்கும் தொழில் வாய்ப்புக்கள், கல்வி வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். சினிமாத்துறையாலும் போதைப் பொருட் தீங்கை ஏற்படுத்துகின்ற கருப்பொருளை அடிப்படையாக வுடைய திரைப்படங்கள் உருவாக்க வேண்டும். போதைப்பொருள் விற்னையினால் கிடைக்கும் வருமானத்தையும் விட அதனால் ஏற்படும் கேடு மிகவும் பாரதூரமானது என்பதை சமூகத்திற்கு உணர்த்த வேண்டும்.

"கையறியாமை புடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறியாமை கொளல்"

என வள்ளுவர் அழகாகப் பாடியுள்ளார். அதாவது பல தீங்கு களை விளைவிக்கக்கூடிய போதைப் பொருட்களை பணம் கொடுத்து பெற்றுக்கொள்வது அறியாமையே எனக்குறிப்பிட்டுள்ளார். எனவே வள்ளுவரின் வாக்கிற்கிணங்க உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து போதை வஸ்துப் பாவனைக்கு எதிராகப் போராடி வாழ்வில் நற்பிரஜையாக உருவெடுப்போமா !

*வரபிராந்திய நல்லொழுக்க சம்மேளனம் நடாத்திய கோட்ட மட்ட கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை*



# அன்பு

ந.பவிதா
தரம் 8B
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

அன்பு என்ற மூன்றெழுத்தினுள்ளே இந்த அகிலமே அடங்கியிருக்கின்றது. அன்பு தான் இன்ப ஊற்றாகும். இவ் அன்பினூடாகத் தான் அண்ட சராசரங்கள் எல்லாம் இயங்குகின்றன. இவ் அன்பிற்கும் அம்மா என்ற மூன்றெழுத்துக்குமிடையே நெருங்கிய பிணைப்பு உண்டு. ஒரு குழந்தை யானது பிறந்தவுடன் கூறுகின்ற முதல் அன்பு வார்த்தை அம்மா என்பதே ஆகும். இவ் உலகமே இயங்கு வதற்கு அன்பு பிரதானமாக இருப்பதனால் தான் பொய்யா மொழிப்புலவர் தமது குறட்பாக்களில் அன்புடமை என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்ற கூற்றுக்கிணங்க மனிதராகப் பிறந்ததே யாம் பெற்ற புண்ணியமாகும். எனவே நாம் மானிடனுக்குரிய மனிதப் பண்புகளை மதித்து அவற்றைப் பின்பற்றி நடத்தல் வேண்டும். நம் உறவினர்கள், நண்பர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், சிறியோர்கள் போன்றோருடன் அன்பாகப் பழக வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயற்பாடுகளும் அன்பினூடாகவே நிகழ்த்தப்பட வேண்டும். மற்றவர்கள் கூறுகின்ற அன்பு வார்த்தைகளைக் கேட்டு நடத்தல் வேண்டும். பிற உயிர்களை நம் உயிரைவிட மேலாக மதித்து நடத்தல் வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பேசும் போதும் அன்பு வார்த்தைகளையே கேட்க வேண்டும். நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியங்கைளயும் அன்பின் ஊடாகவே ஆற்ற வேண்டும். அன்பின் வழி நின்று வாழ்வில் வெற்றி கொண்டார்கள் பலர். கண்ணகி தன் கணவன் மீது கொண்ட அன்பினால் தன் கணவனைக் கள்வன் எனக்கூறிய பாண்டிய மன்னனை அழித்தமை" மகாபாரதத்திலே ஏகலைவன் தன் குரு மீது கொண்ட பக்தியினால் தனது விரலை வெட்டிக்கொடுத்தமை" மேலும் அருச்சுணன் விராட தேசத்து மன்னனை சிறைப்பிடித்து வந்து தன் குருவான துரோணாச் சாரியாரிடம் ஒப்படைத்தமை. சீதை இராமன் மீது கொண்ட அன்பினால் இராமனுடன் காட்டுக்குச் சென்றமை, இராமன் தன் தாய் சொல்லைத் தட்டாமை" போன்றனவே அன்பின் செயற்பாடாகும். இவற்றின் மூலம் நாம் அப்பின் மேன்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

மேலும் அன்பானது தாய், தந்தை, சிறுமியர்கள், பெரியோர்கள். ஆசிரியர்கள், மதகுருமார், மாணவர்கள், முதலாளி, தொழிலாளி என்பவர்களினூடாகவே வளர்க்கப்படுகின்றது. இது எல்லோர் மனங்களிலும் ஏற்பட வேண்டும். ஒருவர் சுயநலமின்றி வாழ்வார் ஆயின் இவ் உலகத்தில் அன்பு மேன்மை அடையும். இதனூடாக. நாம் இவ் உலகத்தில் எதையும் சாதிக்க முடியும். ஆகவே அன்பே "உலகஜோதி", அது தான் மகாசக்தி இதை இந்து தர்மமும் எடுத்துக் காட்டியுள்ளது.

இவ் அன்பு அறிவைத் தரும் விளக்கிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. எனவே விளக்கானது பிறருக்கு ஒளியைக் கொடுப்பது போல இவ் அன்பும் உறவு, மகிழ்வு, பொறுமை, கூட்டுணர்வு போன்ற மனித நேயப் பண்புகளை எம்மிடையே உருவாக்கி ஓர் சிறந்த மனித சமுதாயத்தை உருவாக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் பிறருடன் அன்பு பாராட்டி வாழ்வோம்.

"அன்பே சிவம்
அன்பே இன்ப ஊற்று"

# கல்லறையும் கண்ணீர் விடும்
## ஓரங்க நாடகம்

செல்வன் பொ.கிருஷாந்
க.பொ.த உயர்தரம் - 2009
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

**கதை கரு**

பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு பாடுபடலும் பிள்ளைகளால் பெற்றோர் புறந்தள்ளப்படலும். திரை அகன்று மேடையில் சந்தோஷமான இசை தவழ தந்தை மகனிடம் புத்தகமொன்றைக் கொடுக்கிறார்.

தந்தை : ஐயோ! தம்பி வளர்த்த கிளி பறந்து போகுதடா (என்றவாறு ஓடி வருவார்) ஏப்பா கண்ணா நல்லா படிக்க வேணும் என்ன (முகம் குளிர்ந்தவாறு)

மகன் : ..........................................................

தந்தை : தம்பி இந்த அப்பன்ர உசிர் இந்த கூட்டோட உறவாடும் வரைக்கும் நான் உங்களை பார்ப்பன்ரா (என்றவாறு மன ஆதங்கத்தையும் தனது கடமையுணர்வையும் கூடவே வெளிப்படுத்துகிறார்)

மகன் : ..........................................................

தந்தை : என்ன தம்பி சொல்லுறா இப்ப அம்மாவுக்கும் வருத்தம், நான் கொஞ்ச நாளைக்குப் பிறகு எடுத்துத்தாறன்

மகன் :- ..........................................................

தந்தை : என்னடா மோனே வீட்டு நிலைமையை கொஞ்சம் உணர்ந்து கொள்ளன். (என்றவாறு தந்தையும், மகனும் உரையாடிக்கொண்டிருக்கும் போது அரங்கில் ஓர் உணர்ச்சிப் பாடல் ஒலிக்கும்)

"கண்களில் ஒளியுமில்லை
கவிதைகளில் வார்த்தையில்லை
மரணத்தின் விளிம்பில் நாங்கள்
மாரடித்து சாவதென்றால் - மனித
பிறவியை நிராகரித்து கொள்வோமடா"

(என்ற பாடல் ஒலித்து ஓய கணவன் மனைவியுடன் செல்கின்றான் அவளருகில் உட்கார்ந்திருந்தவன் அவளிடம் எதையோ எதிர்பார்க்கின்றான். அவருடைய உதடுகள் அசைய மறுக்கின்றன. விழிகள் திறந்திட இமைகளின் உத்தரவு கிடைக்கவில்லைப் போலும்)

கணவன் : ஏப்பா கமலம் என்ன............ என்ன மாதிரி இருக்கு

மனைவி : ...............................

கணவன் : ஆ....... ஆ.......... பின்ன ரண்டு மூண்டு நாளையால திக்கேற்று வெட்டிப் போடுவினம் தானே?

மனைவி : ...............................

கணவன் : அவன் இருக்கிறான். இப்பத்தான் கமலம் கண்ணன் ஏதோ புத்தகம் கேட்டான். பின்ன சம்பளம் தந்த காசில வாங்கிக் குடுத்திட்டு வாறன்.

கணவன் : என்னப்பா சொல்லுற பெத்த பிள்ளைக்கு அதுகள் கேட்கிறதெல்லாம் வாங்கிக் கொடுக்கிறது எங்கட கடமை தானே..........

மனைவி : ..........................

கணவன் : என்ர பிள்ளை அப்பிடிச் செய்ய மாட்டான். எனக்குத் தெரியாதே என்ர பிள்ளையைப் பற்றி (என மனைவியிடம் வீர உரை புகர்கிறான். ஆனால் அவனுடைய செயல்கள் யாவற்றையும் தந்தை அறியவா போகின்றார் என்றவாறு அவர் வைத்தியசாலையைவிட்டு வெளியே செல்வார் தந்தை கடமையில் ஒருவராக இருந்தாலும் மதுவின் மடியில் மண்டியிடும் பழக்கமும் இவரிடமுண்டு. போதையில் வீட்டிற்கு வந்து மகனோடு எதையோ உரையாடுவார். அப்போது மேடையானது ஏழைக்குடிசை போன்ற அமைப்பினைப் பெற்றுவிடும்.)

தந்தை : (குரல் தடுமாற) கண்ணன் நீ டாக்குத்தருக்குப் படிக்க வேணும். என்ர மகன் டாக்டர் எண்டு உந்த இடமெல்லாம் நான் சொல்ல வேணும் .... (என்று சொல்லுவார்... ஆனால் கண்ணன் கலைப்பிரிவில் கல்வி கற்கும் ஒருவன் எப்படி வைத்தியராவது ஆனால் ஏதோ அதிகம் தெரிந்தவரைப் போல பேசுவார்)

மகன் : .......................................

தந்தை : எனக்கும் தெரியும்தானே நானும் படிச்சனான்டா தம்பி

மகன் : ...............................

தந்தை : ஓமடா இப்ப படிக்கிற பெரிய படிப்புக்கள் அப்ப படிச்ச இரண்டாம் வகுப்புக்குச் சரியடா மோனே (என பழைய கால படிப்பின் மகிமையை வாயோயாது கூறிக்கொண்டே இருந்தார். காட்சி நிறைவு பெற அரங்கின் திரைச்சீலை மெல்ல அரங்கைப் போர்த்திக்கொள்கிறது. என்ன அவனுக்கு பிற்காலத்தில் வாழ்க்கையே வெறுமையாகப் போகிறது என்பதை அவன் தெரிந்து கொள்வில்லை.)

## காட்சி II

(காலப் பின்னணியில் பல வருடங்கள் புரண்டோடின கண்ணன் தனது சாதாரண தர படிப்புக்களை முடித்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகின்றான். எப்படியோ தந்தையினதும், தாயினதும் கனவுகள் பலித்துவிட்டன. அவனைப் பார்த்த பெற்றோர்களின் உள்ளங்களில் ஏதோ ஒன்று கசிந்து சந்தோசத்தைக் கொடுத்தது. ஆனால் இவனது நடத்தைகள்)

கணவன் : என்ன கமலம் என்ர மகன், நான் பெத்த பிள்ள எப்பிடி தன்ர இலக்கை அடைஞ்சு விட்டான். (என அரங்கில் பெருமிதப்படுவான்)

மனைவி : .....................................

கணவன் : என்ன? இனி எங்கள இருக்கவிட்டு சோறு போடுவான்.

மனைவி : .....................................

கணவன் : ஓமப்பா எல்லாத்தையும விட அவனுக்குக் கம்பேசில பட்டம் குடுக்கப் போறாங்களாம். நாங்களும் போவம் (என்று கணவனும், மனைவியும் தங்கள் எண்ணங்களையும் மகனது செயலையும் நினைத்துக்கொண்டு ஏதேதோ பேசியவாறு புறப்பட்டுச் செல்வார். அப்போது அரங்கில் ஒரு விதமான இசை அரங்கை அலங்கரிக்கும்)

கணவன் : இஞ்ச கமலம் உங்க என்ர பிள்ளை போறான். ஒருக்க கூப்பிடன்

மனைவி : ...............................

கணவன் : என்னப்பா எங்கட பிள்ளதானே கூப்பிடன்

மனைவி : ...............................

கணவன் : சரி நான் கூப்பிடுறன் தம்பி கண்ணா............. டேய் என்ர செல்லம் ........ (என நீண்ட நாள் மாற்றீடு செய்ய வேறு துணி இல்லாததால் பழைய உடையுடன் மகனைக் கூப்பிட்டு ஓடுகிறான்.......... அப்போது)

கணவன் : ஏன் மகன் தெரியாமல் போறான்.

மனைவி : ................................

கணவன் : ஒரு வேளை ஆக்களோட போகேக்க் கதைக்கக் கூடாதோ?.

மனைவி : ..................................

கணவன் : சரி சரி நீ சொல்லறது தான். வாப்பா பின்ன அந்தக் கதிரயில் இருப்பம். மூச்சும் வாங்குது. (எதிர்பார்ப்பு இழையோடியிருக்கும்)

மனைவி : ...................................

கணவன் : ஓமப்பா நான் சாகிறத்துக்கிடையில என்ர மோன்ர உழைப்பில இருந்து சோறு தின்ன வேணும்.

மனைவி : ....................................

கணவன் : உங்க உங்க கண்ணன் பெரிய கதிரயில இருக்கிறான் (என எண்ணமோ பாமரர்கள் தங்களுடைய பிள்ளையின் முன்னேற்றமே இலக்காய் இருந்தது. அப்போது அவனே பல்கலைக்கழகத்தின் முதல் மாணவனாக தெரிவு செய்யப்படுகிறான். மேடையில் கண்ணன் நிற்க பின் குரலாக இராசிங்கம் கண்ணன் இவரே முதல் தர மாணவன் என பெரிய சத்தத்தில் உரத்து கூறப்படுகிறது. பின்னர் அவனிடம் உங்கள் வெற்றிக்கு யார் காரணம் என வினாவ யாரும் இல்ல நான் தான் விடாம படிச்சனான். அப்ப உங்கட பெற்றோர்கள் அவங்கட கதைய நிப்பாட்டுங்கோ என உறவில் அனல் கொட்டினான்.)

கணவன் : என்ன கமலம் மகன் இப்பிடிச் சொல்லுகிறான்.
(இதற்கு முன்பு தன்னை நன்றாக அலங்கரித்து மகனிற்கு கிடைக்கும் பாராட்டு தன்னையும் வந்து சேரும் என வந்தவனுக்கு இறுதியில்) என்ற முக பாவத்தோடு இரங்கி நிற்பர் அவ்வேளை

ஊட்டி வளர்த்திட்டாய் உன் மகனை
உனக்கென இல்லாது அவனுக்காகவா வாழ்ந்தாய்
உன் உணர்வுகள் தெரியவில்லை அவனுக்கு
ஆசைகளை நிராசையாக்கிப் பாதகக் குணம்
கொண்ட ஈனப் பிள்ளைகளா? நீங்கள்

(என்ற ஒலி மேடையை இன்னமும் அணி செய்யும் பின் ஒரு புறமாகச் சென்று தன் உணர்வு நிலைக்குள் நிற்பான். உணர்வு நிலை கலைய மனைவியைப் பார்ப்பான்)

கணவன் : என்ன கமலம் நாங்கள் தான் அவசரப் பட்டிட்டம்

மனைவி : ...................................

கணவன் : இல்லயப்பா அவன்ர படிப்புக்கும் அறிவுக்கும் நாங்கள் அப்படிப் போனது பிழைதானே.

(என மகனைக் குற்றம் கூறாமல் மறைப்பார் தந்தை)

மனைவி : ...................................

கணவன் : நீ சொல்லுறதப் பார்த்தா மகன் நான் வெயிலெண்டு பார்க்காம உழைச்சுப் படிக்க வைச்சதை மறந்திடுவான் போல கிடக்கு (ஒருவாறு தர்க்கம் புரிந்தவர்கள் வீட்டிற்கு அப்போது மீண்டும் மேடை அமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டு சோகமான இசை காட்சிக்கு வலுவூட்டும் இடையிடையே மனங்களை அவ்விசை வயப்படுத்தவும் தவறுவதில்லை இதனூடாக)

தந்தை : ஏன்ரா தம்பி இப்பிடிச் சொன்னனி

மகன் : ..........................................

தந்தை : அப்பிடிச் சொல்லாத தம்பி கூலி வேலை செய்து தானே உனக்கு காசு தந்தனான்.

தந்தை : அப்ப என்ர எதிர்பார்ப்புக்கள் கனவுகள், ஆசைகள் .....................

மகன் : ...........................

தந்தை : ஐயோ கமலம் ............. கமலம் நீ சொன்னியப்பா ஆனா............ நான் கேக்கல

மனைவி : ...........................

கணவன் : என்ர ஆசையெல்லாம் பிள்ளையின்ர கையால ஒரு பிடி சோறு வாங்கி சாப்பிட்டு வயிறாற அவனோட இருக்க வேணும் என்டல்ல.

மனைவி : ..................................

கணவன் : ஓமப்பா நீ சொன்னது தான் சரி. இருக்கு மட்டும் கறந்து போட்டு இப்ப எங்கள இந்த வயசு போன நேரத்தில ....................

மனைவி : ...............................

கணவன் : உதுக்குத்தான் சொல்லுவாங்க பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லெண்டு. அது சரியாகத்தான் போச்சு (என மன வேதனைப்படும் தந்தை அவருக்கு வலுவூட்ட பின்னணி இசை ஊடுருவிச் செல்லும்)

மனைவி : ................................

கணவன் : சரி நாங்கள் போறம். வாப்பா கமலம் அவன்ர பிள்ளைகள் வருவினையாம் நாங்கள் உங்கனேக்க மரத்தடியில இருப்பம். (என பாவனை செய்து மனைவியுடன் நடப்பார் அதன் போது)

கணவன் : பாத்தனிய பிள்ளேன்ர முன்னேற்றத்திற்கு காரணமா நித்திர முழிச்சு ஒருவாறு வாய் வயித்தக் கட்டி படிக்க வச்ச எங்களுக்கு பிள்ளையள் தந்த பரிசு மூதேசிகள் என்ற பட்டம் தான்.

மனைவி : ............................

கணவன் : எப்பிடி அழாம இருக்கிறது. பெத்த பிள்ள இப்பிடி சொல்லி விட்டால் (என்றவாறு கண்களிலிருந்து உவர்நீர் சொரிய உதடுகள் வியாபித்து நிற்கிறது)

கணவன் : ஆனால் நீ சொல்லுற மாதிரி நாங்க தனிய இருக்கேக்க செத்துப் போனா மகன் கொள்ளி போட வருவானோ? (என அவனுடைய கோபத்தை அப்படியே கொட்டி விடுகிறான். ஆனால் இனி நடக்கப் போவதும் அதுவே)

மனைவி : ................................

கணவன் : இல்லக் கமலம் எல்லாம் மனக் கொதிப்பு. (என தன்னுடைய கரங்களைக் காட்டி மார்பில் அடித்துக் கதறுகிறான்) அவ்வாறு காலம் சில கரைபுரண்டன. பின்னர் இருவரும் நோயால் பீடிக்கப்பட்டு அந்த நிம்மதியான சாவிலும் தன் மகன் கொள்ளி வைப்பான் என்ற ஏக்கமே இதுவரையும் ஆறுதல் பெருமூச்சாய் நிலை கொண்டுள்ளது. இது அவர்களுடைய உரையாடல் மூலம் வெளிக் காட்டப்படுவது.

மனைவி : ......................................

கணவன் : என்னப்பா........... (இருமல்) கமலம்..................... எத்தின நாளாப் போச்சு நான் படுக்கையில படுத்து ................... ஒருக்கா வந்து பார்த்தானே.

மனைவி : ..........................

கணவன் : ஓமப்பா செத்து பிறகு நடக்கிறது எங்களுக்குத் தெரியவா போகுது. (என்று அவன் தன் கூட்டை விட்டு உயிர் பிரிந்து செல்லப் போவதை உணர்ந்தவன் போல மேடையில் நடிப்பான்.

கணவன் : கண்..........ணா........ன ................ம..........கனே கண்ணன் (என தந்தை மகனுடைய பெயராலேயே மடிகிறான்.

இப்படி எத்தனை தந்தைமார்களின் எதிர்பார்ப்புக்கள் வீணடிக்கப்பட்டிருக்கும் (கணவனோடு சேர்ந்து மனைவி கமலமும் உயிரை விட்டுக் கொள்கிறாள். அவ்வேளை அரங்கில் மயான அமைதி நிலவுகிறது. பின்னர் குரல் மட்டும்)

ஓ மனிதர்களே ஒரு வேளை சாப்பிட்டு
மீதி வேளை பிள்ளைகளின் நினைவோடே
பட்டினி கிடந்து அவர்களுடைய முன்னேற்றத்தை காண
எத்தனை பெற்றோர்களுடைய விழிகள் விழிந்திருந்து
மரணத்தின் மடியை முத்தமிட்டிருக்கும்.

ஆ.................... இதென்ன இறுதியில் கொள்ளி போட
பிள்ளையில்லாமல் அனாதைப் பிணமாக எரிவதா?
இல்லை இரக்கமற்ற பிள்ளைகளே! உங்கள்
கல் நெஞ்சம் இழகட்டும். பெற்றோரது கடைசி ஆசையையேனும்
நிறைவேற்றுங்கள் (என்ற குரல் முடிந்தது) பின்பு

மனிதர்கள் : அந்த இதயங்களும் கல்லறைகளில் நிம்மதியாய் உறங்குமா? இல்லை இல்லை வாழ்க்கை வாழ்வதற்கு ஆம் வாழ்வதற்கே.

(என்ற வசனத்தோடு நாடகம் நிறைவடைய அரங்கில் இருந்த அனைத்தும் இருளாக்கப்பட்டு காட்சி முடிவோடு மூடுகிறது. அவர்களின் கலையாத கனவும் மூடப்படுகிறது.)

(ஒது ஓர் உருவகக் கதை)

- முற்றும் -

# முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்

செல்வி இ.கார்த்திகா
தரம் : 10 A
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

இத்தலைப்பின் உள்ளர்ந்த கருத்தை நோக்குவோமானால் ஒரு செயலின் முடிவிலேயே நாம் எடுத்த முயற்சியானது வெளியாகும். அதாவது, நாம் எந்தளவிற்கு முயற்சி செய்கின்றோமோ அந்தளவிற்கு பயன் கிடைக்கும் என்பதே இதன் பொருளாகும். இதைக் கருபபொருளாகக் கொண்டே "முயற்சி திருவினையாக்கும்" என்ற முதுமொழி தோன்றியுள்ளது. அதன்படி கல்விசார் விடயங்களாயினும் சரி, தொழில் சார் விடயங்காளயினும் சரி மற்றும், அரசயில், போராட்டம், கண்டுபிடிப்பு, கலைசார் விடயங்கள் போன்ற இன்னோரன்ன துறைகளிலும் நாம் நமது வெற்றியை நிலைநாட்ட வேண்டுமெனில் அதற்கு முயற்சி என்ற ஒன்றே காரணமாக அமைகிறது.

கல்வியில் முயற்சியின் அவசியம் பற்றி நோக்குவோமாயின், "கல்வியின் பெரியார் கம்பர்' என்று உலகத்தார் இன்று கம்பரைப் போற்றுகின்றார்களேயானால் அவர் எழுதிய கம்பராமாயணமே அதற்கு காரணமாகும். கம்பராமாயணமானது கம்பரினது முயற்சியின் பலனாகவே தோற்றம் பெற்றுள்ளது என்பது இராமயணத்தின் ஒவ்வொரு வரிகளில் இருந்தும் தெளிவாகின்றது. இதே போன்றே "பொய்யாமொழிப் புலவர்" என்று போற்றப்படுகின்ற திருவள்ளுவரும் தான் முயற்சியுடன் எழுதிய திருக்குறள் மூலம் பெருமை பெறுகிறார். அமெரிக்காவின் ஜனாதிபதிப் பதவியை ஆபிரகாம்லிங்கன் என்பவர் தழுவியிருந்தாரேயானால் , அதற்கு அவர் கல்வி பயிலும் காலத்திலே தெரு விளக்குகளின் கீழே இருந்து கல்வி கற்ற அவரது முயற்சி காரணமாகவே அவருக்கு அப்பதவி கிடைத்தது என்பது யாம் அனைவரும் அறிந்த உண்மையே.

கல்வித் துறையில் தற்காலத்தை எடுத்து நோக்குவோமாயின், மாணவர்கள் தமது பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெறுவதற்கு அதிக முயற்சி எடுக்க வேண்டியது அவசியமாகக் காணப்படுகின்றது. அவ்வாறு அவர்கள் எடுத்த முயற்சி அவர்களது பெறுபேறுகளிலே தெளிவாகின்றது. அது புலமைப் பரிசில் பரீட்சையாயினும் சரி, க.பொ.த. சாதாரணப் பரீட்சையாயினும் சரி, உயர்தரப் பரீட்சையாயினும் சரி, புாடசாலைத் தவணைப் பரீட்சைகளாயினும் சரி, முயற்சியின் அளவிலே அவர்களது பெறுபேறு கூடுவதும் குறைவதும் தங்கிக் காணப்படுகின்றது.

ஆகவே இவற்றின் மூலம் முயற்சியானது தனது ஆதிக்கத்தை கல்வித்துறையில் எந்தளவிற்கு செலுத்தியுள்ளதென்பதை எம்மால் அறிய முடிகிறது.

அடுத்து தொழில் ரீதியில் முயற்சியின் ஆதிக்கம் பற்றி நோக்குவோமாயின், இன்று மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒரு வைத்தியனாகவோ, முகாமை-யாளனாகவோ அல்லது ஆசிரியனாகவோ விளங்குகின்றானேயானால் அதற்கு அம் மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் எடுத்த முயற்சியே காரணமாகும். இன்றைய உலகில் மகப்பேறு என்பது ஒரு சிறந்த வரமாகும். இவ்வரமானது சிலருக்கு கிடைக்காதது கவலைக்குரிய விடயமேயாகும். ஆனால் இன்று அந்தக் கவலைகள் ஒழியும் வகையில் குழாய் மூலம் குழந்தை பெறும் செயற்பாடு தோன்றியிருக்கின்றதேயானால் இவ்வுலகமே மகிழ்ச்சிக்குள்ளாகும் ஒரு விடயமாகும். இத்தகைய செயற்பாட்டை இந்தியாவிலுள்ள ஒரு வைத்தியரே கண்டுபிடித்திருக்கின்றார். இதற்கு காரணம் வைத்தியத்துறையில் தன் பெயரை நிலைநாட்ட வேண்டுமென்பதற்காக அவர் எடுத்த கடின முயற்சியே ஆகும்.

கண்டுபிடிப்பு என்றாலே முயற்சியின் பங்கு அதிகமாகத் தேவை என்பது யாவருமறிந்த உண்மையே. இதற்கிணங்க இன்று அமெரிக்கா என்ற நாடு உலகத்தில் நிலவுகின்றதேயானால் அன்று நாடுகாண் பயணியாகிய கொலம்பஸின் முயற்சியே காரணமாகும். இன்று தொழில்நுட்பமானது உச்சக்கட்டத்தை எட்டியுள்ளதென்றால் விஞ்ஞானிகளின் முயற்சியினாலேயேயாகும். உதாரணமாக இன்று நாமெல்லாம் ஒளியில் வாழ்கின்றோமேயானால் அதற்கு விஞ்ஞானியாகிய தோமஸ் அல்வா எடிசனின் முயற்சியின் மூலம் உருவாக்கப் பெற்ற மின்குமிழினாலேயாகும்.

போராட்டம் பற்றி எடுத்து நோக்குவோமாயின் இன்று ஒவ்வொரு நாடுகளும் சுதந்திரம் பெற்றுக் காணப்படுகின்றதாயின் அதற்கு அந்நாட்டின் சுதந்திரப் போராளிகளின் கடின முயற்சியே காரணமாகும். உதாரணமாக இன்று இந்தியாவானது சுதந்திரம் பெற்ற நாடாக விளங்குவதற்கு அன்று மகாத்மாகாந்தி முயற்சியுடன் நடாத்திய அகிம்சைப் போராட்டமே காரணமாகும். கலைசார் விடயங்களாயினும் முயற்சியுடன் பயிற்சி எடுத்தால் மட்டுமே இத் துறையிலும் எமது திறன்களை வெளிக்காட்ட முடியும்.

ஆன்மீகத் துறையிலும் முயற்சியானது தன் ஆதிக்கத்தை செலுத்தியுள்ளது என்பதற்கு எமது சைவசமயம் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். உதாரணமாக சைவசமயத்து நாயன்மார்களுள் திருநாவுக்கரசரை எடுத்து நோக்குவோமாயின் அவர் அன்று உழவாரப் பணி செய்தும் அற்புதங்கள் பல செய்தும் மற்றும் தேவாரங்கள் பாடியும் எடுத்த அரும் பெரும் முயற்சியே இன்று சைவம்

தழைத்தோங்கி நிற்பதற்கு காரணமாகும். இவர் மட்டுமன்றி, நாயன்மார்கள் மற்றும் எமது சமயத்திற்கு தொண்டாற்றிய அனைவருமே சைவசமயம் உயர்ந்தோங்க ஏதோ ஒரு ரீதியில் தமது பங்களிப்பை ஆற்றியிருக்கின்றனர். இதற்கு அவர்கள் எந்தளவிற்கு கடின முயற்சிகளையெல்லாம் எடுத்திருக்கின்றார்கள் என்பது புராணக் கதைகள் மூலம் அறிய முடியுகிறது. இன்று சைவம் உலகளாவிய ரீதியில் சிறந்து காணப்படுவதற்கு சமயத் தொண்டர்கள் எடுத்த முயற்சியே காரணமென்பது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

அபிவிருத்தி பற்றி நோக்குவோமாயின், அபிவிருத்தி என்றாலே முயற்சிதான் மூலதனம் என்ற முடிவிற்கு வந்துவிடலாம். உதாரணமாக 2ம் உலக மகா யுத்தத்தின் போது அமெரிக்காவானது little boy big man (சிறிய பையன் பெரிய மனிதன்) என்ற அணுகுண்டை ஜப்பானின் குரோசிமா என்ற இடத்தில் வீசியது. இவ் little boy big man என்பதன் உள்ளார்ந்த விளக்கமானது சிறிய பொருள் ஆனால் விளைவு / தாக்கம் பெரியது என்பதே இதன் விளக்கமாகும். இதற்கேற்ப இவ் அணுகுண்டை வீசியதால் அங்கு பெரும் தொகையான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. அதன்பின் அங்கு பிறக்கும் பிள்ளைகள் கண் தெரியாமல், கை கால் இல்லாமல் ஊனப்பிறவிகளாகவே காணப்படுகின்றனர். அதுமட்டுமன்றி இன்றுவரை அத்தரையிலே புற்கள் கூட முளைக்கவில்லை. இத்தகைய அகோரமான செயலைக் கண்டு உலக மக்கள் அனைவருமே திகைத்து நின்றனர். ஆனால் ஜப்பான் மக்களோ முயற்சியை பெரிதும் நம்பினர். இத்தனையும் இருக்க அவர்களுடைய நம்பிக்கை காரணமாக இன்று உலகளாவிய ரீதியான உற்பத்தியில் பெருமளவான பொருட்களை ஜப்பானே உற்பத்தி செய்கிறது. இதற்கெல்லாம் என்ன காரணமென்று சற்று சிந்தித்துப் பாருங்கள். முயற்சி ஒன்றே தவிர வேறு எவற்றினாலேயும் இந்தப் புரட்சியை ஏற்படுத்தியிருக்க முடியாது.

ஆகவே முயற்சியானது கல்வித் துறையிலும் சரி, தொழில் ரீதியிலும் சரி மற்றும் கண்டுபிடிப்பு, போராட்டம், ஆன்மீகத்துறை, அபிவிருத்தித்துறை போன்ற அனைத்திற்குமே முயற்சி தான் அடித்தளமிடுகிறது. இவையனைத்தையும் உற்று நோக்குமிடத்து மனிதனுடைய எந்தவொரு அசைவிலும் முயற்சியான ஒன்று கலந்துள்ளதென்பது தெளிவாகின்றது. நீங்களும் உங்கள் செயல்களில் உச்சக்கட்ட திறன்களை வெளிக்கொணர வேண்டுமெனில் முயற்சியை அதிகமாக எடுங்கள். "இறைவனை நம்பினோர் கை விடப்படார்" என்ற முதுமொழிக்கு "முயற்சியை நம்பினோர் கைவிடப்படார்" என்று புதுமொழியை உருவாக்கி "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற பழமொழிக்கு இணங்க முயற்சி உடையோராகி இகழ்ச்சியை விடுத்து புகழ்ச்சியை உடையோராவோமாக!

# கம்பராமாயணத்தில் இலக்குவன்

மு.ராஜினி
க.பொ.த உயர்தரம் - 2009
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

தசரத மன்னனுடைய இளைய மனைவியாகிய சுமித்திரை பெற்றெடுத்த ஒரு தவப்புதல்வனாக இலக்குவனை கம்பர் படைத்துள்ளார். கொடிய பகைவர்களை அழிப்பான் என்ற எதிர்கால உணர்வோடு அவனுக்கு இலக்குவன் என்ற பெயர் சூட்டப்பட்டது. சிறுவயதிலிருந்தே எல்லாத் துறைகளிலும் வல்லமை மிக்கவனாக இலக்குவன் காணப்பட்டார். எல்லோரிடத்திலும் மிகுந்த அன்பு கொண்டவனாயும் அதிலும் இராமன் மீது அதிக விருப்பு கொண்டவனாயும் வளர்ந்து வரும் காலத்திலே, கோசிக முனிவர் தம் வேள்வியைக் காக்க இராமனை அனுப்புமாறு தசரதனிடம் வேண்ட தசரதன் இராமனை அவருடன் அனுப்ப உடன்பட, இலக்குவன் இராமனை பிரிந்து தனித்திருத்தலை விரும்பாது இராமனுடன் அவனுக்கு துணையாய் கோசிக முனிவரின் வேள்வி காக்க புறப்படுகிறான். இதிலிருந்து நாம் இலக்குவன் இராமன் மீது கொண்ட அதீத அன்பு பற்றி அறிய முடிகிறது.

முனிவரின் வேள்வியைக் காத்த புகழ் இராமனிற்கு மட்டும் உரியதன்று. அப்புகழில் பெரும்பங்கு இலக்குவனையே சாரும். இதற்கு சான்றாக இராமன் கூட இலக்குவனின் வில்லாற்றலை புகழ்ந்து கூறியமையையும், விபூடனன் புகழ்ந்து கூறியமையை-யும் சுட்டலாம். பரதனிற்கு நாட்டாட்சியும் இராமனிற்கு காட்டாட்சி-யும் வழங்கப்பட்ட செய்தி கேட்டு இலக்குவன்

"சிங்கக் குருளைக்கு இடும் தீம்சுவை ஊனை நாயின் வெங்கண் சிறு-குட்டனை ஊட்ட விரும்பினாளே" என்று குறிப்பிடுவதன் மூலம் அவன் இராமன் மீது கொண்ட விருப்பை நாம் கவனிக்க முடியும்.

சித்திரகூட மலையை நோக்கி வந்த பரதனையும் அவனது படையையும் கண்ட இலக்குவன் பரதன் இராமனுடன் போர் புரிய வருகிறான் என்ற தவறான எண்ணம் கொண்டவனாய் சித்திரகூட மலையே பொடிப்பொடியாகும் வண்ணம் அம்மலையிலிருந்து குதித்து போரிற்கான சகல ஆயுதங்களையும் மேற்கொண்டபின் இராமனின் கால்களை தொட்டு வணங்கி நிற்கிறான். இதனை நாம்

"கட்டினன் சுரிகையும் கழலும் பங்கணைப்
புகட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டு அமைத்து
இட்டனன் எடுத்தனன் வரிவில் ஏந்தலைத்
தொட்டு அடி வணங்கி நின்றனையை சொல்லினான்".

என்ற பாடலை நாம் சுட்டலாம். சூரிய வம்சத்திலே உதித்தவனாகிய இவன் பரதன் வந்தமைக்கான காரணம் இராமனுடன் போர்புரியவே என தவறான முடிவை மேற்கொள்வது பொருத்தமாகுமா? என நாம் சிந்திக்கின்றபோது, இலக்குவன் ஒரு சிறந்த போர்வீரன். அவன் பரதனையும் அவனது படையிலுள்ள குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை முதலானவற்றைக் கண்டு பரதன் போர் புரியவே வருகிறான் என நினைத்ததில் தவறில்லை என கம்பர் இலக்குவன் செய்த காரியம் சரியானது என சுட்டி நிற்கிறார்.

மேலும் இராமன் கூட நீ போரிற்கான ஆயத்தங்களை உடனடியாக மேற்கொண்டமைக்கு என் மீது கொண்ட அளவில்லாத விருப்பமே காரணம் என சுட்டி நிற்கிறான். அத்தோடு இலக்குவன் ஒரு வியூகம் அமைத்து போர் புரியும் போர்வீரனாவான். வியூகம் என்பது திட்டமிட்டு போர் புரியும் முறையையே சுட்டி நிற்கிறது. அவற்றோடு தன்னிலும் மேலானோரிற்கு மதிப்பளிக்கும் பாங்கில் இராமனை நாதன், வீரன், வள்ளல், உம்பர் முதலான சொற்களால் அழைப்பது இலக்குவனின் நற்பண்பை காட்டி நிற்கிறது. இலக்குவனின் போராற்றலை கம்பர் கூறுகையில்

"பண்முதிர் களிற்றொடு பரதன் சேனையின்
எண்முதல் அறுத்து நான் இமைப்பின் நீங்கலால்
விண்முதுகு உழுக்கவும் வேலை ஆடையாயின்
மண்முதுகு ஆற்றவும் காண்டி வள்ளல் நீ"

என்ற பாடலை சுட்டலாம்.

இராமபிரான் இலக்குவனைப் பார்த்து

"இலக்குவ' உலகம் ஓர் ஏழேழும் நீ
கலக்குவன் என்பது கருதினால் அது
விலக்குவது அரிது. அது விளம்பல் வேண்டுமோ
புலக்கு உரித் ஒரு பொருள் புகலக் கேட்டியால்"

என அறிவுரை கூறுகின்ற போது யாதொன்றும் பேசாது பணிவுடன் அவற்றை கேட்கிறான்.

இவ்வாறாக பல்வேறுபட்ட திறமைகளோடும் நற்பண்புகளோடும் கம்பர் இலக்குவனை படைத்-துள்ளார். இராமன் இலக்குவனை நோக்கி நம் குலத்திலே தோன்றிய மன்னர்கள் எத்தனையோ பேர் உலகினை ஆண்டுள்ளார்கள். அவருள் எவரேனும் அறத்திற்கு மாறாக செயற்-பட்டுள்ளனரா? மறைகள் கற்பித்த வழியிலே செயற்படுபவனே பரதன், அவன் தருமத்தின் தெய்வம், செம்மையின் உரைகல், அவன் இங்கு வந்தது எமைக் காணவே, போர் புரிய வந்துள்ளான் என நீ நினைப்பது தவறு என இராமன் கூறியபோது இலக்குவன் ஒளி குன்றித் தன் தவறான எண்ணத்திற்கு வருந்துகிறான். அந்தக்கணம் தொட்டு முன்கோபமும் படபடப்பான சொற்களையும் விடுத்து எதனையும் தீர எண்ணிப் பேசத் தொடங்கு-பவனாக பண்பு மாற்றம் அடைகிறான் என கம்பர் சுட்டி நிற்கிறார். இதனை நாம்

"எல் ஒடுங்கிய முகத்து இளவல் நின்றனன்
மல் ஒடுங்கிய புயத்து அவனை வைது எழும்
சொல்லொடும் சினத்தொடும் உணர்வு சோர் தர
வில்லொடும் கண்ணனின் நீர் நிலத்து வீழவே.."

என்ற பாடல் மூலம் சுட்டலாம்.

இவ்வாறாக கம்பராமாயணத்தில் நாம் காணும் இலக்குவன் அண்ணன் இராமன் மீது கொண்ட அளவற்ற பாசத்திலும் சரி, திறமையான போர் ஆற்றலிலும் சரி, தேசம் மீது கொண்ட பற்றிலும் சரி யாருக்கும் சளைக்காதவனாகவே காணப்படுகிறான்.

# தாய்மை

சிறுகதை

சி.துளசிகா
தரம் : II A
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

யாழ்ப்பாணத்தில் ஓர் அழகிய கிராமம், கிராமம் என்று சொல்வதை விட ஒரு அழகான பூஞ்சோலை என்றே கூறிவிடலாம். என்ன ஒரு அழகு ! என்ன ஒரு சுகம் !! என்றெல்லாம் அவ்வூரைப் பார்த்து வியந்து செல்வார்கள் பலர். ஆம், பார்த்தவர்களுக்கு புரியும். பச்சைப் பசேலென வயல் வெளிகள் வானைத் தொடு மளவில் உயர்ந்து நிற்கின்ற பெருமரங்கள், இயற்கைக்கு அழகு சேர்க்கும் வண்ணப் பூஞ்செடிகள். அண்ணார்ந்து பார்க்க வேண்டிய உயரத்தில் இரு மாடி கட்டிடங்கள். மாணவர்களின் அறிவுப் பசியைத் தீர்த்துவைக்கும் பாடசாலைகள், உடற்பிணியை தீர்த்துக்கொள்ளும் பிரதான வைத்தியசாலை, உள மகிழ்ச்சியைத் தரவல்ல ஆலயங்கள் இவ்வாறு அடுக்கிக் கொண்டே செல்லலாம். இவற்றினை விட இயற்கை அன்னையும் இவ்வூருக்கு சிறந்த வளங்களினைத் தந்து கொண்டிருக்கிறாள்.

ஆம், இந்த ஊரின் பிரதான வீதியின் வலது புறத்தில் ஓர் அழகிய வீடு அதனை மாட மாளிகை என்றே சுருக்கமாக வர்ணிக்கலாம். அதற்கு சுற்றிவர நிற்கின்ற பூஞ்செடிகள், மரங்கள், வீட்டின் வர்ணங்கள் போன்றன இன்னும் அழகை அதிகரிக்கச் செய்தன. அந்த மாளிகையில்தான் வைரமுத்து வாழ்ந்து வந்தான். அவன் பெயருக்கேற்றாற் போல் வைரக் கற்கள் வியாபாரமே செய்து வந்தான். வைரம் ! வைரம் !! வைரம் என்ற வார்த்தையைக் கூறவே இதயம் ஒருமுறை சுழல்வது போன்ற உணர்வு. அதன் பெறுமதியின் அங்கலாய்ப்புத்தான் அந்தப் பெறுமதி மிக்க வைரக்கற்கள் வியாபாரத்தினால் மிகவும் உயர்ந்து அந்த மாளிகையைக் கட்டினான். வைரமுத்து, அவனது குடும்பத்தில் மொத்தம் ஆறு பேர். அடுப்பும் நெருப்பும் போல மூன்று ஆம்பிளைப் பிள்ளைகளும் ஒரு பொம்பிளைப்பிள்ளையும். மனைவி பசுவினை விட மிகவும் சாந்தமானவள். அதனால் ஊரில் கூடுதலானோருக்கு அவளில் ஒரு விருப்பம் இருந்தது. அவளும் கணவனோடும், பிள்ளைகளோடும் அன்பாகக் கதை பேசி தனது கடமைகளை நிறைவேற்றி வந்தாள். அவர்களது மூத்த மகன் பாலு சிறு வயதிலேயே திருமணம் செய்து தனிக்குடித்தனம் நடாத்தி வந்தான். அவன் அடிக்கடி தனது வீட்டிற்கு வந்து போவதுண்டு.

வைரமுத்து தம்பதிகளின் ஒரே ஒரு செல்ல மகள் மஞ்சுளா. மஞ்சுளா மிகவும் அழகானவள். மஞ்சள் முகம் வளைந்த இருபுருவம், கதை பேசும் கண்கள், கொவ்வைப்பழ உதடு, பளிச்சிடும் கழுத்தில் ஒரு தங்கச்

சங்கிலி, பட்டுப் பாவாடை தாவணி, கூந்தலில் மல்லிகைப் பூமாலை. இவற்றினை விட அவளின் உதட்டின் இடது பக்கத்திற்கு கீழுள்ள மச்சமே அவளின் புன்னகைக்கு மேலும் மேலும் அழகு சேர்த்தது. அவள் அப்போது A/L படித்துக்கொண்டிருந்தாள்.

மஞ்சுளாவின் மீது வீட்டில் உள்ள அனைவரும் உயிரையே வைத்திருந்தார்கள். என்றாலும் தாயின் பாசம் மற்றவர்களினைவிட இன்னும் ஒருபடி அதிகமாக இருந்தது. அவளுடைய ஆசைகளையெல்லாம் கேட்டவுடன் நிறைவு செய்து வைத்தார்கள். இதனால் மிகவும் செல்லப் பிள்ளையாக வளர்ந்தாள். செல்லப் பிள்ளையாக வளர்ந்தாலும் அவள் ஒரு படிப்பாளி மட்டுமல்ல ஒரு பெரிய வீராங்கனையுங் கூட போன் வருஷம் அவள் ஈட்டியெறிதல் போட்டியில் தேசிய ரீதியில் முதலாம் இடம் பெற்றிருந்தாள். பாடத்துடன் தொடர்புபட்ட போட்டிகளுக்கெல்லாம் சென்று சான்றிதழ்களெல்லாம் வைத்திருந்தாள்.

இப்படியான ஒரு பிள்ளையை பெறுவதற்கு நாங்கள் போன ஜென்மத்தில் என்ன தவம் செய்தோமோ? என்று அவளின் அம்மா ஆனந்தக் கண்ணீர் விடுவதுமுண்டு. அதனால் அவளைப் பாதகாப்பாக வளர்க்க வேண்டும் என்றும் எண்ணினாள். அவள் வீட்டை விட்டு வெளியே சென்றால் மீண்டும் வீட்டுக்கு அவள் வரும் மட்டும் தாயின்து மனம் நிம்மதியாக இருக்காது. வேலைகளெல்லாம் சீராக நடக்காது. அடிக்கடி வெளிக்கேற் பக்கம் பார்வை சென்று கொண்டிருக்கும். பாடசாலையிலிருந்து வரப் பிந்தினால் கூட இப்படித்தான் என்னதான் இருந்தாலும், தாய்ப்பாசம் என்பது சாதாரணமானதில்லைதான். அத்துடன் மஞ்சுளாவிற்கு அவளின் அம்மா அறிவுரைகளையும், கதைகளையும் கூறி அவளை நல்வழிப்படுத்துவாள். அவளும் நல்ல குணாம்சத்துடனான ஒரு பிள்ளையாக பாடசாலையிலும், சமூகத்திலும் நோக்கப்பட்டாள். இவ்வாறு நிலைமைகள் இருக்கையில் நேரம் கட்டுப்பட்டு நின்றுவிடுமா? அது தனது சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது. மஞ்சுளாவையும் காதல் என்ற கண்ணாம்பூச்சி தொட்டுச் செல்லாமல் விடவில்லை. ஆம், மஞ்சுளா ஒருவனைக் காதலித்தாள். அவனும் தான் காதலித்தான். ஆறடி உயரம், அழகிய முகம், பரந்த நெற்றியில், அடர்ந்த இருபுருவங்கள், கருவிழிகள், சாம்பல் நிற உதடு, பொதுவான நிறம். பாடசாலைச் சீருடையில் வந்தால் மிகவும் அழகாய் இருப்பான் சுரேஷ்.

சுரேஷ் வேறு பாடசாலையிலிருந்து மாற்றம் பெற்று A/L படிப்பதற்காக இந்தப் பாடசாலைக்கு வந்தவன். வந்த புதுசிலே அனைவராலும் கவரப்பட்டான். அவர்களுள் ஒருத்திதான் மஞ்சுளா. சுரேஷிற்கும் மஞ்சுளாவின் மீது காதல் பிறந்தது. A/L இன் ஆரம்பத்தில் தோன்றிய காதல் இப்போது நன்றாகச் சூடு பிடித்திருந்தது. அவர்கள் பாடசாலை முடிந்தவுடன் மற்ற நண்பர்களுடனும் சேர்ந்து நின்று கதைத்தார்கள். பாடசாலை விட்டு வரும் போது சேர்ந்து கதைத்துக் கதைத்து வருவார்கள். ரியூசனிலும் அப்படித்தான். அவற்றினை விட கோயில்கள், வயல்வெளிகள் என்று ஒரு இடங்களையும் விட்டு வைக்க வில்லை. ஆனாலும் அவர்கள் படிப்பிலே கண்ணும் கருத்துமாக இருந்தார்கள்.

அவர்களின் இக்காதல் செய்தி மஞ்சுளாவின் அம்மாவின் காதுகளுக்கு எட்டாமல் விட்டுவிடுமா? எட்டிவிட்டது. அவளின் மனம் என்னபாடு பட்டிருக்கும் கோயில் கோயிலாகச் சென்று பிரார்த்தனை செய்தாள். அதைவிட மகளிடமே அது பற்றி விசாரிப்பதற்கும் முடிவெடுத்தாள்.

அன்று மாலை 7.00 மணி இருக்கும். வைரமுத்து வியாபார விஷயமாக வெளியே சென்றிருந்தார். இரண்டு அண்ணன் மாரும் அவர்களது மாமா வீட்டிற்கு சென்றிருந்தார்கள். வீட்டில் மஞ்சுளா, புத்தக மேசையில் புத்தகத்தை வைத்து, கதிரையில் இருந்து மௌனமாகப் படித்துக் கொண்டிருந்தாள். மஞ்சுளாவின் அம்மா மெதுவாக வந்து அவளின் அருகே உட்கார்ந்து கொண்டாள். பின்னர். அந்தக் காதல் பற்றிய கேள்விகளை ஒவ்வொன்றாகக் கேட்டாள். அவளும் பெரிதும் பதற்றப்படாதவளாய் எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டாள். அவள் சொல்லி முடிக்கும் முன்னே, மஞ்சுளாவின் மூத்த அண்ணா வீட்டுக்குள் வந்து விட்டான். என்ன?, என்ன விஷயம் என்று கேட்டுக் கொண்டே வந்தவன் காதல் விஷயத்தைக் கேட்டு திடுக்கிட்டான். அதைக் காட்டிக் கொள்ளாதவனாய், யாரவன்?, என்று திரும்பக் கேட்டான். மஞ்சுளா மிரள மிரள விழித்தவாறே “சுரேஷ்” என்றாள். அண்ணன் பீதியடைந்த அவளை சமாதானப்படுத்தியவாறு நான் அவனைப் பார்த்து சரியென்றால் கல்யாணம் பண்ணி வைப்பேன் என்று ஆசை வார்த்தைகளைக் கூறினான். பின்னர் சிந்தித்தவாறு தனது மனைவி வீட்டிற்குச் சென்று விட்டான்.

விஷயம் பிந்தி வந்த அப்பாவுக்கும், அண்ணன்மாருக்கும் கசிந்தது. இந்த விஷயம் தெரிந்தும் கூட நம்ப மாட்டாமல் மௌனமாக இருந்த வைரமுத்துவிற்கு இது ஒரு திகிலான சம்பவமாகவே அமைந்தது. தற்பொழுது நம்பினான்.

அடுத்த நாள் வைரமுத்து, மஞ்சுளா வுடன் சுரேஷைச் சந்தித்தார். சுரேஷின் அப்பா, அம்மாவின் பெயரைக் கேட்டவுடன் வைரமுத்துவிற்கு நெஞ்சில் ஈட்டி பாய்ந்தது போல் இருந்தது. காதுகளையே நம்ப முடியாமல் இருந்தது அவருக்கு. ஆம், சுரேஷ் இவர்களின் சொந்தக்காரன் தான். அவனின் பரம்பரையில் அவனது பாட்டனாரோடு வைரமுத்துவின் தந்தைக்கு ஏற்பட்ட ஏதோ முரண்பாடு காரணமாக அவ்விரு குடும்பங்களும் பிரிந்தன. பாட்டனாரின் கட்டளைப்படி இன்றுவரை அவர்களின் சக வாசமே வேண்டாமென்று வாழ்ந்து வருகிறார்கள். அதனைவிட இன்னும் சொல்லப்போனால் சுரேஷின் குடும்பம் ஒரு கேவலமான குடும்பம்தான். ஆனால் சுரேஷ் மட்டும் சேற்றிலே முளைத்த செந்தாமரை போல நல்லவனாகப் பிறந்திருக்கிறான். அத்துடன் இன்னும் பல காரணங்களும் இருந்தன. இவ்வாறு சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்த அப்பாவை தட்டினாள் மஞ்சுளா. வைரமுத்து ஒன்றும் செய்ய இயலாதவராய், அவனிடம் இருந்து விடை பெற்று மஞ்சுளாவையும் கூட்டிக்கொண்டு வந்து விட்டார்.

சுரேஷ் ஒன்றும் புரியாதவனாய் சிலை போல் நின்றவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வீடு சென்று விட்டான்.

வீட்டுக்கு வந்த வைரமுத்து, தன்னுடன் வந்த மஞ்சுளாவைப் பார்த்தார். அவளின் கைகளைப் பிடித்துக்கொண்டு, பிள்ளை என்னால அந்தப் பெடியனை உனக்கு கல்யாணம் செய்து வைக்க முடியாதென்றவர், பழைய கதைகளை-யெல்லாம் கூறினார்.

எத்தனையோ பல எதிர்பார்ப்புக்-களுடன் நின்றிருந்த மஞ்சுளாவிற்கு தந்தையின் இந்தப் பதில் பேரிடியாக இருந்தது. அப்படியே சிலை போல் நின்றவள் சிறிது நேரத்தில் நிலத்துடன் பேசிக்-கொண்டிருந்தாள். அதாவது மயங்கி விழுந்து விட்டாள். தந்தையின் சத்தம் கேட்டு, சமையல் கட்டிலிருந்து ஓடி வந்த மஞ்சுளாவின் அம்மா மகளைப் பார்த்துக் கத்தினாள், கதறினாள். கணவர் மூலம் விடயத்தை அறிந்து கொண்ட அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மகன் எடுத்து வந்த தண்ணீரை மஞ்சுளாவின் முகத்தில் தெளித்தாள். 'அவள் எழும்பினாள். தாயால் தாங்கவே முடியவில்லை. 'அவள் கேட்ட எல்லாவற்றையும் வாங்கி வாங்கிக் கொடுத்தோமே. இப்ப அவளின்ர வாழ்க்கைத்துணையையே அவள் ஆசைப்பட்ட மாதிரி செய்து வைக்க முடியாமல் தவிர்க்கிறோமே' எனச் சொல்லிச்சொல்லி அழுதவள், மஞ்சுளாவின் கண்ணிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி, 'நான் உனக்கு நல்ல மாப்பிள்ளைப்பார்த்து கட்டி வைக்கின்றேனம்மா, நீ கவலைப்படாதையம்மா,' என்று பல ஆறுதல் வார்த்தை கூறினாள். அம்மாவின் பாசத்தினால் விளைந்த அன்பு மொழிகள், அவளை ஆறுதல் படுத்தினாலும், மஞ்சுளாவின் மனத்தை மாற்றவில்லை. காதல் என்றால் சும்மாவா?, ஒருவனும், ஒருத்தியும் காதலித்தால், அவனை விட எத்தனை மன்மதன்கள் வந்தாலும், அவளைவிட எத்தனை கண்மணிகள் வந்தாலும் தாங்கள் விரும்பிய ஒருத்தியையோ, ஒருத்தனையோ திருமணம் செய்யத்-தான் மனம் ஏங்கும். இதுதான் உண்மைக்காதல். மஞ்சுளாவிற்கும், சுரேஷிற்கும் உண்மையான காதலே வளர்ந்திருந்தது.

அன்றிரவு முழுக்க அமைதி-யாக இருந்த மஞ்சுளா மறுதினம் பாடசாலைக்கு சென்று சுரேஷைச் சந்தித்து எனக்கு வீட்டில் சம்மதம் இல்லை. என்று கூறியவள், அடுத்த வார்த்தை சொல்லவாய் தடுமாறினாள். 'நாங்கள் எங்கேயும் போய் எங்களது வாழக்கையை நடாத்துவோம். நீங்க வர்றீங்களா?' என்று அவள் கேட்ட கேள்விக்கு "ஆம்" என்ற பாணியில் தலையசைத்தான் சுரேஷ். நேரம் சென்றது அதிகாலை 3.00 மணி இருக்கும் ஒருவருக்கும் தெரியாமல் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டவள் சில பைகளுடன் புறப்பட்டாள். அவளால் முடியவில்லை. தாய்ப்பாசம் அவளை இழுத்தது. அவளுக்குத் தெரியும், இச்செய்தியைத் தாயறிந்தால் அவவால் உயிரோடு இருக்கவே முடியாதென்று, என்றாலும் மஞ்சுளாவாலும் முடிய வில்லை. அவள் அனைவருக்கும் மனதாலே கைகாட்டி அவர்களை வணங்கி, அம்மாவின் நெற்றியின் அருகில் முத்தமிட்டு விட்டு, வந்த அழுகையை மனத்தில் அடக்கிக்-கொண்டு வாசலைக் கடந்தாள். பல்லி சொல்லியது. அவளின் மனம் படபடத்தது. மெதுமெதுவாகச் சென்றவள், வெளியே நின்ற சுரேஷிடன் எங்கு சென்றாளோ தெரியவில்லை.

வழமை போல, காலை 5.30 மணி அளவில் எழும்பிய மஞ்சுளாவின் தாய் தன் அருகில் படுத்திருந்த மஞ்சுளாவைக் காணாது திகைத்தாள். ஓடிச்சென்று கணவரிடமும் மகன் மாரிடமும் கூறினாள். அவர்கள் வீடு முழுவதும் தேடினார்கள். மஞ்சுளாவைக் காணவில்லை. அம்மா ஓடிச்சென்று கிணற்றினைப் பார்த்தாள். இல்லை, அன்று முழுக்க தமது ஊருக்குள் தேடினார்கள். காண வில்லை. அம்மாவின் மனம் என்ன பாடு பட்டிருக்கும். உயிரே பிரிஞ்சது போல கத்தினாள், கதறினாள். என்னால இருக்கவே முடியவில்லை. என்ர பிள்ளை எனக்கு வேணும். அவள் எங்கபோனாளோ?, எப்படி இருக்கிறாளோ? என்று பைததியம் பிடித்தவள் போல தினமும் அழுது புலம்பிக் கொண்டே இருந்தாள். தாய்ப்பாசம் என்றால் சும்மாவா?, தன்னுடைய உயிரையும் கொடுக்கக் கூடியது.

இப்படி அவளின் தாய் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் சில கிழமைகளின் பின்னர் மஞ்சுளாவும், சுரேசும் ஊரின்புறத்தே தனிக்குடித்தனம் நடத்தி வருவதாக, மஞ்சுளாவின் குடும்பத்தினருக்கு செய்தி அடிபட்டது. இதை அறிந்த வைரமுத்துவிற்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. 'இவ்வளவு எடுத்துச் சொல்லியும் எங்களை விட்டிட்டு அவன்தான் வேணுமென்று போனவளெல்லே அவள் எங்கை யாவது நல்லா இருக்கட்டும். அங்கை ஒருத்தரும் போக வேண்டியதில்லை' என்று சில கட்டளைகளும் விதித்தார்.

பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு என்ற மாதிரி பெற்றெடுத்து வளர்த்து அவளைத் திருமண பந்தத்தோடு பார்க்க வேணுமெண்டு ஆசைப்பட்ட தாயின் மனம் தாங்குமா? என்ன வேகாத நெருப்பினுள் இருந்தது போன்ற உணர்வு அவளின் அம்மாவுக்கு சில நாட்கள் பொறுத்திருந்தாள்.

காலை 9.30 மணி ஆகியிருக்கும். நான் பக்கத்து ஊரில இருக்கின்ற காளியம்மன் கோயிலுக்கு போட்டு வாறன் என்று கூறியவள் வீட்டு வாசலைக் கடந்தாள். இதைப் பார்த்த அவளின் மகன் 'அம்மா வாங்கோவன் உங்களை கோயிலில் கொண்டேவிட்டு வர்றன்.' என்றான் இதைக்கேட்ட தாய் "வேண்டாம் வேண்டாம் கிட்டத்தானே நானே போய்க்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டான். அவள் நேரடியாக பஸ் தரிப்பிடத்துக்கு வந்தவள் புறஞ்சேரிக்கு செல்லத் தயாராகின்ற பஸ்ஸில் ஏறினாள். பஸ் வேகமாகச் சென்றது. நாற்பது நிமிடத்தில் அங்கு சென்றுவிட்டது. ஒரு சிலர் இறங்கினார்கள். அவற்றுள் ஒருத்தியான அவள் ஊர் பேர் தெரியாது தடுமாறினாள். அந்த வழியால வந்து கொண்டிருந்த ஓர் அம்மா குசலம் விசாரிக்க இவளும் விடயத்தைக் கூறினாள். "ஆ அவங்களா என்று யோசித்த அந்த அம்மா அவர்கள் இருக்கும் இடத்தைக் காட்டி விட்டாள். விர்விர்ரென்று விரைந்து சென்ற அவள் தனது மகளனதும், மருமகனினதும் நிலைமையைப் பார்த்தவுடன் நிலை குழம்பினாள்.

பரந்த காணியிருக்கும், ஒரு மரந்தடிகளும் இல்லை. வெறும் நிலமட்டம். 'அந்தக் காணியின் ஒரு மூலையில் தான் ஒரு சிறிய மண் குடிசை. தென்னோலையால் வேயப்பட்டிருந்தது. சரியான பதிவு உள்ளுக்குள் போறதெண்டால் குனிஞ்சுதான் போக வேண்டும். மின்சார

வசதியும் இல்லை. தண்ணி எடுக்கிற தெண்டால் அரைக்கிலோ மீற்றர் தூரத்திலேயுள்ள பொதுக் கிணற்றில் தான் மழை வந்தால் ஒரே சேறும் சகதியுமாய்தான் இருக்கும். வீட்டுக்குள்ள வெள்ளம் புகுந்திடும். அப்படி ஒரு கஷ்டமான வாழ்க்கை. ஏனெண்டால், இவை படிச்சிட்டு அரைவாசியிலையெல்லோ ஓடி வந்தவ.

இப்பிடி இந்த வீட்டின் நிலைமையைப் பார்த்தே அழைக்க குரல் வராமல் வாய் தடுமாறினாள். பிள்ளை... பிள்ளை........ மஞ்சுளா, மஞ்சுளா என்று கூப்பிட்ட ஓசையைக் கேட்டு பதறியடிச்சு வெளியில வந்த மஞ்சுளாவிற்கு ஒரு தெய்வமே வந்து நின்றது போல இருந்தது. வெளியில வந்த வேகத்தில் அம்மாவை கட்டியணைத்துக் கொண்டாள்.

மஞ்சுளாவின் முகமே மாறி - யிருந்தது. சிறிது கறுத்து கண்கள் சிவந்து உதடுகள் நனைக்க எச்சில் இல்லாமல் காய்ந்து கிடந்தது. கைகால்கள் எல்லாம் சிவந்திருந்தது. வீட்டில் வேலையே செய்தறியாதிருந்த பிஞ்சுக் கைகளல்லவா?, நன்றாக மெலிந்தும் போயிருந்தாள். நேற்று மதியம் சாப்பிட்டதற்கு இன்னும் சாப்பிடவில்லை. சுரேஷிற்கு உழைப்பிருந்தால் தானே காசும் வரும். அது தான் இல்லையே. வீட்டை உடுக்கும் சேலைதான் உடுத்தி யிருந்தாள். கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறும், அம்மா அப்பா போட்ட ஒரு தங்கச் சங்கிலியும் தான்.

இதுகளையெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்து பார்த்து அழுது கொண்டிருந்த அம்மாவை உள்ளுக்கு வந்தமரச் சொன்னாள். அம்மாவும் உள்ளுக்கு போனவள் தான் கொண்டு வந்த சோற்றுப் பொட்டலத்தை அவிட்டு அவளுக்கு ஊட்டி விட்டாள். சாப்பிட்டு முடிந்ததும் தன்னுடைய கவலையெல்லாவற்றையும் ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லிச் அழுதாள். ‘ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணண்ணு செல்லமாக உன்னை வளர்த்தேனேம்மா. எனக்கு உன்ர காதலைச் சேர்த்து வைக்க வேணுமெண்டுதானம்மா விருப்பம். அப்பாவின்ர அனுமதி இல்லாமல் என்னண்டம்மா என்னால முடியும்?, உன்ர பிஞ்சு மனசு அம்மாவுக்கு தெரியாதாம்மா? நான் உன்னை மணக்கோலத்தில பார்க்க வேணுமண்டு தானம்மா ஆசைப்பட்டன். நீ சந்தோசமா இருக்க வேணுமண்டு தானே ஆசைப்பட்டன். இப்பிடி ஒரு கோலத்தில உன்னைப் பார்க்க வேணுமண்டா, நான் செத்தே யோயிருக்கலாமே! கடவுளே ஏம்பா? இப்பிடியெல்லாம் எங்களைப் போட்டுச் சோதிக்கிற. நாங்கள் என்ன பாவமப்பா செய்தோம்.” என்று அழுது புலம்பியவள் அழுத கண்ணீரைத் துடைத்து கொண்டு பக்கத்திலிருந்த மஞ்சுளாவைப் பார்த்தாள். அவள் மௌனமாக அழுது கொண்டிருந்தாள். அவளின் மனதைத் தேற்றிவிடடு எல்லாம் கடவுள் எழுதிய வாக்கின்படியே நடக்கும். என்று சமாளித்தவள் “நான் கூடுதலா இந்த நேரம் வருவனம்மா. வீட்டில இரு மஞ்சுளா” என்று கூறியவள் மருமகனைப் பற்றிய கேள்விகளை மனதிலே கேள்விக் குறிகளாக்கிவிட்டு அவளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு நகர்ந்தாள்.

வீடு வந்து சேர்ந்த அவளை ஏன் அம்மா பிந்தியது? என மகன் கேட்டான். அது கோயில்ல திருவிழாவாம். அதுதான் இனி 25 நாளைக்கு தொடர்ந்து நடக்குமாம்

என்றும் கூறினாள். இப்பிடிச் சொன்னால்தானே ஒவ்வொரு நாளும் மகளின்ர குடிலுக்கு போய் வரலாம்.

இவ்வாறு ஒரு கிழமை கடந்தது. வைரமுத்துவிற்கு விடயம் தெரிய வந்தது. தெரிந்தாலும் கூட 'பெத்த தாய் தானே அவள் போய் வரட்டுக்கன். அவளால தாங்க முடியாது தானே' என்று மனதில் நினைத்தாலும் அவளைப் பற்றிய கதையே கேட்பதில்லை. அவருக்கும் அவளைப்பிடிக்க வேணுமண்டு ஆசைதான். ஆனால் தன்மானம் கட்டியிழுத்தது.

கிழமைகள், மாதங்களாகின. மஞ்சுளா நிறைமாத கர்ப்பிணியானாள். அவளின் தாய் தினமும் சென்று அவளுக்கு வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்து கொடுப்பாள். வீட்டிலிருந்துதான் சேர்த்த காசைக் கொண்டு சென்று மருமகனின் கைச்செலவிற்கு கொடுத்தாள். மகளுக்கெண்டு சேர்த்து வைத்த நகைகள், உடுப்புக்கள், பேரப்பிள்ளைக் கென வாங்கிய பொருட்கள் எல்லாவற்றையும் கொண்டு சென்று கொடுத்தாள். பாவப்பட்ட ஜென்மமான அந்தத் தாய்.

மஞ்சுளாவை ஒரு இடத்தில் இருத்தி, தன்னால் இயலாது என்று தெரிந்தும் கூட சாப்பாடுகளையெல்லாம் செய்து கொடுத்தாள். வேகாத நெருப்பு வெப்பத்தினில் கிடந்து வாடினாள். அவள் சில வேளைகளில் மயங்கி விழுவதுண்டு. மஞ்சுளாவின் மனமும் தாங்காது தான் ஏனென்றால் இப்போது தான் அவளிற்கு குழந்தையின் தாப்பரியம் புரிந்து கொண்டிருந்தது. ஏனெனில் அவளும் தாய்மை நிலையை அடைவதற்கு காத்திருந்தாள். மஞ்சுளாவின் அம்மா அவளுக்கு தேவையானவற்றை யெல்லாம் எடுத்து வைத்தவள். அவளிடமிருந்து விடை பெற்றாள்.

மஞ்சுளாவும் தனது கருமங் களை முடித்துக்கொண்டு படுக்கச் சென்றாள். சிறிது நேரத்தில் கருமேகங்கள் வந்து சூழ்ந்தன. மின்னல்கள் பளிச்சென்று மின்னின. இடிஇடித்தது. பேர் இரைச்சலுடன் மழை பெய்யத் தொடங்கியது. இரவிரவாக ஒரே மழை. குடிலுக்குள் மஞ்சுளா நித்திரையாக இருந்தாள். சுவ-ரோரத்தில் சுரேஷ் அவளைப் பார்த்துப் பார்த்து அழுது கொண்டிருந்தான். நேரம் சென்றது. காலை 6 மணி இருக்கும். மஞ்சுளா எழுந்துவிட்டாள். சுரேஷ் இரவு விழித்திருந்ததால் இப்போதுதான் சற்று உறங்கி-யிருந்தான். மழையும் அப்போது தான் சற்று ஓய்ந்திருந்தது. முகம் கழுவுவதற்காக வெளியே சென்றவள் சூழ்ந்திருந்த இருட்டில் தெளிவாகப் பார்க்காது சேறும் சகதியுமான இருந்த நிலத்தில் இறப்பர் செருப்பு அணிந்திருந்த காலை வைத்தாள். மண்ணோடு வழுக்கிச் சென்ற அவள் தலையின் பின்பக்கம் அடி பட "அம்மா" என்று கத்தியவாறு விழுந்தாள். விழுந்த வேகத்தில் அவளும் குழந்தையும் ஆடிப்-போயிருந்தார்கள்.

சத்தம் கேட்டு வெளியே வந்த சுரேஷ் "மஞ்சுளா" என்று கத்தியவாறே அவளைத் தூக்கச் சென்றான். அயலில் இருந்து வந்தவர்களும் உதவி செய்தார்கள். பக்கத்தில் நின்ற ஆட்டோவை அழைத்து ஆஸ்பத்திரிக்கு அவளைக் கூட்டிச்சென்றார்கள். அங்கு வைத்தியர்கள் சொன்னது "தாயும் குழந்தையும் மோசமான நிலையில் இருக்கிறார்கள் தாய் அல்லது

குழந்தையைத்தான் எங்களால் காப்பாற்ற முடியும்" என்பதுதான். எனக்கு மஞ்சுளாவைக் காப்பாற்றினால் போதும் என்றான் சுரேஷ்.

அங்கு விடயம் விசாரிக்க வந்த சுரேஷின் வீட்டார்கள் அவனைப் பார்த்து "நாங்கள் அப்பவும் சொன்னனாங்கள் வேணா மண்டு. இவளைக்கட்டிக்கிட்டு நீ படுகிற பாடு" என்று கூறி எரியற நெருப்பில எண்ணெயையும் ஊத்தி விட்டார்கள். அவன் "பேசாம இருக்கிறீங்களா கொஞ்ச நேரம்" என்று திரும்பச் சொன்னான். அவர்கள் மௌன மானார்கள்.

மஞ்சுளா விழுந்த செய்தி மஞ்சுளாவின் வீட்டிற்கு தெரியவந்தது. வீட்டில் எல்லாரும் சொன்னார்கள். 'அவள் போன போக்கில போய் இப்ப கஷ்டப்படுகிறாள் பட்டும், பட்டுத்தெளி யட்டும்' என்று மஞ்சுளாவின் தாயால் கேட்டுக்கிட்டு சும்மா இருக்க முடியவில்லை. உடுத்திருந்த சேலை யோடு வைத்தியசாலைக்கு வந்தாள். அங்கு குழுமியிருந்த சுரேஷின் வீட்டுக்காரர்களைப் பார்த்து திகைப்படைந்தாள். அவர்கள் தன்னைப்பார்த்து எரிந்து விழுவதையும் கண்டாள். ஓடி வந்து சுரேஷிடம் மா..மி..... மஞ்சுளா சறுக்கிவிழுந்து பலத்த அடிபட்டதால குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை இறந்திட்டுது. மஞ்சுளா தான் உயிரோடு போராடு கிறாள் என்று கண்ணீரோடு கூறினான். மஞ்சுளாவின் அம்மா தலையில் கையை வைத்துச்கொண்டு 'பேரப்பிள்ளையைப் பார்க்க ஆசை ஆசையாய் இருந்தேன். இப்ப அதுவும் போயிட்டுது. இப்பிடி எல்லாத்துன்பத்தையும் சகிக்க நான் என்ன மரக்கட்டையா? என்னால தாங்கவே முடியலையே' என்று அழுது புலம்பினாள். அங்கு வந்த வைத்தியர் "அம்மா இங்க அழாதீங்க, நோயாளர்கள் இருக்கிறார்கள்" என்றார். அதைக்கேட்டமஞ்சுளாவின் அம்மா மஞ்சுளாவை ஒருமுறை பார்த்து விட்டு வீட்டுக்கு வேகமாக விரைந்து கொண்டிருந்தாள். மஞ்சுளாவின் நிலைமையையும் சுரேஷின் பெற்றோரின் நிலைமையையும் நினைத்து நினைத்து தள்ளாடியபடி வந்து கொண்டிருந்தாள். வீதியின் அடுத்த பக்கத்திற்குச் செல்வதற்காக பின்னால் வந்து கொண்டிருந்த லொறியையும் கவனிக்காது சுயநினைவு அற்ற நிலையில் வீதியைக் கடந்தாள் அந்தோபரிதாபம் லொறி அவள் மேல் முட்டியது. அவள் வீதியின் மறுபுறம் தூக்கி வீசப்பட்டாள். அவள் விழுந்த இடத்தில் இருந்த கல்லொன்று மண்டையைப் பதம் பார்ததது. இரத்தம் பெருக்கெடுத்தது. வேகமாக அவளை வைத்தியாசலைக்கு கொண்டு சென்றார்கள். அவளை வைத்தியர் களால் காப்பாற முடியவில்லை. அவளின் இரத்தம் அதிகமாக சென்றிருந்தது.

தாய்மையின் மேன்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்து இப்போது உயிரற்ற வெறும் உடலாகக் கிடக்கும் மஞ்சுளாவின் தாயின் இறப்புச் செய்திக் கேட்ட தாய்மைக் காகக்காத்திருந்து ஏமாற்றமடைந்திருந்த மஞ்சுளாவின் இதயம் இடி இடித்தது. அதிர்ச்சியடைந்தாள். அலறினாள. கோமா நிலைக்குள்ளானாள்.

சுரேஸ் கண்ணீரோடு அந்தக் கதிரையில் சாய்ந்து நான் செத்தே போயிருக்கலாம் என்று நினைத்தவாறு அழுது கொண்டிருந்தான்.

மஞ்சுளாவின் உயிர் காப்பாற்றப் படுவது இறைவனதும் வைத்தியர் களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது.

# மாணவர் கல்வியும் பெற்றோர் ஆசிரியரின் பங்களிப்பும்

திருமதி ஜெ.கிருபாகரன்
B.A, Diploma in Education,
யா/ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச ம.வி

"அரிது அரிது மானிடராய்ப் பிறந்தல் அரிது" என்ற ஔவைப் பிராட்டியின் பொன் மொழிக்கு இணங்க அரிய பிறப்பெடுத்த ஜீவராசியே மானிடராகும். இவ்வாறான அரிய பிறப்பெடுத்த மனிதனுக்கு கல்வி மிகவும் இன்றியமையாதது. ஏனெனில் இவ் வையகத்துள் வாழ்வாங்கு வாழவழிவகுப்பது கல்வியே ஆகும். கற்கும் கல்வியானது நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மை பயக்கும் நற்குடிமகனை உருவாக்குவதற்கு உதவ வேண்டும். இக்கல்வியானது இளமையில் இருந்து பெற்றுக்கொள்வதே சிறந்தது என்பதை "இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்ற முதுமொழி எடுத்தியம்புகின்றது.

கல்வியின் சிறப்பை பலநூல்கள் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைக்கின்றன. கல்வியைப் பற்றிக்கூறிய ஆய்வாளர்கள் மாணவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் கல்விச்சிந்தனைகளையும் கற்பித்தற் திறன்களையும் எடுத்துக் கூறியுள்ளனர். ரூசோ, பிளேட்டோ, ஹேோபர் போன்ற கல்விச்சிந்தனையாளர்களின் கருத்துக்கள் இவற்றை உறுதி செய்கின்றன.

தாயின் கருவறையில் இருக்கும் பொழுதே குழந்தை கேட்டல் விருத்தியைப் பெறுகின்றது என்பது ஆய்வாளர்களின் கருத்து. தாய் அக்காலத்தில் நல்ல சிந்தனையாளரின் கருத்தடங்கிய நூல்களை வாசிப்பது மட்டுமல்ல நல்ல சிந்தனைக் கருத்துக்களைக் கேட்டுக்கிரகிப்பவளாக இருப்பது மட்டுமன்றி தனக்குப் பிறக்கும் குழந்தை நல்ல சிந்தனையுள்ள குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்ற நினைவுடனும் இருக்க வேண்டும். எந்தக்குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகளே அவன் நலலவனா-வதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பிலே தங்கியுள்ளது என்பது ஆன்றோரின் கருத்து. இது எம் கண்கூடாகும்.

மனிதனிடம் மறைந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்-படுத்துவது தான் கல்வி. இக்-கல்வியைப் பெறுவதற்கு சகலருக்கும் உரிமை உண்டு. தத்துவ ஞானியான சோக்கிரட்டீஸ் சாதாரண வறிய குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் அவரது அறிவுத்திற னால் பார் போற்றும் பெரும் தத்துவஞானியாக விளங்கு கின்றார். இந்த வகையில் வறுமை கல்வி கற்பதற்கு இடையூறாகா என்பது யாவரும் அறிந்த உண்மையாகும்.

"கற்கை நன்றே கற்கை நன்றே" பிச்சை புகினும் சீரிய கல்வியைச்சிறப்புறக் கற்று குன்றி லிட்ட தீபம் போல் மாணவ மணிகள் திகழ வேண்டும்.

மாணவன் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. தாய்மாரே குழந்தைகளின் முதல் ஆசிரியராக விளங்குகின்றார் என்பதை பெஸ்ரலோஜி (1799-1927) குழந்தைகளுக்கான முன்னெடுப்புக்களில் மிகவும் தெளிவாக விளக்கியுள்ளார். குழந்தைகளின் புலன் உணர்வுகள், உற்று நோக்கும் திறன் முதலியவற்றை வளர்ப்பதில் தாய்மாரே பெரும் பங்குவகிக்கின்றனர். தாய்மார்களின் இந்தக் கற்பித்தற் பணி மிகவும் பொறுப்பு வாய்ந்ததும் ஆகும்.

மேலும் மாணவரின் கல்வி-யில் விழிப்பாக இருக்கவேண்டியது பெற்றோரின் கடமைகளில் ஒன்றாகும். (மாணவர்) பிள்ளை விருப்பமாகச் சென்று கல்வியைப் பெறக்கூடிய மனநிலையைப் பெற்றோர் கொடுக்க வேண்டும். அது மாத்திரமன்றி பிள்ளை அன்றன்று படிக்கும் பாடங்களை பற்றி வினாவுவதுடன் மட்டுமல்லாது பிள்ளைகளின் பயிற்சிகளையும் பார்வையிடுதல் மிகவும் சிறப்பாக அமையும். பாடசாலைக்குப் பிள்ளையை அனுப்பினால் மட்டும் போதாது அவருடைய செயற்பாடு, கல்வித் தகைமைகளை ஆசிரியரிடம் சென்று அறிதலும் முக்கியமான ஒன்றாகும்.

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றானது ஒருவன் ஒரு பிறப்பில் கற்றால் அக்கல்வியானது அவன் எடுக்கின்ற ஒவ்வொரு பிறப்பிலும் தொடரும் என்பதேயாகும்.

"குஞ்சி அழகும் கொடுந்
தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும்
அழகல்ல நெச்சத்து நல்லம்யா
மென்னும் நடுவு நிலைமையாற் கல்வி
யழகே யழகு"

என்ற நாலடியார் நூலில் கல்வி அழகு உடையது என்று கூறியிருப் பதைக் கொண்டும் வற்றாத, அழிவில்லாத சீரிய கல்விச் செல்வத்தை கட்டியெழுப்ப பெற்றோரே முக்கியபங்கு கொள்ள வேண்டும். சில காலங்களில் கற்றலில் சில இடர்பாடுகள் தோன்றலாம். அவ்வேளையில் பிள்ளையை அன்பான முறையில் அணுகி அதற்கான வழிகளைக் கையாள வேண்டியதிலும் பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும். பெற்றோர் கல்வியில் விழிப்பாக இருத்தல் மூலம் சிறப்பான ஒரு சமுதாயம் விரும்பும் நற்குடிமகனை உருவாக்கலாம் என்பதில் ஐயமில்லை.

தொடர்ந்து பெற்றோரும் முன்மாதிரியாக வாழப்பழகிக்கொள்ள வேண்டும். ஏனெனில் பெற்றோர் தொலைக்காட்சியில் சினிமாப் படங்களைப் பார்த்தவண்ணம் பிள்ளையைப்படி என வற்புறுத்த முடியாது. அத்துடன் தங்கள் வேலைகளை பிள்ளைகளைக் கொண்டு செய்யவும் முடியாது. இப்படிப்பல குறைபாடுகள் காரணமாக பெற்றோரினால் பிள்ளையின் கல்வி பாதிப்படைகின்றது. ஆகவே பெற்றோரும் கல்வியின் சிறப்பினை உணர்ந்து கற்க வழிசமைக்க வேண்டும்.

பிள்ளைக்கு ஆற்றலுள்ள துறையைக் தெரிந்து பிள்ளையைக் கற்க வழிப்படுத்துவது சிறந்ததாகும்.

சில பெற்றோர் இதனை உணர்வதில்லை. தமது பதவி பட்டங்களை வைத்து அதைவிட உயர்வான பிள்ளைக்குக் கசப்பான துறைகளைத் தெரிவு செய்கிறார்கள் பெற்றோர் தம் கருத்துக்களை ஆசிரியருடன் ஆலோசித்து பிள்ளைக்குப் பொருத்த மான ஆற்றலான துறையில் படிப்பைத் தொடரவிடுவதே சிறந்தது. ஆகவே மாணவர் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பானது மிகவும் அவசியம் என்பதைத் தெளிவாக்குகின்றது.

மேலும் பெற்றோரின் பங்களிப்புடன் ஆசிரியரின் பங்களிப்பும் மிகவும் இன்றியமையாதது. ஆசிரியர் மாணவர் உறவை நோக்குமிடத்து பிள்ளைகளின் வீட்டுச்சூழல், அவர்களின் அறிவுத் திறன், செயற்பாடு என்பவற்றைப் புரிந்து கொள்வது முக்கியமான தொன்றாகும். பல தரப்பட்ட மாணவர்கள் பாடசாலைக்கு வருவார்கள் அன்போடு அவர்களை அணுகி அவரவர் தன்மைகளை அறிய முற்பட வேண்டும். அவர்களில் கண்டிப்பானவர்களும் இருப்பார்கள். கனிவானவர்களும் இருப்பார்கள். ஆசிரியர் மாணவர் உறவுமுறை சுமுகமானதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் கற்றல் கற்பித்தல் நிகழக்கூடியதாக இருக்கும். அன்பு, அரவணைப்பு போன்ற முறைகளினூடாக மாணவர்கள் பாடசாலை வரத்தூண்டும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். அவர்களை நல்வழிப்படுத்திச் சான்றோரை ஆக்குவதில் ஆசிரியரின் பங்கு மிகப் பெரிதாகும். ஆசிரியர் மாணவருக்குக் கல்வியைக் கனியாகக் கொடுக்கும் நிழல் விருட்சமாக விளங்க வேண்டியது ஆசிரியரின் தனித்துவமான பங்களிப்பாக விளங்க முடிகிறது.

சில மாணவர்களின் வீட்டுச்சூழல் சோகமானதாகக் காணப்படுகின்றது. அவ்வாறனா மாணவர்கள் பாடசாலை வரும் பொழுது பாட சாலை அவனுக்கு மகிழ்ச்சியான ஒரு பூங்காவாக அமையும் பொழுது அவன் தன் சூழலை மறந்து கற்றலில் ஈடுபட வாய்ப்பு ஏற்படுகின்றது. இதற்குப் பெரிதும் துணையாக அமைபவர்கள் ஆசிரியர் தான் என்றால் மிகையாகாது.

இவ்வாறாக ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விக்குப் பெருந் தூண்களாகவும் ஏணியாகவும் தோணியாகவும் நின்று செயலாற்றுகின்றனர். அந்த வகையில் மாணவரின் கலவியில் ஆசிரியரும் விழிப்புடன் செயல்பட வேண்டிய கடப்பாடு உண்டு.

எனவே மாணவர்களின் எதிர்காலம் சிறக்க பெற்றோர்களின் பங்கும் ஆசிரியரின் பங்கும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவையே தனித்துப் பெற்றோராலும் முடியாது. தனித்து ஆசிரியராலும் முடியாது என்பது தெளிவு. ஆகவே நல்ல தொரு எதிர்கால சமுதாயச் சிற்பிகளை உருவாக்க பெற்றோரின் பங்களிப்பும் ஆசிரியரின் பங்களிப்பும் அவசியமானது ஆகும்.

# விவாகம் - ஒரு பார்வை

சி.ரமணராஜா
BA, (Hons)

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன் பழிப்பதில்லையாயின் நன்று"

மனித வாழ்வில் சடங்குகள் பிரிக்க முடியாத வகையில் பின்னிப்பிணைந் துள்ளன. இச்சடங்குகள் யாவும் நெடும் பொழுதாகவும் பயபக்தியோடும் செய்யப்பட்டு வருதல் நோக்கத்தக்கது. நான்கு வகையான வாழ்க்கைப் படிநிலைகளில் முதற்படிநிலையாகிய பிரமச்சரியத்தை முடித்ததும் அவன் வாழ்வின் கடமைகளையும் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வான். இந்நிலையில் அவன் நல்ல வாழ்க்கைத்துணையை தேடி நல்வாழ்வு வாழ்வான. இல்லற வாழ்வில் அவன் அவனுக்கு துணையாக அமைந்து அறவாழ்வை மேற்கொள்வர். இத்தகைய நிலையே கிருஹஸ்த நிலையாகும்.

பூர்வக்கிரியைகளுக்குள் முக்கியத்துவம் வாய்ந்த கிரியையாகத் திகழ்வது விவாகமே. அதாவது திருமணக் கிரியையே ஆகும். அறம், பொருள், இன்பம், வீடு எனும் புருடார்த்தங்களை அடைவதற்காக வாழ்க்கைத் துணையாய் ஒரு பெண்ணை மணந்து கொள்ளுதலே விவாகமாகும். ஒரு ஆடவனும் பெண்ணும் தமக்கிடையே சம்மதமுடையவர்களாய் பெற்றோர் களினது அனுமதியுடனும் பெரியோர் களது ஆசீர்வாதத்துடனும் உறவினர் களின் சந்தோசத்துடனும் செய்து கொள்வதே சைவ முறையாகும்.

திருமணம் என்பதனை பண்டைய இந்திய நீதி நூலாசிரியர்கள் எத்துணை முதன்மையும் தெய்வத்தன்மையும் வாய்ந்த தொன்றாக கருதினர் என்பதனை நாம் ஓரளவு அறிந்து கொள்ள முடிகின்றது. பண்டைய இந்தியாவிலே பல வகையான மணமுறைகள் காணப்பட்டன. சமயச் சடங்குகள் செய்யப்படாவிட்டாலும் மணமானது கணவன், மனைவியர் இருவரையும் கட்டுப்படுத்தி வைத்தது எனக்கருதப்பட்டதாகலாம். அந்நூல்கள் எண்வகையான மணமுறையை எடுத்துக்கூறுகின்றன. அவையெல்லாம் பல்வேறு கடவுளர் பெயராலும் தேவர் பெயராலும் வழங்கிவந்தன.

1. பிராமவிவாகம் என்பது கன்னிப்பெண்ணொருத்தியை முறைப்படி சீதனங்கொடுத்து ஒத்த வர்ணத்தார் ஒருவனுக்கு சடங்கு முறையாக மணஞ்செய்து கொடுத்தலாகும்.

2. தெய்வ விவாகம் என்பது இல்வாழ்வான் ஒருவன் வேள்வி ஆசிரியருக்கு தன் மகளை அவ்வேள்வித்தீ முன் வைத்து தட்சிணையாக கொடுத்தலாகும்.

3. காந்தர்வ விவாகம் என்பது இருவர் கருத்தொருமித்து தம்முள் இணைந்து கூடும் கூட்டமாகும். இத்தகைய மணமானது பெரும்பாலும் களவொழுக்கமாகவே இருந்தது.

4. ஆரிட விவாகம் என்பது பெண்ணின் தந்தை சீதனங்கொடுப்பதற்குப் பதிலாக மணமகனிடமிருந்து பரிசமாக ஓர் ஆவும் ஆவேனும் பெற்றுப் பெண்ணைக் கொடுத்தலாகும்.

5. ஆசுர விவாகம் என்பது அருஞ்செயல் புரிந்தோ அரும் பொருள் கொடுத்தோ பெண்ணை அவள் தந்தையிடமிருந்து பெற்றுக்கொள்ளுதலாகும்.

6. பிரஜாபத்ய விவாகம் என்பது மகட்கேட்டத் திற்குரிய கோத்திரத் தாற்குத் தந்தையொருவன் சீதனங் கொடாமலும் பரிசங் கேட்காமலும் தன்மகளைக் கொடுத்தலாகும்.

7. பைசாச விவாகம் என்பது துயின்றவளையபேனும் சித்தப் பிரமை கொண்டவளையயேனும் கள்ளுண்டு களித்தாளையேனும் வஞ்சித்துக் கூடுதலாகும். இதனை மணமுறையென்று சொல்லுதற்கே தகுதியற்றது.

8. இராக்கத விவாகம் என்பது பெண்ணை அவள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்ளுதலாகும்.

இவ்வெண்வகை மணமுறைகளுள் பிராம, தெய்வ, ஆரிட, பிரஜாபத்திய மணமுறைகளே பொதுவாக சான்றோரால் ஏற்றுக்கொள்ளப் பட்டவையாகும். சமய முறைப்படி செய்யப்பட்ட இம்மணங்கள் குலைக்க முடியாதன எனக் கருதப்பட்டன. ஏனைய நான்கு மண முறைகள் சமூகத்தில் உள்ள சான்றோரால் வெறுத்து தள்ளப்பட்டன. எனினும் பெரும்பாலும் களவுக் காதலளவாகவே இருந்து விடக்கூடியதான காந்தர்வமணம் சமூகத்தில் வியக்கத்தக்கவாறு மதிப்புப் பெற்றுள்ளது.

எது எவ்வாறிருப்பினும் இன்று சமூகத்தில் சமய முறைப்படி நடக்கும் கிரியைகளை பின்வருமாறு நோக்கலாம். சமய முறைப்படியான மணம் மிகவும் சிக்கலான சடங்குகளுடன் செய்யப்பட்டதாகும். இத்தகைய செலவுகளை எல்லாம் பெண்வீட்டாரே ஏற்றுக்கொள்கின்றனர். இச்செலவுகளும் சீதனமும் சேர்ந்து பெண்ணின் தந்தைக்கும் குடும்பத்தார்க்கும் பெருஞ்சுமைகளாகவே இருந்து வருகின்றன.

ஆண்பெண் இருபாலார்க்கும் விதிக்கப் பட்ட ஒரு புண்ணியக் கிரியையாக திருமணக்கிரியை விளங்குகின்றது. இக்கிரியை நடைபெறுமுன் இருவீட்டாரும் மணமக்களின் பொருத்தம் பார்த்து தமது விருப்பத்தை தெரிவித்துக்கொள்வர். ஒரு சுப மூர்த்தத்திலே திருமணப் பதிவு இடம்பெறும். மணத்திற்குரிய நாள் குறிக்கப்பட்டதும் மணமகன் இல்லத்திலே மாங்கல்யத்திற்குரிய பொன்னுருக்கப் படும். அதேவேளை மணமகள் இலத்தில் பந்தலுக்கு வேண்டிய நாட்கால் (கன்னிக்கால்) நாட்டப்படும். திருமணப்பந்தலிலே சிவசக்தி பாவனையில் அரசாணி மரம் நாட்டப்பட்டு

பூசனைக்குரிய கும்பங்கள் நாட்டப்பட்டு அவற்றுள் கடவுளை எழுந்தருளச் செய்து மணத்திற்குரிய ஆயத்தங்கள் இடம்பெறும். இவையெல்லாம் திருமணக்கரியை ஆரம்பிப்பதற்கு முன்னரே செய்யப்படுகின்ற முதற்கிரியையாகும்.

தத்தமது குலவழக்கப்படி மணமகள் பந்தலுக்கு வந்ததும் குருவானவர் எல்லா சுயகருமங்களுக்கும் முதற்கிரியையாகிய சங்கற்பம் பிள்ளையார் பூசை, புண்யாகம், பஞ்சகவ்வியம், அங்குரார்ப்பணம் (முளையிடுதல்) இரட்சாபந்தனம் (காப்புக்கட்டுதல்) என்பவற்றை கிரமமாகச் செய்வர். மணமகளும் வரவழைக்கப்பட்டு இக்கிரியைகள் யாவும் அவருக்கும் செய்யப்படும். பின்னர் கும்பத்தில் சிவன் அம்மனுக்கு பூசைகள் இடம்பெறும். திருமணத் தம்பதிகளுக்கு கோள்களின் கடாட்சம் வேண்டியும் முகூர்த்தத்திலுள்ள தோஷம், தம்பதிகளின் இலக்கண தோஷம் என்பனவற்றை உத்தேசித்து குண்டத்தில் அக்கினி காரியம் இடம்பெறும். மணமகளின் தாயார் ஒரு தட்டிலே அக்கினையக்கொண்டு வந்து ஓம குண்டத்திலே இடுவார். இவ்வேளை யாகம் (எரியோம்புதல்) நிகழும். மணமகள் இலத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட தட்டினில் உள்ள அரிசி, கூறை, பொன்மாங்கல்யம், மணமாலை,மஞ்சள், குங்குமம், கண்ணாடி, தாம்பூலம், வாசனைத் திரவியங்கள் என்பவற்றுக்குப் பூசை நிகழ்ந்து அவை சபையோர்களது ஆசீர்வாதத்தை பெறும்.

அடுத்து பிதுரர் ஆசீர்வாதம் இடம்பெறும். பிரிந்து போன முன்னோரை வேண்டுதலே இதுவாகும். அதாவது மணமகனுடைய முன்னோர் பெயர்கள் மூன்று, மணமகளுடைய முன்னோர் பெயர்கள் மூன்றும் மணப்பந்தலில் கிளர்த்தப்படும். மணமகளுடைய தந்தையாவது, அண்ணனாவது, தாய் மாமனாவது கால் கழுவி வஷ்திரம் கொடுத்து மண மகனுக்கு உபசாரம் இடம்பெறும். சைவத் திருமண முறையில் இன்னொரு விசேட அம்சம் "கன்னிகாதானம்" என்பதாகும். இதனை "தாரை வார்த்தல்" என இக்காலத்தில் அழைப்பர். ஒருவர் தாம் இதுவரை காலமும் வைத்திருந்த பொருளை இன்னொருவருக்கு சொந்தமாக்குவதையே தாரை வார்த்தல் எனக் கூறலாம். மணமகளாகிய இலக்குமியின் திறந்த கைகளிலே தாம்பூலம், பொன் என்பவற்றை வைத்து தந்தையானவர் பெண்ணின் கைகளைப் பற்றி தாயார் மும்முறை தாரை வார்க்க விஷ்ணு வடிவினராகிய மணமகன் கைகளில் பொன்னோடு கூடிய பொன்மகளை ஒப்புவித்தலே கன்னிகா தானம் எனப்படும்.

சபையோரது ஆசிபெற்ற தாலி, கூறை முதலிய மங்கலப் பொருட்களை மணமகன் மணமகளுக்கு வழங்குவார். மணமகள் அக்கூறையினை தோழிகள் சகிதம் அணிந்து மணப்பந்தலுக்கு மீள்வர். அடுத்து மாங்கல்ய தாரணம் இடம்பெறும். இதுவே விவாகக் கிரியையின் உயிர் நாடியாக விளங்குவதாகும். தாலியில் சிவன், விநாயகர், இலக்குமி, ஏதேனும் ஒரு இலட்சினை இருக்க வேண்டும். மேளம் முதலிய மங்கல வாத்தியங்கள் முழங்க,

அந்தணர் ஆசி கூற சபையோர் வாழ்த்த மணமகன் மணமகளின் கழுத்திலே இறைவனை வேண்டி உமாமகேஸ்வரர் நாமம் சொல்லிய் மங்கல நாணாகிய தாலியை பூட்டித்திருநீறு இடுதல் வேண்டும்.

தாலி கட்டுதல் நிறைவெய்தியதும் மணமக்கள் ஒருவருக்கொருவர் மாலை இடுவர். பின்னர் இருவரும் தத்தமது மாலைகளை மும்முறை மாற்றுவர். சாதாரணமாக ஒருவர் அணிந்த மாலையை வேறொருவர் அணியக்கூடாது. ஆனால் தம்பதிகள் இங்ஙனம் மாற்றிக்கொள்வது உடல் இரண்டெனினும் உயிர் ஒன்றே எனும் தத்துவ உட்பொருளினை குறித்து நிற்கின்றதாகும்.

உள்ளத்தினால் ஒன்றுபட்ட தம்பதிகள் பால்பழம் சாப்பிடுவர். அதாவது தயிர், தேன், சர்க்கரை, பழம் சேர்த்து செய்யப்பட்டதையாவது வேறு உணவையாவது இருவரும் உண்ணச்செய்தல். இதற்கு அடுத்த படியாக சகுனத்திற்காக பசுவைத் தரிசித்தலாகிய "கோதரிசனம்" இடம்பெறும். பசுவுக்கு பழம் கொடுத்து தீபம் காட்டி வணங்கி மகிழ்வர்.

அடுத்து "பாணிக்கிரகணம்" இடம் பெறும். அதாவது மணமகன், மணமகள் இருவரும் கைப்பிடித்தலே இதுவாகும்.

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்தீவலம் வந்தனர்"
என சிலப்பதிகார ஆசிரியர் புகழ்வது போல கைப்பிடித்து வரும் வரும் பொழுது ஏழடி எடுத்து நடப்பதே வழியாகும். இவ் ஏழு அடிகளும் இல்வாழ்வினில் பெறவேண்டிய உணவு, கடவுள் வழிபாடு, மனச்சாந்தி, உடற்பலம், யாகத்துக்கு வேண்டிய துணைகள், பொருட்கள், ஞானம் என்பனவாகும்.

கல் ஒன்றைப் (அம்மி) பூசை செய்தபின் ஏழடி நடந்து வரும் பொழுது மணமகளது வலக்காலை மணமகன் தூக்கி மூன்று தரம் அதில் அழுந்தும் படி செய்தல். இது அவள் தன்னிலையிலும் கற்பிலும் இளகாமல் கணவனில் நீங்காத பற்று வைத்திருக்க வேண்டியவள் என்பதுமாகும். இது மணமகனுக்கும் பொருந்தும்.

ஏழடி நடந்ததும், தீவலம் செய்ததும், அம்மி மிதித்ததும் மணமக்கள் நீர்த்தொட்டியில் மூன்றாவது முறையில் மோதிரம் எடுப்பர். இந்நிகழ்வு சிறந்த உட்கருத்துடையது. முன்னைய காலங்களில் நண்பர், பெரியோர், குரு ஆகியோர்களை ஏழடி பின் சென்று வழிவிடுவது மரபாகும். ஒருவகை ஷேமமாக வழியனுப்ப வேண்டுமாயின் அடுத்த நீர்நிலைவரை சென்று வழியனுப்ப வேண்டும். இக் கருத்துப்படியே மணப்பந்தலிலும் ஏழடி நடந்து அப்பால் நீர்ப்பாத்திரம் வைப்பது ஆகும். இறுதியில் குருக்கள் தம்பதிகளுக்கு வசிட்டரதும், அருந்ததியதும், ஒழுக்கம் அன்புடமை களை விளக்கி, நீவிர் இருவரும் கற்பு நெறி தவறாது இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி மணமக்களை ஆசீர் வதிப்பார். பின்னர் பெற்றோர் களும்,பெரியோர்களும் அறுகரிசி இடுவர். மங்கலமான ஆரத்தியுடன் மணமக்கள் புதுமனை புகுந்தேறுவர்.

இவைபெரும்பாலும் பணம் படைத்தவர் களால் தான் செய்ய முடியும் என்பது குறிப்பிட்டுக்கூறக் கூடிய தொன்றாகும். மணமானது குறைந்த அளவிலும் செய்விக்கலாம். இயலாதவர்கள் கோயிலாவது வீட்டில் பிள்ளையார் பிடித்து வைத்தாவது பலர் முன்னிலையில் அன்பாய் மணம் செய்து கொள்ளலாம்.

இன்றைய காலங்களில் கிரியை நெறியில் பிறழ்வு நிலைகள் இருப்பதனைக் காண முடிகின்றது. கிரியைகளில் நன்கு தேர்ச்சி இல்லா பிராமணர்களின் தவறும் இதற்குக் காரணம் எனில் மறுப்பதற்கில்லை. மணமகன் - மணமகள் பொருத்தங்கள் இருக்கோ, இல்லையோ நாம் அழகு பார்க்கிறோம், படிப்பும் பார்க்கிறோம், பெண்ணோ ஆணோ எவ்வளவு சம்பாதிக்கின்றார்கள் என்று கணக்குப் பார்க்கிறோம். எல்லாவற்றுக்கும் மேலாக சீர்வரிசை எனும் நிலை எம்மவரிடத்தே மேலோங்கியுள்ளது. இத்தகைய நிலையே இன்று வாழ்வாகிவிட்டது. இது வாழ்வல்ல. இச்சீர்வரிசைக்கொடுமையால் முதிர் கன்னிகள் வீட்டில் முக்காடிட்டு முடங்கிக் கிடக்கும் அவலநிலையும், அவர்களையே நினைத்து நடைப் பிணங்களாக இருக்கும் பெற்றோர் களையும் நாம் காணாமலில்லை. ஆனால் எமது சமூகம் இதனை நினைத்துப் பார்க்காதது வேதனைக் குரிய விடயமாகவே உள்ளது. இரு மனம் ஒன்றித்து பொருத்தம் பார்த்து செய்து கொள்கின்ற தம்பதிகள் வாழ்க்கையை இனிமையாக நடாத்து வார்கள். அவர்களுடைய வாழ்வு அற்புத மாக அமையும். இதற்கு சீர்வரிசை தடையல்ல.

எனவே திருமணம் என்னும் புனிதமான சடங்கிற்கு நம்மவர்கள் வைத்திருந்த விதிமுறைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. இன்றும் கடைப்பிடிக்கும் விதிமுறைகள் மிகவும் உற்சாகமானவை. உயிர்ரோட்ட முடையவை. நட்சத்திரம், ராசி இரண்டையும் பெண் ருதுவான தேதியையும் கவனத்தில் கொண்டு திருமணம் செய்து கொண்டால் இயன்ற வரை வாழ்க்கை நலமாக அமையும் என்பதும் பலரது கருத்தாகும். திருமணம் செய்கின்ற ஆடவனும் பெண்ணும் ஒருவருக்கொருவர் மனமொத்துப் போக வேண்டும். இது மட்டும் ஒத்திருந்தாலும் போதாது. ஏனைய பொருத்தங்களும் - ஒற்றுமைகளும் - விட்டுக்கொடுப்புக் களும் - புரிந்துணர்வுகளும் - அன்புப் பரிமாற்றமும் இருக்க வேண்டும் என்பது தான் முக்கியமாகின்றது.

இவ்வகையான வாழ்வுக்குத்தான் எமது மூதாதையர் இருவர்க்கும் பொருத்தம் பார்த்து பூர்வீகம், குலம், குலமுறை என்பன பார்த்து இருவரையும் சேர்த்துவைக்கின்ற பெருமையினை கொண்டிருந்தார்கள்.

**"வாழ்க குடும்பம் வளர்க நின் புகழ்"**

# இடைநிலை வகுப்புக்களில் வாசிப்புத்திறனை விருத்தி செய்தல்

திருமதி சு.நிர்மலன்,
B.A, Diploma in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

"விலங்கொடு மக்களனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" என்கிறார் வள்ளுவர். கல்வியறிவுடையோரே மனிதர் என்றும் கல்வியறிவற்ற ஏனையவர் விலங்குகள் என்றும் விளம்புகிறது இக்குறள். இதன் மூலம் கல்வியறிவு படைத்தோரையே இவ்வுலகு மனிதனாக மதிக்கும் என்பது புலனாகிறது. "மனிதன் மனிதனாக வாழ்வதற்கும் கல்வியறிவு இன்றியமையாததாக அமைகிறது." அந்த அறிவைப்பெறுவதற்கு மாணவர்களை வழிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர்களிடத்திலேயே தங்கியிருக்கிறது எனலாம். அந்தப்பாரிய பொறுப்பினை ஆசிரியர்கள் நிறைவேற்றுவதற்குப் பெற்றோரின் பங்களிப்பும் பூரணமாகக் கிடைத்தல் வேண்டும்.

பெற்றோரின் பங்களிப்பு எனும் போது மாணவரைஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புதல், அவர்களுக்குத் தேவையான அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு நல்ல காரியங்களுக்கும் தட்டிக்கொடுத்தல், பாடசாலையில் கற்றவற்றை மீட்பதற்கும் வழியமைத்துக்கொடுத்தல் மூலம் பிள்ளைகளின் கற்றலுக்குரிய பங்களிப்பைச் செய்ய முடியும்.

இந்த வகையில் இடைநிலை வகுப்புக்களில் வாசிப்புத்திறனை எவ்வாறு விருத்தி செய்யலாம் என நோக்குவோம். மொழித்திறன் விருத்தியில் வாசிப்பு மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. உறவை வளர்த்துக்கொள்வதற்கும், எமது மொழி அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு மொழியின் ஓர் அங்கமான வாசிப்புத் துணை புரிகின்றது. "வாசிப்பு மனிதனைப் பூரணத்துவமடையச் செய்கின்றது."

கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் வினாவுதல், தர்க்கித்தல், கலந்துரையாடல், பிரச்சினையை விடுவித்தல், எழுதுதல் போன்ற சகல செயற்பாடுகளுக்கும் வாசிப்பே உறுதுணையாக அமைகிறது என்றால் அது மிகையாகாது.

இன்று பெரும்பாலான பாடசாலைகளில் எழுத, வாசிக்கத் தெரியாதவர்கள் மெல்லக்கற்போர், மந்த புத்தியுயோர் எனக்கூறி மாணவர்கள் சிலர் ஒதுக்கப்படுவதையும் அவர்கள் தமது பாடசாலைக் காலம் முழுவதுமே ஒன்றும் தெரியாதவர்களாகவும், சமூகப் பொருத்தப்பாடற்றவர்களாகவும் வெளியேறுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதற்காக அரசாங்கமும். கல்வித் திணைக்களமும். ஆசிரியர்களுமாகச் சேர்ந்து புதிய பல செயற்றிட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்திய போதும் அதில் பூரணமான வெற்றியைப் பெற முடியவில்லை என்றே கூறவேண்டும்.

இந்நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒரு மாணவன் தனது மொழியில் பூரண அறிவைப் பெற வேண்டும். இதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் வழிகாட்டிகளாக அமைய வேண்டும். "எழுத்தறி வித்தவன் இறைவனாவான்" எனவே ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்படைக்கப் படும் சகலபிள்ளை களையும் எழுத வாசிக்கத் தெரிந்த சமூகப் பொருத்தப்பாடுடைய மாணவராக உருவாக்கத் தம்மை அர்ப்பணித்தல் வேண்டும். எழுத்து, வாசிப்பு என்றதுமே அது தமிழாசிரியர் தான் செய்ய வேண்டியது என்று கருதாது நாம் ஒவ்வொருவருமே தமிழ்மொழி மூல ஆசிரியர்கள் தாம் என்பதை உணர்ந்து அனைத்து ஆசிரியர்களும் செயற்படுவார்களேயானால் இந்நிலை மாற்றியமைக்கப்படும். பாடசாலையில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர் பட்டியலே இருக்க மாட்டாது.

உதாரணமாக எமது பாடசாலையில் தரம் 6C யில் 20 மாணவர்கள் மெல்லக் கற்போர் எனக்கூறப்பட்டு விசேட செயற்றிட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கு ஒரு தமிழ் ஆசிரியர் ஒரு மணித்தியாலம் மாலை நேர வகுப்பு நடாத்தி வருகின்றார். 20 மாணவர்களையும் வாசிப்புச் செயற்பாட்டில் ஈடுபடுத்தினால் ஒரு மாணவனுக்குக் குறைந்தது 20 நிமிடமாவது எடுத்தால் தான் அவனது வாசிப்பில் பூரண திருப்தியினைப் பெற முடியும். இதனை அவ்வகுப்பில் பாடமெடுக்கும் ஆசிரியர் நான்கு பேர் சேர்ந்து ஐந்து மாணவர்களைப் பொறுப்பேற்று ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் கடமையுணர்வோடு செயற்பட்டால் பூரண வெற்றியினை அடைய முடியும் என்றே கூறலாம்.

இடைநிலை வகுப்புக்களில் வாசிப்புத்திறனை விருத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் வகுப்பறையை ஒழுங்கமைக்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். மாணவனின் வாசிப்புச் இடர்பாடடிற்கான காரணத்தைக் கண்டறிந்து ஏற்ற தீர்வுகளை வழங்கி மாணவரிடையே வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். உரிய முறையில் வாசிப்பு செயற்பாடுகளைத் திட்டமிட்டு

அமைத்துக்கொள்வதற்கும், கற்பித்தற் செயற்பாட்டில் வாசிப்புத்திறனைச் சிறப்பாக வளர்ப்பதற்கும் ஆசிரியர் களுக்கு அதிக பங்குண்டு. இதற்காகப் பல்வேறு நுட்பங் களையும், கற்பித்தற் துணைச் சாதனங்களையும் பயன்படுத்த வேண்டும்.

- ♦வாசிக்க முடியாத மாணவரைத் தனியாக இனங்கண்டு பெற்றோரு டன் கலந்துரையாடல்

- ♦கற்றலில் விருப்பை ஏற்படுத்துதல். அதாவது கவர்ச்சிகரமான கற்பித்தற் சாதனங்களைப் பயன்படுத்துதல்.

- ♦சொற்களஞ்சிய விருத்திக்காகப் பாடநூல் தவிர்ந்த வேறு நூல்கள் புத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிக்க வழிப்படுத்துதல்.

- ♦வகுப்பறையில் புத்தக மூலை ஒன்றை உருவாக்கி ஓய்வான பாடவேளைகளில் அதனை வாசிப்பதற்கு வழிப்படுத்துதல் (புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் புத்தக மூலை அவசியமென வலியுறுத்தப்-படுகின்றது.)

- ♦வகுப்பறையில் தினமும் சரியான வாசிப்புப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் பொருள் வேறுபாடறிந்து பிழையின்றி எழுதவும், வாசிக்கவும் பழகிக் கொள்வர்.

- ♦நூல் நிலையம் , வாசிகசாலை சென்று நூல்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குதல் வேண்டும் என்பதை உணரச் செய்தல் வேண்டும்.

"நல்ல நூல்களே நல்ல நண்பர்கள்" என்பதை உணரச்செய்தல் வேண்டும்.

"என்னை என்றும் எச்சந்தர்ப்-பத்திலும் கைவிடாத நண்பர்கள் புத்தகங்களே" என்றான் ஆங்கிலக் கவிஞன் ஒருவன். இதற்கமைய இளமைப் பருவம் இனியது என்பதை ஆசிரியர்களும் பெற்றோர்களும் உணர்ந்து இப்பருவத்திலேயே பிள்ளைகளுக்கு நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இவ்வாறான பழக்கத்தை ஏற்படுத்திக்கொடுத்தால் மொழியாற்றல் விருத்தியுறும். பாடங்களிற் சிறப்படைய முடியும். வாழ்க்கை பூராகவும் பிள்ளை மகிழச்சியாக இருக்கக்கூடிய வழியையும் அமைத்துக் கொடுக் கலாம்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"என்ற ஆன்றோர் வாக்கிற்கு இணங்கச் சிறு பராயத்தில் இருந்தே பிள்ளையின் வாசிப்புத் திறனை விருத்தி செய்வதற்கு ஆசிரியர்களும் பெற்றோர்களும் பொறுப்புணர்வுடனும் கடமையுணர்வுடனும் பெற்றோர் களும் செயற்பட்டால் "இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்-களாவர்" என்பதில் ஐயமில்லை.

# ஆதிமூலத்தின் ஓவிய வெளிப்பாடு

ச.தர்மதாஸ்,
B.A, Dip in Education
ஆசிரியர்,யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

ஓவியம் எனும் போது உலகத்தினை கட்புலக் கலைக்குள் அடக்கும் ஓர் வழிமுறை. அதாவது பரந்துபட்ட பார்வையை ஓர் அளவுக்குள் உள்ளடக்கும் முறை இதுவே. ஆரம்ப கால மனிதனின் மொழி ஏறத்தாள கி.மு 2500 ஆண்டுகளுக்கு முன் ஆதிகால மனிதன் குகைகளில் வரைந்த மிருகங்கள், காட்சிகள் பின் எழுத்துக்களாக பரிணமித்துக் காணப்பட்டது. Drawing என்பது Line இல்லாமல் சாத்தியமில்லை. நாம் படம் என்ற ஒன்றில் அதாவது ஓவியமொன்றில் நேர், குறுக்கு, நெடுக்கு, வளையாடுகள் என்பனவற்றாலே பூரணப்படுத்தப்பட்டிருக்கும். சுருங்கக்கூறின் ஓவியத்திற்கு Lineனே உயிர். நாடி Line இல்லாமல் அது சாத்தியமிலலை. இவ் Line Drawing ல் மிகவும் தேர்ந்து விளங்கிக் கொண்டிருப்பவர் சமகால ஓவியரான ஆதிமூலம் ஆவார். இவர் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கிரம்பர் என்னும் கிராமத்தில் பிறந்தார். இவரது ஓவிய ஆர்வம் மற்றைய கல்வியில் கவனம் குறைந்து கவலைக்கிடமானது. இவர் 1960ல் P.C செட்டியாருடைய உதவியுடன் சென்னை ஓவியக் கல்லூரியில் சிறப்ப துறைத்தலைவராக விருந்த தனபால் அவர்களிடம் சேர்க்கப்பட்டு 6 வருட படிப்பை முடித்தார். இரவது 6 வருட கல்லூரிப் படிப்பில் 2, 3 வருடங்கள் வரை painting செய்துவந்தார். இதில் இவர் திருப்பதி காணவில்லை. இவரது கவனம் Line இலேயே இருந்தது. மாணவ பருவத்தல் மிகவும் ஆதிக்கம் செலுத்தியது. ஆதிமூலத்திற்கு Line யே ஆகும். இவர் இதனூடு கலரைச் சேர்க்க விரும்பவில்லை. ஏனெனில் Line ல் வலிமை, அசைவு கொண்ட உயிர்ப்புத்தன்மையைக் குறைக்குமெனவும், தெளிவின் கொணரும் என எண்ணினார். இதனால் இவருடைய Line ல் ஓட்ட வேகம், ஜீவன் இருந்தது. இவ் ஆவர்த்திற்கு காரணம் அல்லது பதித்தவர் பிக்காசோ என குறிப்பிட்டுள்ளார்.

இவர் 1966 - 1967 களில் தனிமனித கண்காட்சிகளை வைத்துள்ளார். இதில் ஓவிய வரை கோடுகளே வியாபித்திருக்கின்றன. இதற்கு கீழைத்தேய ஓவிய மரபு, கீழைத்தேய வாழ்வை பற்றிய எண்ணங்கள் காரணமாக இருந்திருக்கலாம். ஏனெனில் இந்திய சிற்ப சாஸ்திரம், சித்தி - சூத்திரம் போன்ற நூல்கள் கோடுகளை உயர் வெளிப்பாட்டு முறையாகவும் அதிவுயர் தகமையாகவும் கொள்கின்றன. உதாரணமாக சித்தன்ன வாசல், சிதம்பரம், நாயர்க்கர் கால ஓவியம் முதல் சர்போஜி மகாராஜா காலத்துக் கண்ணாடி

ஓவியங்கள் வரை, தமிழக ஓவிய பாரம்பரியமும் கோடுகளை ஆதார மாகக் கொண்டது. இயற்பண்புக்கு அப்பாற்பட்டதும் கியூபிஸ சாயல் கொண்டதுமான மோடிப்படுத்தல்கள் இந்திய கட்புல வடிவங்களில் ஆதிக்கம் காணப்படுகின்றன. இவை ஆதி மூலத்தின் கற்பனை படவாக்கம் அல்லது கருத்து வெளிப்பாட்டு ஓவியங்களில் காண முடியும்.

ஆதிமூலம் பின்வருமாறு நினைவு கூறுகிறார். "ஊரின் எல்லைகளில் தனித் திருக்கும் ஐயனார் உருவங்களும், சுடுமண் குதிரைகளும், உயிரும் பேராற்றல் நிறைந்தனவாய் எனக்குத் தோன்றும் இவை இதுதான் என்று சொல்ல முடியாத பாதிப்பை எனக்குள் ஏற்படுத்தியிருக்கின்றன.

தனபால் இவருக்கு முன்னைய கால ஓவியர்களுடைய படங்களை பிரதிபண்ணத் தூண்டினார். மற்றும் ரேசர் இல்லாது வரைதலின் வேகத்தினை, நேர்த்தியாக, வீச்சினை உணர்த்தினார். இதனால் ஆதி மூலத்தினுடைய படவெளிப்படுத்தல்களில் மிகவும் சுதந்திரமான, நேர்த்தியான, கோடுகள் காணப்படும். இவர் இக்காலப்பகுதியில் மிருகங்களுடைய படங்களை ஆதிமூலம் அதிகளவு வரைந்திருக கின்றார். இதில் இவர் கோடுகளினூடு வெளிகொணரப்படும் மிருகத்தனம் அவ்மிருகத்தினுடைய தனி இயல்பு, என்பன உயிரோட்டமாக காணப் படுவதே இதில் தனக்குரியதன் தெளிவு. இதனால் போற்றப்படுகின்ற தொடர்ச்சி, வெளிப்பாடுகள் இதனூடு எட்டப்படுகின்ற ஓர் பக்குவம் இது. இவரது கல்லூரிக் காலத்திலிருந்தே அவதானிக்க முடியும். இங்கு நாம் பெறுகின்ற அனுபவமானது உருவங்களில் உயிரும், கோடுகளில் நம்பிக்கையும் தான்.

இவர் 1969 இல் கல்லூரியிலிருந்து வெளிவந்து காந்திஜினுடைய போக்கில் ஈர்க்கப்பட்டு நூற்றுக்கு மேற்பட்ட கோட்டோவியங்களை வரைந்து அதனை கண்காட்சிக்காகவும் வைத்தார். இதில் தூரிகை கொண்டும், பேனாவாலும் ஏற்படுத்தப்பட்ட மேற்பரப்பு தோற்றமும் அது கலைத்துவமாக தருகின்றன. முப்பரிமாண மாயையும் ஓவியத்திற்கு மேலும் வலுச் சேர்க்கின்றன. இதில் கியூபிஸச் செல்வாக்கும் ஓர் பகுதியாக காணப்படுகின்றது. சிறிய கோடுகளைக் கொண்டு முதிர்வின் தளர்வை தோற்றத்திலும், கனிவை உணர்விலும் கண்ணாடி தொடக்கம் மீசை வரை உள்ள கோடுகள் அனைத்தும் நேர்த்தியானவை. புகைப்படத்தினை கொண்டு உயிரோட்டத்தினை காட்ட முடியும் என நிருபித்துள்ளார் ஓவியர். இதனை பற்றி ஓவியர் பின்வருமாறு கூறுகின்றார். "அவரது வசீகரமான முகம் எந்தவொரு கொணத்திலும் கவிஞன் ஒருவனை ஓவியத் தீட்ட அல்லது சிற்பமாக்க உசிப்பிவிடும் உடல்வாகு ஒரு கோணத்தில் புத்தரையும் மற்றொரு கோணத்தில் இயேசுவையும் நினைவுக்குக் கொண்டுவரும் அளவுக்கு மனித உருவில் இறைவனை தரிசிக்கின்ற அனுபவம் இதெல்லாம் தான் காந்திஜீயை தான் 100 மேற்பட்ட கோட்டுச்சித்திரங்களாக வரைய என்னைத் தூண்டியது" என்கின்றார்.

1970, 1971 ளில் இவர் தனது வெளி படுத்தல்களை அதாவது படங்களில் சிறு

மாற்றங்களை செய்ய முனைந்தார். கோடுகளுடன் நீர் வர்ணங்களை இணைக்கும் முயற்சியில் இறங்குகிறார். இது அவருக்கு திருப்பதியினை அளிக்கவில்லை. இக்கால கட்டங்களிலேயே அருவ ஓவியங் களையும் வரையத் தொடங்குகிறார். 1974 வரை painting யும் oil, colour ல் வரைந்தார். எனினும் 1971 - 1975 வரையான காலம் ஆதிமூலத்திற்கு ஓர் மந்தகாலமாகவே இருந்தது. இதன் பிறகு இவர் Line யிலேயே பயணித்தார். படைப்பாளியின் வெளிப்பாட்டிற்கான உந்துதல் வெளிப்படுத்தல் அனுபவம், எண்ணம், பகிரப்படும் முறை, உத்தியினூடு எட்டப்படுகின்ற வெளிப்பாட்டு அடையாளம். ஓர் படைப்பாளியினிடத்து ஆதிக்கம் புரியும். இதுவே ஆதிமூலம் அடுத்த கட்டத்திற்கு நகர்தலுக்கான இடைவெளியாக காணப்பட்டது. 1975 - 1978 வரை வெளியை மையமாகக் கொண்டு படைப்புக்கள் அமைகின்றன. கனவுருவத் தோற்றங்கள் கொண்ட வடிவங்களினூடும் வெளிப்பிரிப்பினூடும் இந்த எண்ணம் வெளிப்படுகிறது. இவ் வடிவம் இவரது ஆரம்பகால கியூபிஸ ஈடுபாட்டுடன் ஒத்த வெளிப்பாடாகும். இப்படங்களை சா.கந்தசாமியின் "அவன் ஆனது", சுந்தரராமசாமியின் "S.S சில குறிப்புக்கள்" ஜார்ஜ் ஆர் வெல்வின் "விலங்குப்பண்ணை" என்பவற்றில் காணலாம்.

இவர் 1980களில் Skitch book Drawing வரைந்தார். மகாராஜா (King) தொடர் கோட்டுப்பங்களை புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு வரைந்தார். King with Beared II லும் அவற்றின் அணுகுமுறையும் காட்சிப்படுத்தலும் அவற்றைப் புகைப்படம் சார்ந்த மெய்யுரு ஒன்றாக அல்லது புகைப்படம் போன்ற தோற்றப்பாட்டால் ஒன்றாகவே காட்டுகின்றன. இவற்றில் கோடுகளின் வேறுபட்ட பயன்பாட்டால் எட்டப்படுகின்ற சிறப்பான மேற்பரப்பியல்பால் ஆதிமூலத்தின் எண்ணம் முழுமையாகப் பகிரப்படுகின்றது. இவர் மிகவும் பிந்திய நிலையில் படைக்கும் கிராமிய வடிவங்களாகட்டும், இதர உருவங்கள் அல்லது கோடுகளாகட்டும், இவை இங்கு வெறும் தொன்மையான வடிவங்கள் மட்டுமல்ல வெறும் அடையாளங்களாக தெரிவு செய்தவையும் அல்ல. இவை வடிவங்களின் உள் அர்த்தங்கள் சார்ந்தவை. உள் அழகிலிருந்தானவை. இவை அனைத்தும்சொல்முறையில் ஆதிமூலத்திற்கு உரியது. புதியவையும் கூட. இவரது ஒவ்வொரு கோடுமே ஒரு அனுபவம். அவரின் சொந்த கோட்டு மொழியின் உருவாக்கத்திலும் அதன் மோடிப்படுத்தலிலும் ஓர் அற்புதமான ஒன்றிணைவு நிகழ்ந்து விடுகிறது. மேற்கேத்தேய கியூபிஸம் மீது குறிப்பாக பிக்காசோவின் படைப்புக்கள் மீதான ஈடுபாடு ஓவியரின் உயிரிலும் உணர்விலும் கலந்து கலாபூர்வமான தனித்துவமான புதிய மொழியாக உருப்பெறுகின்றன.

**உசாத்துணை நூல்கள் :**

1. சுமங்களா - இந்திய சஞ்சிகை
2. இந்தியா ருடே - இந்தி சஞ்சிகை

# புலம் பெயர் சூழலில் ஈழத்தமிழர் பண்பாட்டின் தொடர்ச்சி - சில அறிமுகக் குறிப்புகள்

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளிலும் கனடா, அவுஸ்ரேலியா நியுசிலாந்து முதலான தேசங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் "ஈழத்தின் புலம்பெயர் சமுதாயம்" என ஒரு சமூக அமைப்பின் உருவாக்கத்திற்குக் காரணமாகியுள்ளனர். இவர்களின் எண்ணிக்கை இன்று நான்கு இலட்சத்துக்கும் மேல் என லண்டனிலுள்ள தமிழர் தகவல் மையம் கணக்கீட்டுள்ளது. தாய்நாட்டில் எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடிகள், போர் அபாயங்கள், அரசியல் நெருக்குவாரங்கள், இயக்க முரண்பாடுகள், உடல், உளத்-தாக்கங்கள் என்பன தமிழ் மக்களின் புலப்பெயர்வினைக் காலந்தோறும் அதிகரித்து வந்தன. இப்புலப்பெயர்வு பல ஆண்டுகளுக்கு முன்னரேயே தொடங்கியது. எனினும் குறிப்பாக 80 களுக்குப் பின்னரே, முன்பு ஒரு போதும் காணாத வகையில் பெருமளவான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறினர். ஐரோப்பிய, வடஅமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளுக்கு அதிக எண்ணிக்கையில் புலம்பெயர்ந்து குடியேறிய மக்கள் அங்கெல்லாம் தம்மை தனித்துவம் மிக்க ஒரு சமுதாயத்தினராக அடையாளங் காட்டக்கூடிய ஆதிக்கத்தினையும் வாய்ப்பையும் பெற்றுள்ளனர்.

இவ்வாய்ப்பினைப் புலம்பெயர் சூழலில் வாழும் தமிழர்கள் எந்தளவு தூரம் பயன்படுத்துகிறார்கள்?. அதற்குச் சவாலாக அமையும் அல்லது அமையப்போகும் காரணிகள் யாவை? என்பதை ஓர் அறிமுக நிலை நின்று இக்கட்டுரை தெளிவுபடுத்த விளைகின்றது.

ஓர் இனத்திற்குத் தனித்துவத்தை வழங்கி நிற்கும் அம்சங்களுள் அவ்வினத்தின் பண்பாட்டிற்குத் தனித்த ஓர் இடமுண்டு. பண்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கட் கூட்டம் தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதீகப் பொருட்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றின் தொகுதியாகும். இப்பண்பாட்டினை

உரியவகையில் பேணியும், கையளித்தும் வருகின்ற சமுதாயம் தனக்கென்றதொரு அடையாளத்தை எப்போதும் பேணி நிற்கும். ஒருவரது உணவுமுறைகள், ஆடையணி-கலங்கள், நடத்தைமுறைகள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், பின்பற்றும் சடங்குகள் கடைப்பிடிக்கும் ஒழுக்கநெறிகள், வழிபடு தெய்வங்கள், வணக்க முறைகள் பேசும் மொழி என்பனவோ அல்லது இவற்றுள் ஒரு சிலவோ அவர் தனித்துவமான ஒரு சமூக வகுப்பினைச் சார்ந்தவர் என்பதைத் துல்லியமாக எடை போட்டுக் காட்டிவிடுகின்றன.

இந்த அடிப்படையில் ஈழத்துப் புலம் பெயர் சமூகத்தவர் ஆரம்பத்தில் தாய்நாட்டில் தமிழ்ப் பண்பாட்டில் பிறந்து வளர்ந்தவர்கள். நிர்ப்பந்தங்கள் காரணமாக இன்னொரு நாட்டுக்குப் புலம்பெயர்ந்து, இன்னொரு பண்பாட்டுச் சூழலுக்குள் தனித்தன்றி - பெரும் எண்ணிக்கையில் வாழ முற்படுகின்றபோது, தமது பண்பாட்டுத் தனித்துவத்தை அங்கும் அவர்களால் பேணிக்கொள்ள முடியுமா? அல்லது முடியாதா? என்பது எம்முன் உள்ள பெரும் வினாவாகும். இவ்வினாவிற்கு விடையளிப்பதற்கு முன்னதாக இன்று புலம்பெயர் மக்கள் மத்தியிலுள்ள மூன்று தலைமுறை வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுதல் அவசியமாகும்.

1. தமது வாழ்நாட்களுள் பெரும்-பாலான பகுதியை இலங்கையில் கழித்த பின்னர் புலம் பெயர் நாடுகளுக்கு வந்தவர்கள் முதல் தலை முறையினர். இவர்களுள் பெரும்பாலானோர் ஐம்பது அறுபது வயதினைத் தாண்டியோர்.

2. கணிசமான வாழ்நாட் காலங்களை (ஏறத்தாழ அரைவாசிக் காலங்களை) தாயகத்தில் கழித்த பின்னர் புலம்பெயர் நாடுகளுக்கு வந்தவர்கள் இரண்டாவது தலைமுறையினர். இவர்களுள் இளம் பிராயத்தினரும், இளம் பிராயத்தைத் தாண்டியவர்களும் உள்ளடங்குவர்.

3. புகலிடச் சூழலிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் மூன்றாவது தலைமுறையினர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தமிழ்ப்பண்பாட்டைப் பற்றிக் கொண்டிருக்கும் மதிப்பீடு வேறுவேறானது. முதலாவது தலைமுறையினருள் பெரும்-பாலானவர்கள் தமது தாய்நிலத் தமிழ்ப்பண்பாட்டைச் சிறப்பு மிக்கதாகக் கருதுபவர்கள். தமது தாய்நிலத் தமிழ்ப்பண்பாடு பற்றிய உயர்வான கருத்துநிலை அவர்களிடம் உண்டு. புலம்பெயர் சூழலிலும் அதனைப் பேண வேண்டும்; இளந்தலைமுறை யினருக்கும் அதனை ஏற்றமுறையில்

கையளித்தல் வேண்டும் எனக் கருதுபவர்களாக உள்ளனர். இந்நிலையில் தாய்நிலப்பண்பாட்டை புலம்பெயர் சூழலில் கட்டிக்காப்பதற்கான அல்லது வளர்த்தெடுப்பதற்கான தனிநபர் முயற்சிகளில் அல்லது நிறுவனரீதியான முயற்சிகளில், இற்றைவரை ஆர்வங் காட்டிவருபவர்களாக உள்ளனர்.

முதலாவது தலைமுறையினரைப் போலவே இரண்டாவது தலைமுறையினருக்கும் தாய்நிலப் பண்பாட்டில் 'பிடிப்பு' உள்ளது. எனினும் புலம்பெயர் சூழல், அங்கு நிலவும் வேற்றுப் பண்பாடுகள், தொழில் வாய்ப்புக்கள், காலநிலை என்பவற்றுக்கமைவாகத் தாய்நிலத் தமிழ்ப் பண்பாட்டைச் சற்ற நெகிழ்வுத் தன்மையுடன் கடைப்பிடிக்க முடியும் எனக் கருதுபவர்களாக உள்ளனர். மூன்றாவது தலைமுறையினருக்குப் பண்பாட்டைக் கடத்தும் அல்லது புரிய வைக்கும் முக்கிய பொறுப்பு இவர்களது கைகளிலேயே உள்ளது.

1. தாய்நாட்டிலுள்ள உறவுகளுடன் தொடர்புகளைப் பேணுதல்.

2. தமக்குரிய மணப் பெண்களைத் தாய்நாட்டிலிருந்து பெறல்.

3. தம்மால் முடிந்த வரையில் புலம்பெயர் சூழலில் தமிழ் பண்பாட்டுக்குரிய சடங்குகள், வழிபாடுகள், விழாக்கள், கலைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்பவற்றைப் பேணுதல்.

4. மகாநாடுகள், ஆய்வரங்குகள், கருத்தரங்குகள், ஆய்வுப் பட்டறைகள், ஒன்று கூடல்கள் முதலானவற்றை நிகழ்த்துவதன் மூலம் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப்பண்பாடு என்பனவற்றை வளர்க்க முயற்சித்தல்.

5. தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலக்கிய நூல்வெளியீடுகள் என்பனவற்றின் மூலம் தமிழ்ப்பண்பாட்டு தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்களிப்பு நல்குதல்

6. தமிழ்ப் பிள்ளைகளைத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் கற்க வழி செய்யும் முகமாகப் பாடசாலைகளை நடாத்துதல். அங்கு தமிழ்மொழி, தமிழ்க்கலைகள் சம்பந்தமான அறிவினைப் புகட்டுதல்.

7. தாய்நாட்டிலிருந்து கலைஞர்கள், இலக்கிய கர்த்தாக்களை மேடைப் பேச்சாளர்களை வரவழைத்து புலம்பெயர் சூழலில் நிகழ்ச்சிகளை நடாத்துதல், அதற்கெனச் சங்கங்கள் அமைப்புக்கள், நிறுவனங்கள் என்பனவற்றைப் பேணுதல்.

8. குறிப்பிட்ட ஒரு சிலர் தமிழ் நாட்டுக்குத் தம் குழந்தைகளை அனுப்பித் தமிழ்ச் சூழலில் அவர்களுக்கு கல்வி புகட்ட முயற்சித்தல்.

என்பனவும் இவை போன்ற பிறவும் ஈழத்துப் தமிழ்ப் பண்பாட்டினைப் புலம்பெயர் சூழலில் நிலைநிறுத்த அத்தலைமுறையினர் மேற்கொண்டுவரும் செயற்பாடுகளாகும். இவர்களுக்கு முதலாவது தலைமுறையின் ஆலோசனைகளும் உதவிகளும் நிறையவேயுள்ளன.

புகலிடத்தில் பிறந்த அல்லது மிகச் சிறுபராயத்திலேயே புகலிடத்துக்கு கொணரப்பட்ட மூன்றாவது தலைமுறையினர் தாய்நிலம் பற்றியும், தாய்நிலப்பண்பாடு பற்றியும் அறிந்து கொண்ட விடயங்கள் மிகச் சொற்பமானவையே. குடும்ப அங்கத்தவருடன் அல்லது மிக நெருங்கிய உறவினர்களுடன் பழகும் குறிப்பிடத்தக்களவு சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்புபடாதவர்களானவேயுள்ளனர். அவர்கள் வளருகின்ற சூழல், கற்கின்ற சூழல், நண்பர்கள் வட்டம், பொழுது போக்குச் சூழல் எல்லாமே பெருமளவுக்குத் தமிழ்ப்பண்பாட்டுச் சூழலுக்கு அந்நியமானதாய் விளங்குகின்றன. குடும்பத்தவர்களுடனும், நெருங்கிய உறவினர்களுடனும் ஊடாடுகின்ற போது பகிர்ந்து கொள்ளப்படும் தமிழ்ப்பண்பாடுசார் அம்சங்கள் அவர்களுக்கு புதுமையானதாகவும், புதுவித அனுபவத்தைத் தருவதாகவும் காணப்படுகின்றன. இதனால் இத்தலைமுறை சார்ந்தவர் கள் பலரிடம் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்றுவதற்கு காட்டப்படும் அக்கறைக்கு மேலாக அதுபற்றி அறிதலில் காட்டப்படும் அக்கறையையே அதிகம் காண முடிகின்றது. இலத்திரனியல் தொடர்புசாதனங்கள், பத்திரிகைகள், புத்திலக்கிய ஆக்கங்கள், சஞ்சிகைகள், அரங்கேற்றங்கள், விழாக்கள், ஒன்று கூடல்கள் என்பனவும் இவை போன்ற பிறவும் அவர்களது ஆர்வத்தை மேலும் தூண்டுவனவாகவேயுள்ளன.

எனவே இம் மூன்று தலைமுறையினரையும் கவனத்திற்கொண்டு அவர்களது மதிப்பீடுகள், அனுபவங்கள், சிந்தனையோட்டங்கள், செயலார்வம் முதலானவற்றுக்கமைவாகத் தாய் நிலப்பண்பாட்டை அவர்கள் மத்தியில் எவ்வாறு நிலைநிறுத்துவது என்பது மிக விரிவான ஆய்வை வேண்டிநிற்கும் விடயமாகும். ஏனெனில் புலப்பெயர் சூழலில் வாழ்கின்ற தமிர்கள் இன்று தம் தாய் நிலப்பண்பாட்டை வளர்ப்பது எங்ஙனம் எனச்சிந்திப் -பதற்குப் பதிலாக அதனை எங்ஙனம் தக்கவைப்பது என்பது பற்றியே அதிகம் சிந்திக்க வேண்டிய

நிர்ப்பந்தத்திற்குள்ளாகியிருக்கின்றனர். குறிப்பாக மூன்றாம் தலைமுறையினர் அல்லது எதிர்காலச் சந்ததியினர் பற்றிய கவலைகள் அவர்களுக்கு ஏற்படத் தொடங்கியுள்ளன. தாம் விரும்புகின்ற தாய்நிலப் பண்பாட்டை எதிர்காலச் சந்ததியினரும் பிற்பற்றுவார்களா அல்லது பாது - காப்பார்களா என்னும் ஐயம் அவர்கள் மத்தியில் உண்டு. அவர்களது ஐயத்துக்கும், கவலைக்கும், நியாயம் இருக்கவே செய்கிறது. மூன்றாவது தலை முறை யினரின் சிந்தனைகள், எதிர்பார்ப்புக்-கள், மதிப்பீடுகள் என்பன இன்று தாய்நிலப்பண்பாட்டுக்கு அந்நியமாகிக் கொண்டுவருகின்றன.

1. இவர்கள் கல்வி பெறும் சூழல், தொழில் செய்யும் சூழல், பொழுதுபோக்கும் சூழல் என்பனவற்றில் பெரும்பாலும் தாய்நிலப்பண்பாட்டில் நின்றும் வேறுபட்ட ஒரு பண்பாட்டு வட்டத்தையே சந்திக்கின்றனர்.

2. பண்பாடென்பது கற்கப்படுவது (Culture is learnt) என்ற வகையில் புலம்பெயர் சூழலில் செல்வாக்கு மிக்க விளங்கும் ((Dominating) வேற்றுப் பண்பாட்டைத் தாமும் பின்பற்ற விளைகின்றனர்.

3. வேற்றுப்பண்பாட்டைப் பின்பற்றுதல் தமது ஒப்பார் குழுக்களுக்கு மத்தியில் (peer grougs) மதிப்பையும், கௌரவத்தையும் தேடித்தரும் எனக்கருதுகிறார்கள்.

4. தமது தாய்நிலப் பண்பாட்டை ஒப்பார் குழுக்களுக்கிடையில் (peer groups) பின்பற்றுகின்ற போது ஒருவித கூச்ச உணர்வை அவர்கள் எதிர்நோக்குகின்றனர்.

5. புலம்பெயர் நாடுகளின் சிதோஷண நிலை, செய்யும் தொழிலின் தன்மை, வாழ்க்கைக்குத் தேவையான பௌதீகப் பொருட்-களின் கிடைக்கும் தன்மை (avail-ability) என்பன வேற்றுப்புலம் பண்பாடு சார் அம்சங்களைப் பின்பற்றுவதற்கு வசதியை (com-fortable) ஏற்படுத்துகின்றன.

6. இன்று பூதாகரமான முறையில் வளர்ந்து வரும் உலகமயமாக்கச் (Globalization) சிந்தனையினால் இவர்களுள் பலர் கவரப்பட்டவர்-களாயுள்ளனர். இதனால் பண்பாடு அதன்தனித்துவம் என்பனவற்றை ஏற்றுக்கொள்ளாத மனநிலை இவர்கள் பலரிடம் வளர்ந்து வருகின்றது உலகமயமாக்கலை அடியொற்றித் தோன்றிய தத்துவங்கள் (Philosophies) சிலவற்றை இவர்கள் தமது வாதத்துக்குத் துணையாகக் கொள்கின்றனர்.

7. தாய்நாட்டுடன் தொடர்ச்சியான ஊடாட்டங்களை வைத்துக்-கொள்ள முடியாமை பண்பாட்டுப் பரிமாற்றத்துக்கும் பாதுகாப்பிற்கும் பெருந்தடையாகவுள்ளன.

குறிப்பாகத் தாய்நாட்டில் இடம்பெறும் போர் அனர்த்தங்கள் தொடர்ச்சியான பண்பாட்டுறவினைத் தாய்நாட்டுடன் ஏற்படுத்தத் தடையாகவுள்ளன.

எனப் பல காரணங்களை இந்த வகையில் முன் வைக்க முடியும்.

மூன்றாவது தலைமுறையினரின் தாய் நிலப்பண்பாட்டுப் பிரக்ஞைக்குத் தடையாக அமையும் மேற்போந்த காரணிகளையும் இவை போன்ற பிறவற்றையும் நன்கறிந்து ஏற்ற ஒழுங்கமைப்புக்களையும், நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன் ஊடாகவே தாய் நிலப்பண்பாட்டை அவர்கள் மத்தியில் நிலைநிறுத்த முடியும். புலம் பெயர்நாட்டுச் சூழலில் இது மிகவும் இலகுவான செயற்பாடு அல்ல. பல சவால்களுக்கும் விமர்சனங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இம் முயற்சியில் ஈடுபடவிளைவோருக்கு ஏற்படவும் கூடும் எனினும்,

1. தாய்நிலப் பண்பாட்டின் பெருமிதங்களையும், சிறப்புக்களையும் அவர்களுக்குப் புலப்படுத்தல்.

2. தமிழ் கலைகளையும் தமிழ்ப் பண்பாடு பற்றிய விளக்கங்களையும் தமிழ் மொழியிலேயே வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்தல்.

3. தாய்நாட்டுடன் இயன்றவகையில் உறவுகளைப் பேணத் தூண்டுதல்.

4. ஒன்றுகூடல்கள், கலைவிழாக்கள், ஆய்வுப்பட்டறைகள், வதிவிடக் கருத்தரங்குகள் (Residental seminars) மூலம் தமிழ்ப்பண்பாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.

5. உலகமயமாதல் பண்பாட்டின் தனித்துவங்களைச் சிதைக்கும் தன்மையைப் புரிய வைத்தல்.

முதலான (இன்னும் பல) செயற்பாடுகளை முன்னெடுப்பதனூடாகத் தமிழ்ப்பண்பாட்டின் தனித்துவத்தையும் நிலைபேற்றையும் வளர்ச்சியையும் புலம்பெயர் தேசங்களில் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பேணமுடியயும். இதற்கான பொறுப்பு அங்கு வாழும் ஒவ்வொரு ஈழத்தமிழரின் கைகளிலும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேமதுரத் தமிழோசையும் தமிழ்ப்பண்பாடும் உலகமெல்லாம் ஒலிக்க உன்னத பணியைப் புலம்பெயர் சூழலில் வாழும் எம் உறவுகள் ஆற்ற முன்வருவார்களாக.

# தகவல் தொடர்பாடல் தொழினுட்பமும் இன்றைய இளஞ்சந்ததியினரும்

செல்வி ந.சாரதாதேவி
Science, Trained
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

தகவல் தொடர்பாடற் தொழினுட்பச் சாதனங்களின் வரிசையிலே தொலைபேசி, கையடக்கத் தொலை பேசி (Mobile phone), பக்ஸ் (Fax), கணினி (Computer), Internet (இணையம்) என்பன பிரதான இடத்தை வகிக்கின்றன. இவற்றின் வருகையோடு உலகமே ஒரு கிராம மாக மாறிவிட்டது.

இச்சாதனங்களைக் கையாள்வதில் பெயரிவர்களைக் காட்டிலும் இன்றைய இளஞ்சந்ததியினரே முன்னணியில் நிற்கின்றனர், ஆர்வம் காட்டுகின்றனர். பெரியவர்கள் அவற்றைக் கையாள்வதற்கோ அல்லது அவற்றில் ஏற்படும் தவறுகளைத் திருத்துவதற்கோ இளஞ்சமுதாயத்தினரையே நாடுகின்றனர். ஏன் குடும்பங்களின் கையடக்கத் தொலைபேசியைப் பிள்ளைகளே கையாள்கின்றனர். பெற்றோர் அவற்றைப் பயன்படுத்து வதற்குப் பிள்ளைகளை நாடு கின்றனர். அத்துடன் தமது பிள்ளைகளின் திறமைகளைக் கண்டு பூரிப்படைகின்றனர். பெருமை பேசுகின்றனர். இந்நிலையில் பிள்ளைகளிடையே தமக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் உண்டாகின்றது. பெரியவர்களை மதிக்கின்ற தன்மை குறை வடைகின்றது. கையடக்கத் தொலைபேசியைத் தமது பிள்ளைகள் எவற்றுக்கெல்லாம் பயன்படுத்துகின்றனர் எனப்பெற்றோர் கண்காணிக்க முயல்வதும் குறைவு, கடினமானதும் கூட. எமது நாட்டைப் பொறுத்தவரை முக்கியமாகக் கிராமப்புறங்களிலே தகவல் தொடர்பாடற் சாதனங்களின் பாவனை அதிகரிப்பானது தலைமுறை இடைவெளியை அதிகரிக்கின்றது எனக்கூறலாம்.

தகவல் தொடர்பாடற் தொழினுட்பச் சாதனங்களிலே Internet (இணையம்) உம் முக்கிய இடத்தைப் வகிக்கின்றது. மாணவர் உலக ளாவிய ரீதியில் நடாத்தப்படும் பரீட்சைகளுக்கு (On line exam) முகங்கொடுக்கின்றனர். E-mail (மின்னஞ்சல்) பரிமாற்றங்களை மேற்கொள்கின்றனர். எமது நாட்டிலும் பாடசாலைகளில் ICT, GIT பாட அறிமுகத்தோடு மாணவர் கணினி,

Internet வசதிகளை அதிகம் பெறுகின்றர், ஆர்வம் காட்டுகின்றனர். கிராமப் புங்களில் கற்கும் மாணவருக்குக் கூட Internet ஐப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனால் உலக ஓட்டத்தோடு எமது மாணவ சமுதாயமும் ஓட முடிகிறது என நாம் பெருமையோடு கூறலாம். மாணவர் தமது பாடரீதியான மற்றும் பொது அறிவு சார்ந்த விடயங்களை Internet மூலம் தேடிப்பெறுகின்றனர். சிறுபராயத்தினர் உதாரணமாகத் தரம் 5, 6 மாணவர் கூட Internet ல் ஆர்வம் காட்டுகின்றனர். எனினும் இதற்கு இன்னொரு பக்கமும் உள்ளதென்பது சிந்திக்க வேண்டியதொன்று. இணையத்தில் பாலியல் ரீதியான விடயங்கள் கொண்ட Websites (இணையத் தளங்கள்) ஐ பார்வையிடுகின்றனர். சிறு பராயத்தினர் கூட இவ்வாறான தரமற்ற விடயங்களைப் பார்வையிடுகின்றனர். இவற்றிலிருந்து பிள்ளைகளைத் தவிர்ப்பது பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் பெரும் சவாலாகவே அமைகின்றது. இது மட்டுமல்ல இளஞ் சமுதாயத்தினர் பெருமளவு நேரத்தைச் கணினி மற்றும் இணையத்தில் செலவிட விரும்பு கின்றனர். இதனால் பெற்றோர், பிள்ளைகளிடையே இடைவெளி ஏற்படுவது மட்டுமல்லச் சமுதாயத்துடனும் இவர்களுக்கு இடைவெளி அதிகரிக்கும் நிலை ஏற்படுகிறது. சமூகத்திற்கான தனது பொறுப்புக்களை மறக்கின்றனர். சமூக வேலைகளில் அவர்களின் நாட்டம் குறைகிறது.

கையடக்கத் தொலைபேசியை அவசியத்துக்கன்றி நாகரிகத்துக் காகப் பயன்படுத்துகின்ற நிலையும் காணப்படுகிறது. இவற்றிலிருந்து வெளியேறும் கதிர்கள் மூளைக கட்டியை ஏற்படுத்தலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ் விளைவுகள் உடனடியாகத் தென்படாவிடினும் காலப்போக்கில் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துமெனக் கூற முடியாது. கணினி முன் தொடர்ச்சியாக அமர்ந்திருப்பதால் கண், வலி, இடுப்பு நோ, முதுகு நோ போன்றன ஏற்படும்.

இன்று பெரும்பாலான அலுவலகங் கள் மற்றும் நிறுவனங்கள் கணினி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் அவர்கள் தமது இலாபத்தை அதிகரிப்பதோடு, போட்டியாளர்களின் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடியதாகவும் உள்ளது. இவ்வாறான நிறுவனங் களில் இளந்தலைமுறையினரே கணினி அறிவுடையவர்களாக, அவற்றைக் கற்கும் ஆர்வம் உள்ளவர்களாகவும் காணப் படுகின்றனர். இதனால் இளந் தலைமுறையினரே உயர் பதவிகளை வகிக்கின்ற நிலையும் காணப் படுகின்றது. இந்நிலையில்

நிறுவனங்கள் Digital Divids என்ற நிலை ஏற்படுகிறது. அதாவது தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவுடைய, மற்றும் அறிவதில் ஆர்வமுள்ள ஒரு சாராரும், தொடர்பாடல் தொழினுட்ப அறிவற்ற, இவற்றில் நாட்டமற்ற மறு சாராரும் காணப்படுகின்றனர். கணினி மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் தொடர்ந்து தம்மை நிலைநிறுத்த வேண்டுமாயின் இம்மாற்றங்களுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

புதிய தொழினுட்ப அறிவைப் பெற வேண்டுமாயின் இளஞ் சந்ததியினரையே நாடவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது மகிழ்ச்சிக் குரிய விடயம். எனினும் இளஞ் சமுதாயத்தினர் பெரியோரைக் கனம் பண்ணுகின்ற தன்மை குறைவடைந்து அலட்சிய மனப்பாங்கு அதிகரிக்கின்றது.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி அதிக நன்மையையே விளைவிக்கின்றதெனினும் இளஞ்சமுதாயத்தினரிடையே மனிதாபிமானமும், மனிதநேயமும் தொழினுட்ப அறிவிற்குச் சமாந்தரமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதற்காகப் பெற்றோரும், ஆசிரியரும் வழிகாட்டியாக அமைய வேண்டும். அப்பொழுது தான் தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சி இளஞ் சந்ததியினரிடையே பயனுடையதாக அமையும்.

---

**Success is not the key to happiness. Happiness is the key to success. If you love what you are doing, you will be successful**

**- Albert Schweitzer**

**வெற்றி மகிழ்ச்சியின் திறப்பு இல்லை. மகிழ்ச்சியே வெற்றியின் திறப்பு. நீங்கள் செய்வதனை நேசித்தால் நீங்கள் வெற்றிபெறுவீர்கள்.**

**Good things, when short, are twice as good. - Gracian**

**நல்ல விடயங்கள் சிறிதாக இருக்குமாயின் இரண்டு மடங்கு நல்லது.**

# பாடசாலைத் தொழிற்பாடுகளும் அதன் வகைகூறலும்

சி.ரங்காதரன்,
B.Com, Dip in Education,
ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி

இலங்கையில் தொழிற்படும் பாடசாலைகளை 1AB பாடசாலைகள், 1C பாடசாலைகள், 2ஆம் வகைப்பாடசாலைகள், 3ஆம் வகைப்பாடசாலைகள், பிரிவெனாப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என வகைப்படுத்தலாம். இதில் அரசாங்கப் பாடசாலைகள் அரசின் நேரடியான கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. ஆரம்பத்தில் மத்திய மயப்படுத்தப்பட்ட அரச நிர்வாக கட்டமைப்பின் கீழ் இருந்த இப்பாடசாலைகள் 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தினால் மாகாணங்கள் தோறும் பன்முகப்படுத்தப்பட்டன. இதனால் மாகாணக்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டு அதன் கீழ் கல்வி நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாகாண கல்வி அமைச்சின் கீழ் மேலதிக மாகாண கல்வித்திணைக்களம், வலயக்கல்வி அலுவலகம் என கல்வி நிர்வாகம் பரவலாக்கப் பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அரச பாடசாலை அமைப்பினை நோக்கின் நான்கு வகையான பாடசாலைகள் உள்ளன். அவை 1 AB பாடசாலைகள், 1C பாடசாலைகள், 2ஆம் வகைப் பாடசாலைகள், 3ஆம் வகைப் பாடசாலைகள் என்பனவாகும். இதில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரை வகுப்புக்களைக் கொண்டிருப்பதுடன் க.பொ.த உயர்தர வகுப்பில் கணித, விஞ்ஞான பிரிவு வகுப்புக்களை கொண்டிருக்கும் பாடசாலைகள் 1AB பாடசாலைகள் என்றும் தரம் ஒன்று தொடக்கம் தரம் 13 வரை வகுப்புக்களைக் கொண்டிருப்பதுடன் க.பொ.த உயர்தர வகுப்பில் கலைப்பிரிவுகளைக் கொண்ட பாடசாலைகளை 1C பாடசாலைகள் கருதும். தரம் ஐந்து தொடக்கம் தரம் 11 வரை வகுப்புக்களை உடைய பாடசாலைகளை 2ஆம் வகைப் பாடசாலைகள் கருதும். தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை உள்ள பாடசாலைகள் 3ஆம் வகைப் பாடசாலைகள் கருதும்.

பாடசாலைகளின் பிரதான குறிக்கோள் குழந்தைகளை சமூகத்திற்கு உரிய குடிமக்களாக மாற்றுவது ஆகும். இத்துடன் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வினைத்திறனாக மேற்கொள்ள வகுப்பறைகளில் கற்றல் செயற்பாடுகள் சீராக

நடைபெறுதல், மாணவர்களை சமூகப் பொருத்தப்பாடு உடையவர் களாக மாற்றுதல், கிடைக்கும் வளங்களை உத்தம அளவில் பயன் படுத்தல் என்பனவும் பாடசாலைக் குறிக்கோளாகும்.

பாடசாலைகளின் பொதுவான குறிக்கோள் ஒரே மாதிரி யானவையாக இருந்தாலும் சிறப்பான அல்லது தொழிற் பாட்டுக்கான குறிக்கோள் களிடையே வேறுபாடுகள் உண்டு. கிராமிய பாடசாலையின் குறிக்கோள் மக்களை எழுத்தறிவு, ஆரம்பக்கல்வி என்பனவற்றுடன் கிராமிய தொழி லாளியாக அல்லது விவசாயிகளாக மாற்றுதலாக இருக்க நகர்ப்புற பாடசாலைகளின் குறிக்கோள் மாணவர்களை நிறுவனங்களில் பணிப்பாளராக, தொழிற்றுறை தலைவர்களாக உருவாக்குவதாக இருக்கும். பொதுவாக பாடசாலை களின் குறிக்கோள் மாணவர்களை வைத்தியர், பொறியியலாளர். தொழில்விற்பன்னர்கள், தொழிற் நுட்பவியலாளர் போன்றோராக சமுதாய பொருத்தப்பாடு உடையவர் களாக மாற்றுதல் என்பதாகும்.

பாடசாலை மாணவர்களின் ஆன்மீக, ஒழுக்கம் என்பவற்றில் தூய்மையையும் முன்னேற்றத்தை யும், தேசிய பற்று, கலாசார உணர்வு என்பனவற்றை சிறு வயதிலிருந்தே மாணவர்களிடம் ஏற்படுத்தி நாட்டுப்பற்றுள்ள குடிமக்களாக மாற்றுதல், உயிர்த்துடிப்புள்ள மாணவர்களை உருவாக்கல், பிள்ளைகளிடம் உடல் மற்றும் உள விருத்தியை ஏற்படுத்தி இவை இரண்டுக்குமிடையில் சமநிலையை விருத்தி செய்து தேசிய மனித வளத்தை உருவாக்கல், எதிர் காலத்தில் வளர்ந்தோராக வளரு மிடத்து அத்தகைய வாழ்வுக்கு தேவைப்படுகின்ற வாய்ப்புக் களையும் பொறுப்புணர்வையும் அனுபவங்களையும் விருத்தி செய்து பொறுப்புணர்வு மிக்க சமூகத்தை உருவாக்கல்.

பாடசாலைகள் ஒழுங்கமைத்த நிறுவனங்களாகும். அவற்றுக்கு தெளிவான அங்கீகரிக்கப்பட்டதுமான குறிக்கோள்கள் உள்ளன. பாடசாலைகளின் செயற்பாடுகளும் வெளியீடுகளும் சமூகத்தின் குறுங் கால விளைவுகளை மட்டுமன்றி நீண்டகால விளைவுகளையும் உருவாக்கவல்லனவாக பாடசாலை கள் வலிமை பெற்றுவிட்டன. பாடசாலைகளின் செயற்பாடுகள் சமூக, பொருளாதார, அரசியல் கலாசார தொழில்நுட்ப விளைவு களை உருவாக்கி வருகின்றன. தேசிய விளைவுகளை உருவாக்கக் கூடிய மக்கள் பண்புவிருத்தி மற்றும் மனிதவள விருத்தியை வடி வமைக்கும் வளமான ஒழுங் கமைப்புக்களாக பாடசாலைகள் தொழிற்படுகின்றன.

அடுத்து பாடசாலை அதிபர்களின் பொறுப்பும் வகைகூறலும் என்பதை நோக்கின் ஒரு பாடசாலையின் முகாமையாளராக, தலைவராக செயற்படுபவர் அதிபராவர். இவர் கம்பனி ஒன்றில் முகாமையாளர் போன்று பொறுப்புக்களை ஏற்று வகை கூற வேண்டும் என கூறப்படுகின்றது. ஒரு வியாபார

நிறுவனம் அல்லது உற்பத்தி தொழிற்சாலை ஒன்றின் முகாமை யாளர் ஒருவருக்கு எல்லா வகையிலும் ஒத்தவராக அதிபர் அங்கீகரிக்கப்பட்டுள்ளார். அதிபர்கள் கொள்கை வடிவமைப்பில் ஈடுபடு வதில்லை. தேசிய ரீதியாகவும், அமைச்சு மாகாண அமைச்சு, வலயம், கோட்டம் என்பவற்றி லிருந்து வரும் தீர்மானங்களை முகாமை செய்பவர்களாக அதிபர்கள் உள்ளனர். இதனால் நிர்வாகிகள் போல அதிபர்கள் செயற்படுகின்றனர் என்ற கருத்து உள்ளது. தற்போது இந்த நிலைப் பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமது நிறுவன குறிக்கோள்களையும் திட்டங்களையும், செயற்றிட்டங் களையும் நடவடிக்கைகளையும் அதிபர்கள் தாமாக மேற்கொள்ள வேண்டும். தமது பாடசாலை பற்றிய முக்கிய முடிவுகளை மேற்கொள் வதும், நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்படுத்துவதும் வகை கூறுவதும் அவசியம் எனக் கூறப்படுகின்றது.

பாடசாலைகளில் பல்வேறு தொழிற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவற்றில் பிரதானமான தொழிற்பாடு கற்றல் கற்பித்தல் ஆகும். பாடசாலையில் கற்றல் செயற்பாடு சீராக நடைபெற வேண்டும். பாடசாலையின் பிரதான நோக்கு மாணவர்களின் அடைவை உயர்த்துதல் ஆகும். இங்கு அடைவு என்பது மாணவர்கள் பரீட்சைகளில் பெறும் பெறுபேற்றினைக் கருதும். மாணவர்கள் சிறந்த பெறு பேற்றினைப் பெறுவதன் மூலமே பாடசாலையானது சுய கௌரவத்தையும் மதிப்பினையும் பெற்று விளங்க முடியும்.

பாடசாலையில் இடம்பெறும் ஏனைய தொழிற்பாடுகளை நோக்குவோமாயின் விளையாட்டுப் போட்டிகள், மாணவர்களிடையே போட்டிகளை நடாத்தல், கழகங் களை அமைத்தல், விழாக்களை நடாத்தல், சாரணர் இயக்கம், பெற்றோர், ஆசிரியர் சங்க கூட்டங்களை நடாத்தல், பாடசாலை களிடையே சிநேக பூர்வ ஆட்டங் களை நடாத்தல், மாணவர் மன்ற கூட்டங்களை நடாத்தல், பாராட்டு விழாக்களை நடாத்தல் போன்றவை பாடசாலையில் இடம்பெறும் ஏனைய தொழிற்பாடுகளாக உள்ளன.

பாடசாலையானது சமூகத்துடன் இணைந்த ஒரு அமைப்பாகும். எப்போதும் சமூகத்துடன் நெருக்க மான உறவைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது. திறந்த பாடசாலை செயலமைப்பு விரும்பத்தக்கது. இங்கு திறந்த பாடசாலை செயலமைப்பு என்பது ஒரு பாடசாலை தனக்கு வேண்டிய உள்ளீடுகளை தனது சூழலிருந்து தடையின்றிப் பெறுமாயின் அதனை குறிக்கின்றது. அவ்வாறே தனது வெளியீடுகளையும் குறித்த சமூகத்திற்கு வழங்க வேண்டும். சமூகத்துடன் எந்த அளவான தொடர்பை பேண வேண்டும் என்பதில் பாடசாலை முகாமைத் துவம் தெளிவான எண்ணங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

கற்றல் கற்பித்தல் வினைத் திறனுடன் நடைபெறும் போது ஆசிரியர் மாணவர் உறவு சிறப்பாக அமையும். அதே போன்று அதிபருக்கும் ஆசிரியர்களுக்கு மிடையே உள்ள தொடர்பு சீராக இருக்கும். இது பாடசாலையின் கவின் நிலையை அதிகரிக்கின்றது. பாடசாலையின் சிறந்ததொரு கவின்நிலையை உருவாக்கும் பாரிய பொறுப்பு பாடசாலை அதிபரைச் சார்ந்ததாகும்.

பாடசாலைகள் சமூகத்தின் மூலக்கூறுகளாகக் கொள்ளப் படுகின்றது. பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே நிலவுகின்ற தொடர்பிலே பாடசாலைகளின் பயனுறுதி தங்கியுள்ளது. பாட சாலை சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்கின்ற இடமாக அமைய வேண்டும். பாடசாலை சமூகத்துடன் நல்ல தொடர்புகளை வைத்திருப் பதன் மூலம் பாடசாலைக்குத் தேவையான பயன் வாய்ந்த பல பணிகளை நிறைவு செய்ய முடியும். வினைத்திறன் மிக்க பாடசாலை ஒன்றில் கிடைக்கப்பெறும் மனித, பௌதீக வளங்கள் விரயமாக்கப் படாது. கிடைக்கும் வளங்களை பயனுறுதிமிக்க முறையில் பயன்படுத்த வேண்டும். இதற்கு பாடசாலை மட்டச்செயற்பாடுகள் சீராக நடைபெறுதல் வேண்டும்.

சமூக செயல்முறையின் இன்றியமையாத ஒரு படிமுறை பிள்ளைகள் கல்வி கற்பதும் அதன் வழியாக சமூக இடைவினை யுறவுகளை விருத்தி செய்வதுமாகும். பாடசாலை ஓர் சமூகக்குழுவாகும். பல்முனைப்பட்ட தொடர்பாடல்களும் தொடர்புகளும் பாடசாலை ஊடாக விருத்தி செய்யப்படுகின்றன. மனித உறவுகள் பற்றிய விஞ்ஞான பூர்வமான பொதுமையாக்கங்களை கல்வி முறைமையினுள் உரு வாக்குதில் பாடசாலை என்ற முறைசார் நிறுவனம் பெரும் பங்காற்றுகின்றது.

**உசாத்துணை நூல்கள் :**


(1) நா.வரதராசா, "ஆசிரியத்தொழில்"

(2) மா.சின்னத்தம்பி "ஆசிரிய முகாமைத்துவம்"

(3) மா.சின்னத்தம்பி "இலங்கையில் முகாமைத்துவக்கல்வி"

(4) அகவிழி டிசெம்பர் 2005 வெளியீடு


**Self trust is the first secret of success - Ralph Waldo Emerson**

**சுயநம்பிக்கையே வெற்றியின் முதல் இரகசியம்**

# இதய அஞ்சலி

## மறைந்த ஆசிரியர்கள்



அமரர்
கலாவல்லி சிவகுமார்



அமரர்
சாரதா பரஞ்சோதி



அமரர்
சந்திரவதனி முருகவேள்

# "பிரகாசம்" பிரதிகள் பெறுவோர்

## முதற் பிரதி பெறுபவர்

## திரு.சு.மணிராசா

(பழைய மாணவர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்)

முகாமை இயக்குனர், ஜாவா சிவில் எஞ்சினியரிங் கன்ஸ்ரக்ஷன்.

## கௌரவப் பிரதி பெறுபவர்கள்

(1) சிவஸ்ரீ சிவநித்தியானந்த சர்மா, சர்வதேச இந்துமத குருபீடம்

(2) திரு.கா.சந்திரபாலன், ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்

(3) திரு.ச.சிவசிறி, பிரதேச செயலர், கரவெட்டி

(4) திரு.க.மயில்வாகனம், ஓய்வுபெற்ற அதிபர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(5) திரு.செ.குபேரநாதன், கோட்டக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கல்விக்கோட்டம்.

(6) திரு.ஆ.வ.கணேசலிங்கம், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பாணிப்பாளர், சங்கானைக் கல்விக் கோட்டம்

(7) திரு.ச.கைலாசநாதன், கோட்டக் கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பளைக் கல்விக்கோட்டம்.

(8) திருமதி.வேணுகா சண்முகரத்தினம், அதிபர், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

(9) திருதி.அன்னலட்சுமி பேரம்பலம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(10) திரு.இ.நவரத்தினம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(11) திருமதி.வள்ளியம்மை கந்தசாமி, ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(12) திருமதி.பூ.இராமலிங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(13) திரு.ப.சிவசூரியர், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(14) திரு.செ.தெய்வேந்திரன், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(15) திருமதி.தவமணி சச்சிதானந்தன், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(16) செல்வி.கோதநாயகி தம்பு, ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(17) சைவப்புலவர்.ஆ.கனகரத்தினம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(18) திருமதி.ஜெ.லோகநாதன், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(19) திருமதி தே.சந்திரகுமார், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(20) திரு.சு.இராசதுரை, ஓய்வுபெற்ற விரிவுரையாளர், வவுனியாப் பல்கலைக்கழகம்.

(21) திரு.தி.சிவதட்சணாமூர்த்தி, பணிப்பாளர். தேசிய இளைஞர் சேவை மன்றம், வடமாகாணம்.

(22) செல்வி.நா.ஜெயராணி, அதிபர், யா/சித்தன்கேணி சிறீகணேச வித்தியாலயம்.

(23) திரு.இ.சிறீதரன், அதிபர், யா/காரைஊரி அமெரிக்கன்மிஷன் வித்தியாலயம்

(24) திருமதி.சு.ஜெயவீரசிங்கம், அதிபர், யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி

(25) திரு.கி.வசந்தகுமார், அதிபர், யா/நவாலி மகா வித்தியாலயம்

(26) திரு.நா.நாகேஸ்வரன், முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ் பல்கலைக் கழகம்

(27) திரு.சு.திருகேஸ்வரன், அதிபர், யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை.

(28) திரு.பொ.பாலசிங்கம், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை வங்கி

(29) திரு.இ.செல்வநாயம், வைத்தியர், கருணா கிளினிக், சங்கானை.

(30) திரு.த.ஜீவரட்ணம், கலாபா தொழிலகம், சங்கானை.

(31) திரு.சு.சிவகுமாரன், தொழிலதிபர், சுந்தர்சன், மானிப்பாய்.

(32) திரு.செ.இராசசிங்கம், அரசடி வீதி, சங்கானை.

(33) திரு.அ.சிறீஸ்கந்தராசா, பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.

(34) திரு.சி.இராசலிங்கம் JP, தேவாலய வீதி, சங்கானை.

(35) திரு.க.இரத்தினேஸ்வரன், செயலாளர், பாடசாலை அபிவிருத்திக்குழு, யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(36) திரு.வ.நவரத்தினம், செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(37) திரு.வி.செல்வம், பிரதேச செயலகம், சங்கானை.

(38) திரு.பா.சிறீபவன், அபிவிருத்தி உதவியாளர். யாழ் செயலகம்.

(39) திரு.ந.ஹரிகரன், ஆசிரியர், யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.

(40) திரு.அ.லிங்கராஜ், ஆசிரியர், யாழ்ப்பாணம்.

(41) திருமதி.பி.வாகீசன், ஆசிரியர், யாழ்ப்பாணம்.

(42) திரு.க.அருள்லிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(43) திரு.மா.கணேஸ், ஓய்வுபெற்ற நூலகர், சங்கானை.

(44) திருமதி.சு.பிரேமலோஜி, அராலி வீதி, சங்கானை.

(45) திருமதி தமிழினி கமல்ராஜ், ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

(46) செல்வி.தி.லயந்தினி, ஆசிரியர், யா/சுழிபுரம் ஆறுமுகம் வித்தியாலயம்

(47) திருமதி.நிரஞ்சினி முகுந்தன், அராலி வீதி, சங்கானை.

(48) திருமதி தர்மினி நாகசெல்வம், ஆசிரியர், சிலம்புப்புளியடி, சங்கானை

(49) திரு.மு.சுகந்தன், ஆசிரியர், ஆஸ்பத்திரி வீதி, சங்கானை

(50) செல்வி.த.மயூரா, ஆசிரியர், பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை.

(51) திரு.பொ.சுந்தரலிங்கம், லிங்கம், ஸ்ரோர்ஸ், சங்கானை

(52) திரு.வே.பொன்னம்பலம், பாக்கியரத்தினம் ஹாட்வெயர்ஸ், சங்கானை.

(53) திரு.செ.சிறீசந்தணராஜா, பபிதா நகைத்தொழிலகம், சங்கானை.

(54) திரு.ந.பாஸ்கரன், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்.

(55) திரு.பா.உதயகுமார், உதயன் ஹாட்வெயார், சங்கானை.

(56) திரு.ந.இரவீந்திரன் JP, பிளாக்கு றோட், சங்கானை.

(57) திரு.ந.விஜயகுமார், நியூ மைக்றோ கம்பியூட்டர் சிஸ்ரம்ஸ், சங்கானை.

(58) திரு.இ.நகுலேஸ்வரன், ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

(59) திரு.தி.நடராஜா, ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

(60) திரு.வி.செந்தூரன், பழைய மாணவன், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(61) திரு.சி.பசுபதி, யோகா மில், சங்கானை.

(62) திரு.பொ.தியாகர்ராசா, இயக்குனர், கேம்பிறிஜ், சங்கானை.

(63) திரு.க.ராஜ்குமார், விதுஷா கறீம்ஹவுஸ், சங்கானை.

(64) திரு.ம.சிறீகாந்தன், ஐங்கரன் ஸ்ரோர்ஸ், சங்கானை.

(65) திரு.த.ததீஸ்வரன், சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

(66) திரு.ஜெ.விகர்ணன், பழைய மாணவன், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(67) திரு.நா.கருணாகாந், பழைய மாணவன், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(68) திருமதி சரஸ்வதி கந்தசாமி, தேவாலய வீதி, சங்கானை.

(69) திரு.சி.சுரேந்திரன், லீலா பேக்ஹவுஸ், சங்கானை.

(70) திரு.இ.இராசநாயகம், துர்க்கா மரத்தொழிற்சாலை, சண்டிலிப்பாய்.

(71) திரு.ப.திலீபன், பத்மராஜா அன் சன்ஸ் நகைத்தொழிலகம், சங்கானை.

(72) திரு.க.மகாலிங்கம், பிரதீப் புத்தக நிலையம், சங்கானை.

(73) திரு.வீ.குகநேசன், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், சங்கானை.

(74) திரு.பொ.நேசதுரை, அரசடிவீதி, சங்கானை.

# சிறப்புப்பிரதி பெறுபவர்கள்

(1) திரு.மு.சுப்பிரமணியம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(2) பண்டிதர்.வே.முத்துலிங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(3) திரு.ப.இரத்தினசபாபதி, ஓய்வுபெற்ற அதிபர், யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்.

(4) திரு.கு.ஜெகநாதன், அதிபர், யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்

(5) திரு.வி.நடராசா, அதிபர், யா/மாதகல் சென்ஜோசப் மகா வித்தியாலயம்

(6) திரு.நா.முருகானந்தன், ஸ்தாபகர், பழைய மாணவர் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(7) திரு.க.தனபாலசிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(8) திரு.க.இராசநாயம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(9) திரு.த.இராசசிங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(10) திரு.A.V.மகாதேவன் M.Ed (English), சுழிபுரம்.

(11) திருமதி.சா.அருள்ராசன், ஆசிரியர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

(12) திருமதி.தக்ஷாயினி, ஆசிரியர், யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

(13) திரு.S.நிசாந்தன், அபிவிருத்தி உதவியாளர். யாழ் போதனா வைத்தியசாலை.

(14) திரு.ந.விக்கினேஸ்வரன், ஆசிரியர், சங்கானை.

(15) திருமதி.R.ராஜா, பிரதான வீதி, சங்கானை.

(16) செல்வி.நா.அஜந்தாதேவி, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், யாழ் செயலகம்.

(17) திரு.வே.சிவானந்தன், ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி.

(18) திரு.மா.தர்மலிங்கம், பிரதேச செயலகம், சங்கானை

(19) திரு.S.குமாரசிங்கம் JP, செயலாளர். நல்லொழுக்க சம்மேளனம்

(20) திரு,ஆ.பிரபாகரன், ஆசிரியர், யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

(21) திரு.லோ.ரெனிஸ்லாஸ், ஆசிரியர், யா/இளவாலை ஹென்றிஅரசர் கல்லூரி.

(22) திரு.பா.பாஸ்கரன், ஆசிரியர், யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.

(23) திரு.க.சிதம்பரநாதன், பிரதேச செயலகம், காரைநகர்.

(24) திருமதி.சி.சிவரூபி, ஆசிரியர், யா/தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

(25) திரு.து.ரமேஸ், ஆசிரியர், யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்

(26) திரு.ப.விஜயகுமார், பழைய மாணவர், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(27) செல்வி.பா.சிவதர்சினி, முகாமைத்துவ உதவியாளர், சங்கானை.

(28) செல்வி.சியாமினி கணேஸ்வரன், ஆசிரியர், சங்கானை.

(29) திரு.க.மகேஸ்வரன், சரண்யா தொலைத்தொடர்பகம், சங்கானை.

(30) திரு.கா.சிவஞானசுந்தரம், கோகுலன் புத்தகசாலை,சங்கானை.

(31) திரு.கு.பாலசுப்பிரமணியம், பிள்ளையார் ரான்ஸ்போட் சேவீஸ், சங்கானை.

(32) திரு.கா.வயித்திலிங்கம் அன் சன்ஸ், சங்கானை.

(33) திரு.அ.செல்வகுமாரன், பிளாக் வீதி, சங்கானை.

(34) திரு.ஜெ.திலகதாசன், அரசடி வீதி, சங்கானை.

(35) திரு.மூ.ஜெயச்சந்திரன், உதயா பேக்கரி, சங்கானை.

(36) திரு.இ.ஆனந்தராஜா, மகேஸ்வரி உணவகம், சங்கானை.

(37) திரு.சு.நடேசலிங்கம், ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ், சங்கானை.

(38) திருமதி நடராசா பரமேஸ்வரி, பிளாக் வீதி, சங்கானை.

(39) திரு.சி.சிறீதரன், கட்டட ஒப்பந்தக்காரர் (ஆதீத்தன்ஸ்), மல்லாகம்.

(40) திரு.கு.சொரூபன், கஜன் போட்டோ அன் வீடியோ, சங்கானை.

(41) சைவப்புலவர்.சி.ரமணராஜா, வெளிவாரி விரிவுரையாளர், பேராதனை.

(42) திரு.அ.மயூரன், செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(43) திரு.வே.ரவிதரன், பொருளாளர், பழைய மாணவர் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(44) திருத.ரமேஸ்குமார், முன்னாள் செயலாளர், பழைய மாணவர் சங்கம், யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

(45) திரு.R.ரஞ்சன், ரஞ்சன் ஸ்ரோர்ஸ், சங்கானை.

(46) திரு.மு.மயூரதன், மொபைல் பிளாஸா, சங்கானை.

(47) திரு.செ.செந்தில்குமார், செந்தா மணிக்கூட்டுத் தொழிலகம்.

(48) செல்வன்.இ.கஜேந்திரநாதன், யாழ் பல்கலைக்கழகம்.

(49) செல்வி.ரா.அரங்கா, யாழ் பல்கலைக்கழகம்.

(50) செல்வி.க.கிரிசாந்தி, யாழ் பல்கலைக்கழகம்.

(51) திரு.S.திருமாறன், பழைய மாணவன், யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி.

(52) திரு.இ.மகேஸ்வரன், சபரிநாதன் ஆலை, சுன்னாகம்.

# நன்றியுரை



"நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டா....."

என்றவர் நம் தமிழ் மூதாட்டி. அவ்வழி நின்று பலன் விழையது நம் 'பிரகாசம்' சுடர்விட தீபங்களாய் ஒளி தந்த உங்கள் அனைவருக்கும் என் நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பிரகாசம் ஒளிர முழுமூச்சாய் முன்னின்று உழைத்தவர் நம் மதிப்பிற்குரிய அதிபர் அவர்கள். அவர்களுக்கு எம் இதயம் நிறைந்த பெருநன்றிகள். அதிபரோடு இணைந்து மலர் மலர்ந்து மணம் வீச தம்பணி செய்த ஆசிரியர்கள் அனைவர்க்கும் கனிவான நன்றிகள்.

பிரகாசத்தினை மெருகூட்டும் முகமாக கனதியான ஆக்கங்களை மனமுவந்து வழங்கிய பெருந்தகைகள் அனைவர்க்கும் அன்பான நன்றிகள். பிரகாசத்தை வாழ்த்தி ஆசிகள் வழங்கிய அன்பர்களுக்கும் மனநிறைந்த நன்றிகள்.

ஒளிக்கீற்றுக்கள் ஒவ்வொன்றையும் ஒன்றாக்கி பிரகாசமாய் மிளிர வைத்து நம் கைகளில் தவழவிட்ட ஆசிரியர் திரு.சி.ரங்காதரன் அவர்களுக்கும் சுன்னாகம், மகிந்தன் கொம்பியூட்டர் கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும் நன்றிகள் பல.

பிரகாசத்தின் பயனறிந்து பிரதிகளை மனமுவந்து பெற்றுக்கொண்ட பெரியோர்கள், பெற்றோருக்கு பெரு நன்றிகள்.

இன்னும் நம் பிரகாசம் நாலாபக்கமும் பிரகாசிக்க பல்வேறு வழிகளிலும் உதவியும் ஊக்கமும் தந்து நின்ற இனிய இதயங்கள் அனைவர்க்கும் எமது உளப்பூர்வமான நன்றிகள். மீண்டும் நன்றிகள் பற்பல.

**திருமதி உதயலதா நவதீசன்,**
**மலர்க்குழுச் செயலாளர்.**


COMPUTER ROOM